# யாழினி என்றொரு தேனருவி



இந்திரா சௌந்தர்ராஜன்

www.pustaka.co.in

Pustaka Digital Media
http://www.pustaka.co.in

# யாழினி என்றொரு தேனருவி

# Yazhini Endroru Thenaruvi

Author:

இந்திரா சௌந்தர்ராஜன்

Indira Soundarajan

For more books
http://www.pustaka.co.in/home/author/indira-soundarajan

Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.

All other copyright © by Author.

All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher except for the use of brief quotations in a book review.

பொருளடக்கம்

அத்தியாயம் 1

அத்தியாயம் 2

அத்தியாயம் 3

அத்தியாயம் 4

அத்தியாயம் 5

அத்தியாயம் 6

அத்தியாயம் 7

அத்தியாயம் 8

அத்தியாயம் 9

அத்தியாயம் 10

அத்தியாயம் 11

அத்தியாயம் 12

அத்தியாயம் 13

அத்தியாயம் 14

அத்தியாயம் 15

அத்தியாயம் 16

அத்தியாயம் 17

அத்தியாயம் 18

அத்தியாயம் 19

அத்தியாயம் 20

அத்தியாயம் 21

அத்தியாயம் 22

அத்தியாயம் 23

அத்தியாயம் 24

அத்தியாயம் 25

அத்தியாயம் 26

அத்தியாயம் 27

அத்தியாயம் 28

அத்தியாயம் 29

அத்தியாயம் 30

அத்தியாயம் 31

அத்தியாயம் 32

அத்தியாயம் 33

அத்தியாயம் 34

அத்தியாயம் 35

அத்தியாயம் 36

அத்தியாயம் 37

அத்தியாயம் 38

அத்தியாயம் 39

# யாழினி என்றொரு தேனருவி

# 1

"இந்திரனுக்கோ பெண்
களவாடும் பொருள்!
இராமாயணத்திலோ பெண்
கடத்தல் சரக்கு!
பாரதத்திலோ பெண்
சூதாட்டப் பந்தயம்!
அரிச்சந்திரனுக்கோ பெண்
அடகு வைக்கும் தனம்!

'பெண்கள் எத்தனை பெண்களடி'
கவிதையில் கவிஞர் கே.ஜி.இராஜேந்திரபாபு.

'திருமகள் முதியோர் இல்லம்' என்னும் பரந்து விரிந்த ஒரு பெரிய கட்டிடத்தின் முன் தேங்கி நின்றது அந்த ஆட்டோ! அதிலிருந்து வயதான ஒரு ஆணும் பெண்ணும் இறங்கினர். அவர்கள் கொண்டு வந்திருந்த இரண்டு பெரிய சூட்கேஸ்களோடு ஒரு படுக்கைக் கட்டும் கூடவே சேர்ந்து இறங்கியது.

வயதான பெரியவர் ஆட்டோக்காரனுக்கு பணம் கொடுக்கத் தயாரானார். ஆனால் அந்த ஆட்டோக்காரன் முதியோர் இல்லப் பெயர்ப் பலகையைப் பார்த்து விட்டு அவர்களையும் பார்த்தபடியே "பணம் இருக்கட்டுங்க... நீங்க இந்த இல்லத்துல சேர வந்துருக்கீங்களா?" என்று கேட்டான். .

அவரிடம் ஆமோதிப்பாய் தலையசைப்பு.

"ரொம்ப நல்ல முடிவு... உங்களுக்கு இனிமே நல்ல காலம் ஆரம்பம். பணம் வேண்டாம். உங்கள நான் இங்க கொண்டு வந்து விட்ட புண்ணியம்தான் எனக்கான கூலி. நான் வரேன்..."

- என்றான். அவர் முகத்தில் ஆச்சரிய வரிகள்.

"என்ன பார்க்கறீங்க... நான் உள்ளதத்தான் சொன்னேன்."

"அது இல்லப்பா... இப்படிக்கூட ஒரு ஆட்டோக் காரரான்னு தான் ஆச்சரியப்பட்டேன்..."

"அட நீங்க வேற, என்னை விட நல்ல ஆட்டோக் காரங்க நிறைய பேர் இருக்காங்கய்யா..."

"ஆனா நான் இப்பதான்பா என் வாழ்க்கைல பாக்கறேன். ஐம்பது ரூபா கூட பெறாத சவாரிக்கு நூறு ரூபாய் புடுங்கறதுதான் எங்க ஊர் ஆட்டோக்காரங்க வழக்கம். கேட்டா அவங்க பேசற பொருளாதாரத்தை கம்யூனிச சித்தாந்தத்தை உலகத்துக்குக் கொடுத்த மார்க்ஸ் கூடபேசியிருக்க மாட்டார். லிட்டருக்கு ஒரு ரூபா பெட்ரோல் விலை ஏறினா பத்து ரூபாய ஒரு சவாரிக்கு ஏத்தற ரொம்ப நல்ல மனசு கொண்டவங்கதான் எங்க ஊர் ஆட்டோக்காரங்க!

இந்த அரசாங்கம் சமுத்திரத்துல பாலம் கட்டுது. ஆனா ஆட்டோ டிரைவர்களை மீட்டர் போட்டு ஓட்ட வைக்க அதுக்கு துப்பு இல்லை. ஏன்னா எந்த எம்.எல்.ஏ., மந்திரி இன்னிக்கு ஆட்டோல போறாங்க... போனால்ல நடக்கற அநியாயம் தெரியும்?"

-அவர் கொடுத்த நீண்ட விளக்கம் உடன் இருந்த அவர் மனைவிக்குப் பிடிக்கவில்லை என்பது அவர் முகம்போன போக்கில் தெரிந்தது.

"போதும் காச கொடுத்துட்டு வாங்க... ஒருத்தர் பேசிடக் கூடாதே?" என்றாள் சற்று சினத்துடன்...

"விடுங்கம்மா... ஐயா பேசறதும் நியாயந்தாங்களே! நான் மீட்டர்

போட்டா என்ன வருமோ அதைத்தான் கேக்கறேன். எனக்கு எந்த குறையும் இல்லை. சொல்லப்போனா எனக்கு தான் கஸ்டமர்கள் அதிகம்!".

அப்புறம்யா... ஒரு கிலோமீட்டர் தூரத்தை கூட நடந்து கடக்க இப்ப யாருமே விரும்பறதில்லை. ஒரு நாளைக்கு அஞ்சு கிலோ மீட்டர் தூரம் கட்டாயம் நடக்கணும்னு டாக்டர் சொல்றார். ஆனா யார் நடக்கறா?

கால் இருக்கறது வீட்டுக்குள்ள நடமாடறதுக்குன்னு மட்டும்தான் நினைக்கறாங்க. இதனாலே உடம்பு பெருத்துப் போய் அதைக் குறைக்க பாடாய்ப் படுறாங்க.

எல்லாரும் கௌரவம் பார்க்காம நடக்கற முடிவுக்கு வந்தாலே போதும்யா, ஆட்டோக் காரங்க தானா திருந்திடுவாங்க. தப்பு போதுமக்கள் கிட்டயும் இருக்கு. நான் வரட்டுமா?"

அவனும் ஒரு நல்ல பதிலைத்தான் சொன்னான்.

"சந்தோஷம்பா... இந்தா பணத்தை தயவு செய்து வாங்கிக்கோ."

"ஏங்க... உங்களுக்கு நான் உதவி செய்ததா இருக்கக் கூடாதா?"

"எனக்கு பணத்துக்குக் குறைவே இல்லைப்பா! வட்டி மட்டுமே எனக்கு மூணு நாலு லட்சம் மாசத்துக்கு வருது. நான் டாக்சியிலேயே வந்துருக்கலாம். ஆனாலும் நான் கொஞ்சம் சிக்கனமானவன். அதான் சென்னைல இருந்து இந்த மதுரைக்கு ரயில்ல வந்து ஆட்டோவுல வந்துருக்கேன்."

"ஓ... நீங்க சென்னைக்காரரா?"

"ஆமா... ஆனா இனி நான் மதுரைக்காரன்!"

சொல்லிக்கொண்டே பணத்தைக் கொடுத்து விட்டு அந்த முதியோர் இல்லத்துக்குள் நுழையத் தொடங்கினார்.

"ஈஸ்வரா... இந்த ஆஸ்ரமத்துல இருக்கற யாருக்கும் காதே கேட்கக் கூடாது..." என்று உடன் நடக்கும் அவர் மனைவியிடம் வேடிக்கையான பிரார்த்தனை.

"அலமு... இவ்வளவு நாள்தான் என்னை கன்ட்ரோல் பண்ணிண்டே இருந்தே. இனியாவது கொஞ்சம் சும்மா இரு. நான் ஒண்ணும் அர்த்தமில்லாம பேசறவன் கிடையாவது. உனக்கும் அது நன்னா

தெரியும். இருந்தும் நான் வாயத் திறந்தாலே உனக்குப் பிடிக்க மாட்டேங்கறே..."

அவர் அலுத்துக் கொள்ள அவர் வசம் சூட்கேஸ் மிகவே கனத்தது. அவரால் தூக்க முடியவில்லை. யாராவது உதவ மாட்டார்களா என்று எதிரில் பார்த்தபோது அந்த முதியோர் இல்ல முகப்பில் இருக்கும் ஒரு சிறிய பிள்ளையார் சிலைக்கு கற்பூர ஆரத்தி நடந்து கொண்டிருந்தது.

இல்லத்தைச் சேர்ந்த சிலர் வணங்கியபடி நின்றிருக்க, அவர்களுக்கு நடுவில் ஒரு இளம் பெண்! பெரியவரையும் அவர் மனைவியையும் பார்த்து விட்டு அவள் முன் நீண்ட கற்பூரத்தைக் கூட ஒற்றிக் கொள்ளாமல் ஓடிவரத் தொடங்கினாள்.

வந்தவள் இரண்டு சூட்கோஸையும் பார்த்தபடியே 'சீனு' என்று குரல் கொடுக்க, ஒருவன் ஓடிவந்து படுக்கைக் கட்டையும் சூட்கேஸ்களையும் எடுத்துக் கொண்டான்.

"சார் நீங்கதானே மிஸ்டர் லக்ஷ்மி நரசிம்மன்... ரிட்டயர்ட் பேங்க் ஆபீசர்...?"அவள் நடந்தபடியே கேட்டாள்.

"எக்ஸாக்ட்லி... "

"இவங்க உங்க மனைவி அலமேலு... சரியா?"

"ஹண்ட்ரட் பர்சன்ட், அலமேலு என்கிற அலமு. நான் 'அலமு'ன்னு தான் கூப்பிடுவேன்"

"யூ ஆர் வெல்கம் சார்... வாங்க ஆபீஸ் ரூமுக்குப் போய் எங்க சேர்மனை பார்க்கலாம்..."

"ஷ்யூர்... ஷ்யூர்...!"

அவரிடம் புதிதாய் ஒரு உற்சாகம். உடன் வந்த அவர் மனைவியும் சுற்றிச் சுற்றிச் பார்த்தபடியே நடந்தாள். அவர்கள் இருவரையும் அங்குள்ள மற்ற முதியவர்கள் அவர்கள் இருந்த இடத்தில் இருந்தபடியே பார்த்தனர்.

சிலரால் அவர்களை பளிச்சென்று பார்க்க முடிந்தது. சிலருக்கு பார்வைக் கோளாறு. அவ்வளவு துல்லியமில்லை. அவர்களில் கஸ்தூரி ரங்கன் என்கிறவர் மட்டும் தன் வசம் இருந்த மூக்குப்பொடியை ஒரு ஏற்று ஏற்றிக் கொண்டே அவருக்கு அருகில் நின்றபடி இருந்த தண்டபாணி என்பவரிடம் "என்ன தண்டம்... இன்னிக்கு இரண்டு டிக்கட் என்ட்ரி

போல் இருக்கு?" என்று ஆரம்பித்தார்.

"ஹும் இவங்களுக்கு என்ன சிக்கலோ?"

"வயசாயிட்டாலே சிக்கல்தான்யா. என்ன... பசங்கன்னு யாரும் இருந்திருக்க மாட்டாங்க. ஆளைப் பார்த்தா வெள்ளையா ஆபீஸர் மாதிரி தெரியறாரு நல்ல பென்ஷன் வரும். அப்புறம் என்ன?

இனிமே யாருக்கு வயசானாலும் சரி... முதியோர் இல்லம்தான். நீ வேணா பார் முதியோர் இல்லம்கறது ஒரு பிசினஸ் சென்டரா மாறி ஊருக்கு ஊர், தெருவுக்குத் தெரு கல்யாண மண்டபம், சினிமா தியேட்டர் இருக்கற மாதிரி வரப் போகுது"

அவர் அறுக்கத் தொடங்கிவிட்டார்!

ஆபீஸ் ரூமில் சேர்மன் ரங்காச்சாரி பளிச்சென்ற திருமண் காப்போடு நாற்காலியில் அமர்ந்திருந்தார். அந்த இளம் பெண் அழைத்து வந்திருந்த இருவரையும் பார்த்து அழகாய் நமஸ்காரம் சொன்னார்.

"வெல்கம் மிஸ்டர் லஷ்மி நரசிம்மன். வெல்கம் மிஸஸ் லஷ்மி நரசிம்மன்."

"தேங்க்யூ மிஸ்டர் சாரி. வெரி கைண்ட் ஆஃப்யூ"

"வித் ப்ளெஷர், நீங்க உங்க சாமான் செட்டோட வந்துட்டீங்க தானே?"

"இந்த இரண்டு சூட்கேஸ்தான் எங்க லக்கேஜ். அப்புறம் இந்த பெட்."

"இவ்வளவுதானா?"

"இவ்வளவேதான்... எங்களைத் தான் இங்க இனிமே நீங்க பார்த்துக்கப் போறீங்ளே..."

"பரவாயில்ல... சிலர் சென்டிமென்டா அவங்க யூஸ் பண்ணின கட்டில் நாற்காலிய கூட கொண்டு வருவாங்க. அதான் கேட்டேன்."

"என்ன பெரிய சென்டிமென்ட்... புடலங்கா. உசுரோட எங்க பொண்ணையே தூக்கி எமன்கிட்ட கொடுத்துட்டோம். அதுக்கு முன்னால இந்த மேஜை நாற்காலியெல்லாம அசல் ஜடப்பொருள்தானே?"

அந்த லஷ்மி நரசிம்மன் திரும்பிக் கேட்டபோது அவர் கண்களில் மளுக்கென்று கண்ணீர். அது அவர் னைவியிடமும் எதிரொலிக்க

"ஞாபகப் படுத்திட்டேளா?" ன்று அந்த அம்மையாரிடமும் விசும்பல்.

அந்த நொடி அவர்களை அழைத்து வந்திருந்த பெண்ணைத் தான் சேர்மன் ரங்காச்சாரி பார்த்தார். அவர் பார்வையின் பொருள் அவளுக்கும் புரிந்தது.

"ஓ, நோ... இங்க வந்துட்டு அழக்கூடாது. இந்த முதியோர் இல்லத்தில் கண்ணீருக்கு இடமே கிடையாது. நான் முதுமையை சந்தோஷமா ஜெயிக்கற ஒரு கோட்டையா இந்த திருமகள் முதியோர் நிலையத்தை நடத்த விரும்பறேன்.

உங்க பொண்ணை உண்மைல நீங்க இழக்கல. இங்க உங்க மேல பாசம் காட்ட உங்க பெண்ணைப் போல பல பெண்கள் இருக்காங்க. டோன்ட் ஒர்ரி..."

சேர்மன் ரங்காச்சாரி ஆறுதலாகப் பேசினார். அது அவர்களுக்கும் இதமாக இருந்தது.

"அம்மாடி... இவர்கள இவங்க ஃப்ளாட்டுக்குக் கூட்டிகிட்டு போய் விட்டுட்டு அப்படியே ஃபார்மாலிடீஸ் எல்லாத்தையும் முடிச்சுட்றயா?"

அவர் அந்த இளம் பெண்ணை பார்த்துக்கேட்க "ஷ்யூர் அப்பா" என்றாள் அவள். மெல்லிய பச்சை நிறத்தில் சுடிதார் உடுத்தி அழகாய் தலை பின்னி நெற்றியில் குங்குமத்தோடு கூடிய விபூதிக் கீற்றோடு அவளைப் பார்ப்பதற்கு அவ்வளவு லட்சணமாக இருந்தது.

"வாங்கபோகலாம்."- என்று அவள் அந்த ஆபீஸ் ரூமை

விட்டு அவர்களை அழைத்துச் செல்லத் தொடங்கினாள். லக்கேஜ்களை முன்னதாக எடுத்துச் சென்று விட்டிருந்தனர். அவர்களும் அந்தப் பெண்ணை தொடர்ந்தனர்!

அந்த ஃப்ளாட் திறக்கப்படும்போதே ஏ.சி.போடப்பட்டு சிலீர் என்றிருந்தது. உள்ளே ஷெல்ஃப் ஒன்றில் மீனாட்சியின் உருவப்படமும் அதன்முன் தசாங்கமும் மணந்து கொண்டிருந்தது. ஒரு மேஜை மேல் டிவி. அதுபோக இரண்டு மெத்தையுள்ள கட்டில்கள். முகப்பில் டிராயிங் ரூம் போல் ஒரு செட் அப். அங்கே நான்கு நாற்காலியும் ஒரு மோடோவும் போடப்பட்டிருந்தது.

சுவற்றில் பெரிய சைசில் பார்க்க முடிந்த கெடிகாரம். அதுபோக ஒரு அறை. அறைக்குள் ஒரு இரும்பு பீரோ சாவிக் கொத்தோடு அவர்களின்

பொருட்களை ஏற்றுக் கொள்ள காத்திருந்தது.

மறுபுறத்தில் பால்கனி.

அங்கேபோய் நிற்கவும் வைகை ஆற்றுக்கு அப்பால் மதுரை ராணியான மீனாட்சியின் கோயில் கோபுரங்கள் நான்கும் ஒரு சேர கண்ணில் பட்டன. அலமு அங்கு நின்றபடியே கோபுரங்களைப் பார்த்து படபடவென்று கன்னத்தில் போட்டுக் கொண்டாள். அவரும் வந்து சேர்ந்து கொண்டார்.

"என்ன சொல்றே... ஃப்ளாட் பிடிச்சிருக்கா?" அவர் கேட்க அலமு அம்மையாரிடம் சிலிர்ப்பு.

"ரொம்பப் பிடிச்சிருக்கு. இப்படி மீனாட்சி கோபுரத்த பாக்கக் கொடுத்து வெச்சிருக்கணும்."

"நான் சொன்னேன்ல... நீ இங்க வந்தா சொக்கிப் போவேன்னு..."

"வாஸ்தவம்தான்... நம்ம மீனாட்சியதான் கடங்கார எமன் பறிச்சிண்டு போயிட்டான். ஆனா இந்த மீனாட்சியை நான் விடமாட்டேன்..."

அலமுவிடம் மகளைத் தொட்டு ஒரு உணர்ச்சிப் பீறிடல்.

"என்ன ஞாபகப்படுத்தாதேன்னுட்டு இப்ப நீ மட்டும் ஞாபகப்படுத்தலாமா?" அவர் சண்டைக்குத் தயாரானார். அந்தப் பெண்ணை அது பாதித்துவிட்டிருந்தது.

"அப்பா..." என்றாள் இதமான குரலில். லஷ்மிநரசிம்மனிடம் உடனேயே ஒரு சிலிர்ப்பு.

"அப்பாவா... யார் கூப்பிட்டது"

"நான் தான்ப்பா..."

"நீ... நீயாம்மா... நீயா அப்பான்னே?"

"ஆமா... நீங்க எனக்கு அப்பா. இவங்கதான் அம்மா. நானும் அப்பா அம்மா இல்லாத ஒரு அனாதைதான். சேர்மன் சார்தான் எனக்கு அப்பா அம்மா எல்லாம். நேத்து தான் அவர் உங்களைப் பற்றி சொன்னார். அங்க மகளை நீங்க மஞ்சக் காமாலைக்கு பறி கொடுத்ததையும் சொல்லி, என்னை உங்க மகளா இருக்க முடியாமான்னு கேட்டார்.

இதைவிட எனக்கு ஒரு சந்தோஷம் இருக்க முடியமா என்ன?"

அவள் அவரது கையை பற்றியபடி கேட்கவும் அவரிடம் சிலிர்ப்பு.

"சந்தோஷம்மா... சந்தோஷம்... ஒரு ஆட்டோக்காரன் இங்க எங்கள இறக்கி விடும்போதே எங்களுக்கு இனி நல்ல காலம்னான். அது எனக்கு இப்பப் புரியுறது. ஆமா நீ ஒரு அனாதைன்னு சொன்னியே... நீ யாரும்மா. உன் பேர் என்ன,"

"அனாதைன்னாலே முடிஞ்சு போச்சேப்பா... நான் எந்த சாதி என் அப்பா அம்மா யார் எந்த ஊர் எதுவும் தெரியாது. என்னுடைய 12 வது வயசுலயே நான் ஒரு தொட்டில் குழந்தைன்னு உண்மையை எனக்குச் சொல்லிட்டாங்க. ஒரு தாய் தகப்பன் குழந்தை அவர்களுக்கு மட்டும் சொந்தம். ஆனா தொட்டில் குழந்தையோ சமுதாயத்துக்கே சொந்தம். ஆகையால உன்வரைல இந்த சமுதாயமே உறவு. வயசான அவ்வளவு பேருமே என்தாய் தந்தையர்கள்தான் கறதுதான் சேர்மன் எனக்கு உணர்த்தின பாடம்."

அவள் சொல்லி முடிக்க, மணக்க மணக்க காபி வந்தது. டிகிரி காபி!

"காபி சாப்பிடுங்க" என்றாள்.

அவர்களும் களைப்பாக இருந்ததால் துளி தயக்கமுமின்றி உடனேயே சாப்பிடத் தொடங்கினர். அமிர்தமாய் இருந்தது. போதுமான சூடுவேறு.

"அலமு நீ போடற காபி மாதிரியே இருக்கு..."

"இந்த காபி மட்டுமில்லை... டிபன், சாப்பாடு எல்லாமே இங்க ஹைஜினிக்கா இருக்கும். தினம் ஒரு மெனு. நீங்க டைனிங் ஹாலுக்கு போயும் சாப்ட்டுக்கலாம். இங்கேயும் கொண்டு வந்து பரிமாறுவாங்க. இது போக வாரம் ஒரு தடவை டாக்டர் வந்து பிரஷர்ல இருந்து சகலத்தையும் பரிசோதிப்பார். கீழ தினசரி பஜன் உண்டு. மாசம் ஒரு கோயிலுக்கு வேன்ல போயிட்டு வருவோம். அன்னிக்கு அந்தக் கோயில் அன்னதானம் நம்ம முதியோர் இல்லம் சார்பா நடக்கும். நீங்களே உங்க கையால எல்லாருக்கும் பரிமாறலாம். இதுபோக இங்க இன்டோர் அவுட்டோர் கேம்ஸ் உண்டு. அதுல சாம்பியன்ஷிப் பிரைசும் உண்டு.

வெள்ளி, சனி, ஞாயிறு மூன்று நாளும் வெளிய ஆடிட்டோரியத்துல கதாகாலட்சேபமும், சொற்பொழிவுகளும் நடக்கும்.

ஊர்ல நீங்க உங்க வீட்டுக்குள்ள ஒருத்தர முகத்தை ஒருத்தர் பார்த்துகிட்டு உட்கார்ந்திருந்த மாதிரி உட்கார்ந்திருக்க தேவையில்ல. உங்களோட சேர்த்து இந்த முதியோர் இல்லத்து உறுப்பினர்கள்

எண்ணக்கை 167.

நாம அவ்வளவு பேரும் ஒரு குடும்பம்.

ஒரு ஜாதி- மனுஷ ஜாதி"

அந்த பெண் சொல்லி முடிக்க அவர்கள் இருவருக்கும் ஒரே சிலிர்ப்பாக இருந்தது.

"நீ சொல்றதை கேட்க கேட்க நாங்க இவ்வளவு நாளை வேஸ்ட் பண்ணிட்டோமேன்னு தோண்றது. ரொம்ப சந்தோஷம்டா குழந்தை. ஆமா நீ உன் பேரைச் சொல்லவே இல்லையே... உன் பேர் என்னடா?"

"உங்க வரைல நான் உங்க பொண்ணு மீனாட்சி."

"அது இனிமே தானே... இவ்வளவு நாளா உனக்கு என்ன பேர்?"

"அதுக்கு பதிலை நான் சொல்றேன்..." என்றபடியே உள் நுழைந்தார் சேர்மன் ரங்காச்சாரி.

"வாங்கோ..."

"உங்களுக்கு ஒதுக்கப்பட்ட இந்த ஃளாட் பிடிச்சிருக்கா?"

"ரொம்பப் பிடிச்சிருக்கு. ஐநூறு சதுரஅடிதான். ஆன ஒரு பேலஸ்ல இருக்கிற திருப்தி இருக்கு."

"நீங்க மாசாமாசம் தரப்போற கட்டணம் இந்த முதியோர் இல்லத்த நடத்தத்தான் பயன்படப் போறது. எங்களுக்கு லாப நோக்கமெல்லாம் கிடையாது."

"அது சரி... இந்தப் பொண்ணோட பேரை நீங்க இன்னும் சொல்லலியே...?"

"சொல்றேன். இவளை எங்க முதியோர் இல்ல வராண்டாவுல உள்ள தொட்டில்ல நாங்க கண்டெடுத்தப்போ இவகிட்ட அழுகையே இல்லை. என் முகத்தைப் பார்த்து அப்படி ஒரு சிரிப்பு சிரிச்சா! கூடவே கைய கால அசைச்சுண்டு கொணட்டல் வேற. ஆனா என் வரைல அந்த கொனட்டல் சப்தம் ஒரு யாழோட இசையாதான் தெரிஞ்சது. அதனால இவளுக்கு யாழினின்னு பேர் வெச்சேன்..."

அவர் சொல்லி முடிக்க, அந்த யாழினியின் கண்களில் பனிப்பு.

"யாழினி நீயா அழறே?"

"நீங்க சொன்னத கேட்கவும் என்னால அடக்க முடியலப்பா."

"நெகிழ்ச்சியோட அழறது நல்லதுதான். அதுல தப்பு இல்ல. ஆனா நீ அதுக்காக கூட அழக்கூடாது. நீ பெருசா வாழ்ந்து காட்டி தொட்டில் குழந்தைகளாலயும் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். ஆக முடியும்னு நிரூபிக்கணும்னு சொல்லியிருக்கேன் இல்லையா?"

"ஓ...இவ படிக்கிறாளா?"

"படிக்கிறாளாவா... இவ ஒரு தங்க மெடல்காரி..."

ரங்காச்சாரி சொல்லிச் சிரித்தார்.

"என் வரைல வலதுகை இடது கை எல்லாமே யாழினிதான்..." என்றும் தொடர்ந்தார்.

"அப்ப எங்க பொண்ணுன்னு சொன்னது சும்மா எங்க ஆறுதலுக்கா?"

லஷ்மி நரசிம்மன் சட்டுன்னு மடக்க "இல்ல மிஸ்டர் லஷ்மி நரசிம்மன்... யாழினி இங்க எல்லாருக்கும் பொண்ணு. அதை நீங்களும் போகப் போக புரிஞ்சிப்பீங்க."

ரங்காச்சாரி சொன்னபோது குரலில் ஒரு உறுதி. அலமு உடனேயே நெருங்கிச் சென்று அவள் இரு கன்னத்தையும் வருடி திருஷ்டிக்கழித்தாள்!

அந்த பிரமாண்ட ஹாஸ்பிடல் வளாகத்தில் அசுர வேகத்தில் வந்து தேங்கி நின்றது அந்த பி.எம்.டபிள்யூ கார். உள்ளிருந்து கோட்டும் சூட்டுமாய் ஒருவரும், பட்டுப் புடவையும் வைர அட்டிகையுமாக ஒரு பெண்ணும் இறங்கினர்.

அவருக்கு ஐம்பது வயதிருக்கலாம். அந்தப் பெண்ணுக்கோ ஒரு நாற்பத்தைந்து இருக்கும். இருவரையும் சில டாக்டர்கள் காத்திருந்து அவசர அவசரமாக ஐ.சி.யு. நோக்கி அழைத்துச் சென்றனர்.

உள்ளே எழுபத்தைந்து வயதில் ஒருவர் ஆக்ஸிஜன் ட்யூபோடு எமனை எட்டிப்பிடிக்கத் தயாராக இருந்தார். இருவரும் வரவும் தவித்த விழிகளோடு அவர்களைப் பார்த்து அருகிலும் அழைத்தார்.

"மாமா..."

"கிட்டவா..."

"சொல்லுங்க..."

"உன்..."

"என்...?"

"உன்..."

"சொல்லுங்க எனக்கு என்ன?"

"உன்... உன்... உன் குழந்தை சாகலை... நான் செத்துப்போயிட்டதா பொய் சொல்லிட்டேன். அது... ஒரு அனாதை ஆஸ்ரமத்துல இப்பவும் உயரோடதான் இருக்கா..."

அவரால் அதற்கு மேல் பேச முடியவில்லை. உயிரும் வெட்டிக் கொண்டு பிரிய ஆரம்பித்தது.

அந்த உண்மையைக் கேட்ட பெண்ணிடமோ பெரும் திகைப்பு!

# 2

'இருப்பவர் யாவரும் வாழ்பவர் அல்லர்
இறந்தவர் யாவரும் மாண்டவர் அல்லர்
மனிதரில் பலபேர் தாவரம் போன்றவர்
மற்றவர் சிலரோ மாமிசம் போன்றவர்
மூச்சு விடுவதே வாழ்வெனச் சொன்னால்
மாடுகள் கூட வாழ்வதாய் ஆகிடும்
விலங்குகள் எல்லாம் வாழ்பவை அல்ல;
இருப்பதாய் மட்டும் எடுத்துக் கொள்ளலாம்!'

-'வெளிச்சம் வருகிறது' கவிதை நூலில்
ஏர்வாடி. எ. ராதாகிருஷ்ணன்.

உயிர் மூச்சு பிரிவதற்கு முன் அவர் சொன்ன அந்த சொற்கள் அந்தப் பெண்மணியை ஒரு இன்ப அதிர்ச்சிக்கு ஆளாக்கி விட்டிருந்தது. அந்த இன்ப அதிர்ச்சி அவர் இறப்பின் துக்கத்தைக் கூட ஒன்றுமில்லாதபடி செய்து விட்டது. இன்ப அதிர்ச்சிக்கு ஆளான அந்தப் பெண்மணியை அவளோடு வந்தவர் தோளோடு சேர்த்து கட்டிக் கொண்டார்.

"மோகனா... கடவுள் நம்மைக் கைவிடலை. ஹரித்வார்ல நாம சந்திச்ச யோகியை நான் உண்மையானவர்னும் ஒத்துக்கறேன். அவர் உண்மைல முக்காலமும் தெரிஞ்ச ஞானிதான்..." என்றார் கட்டிக் கொண்ட நிலையில் அவர்.

"உண்மைதாங்க... மாமா மட்டும் இந்த உண்மையை சொல்லாமலே செத்துருந்தா என்னைவிட ஒரு பாவி இருக்க முடியுமா?"

"அதான் சொல்லிட்டாரே. நீயும் சரி, நானும் சரி இனி நெஞ்சு நிமிர்த்தி நடக்கலாம். பை த பை டாக்டர்கிட்ட சொல்லி மாமா உடம்பை நாம வீட்டுக்குக் கொண்டு போற வழியைப் பார்ப்போம், கமான்..."

அவரிடம் ஒரு உயிரின் பிரிவைக் கடந்த ஒரு புது உற்சாகம் தெரிந்தது. அந்த 'ஐ.சி.யு.' வை விட்டு இருவருமே வெளியே வந்தார்.

எதிரில் சீஃப் டாக்டர் கிரிதர். உடன் அவரது ஜூனியர்கள் இருவர்.

"வெரி வெரி சாரி மிஸ்டர் சந்தானம். உங்க அங்கிளை எங்களால காப்பாற்ற முடியலை. இங்க வரும்போதே அவர் ஒரு வெஜிடபுளாத்தான் வந்தார். அவர் சாகறதுக்கு முந்தி பேசினதே எங்க வரைல ஒரு ஒண்டர் தான்."

"அவர் பேசினது மட்டும் ஒண்டர் இல்லை... பேசின விஷயமும் என் வரைல ஒண்டர். என்னால இப்ப துக்கப் பட முடியலை. இவரது சாவு விசித்திரமானது. அதுல இவரோட சாவைச் சேர்க்கலாம். நீங்க பாடியை பக்காவா பிரசர்வ் பண்ணி இம்மிடியட்டா அனுப்பி வையுங்க. மற்ற விஷயங்களை நான் பாத்துக்கறேன்."

சந்தானம் என்கிற அந்தத் தொழிலதிபர் மோகனா என்கிற தன் மனைவியை தோளோடு அணைத்த படி அந்த நட்சத்திர ஆஸ்பத்திரியின் வாயிற் பகுதிக்கு வரவும் அவரது காரை மைக்கில் செக்யூரிட்டி ஒருவர் அழைக்கவும் அதுவும் வந்து அவரை ஏற்றிக் கொண்டு மிதப்போடு விரைய ஆரம்பித்தது... காருக்குள் மோகனா என்கிற அந்தப் பொண்மணியின் கண்களில் நிறையவே பனிப்பு. இரு கையும் சேலை முந்தியை இறுகப் பற்றியபடி இருந்தன. அதில் அவள் மனப் போராட்டம் தெரிந்தது.

"மோகனா..."

"சொல்லுங்க..."

"ஒரு விஷயத்தை நீ கவனிச்சியா?"

"எதை?"

"மாமா ஒரு அனாதை ஆஸ்ரமத்துலன்னு சொன்னாரு தவிர, எந்த ஆஸ்ரமம்னு சொல்லலை பாத்தியா?"

அவர் கேட்கவும் மோகனாவிடம் வெடுக்கென்று ஒரு பார்வை. ஐய்யைய்யோ 'இப்ப என்னங்க பண்றது என்பது போல ஒரு பாவனை.

"உன் பார்வைக்கு எனக்கு அர்த்தம் புரியுது. குருடா இருந்த நமக்கு இப்ப பாதி கண்ணுதான் கிடைச்சிருக்கு. ஆனா முழு கண்ணும் வந்துரும்கற நம்பிக்கை இப்ப எனக்கு ஏற்பட்டிருக்கு. பை த பை அவர் வார்த்தைல இருக்கற இன்னொரு உண்மையை கவனிச்சியா? அந்தக் குழந்தை உயிரோடதான் இருக்கான்னு சொன்னார். 'இருக்கா' அப்படின்னா அது பெண்பால்... அப்படின்னா நம்ம குழந்தை ஒரு பெண்!"

அவர் பெண் என்றிட, மோகனாவின் பனித்த விழிகளிடம் படபடப்பான ஆமோதிப்பு.

"வாட் எ பிட்டி...என் மகள்... என் மகள்..." அவர் ஏதோ சொல்ல வந்து முடியாமல் உடைந்து போய் அவரும் அழத் தொடங்கினார்.

பின்னர் மார்புப் பக்கமாய் கோட்பாக்கெட்டைத் தடவி நவீனமான செல்போனை வெளியே எடுத்து டச் ஸ்க்ஹ்ரீனில் விரல்களை உழலச் செய்து "சந்த்ரா... டேய் சந்த்ரா நான் சந்தானம் பேசறேண்டா..." என்று பலமான குரலில் ஆரம்பித்தார். அப்படியே ஸ்பீக்கர் போனை ஆன் செய்தார். மறுபுறம் அவர் அழைத்த அவர் நண்பர் சந்திரசேகரிடம் இருந்து பதில் குரல்.

"ஹலோ, சந்தானம்... எப்ப நீ பாங்காக்ல இருந்து வந்தே?"

"இன்னிக்கு காலைலதான்..."

"வர்றதுக்கு ஒரு மாசம் ஆகும்னுட்டு போனே... சீக்கிரமாவே வந்துட்டியே..."

"ஆமாண்டா... அது சரி நீ எங்க இருக்கே?"

"நான் இப்ப என் வீட்ல தாண்டா இருக்கேன்."

"சந்திரா... நான் இப்பவே உன்னை பாக்கணும்டா. உன்கூட நான் நிறைய விஷயங்களை பேச வேண்டியிருக்கு."

"பேசணுமா வீட்டுக்கு வரவேண்டியது தானே? எதுக்க இப்படி பீடிகை எல்லாம் போட்றே... என் வீட்டுக்கு வரதுக்கு பர்மிஷன்லாம் வேற கேக்கறே..."

"நான் இப்ப சந்தோஷம் துக்கம்ங்கற இரண்டுலயும் இருக்கேன். அதனால எனக்குள்ள ஏகப்பட்ட தடுமாற்றங்கள். பை த பை... நான் வாரிசு இல்லாத மலடு இல்லடா... ஐ ஹேட் ஒன் டாட்டர்..."

"சந்தானம் ... என்னடா சொல்றே ... மகளா யாரையாவது தத்து எடுக்கப் போறியா?"

"என் ரத்தத்துல பிறந்ததே இருக்கும்போது நான் எதுக்கடா தத்து எடுக்கணும்?"

"என்ன சந்தானம்... நீ நார்மல் சென்ஸ்லதான் பேசறியா?"

"இதுல இருந்தே நீ இதை நம்பலைன்னு நல்லா தெரியுது. சந்த்ரா... நம்புடா... நம்பு நீ நம்பித்தான் ஆகணும் அந்தக் கால தமிழ் சினிமால ஒரு நாள்னு ஒரு கேரக்டர் ஃப்ளாஷ்பேக்கை சொல்ல ஆரம்பிக்கும். அப்ப கொசுவர்த்தி சுருள் மாதிரிகூட வட்டம் விழுமே...? கிட்டத்தட்ட அதே மாதிரி எனக்கும் இன்னிக்கு நடந்ததுடா. நான் எவ்வளவு பெரிய பாவி தெரியுமா?

நான் இங்க இந்தத் தமிழ்நாட்டு பணக்காரர்கள்லயே முதல் இடத்துல இருக்க, என் மகள் ஒரு அனாதை விடுதில வாழ்ந்துகிட்டு இருக்காடா! எவ்வளவு பெரிய கொடுமை இது?"

சந்தானம் வெடித்தார். அவர் அவ்வளவு பலமான குரலில் வருத்தத்தோடு பேசி மோகனா கேட்டதேயில்லை.

அதேசமயம் அது ஒரு பெரிய உண்மை. அந்த உண்மையின் தாக்கமும் வலியும் மோகனாவிடமும் இருந்தது.

"சந்தானம்... உனக்கு ஒரு மகள் இருக்கான்னு நீ சொல்றதையே என்னால நம்ப முடியல. ஆமா என்ன இது திடீர்னு உன் லைஃப்ல இப்படி ஒரு திருப்பம். யார் சொன்னா......?"

"எல்லாத்தையும் நான் உன்கிட்ட பேசணும். மனம் விட்டுப் பேசணும் என் ஒரே பெஸ்ட் ஃப்ரெண்ட் நீ மட்டும் தான். இதுல ஒரு கொடுமை என்னன்னா எனக்கு ஒரு மகள் இருக்கான்னு தெரிஞ்சு போச்சு. ஆனா அது எங்க இருக்கா, எப்படி இருக்கான்னு எதுவும் தெரியாது அதை

எல்லாமும் கண்டுபிடிக்கணும்டா..."

"சந்தானம் நீ இப்ப என்ன பண்ணிக்கிட்டிருக்கே?..."

"உன் வீட்டுக்குதான் வந்துகிட்டிருக்கேன். உன் கூட பேசிட்டு உடனடியா என் மாமா பத்மநாபனுடைய ஃப்யூனரலையும் கவனிக்கணும்."

"ஃப்யூனரலா... அப்ப அவர் இறந்துட்டாரா?"

"ஆமாம்... நல்லவேளை சாகறதுக்குள்ள மனுஷன் உண்மையை சொல்லிட்டு செத்தானே... அந்த வகைல சந்தோஷம்."

"ஏ... உன் மாமா மூலமா தெரிய வந்த ரகசியமா இது?"

"ஆமாம்... பை த பை என் கார் இப்ப உன் பங்களா காம்பவுண்டுக்குள்ள நுழைஞ்சிடுச்சு..."

சந்தானம் கூறிமுடிக்க அந்த பிரமாதமான பங்களா போர்டிகோவில் அவரது கார் தேங்கி நின்றது. சந்தானமும், மோகனாவும் உதிர்ந்தனர். எதிர் கொண்டபடியே வந்தார் சந்திரசேகர். சற்று பருத்த தேகம். வீட்டில் ஹோம்லியாக இருக்கும்போதும் மிடுக்காக இன் செய்து பெல்ட் போட்டிருந்தார். முகத்தில் அப்பட்டமான பணக்காரப் பொலிவு. கூடவே படித்த டாக்டர் என்பதற்கான லட்சணங்கள். முகத்தில் டைரக்டர் பாலசந்தர் அணிவதுபோல படடையான சதுரக் கண்ணாடி.

சந்தானத்தைப் பார்த்தபடியே வந்தவர் மென்மையாக ஒரு அணைப்பு கொடுத்து "வாடா... உள்ளவா... கம், கம்..." என்று மோகனாவோடு சென்றார்.

உள்ளே ஹாலில் சோபாக்கள் இல்லை. மாறாக மெத்தை போடப்பட்டு அதன் மேல் திண்டுகள் கிடந்தன. ஒரு ஒண்ணரை அடி உயர முக்காலிமேல் வாஸ்து தாமரை வெண்கலப் பாத்திரம் ஒன்றில் மிதந்து கொண்டிருந்தது. தலைக்கு மேல் அந்த காலத்து திவான்கள் பயன்படுத்திய பங்காவிசிறி. அதில் ஏராளமான மயிற்பீலிகள்.

அந்த நாளில் ஹாலுக்கு வெளியில் இரண்டு அடிமைகள் இருந்து அவர்கள் அசைப்பதில் பங்கா அசைந்து காற்று வரும். இன்று அடிமைகளுக்குப் பதிலாக ஒரு மோட்டார் கருவி பங்காவை அசைக்கவிட்டு மெல்லிய காற்றை வரவைத்தபடி இருந்தது.

அந்த ஹாலும் தோற்றமும் சந்திரசேகர் ஒரு பழமை விரும்பி என்பதை

சொல்லாமல் சொல்லிவிடும்.

அவர்கள் மூவருமே ஹாலிலுள்ள மெத்தை மேல் அமர்ந்து கொண்டனர். கால் மடக்கி அமர்வது கடினமாக இருந்தால் இரு திண்டுகளை ஒன்றன் மேல் ஒன்றாகப் போட்டு அதன்மேல் ஏறி அமர்ந்து கொள்ளலாம்.

சந்தானம் அப்படித்தான் அமர்ந்து கொண்டார்.

முகத்தில் உலராத கான்க்ஷீட் போல இறுக்கம் பெருமூச்சுவிடும் சப்தமும் துல்லியமாக காதில் கேட்டது. மோகனாவும் உறைந்து தான் போயிருந்தாள்.

இடையில் காபூலில் இருந்து தரவிக்கப் பட்டிருந்த அசலான திராட்சை ரசம்!

அதை இருவருமே மறுத்துவிட்டனர்.

சந்திரசேகருக்கும் இருவரும் மகளைப் பற்றய அழுத்தமான நினைப்பில் சிக்கிக் கொண்டிருப்பது புரிந்தது.

"சந்தானம்... ப்ளீஸ் பீ ரிலாக்ஸ்...! நேர்ல பேசுறேன்னு சொல்லிட்டே டெலி போன்லயே எல்லாத்தையும் சொல்லிட்டே அதான் இப்ப எதிர்ல் எப்படி ஆரம்பிக்கறதுன்னு உனக்கு குழப்பம். ஆம் ஐ ரைட்?

யெஸ் ... அனா நமக்குள்ள என்ன ஃபார்மாலிடி... சந்தர், எனக்கு ஒரு மகள் இருக்கான்னு தெரிஞ்சதுல இருந்தே என் மனசு எப்படி எல்லாம் துடிக்குது தெரியுமா?"

"உங்களுக்கு மட்டும்தானா... பெத்த எனக்கு இல்லையா...? அண்ணன் கிட்ட சட்டுன்னு பேச வேண்டியத பேசிட்டு கிளம்புங்க... மாமா உடம்பு வீட்டுக்கு வரும்போது நாம இல்லேன்னா நல்லா இருக்காது..."

"இல்ல மோகனா... இல்ல... நான் மாமா உடம்பைப் பாக்க விரும்பல. நீ பூரணிக்கு போன் பண்ணி எல்லா காரியத்தையும் அவளையே பிரொசீட் பண்ணிக்க சொல். மாமா என்வரைல ஒரு துரோகி..."

"ஐயோ என்னங்க சொல்றீங்க?"

"ஏன் உனக்கு அவர் துரோகியா தெரியலியா?"

"ஒரு வருஷமா ரெண்டு வருஷமா? இருபத்தியோரு வருஷமா இந்த ரகசியத்தை மனுஷன் மனசுல வெச்சு கிட்டே நம்ம கூட வாழ்ந்துருக்கார். எவ்வளவு பெரிய துரோகம்?"

"இருந்தாலும் மனசு கேக்காம உண்மையைச் சொல்லி விட்டு அவர் இறந்துருக்காருங்க இதுக்காகவாவது நாம அவர் ஈமக்கிரியை சடங்குல பங்கெடுத்துக்கிட்டுதான் தீரணும்..."

"இல்ல மோகனா... ஐ கான்ட்... ஐ கான்ட்! என்னால முடியாது. சாகும்போது கூட அந்த நபர் நம்ம கிட்ட முழுசா உண்மையை எங்க சொன்னார்? இப்படி இரண்டும் கொட்டானா ஒரு ரகசியத்தைச் சொல்லிட்டு செத்ததுக்கு சொல்லாமலே செத்துருக்கலாம்... பாரு... எந்த அனாதை இல்லத்துக்குன்னு போய் நாம தேடிக் கண்டுபிடிக்கப் போறோம்?" எப்படி கண்டுபிடிக்கப் போறோம்? எனக்கு எல்லாமே பிளைண்டா இருக்கு..."

சந்தானம் பதட்டமும் படபடப்பும் கறையாதபடி பேசிக் கொண்டே போனார். சந்திரசேகர் முகத்தில் சிந்தனை வரிகள்.

"அண்ணா நீங்களே சொல்லுங்கண்ணா. இவ்வளவுக்குப் பிறகு மாமா காரியத்துல நாம கலந்துக்கலேன்னா ஏன்னு கேள்வி வரும். அப்ப என்ன பதிலைச் சொல்றது?"

"நீ சொல்றதும் சரிதான் மோகனா... சந்தானம்... நீ முதல்ல புறப்படு. உன் மகளைக் கண்டுப்பிடிக்க வேண்டியது என் பொறுப்பு. பை த பை என் மகன் ஸ்ரீகணேஷ் ஃபாரின்ல எம்.எஸ். முடிச்சுட்டு வரான். அங்கையே வேலை கிடைச்சது. நான்தான் நீ எங்க கூட இருக்கணும்னு சொல்லி இண்டியா வரச் சொல்லியிருக்கேன்.

அவனுக்கு எப்பவுமே இன்வெஸ்டிகேஷன்ல ரெம்ப இண்ட்ரஸ்ட்! உனக்கே தெரியும். அவன் வீடியோ லைப்ரரில ஜேம்ஸ் பாண்ட் படங்களுக்குதான் முதல் இடம். அவன்கிட்ட உன் மகளைக் கண்டுபிடிக்கற அசைன் மென்ட்டை ஒரு சவாலாகவே சொல்லி ஒப்படைப்போம். எனக்கு நம்பிக்கை இருக்கு. அவன் கண்டுபிடிச்சிடுவான்னு. உன் மகள் கண்டுபிடிக்கப் படற வரை இந்த விஷயம் பத்தி பெரிசா யாரும் பேசவிடாம பாத்துக்கறதுதான் புத்திசாலித்தனம்.

உன் மாமா மேல இருக்கற கோபம் ரொம்ப நியாயமானது. ஆனா அதுல புத்திசாலித்தனமில்லை. புத்திசாலித்தனமில்லாத நியாயங்கள் ஜெயிச்சதா சரித்திரமும் இல்லை. ஆகையால முதலல புறப்படு. மாமாவேட காயங்கள் முடி.

உன் மாமா மகள் பூரணிகிட்ட நாம அப்புறமா நிறைய பேச

வேண்டியிருக்கு. ஆகையால அவகிட்ட தப்பித்தவறியும் உன் வருத்தம், வேதனைன்னு எதையும் காட்டிக்காதே புறப்படு..."

சந்தரசேகர் சந்தானத்தைப் பிடித்துத் தள்ளிவிட அவரும் அரை மனதாக புறப்பட்டார். அப்போது குளித்து பூஜையெல்லாம் முடிந்த நிலையில் "அடடே அண்ணனா..." என்றபடியே வந்தாள் சந்திரசேகர் மனைவி வாசந்தி.

"வாசந்தி... அவங்க இப்ப போகட்டும். நான் உனக்கு விவரமா சொல்றேன். அப்புறம் உன் கூட பேசற சாக்குல ஒரு அரைமணி நேரம் செலவாகும். நீ புறப்படுடா..." என்று திரும்பினார்!

"என்னங்க... என்ன விஷயம்?"

"சொல்றேன்... ஏர்போர்ட்டுக்கு நீ கிளம்பிட்டே தானே?"

"நான் ரேடி..."

"அப்ப கிளம்பு."

அவர்கள் இருவரும் தங்கள் காரில் ஏர்போர்ட்டை குறிவைத்திட காருக்குள் சந்திரசேகர் வாசந்தியிடம் சந்தானம் விஷயத்தையும் சொல்லி முடித்தார்.

"என்னங்க இது... என்னால நம்பவே முடியலிங்க?..."

"நம்பு... மோகனாவுக்கு குழந்தைப் பிறந்தது வரை எல்லாருக்கும் தெரியும். அது செத்துப் போயிட்டதா சொன்னது தான் பொய்யாகி இப்ப இப்படி ஒரு ரகசியமா வெளிப்பட்டுருக்கு. அன்னிக்கே சந்தானம் அப்பா மோகனாவை சந்தானம் கல்யாணம் பண்ணிக்கக் கூடாதுன்னு என்னென்னமோ பண்ணிப்பார்த்தார். அதெல்லாம் எனக்கும் தெரியும். மந்திரவாதி பில்லி சூனியமனுல்லாம் போனார்! அப்ப இந்த செத்துப்போன மாமா தான் சந்தானம் அப்பாவுக்கு வலது கை, இடது கை எல்லாம்.

ஆகையால் இப்படி நடந்துருக்க வாய்ப்பு இருக்கு. முதல்ல குழந்தையை பிரிச்சு அப்புறம் மோகனாவைப் பிரிக்க திட்டம் போட்டுருக்கலாம். ஆனா அது நடக்காம போயிடிச்சு. சந்தானம் எக்காரணம் கொண்டும் மோகனாவை ககத்து கைவிடத் தயாரா இல்லை. அதனால அவர் அப்பா நினைச்சபடி நடக்கலை. குழந்தை விஷயத்துல மட்டும் பெருசா ஏதோ தப்பு பண்ணிட்டாங்க. அதெல்லாமும் என்னன்னு கண்டுபிடிக்கணும்.

நம்ம கணேஷுக்கு இது நல்ல சந்தர்ப்பம்..."

"அவன் எஞ்ஜினியர்ங்க... சி.ஐ.டி. இல்லை..."

"அவன் என்ன சொல்றான்னு தான் பார்ப்போமே...?"

அவர் அப்படி சொல்லவும் வாசந்தி பதிலுக்கு எதுவும் கூறாமல் முறைத்தாள். ஏர்போர்ட்டும் வந்தது.

பார்க்கிங்கில் இருந்து உதிர்ந்து அரைவல் கேட் அருகே போய் நின்றனர். நேரமும் சரியாக இருந்தது அவர்கள் மகன் கணேஷும் மிடுக்காக நடந்து வந்தபடி இருந்தான்.

# 3

'பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
கயிற்றின் மேல் நடப்பதும் பெண்களே!'

-இதயத்தில் ஹைக்கூ'
கவிதையில் கவிஞர்.இரா. இரவி.

விமான நிலையத்தில் இருந்து வெளியே வந்த ஸ்ரீகணேஷை வாசந்தி மார்போடு அணைத்துக் கொண்டாள். ஒரு நீண்ட பிரிவுக்குப் பின் ஏற்படும் சந்திப்புகள் அலாதியானவை. அதிலும் தாய்-பிள்ளை சந்திப்பில் பாச மின்சாரம் ஹைவோல்ட்டேஜோடு பாயும். அந்த நேர சுகத்துக்காகவே பிரிந்திருப்பதைக் கூட மனது பெரிதாக கருதாது.

ஸ்ரீயும் அம்மாவின் அணைப்பில் நெகிழ்ந்தான். இரண்டாவதாகத்தான் அப்பா! இதில் எந்த அப்பாக் களுக்கும் தாழ்வு மனப்பான்மையில்லை. இதுவே மகளாக இருந்தால் முதலில் அப்பா மார்பு. அப்புறம்தான் அம்மா மார்பு. இவை எல்லாம் யாரும் திட்டம் போட்டு வகைப்படுத்தாமல் மிக இயல்பாக தன்னிச்சையாக நடைபெறும் விஷயங்கள்.

தமிழில் தருணங்கள் என்று ஒரு வார்த்தை உண்டு. அதில் ஏர்போர்ட்டில் உள்ள 'டொமஸ்டிக் கேட்' ட்டுக்கு ஒரு இடத்தை ஒதுக்கியே தீரவேண்டும். பல உயிர்கள் அங்கே தான் புத்துயிர் பெறுகின்றன. சந்தோஷ மூச்சு சரளமாக வெளிப்படுவதும் அங்கேதான்!

ஸ்ரீயும் அப்பா- அம்மா அணைப்பில் நெகிழ்ந்து முடித்தவனாக காரில் ஏறினான். காருக்குள் உற்சாக பாசப்பரிவர்த்தனைகள் ஆரம்பமாயின.

"ஸ்ரீ, அவசரமா திரும்பிப் போகணும்கற மாதிரி ஒரு திட்டத்தோட இந்தத் தடவை நீ வரலை தானே?"

"இல்லம்மா நான் கொஞ்சம் அவசரமா திரும்பிப் போய்த்தான் தீரணும்."

"என்னடா சொல்றே?"

"நல்ல கம்பெனில நல்ல டெலிக்னேஷன்ல வேலை கிடைச்சுருச்சும்மா. வருஷத்துக்கு சம்பளம் ஒரு லட்சம் டாலர்!"

"இந்திய மதிப்புக்கு ஒரு அம்பது லட்சம் வருமா?"

"நிச்சயமா. ஒரு இந்தியனுக்கு இப்படி ஒரு ஸ்டார்டிங் யு.எஸ். ல கிடைக்கறது ரொம்ப அபூர்வம்மா. நார்மலா எம்.எஸ். முடிச்ச ஒரு இண்டியன் வருஷத்துக்கு 30000 டாலர் சம்பாதிச்சா அதுவே பெரிய பிளஸ்ஸிங்!"

"உனக்கு மட்டும் எப்படிடா த்ஸ்ரீ டைம்ஸுக்கு மேல கிடைச்சது?"

"நான் ஒரு ரிசர்ச் ஆர்ட்டிகிளை சப்மிட் பண்ணேன். அதை பிராக்டிகலா புரூஃப் பண்ணியும் காமிச்சேன்."

"அப்படி என்ன ஆர்ட்டிகிள் அது?"

"இன்னிக்கு இந்த உலகத்துல இருக்கற சக்திகளை அதாவது பவரை அஞ்சா தானே சொல்றாங்க?"

"ஆமாம், பஞ்சபூதம்! நீர், நிலம், நெருப்பு, காத்து, ஆகாயம்கற அஞ்சு தான் அது."

"ஆறாவதா ஒரு பூதம் இருக்கு"

"நீ ஊழலைச் சொல்றியா?"

அப்பா சந்திரசேகர் இடையிட்டுக் கேட்டார்.

அதற்காக சிரித்தான் ஸ்ரீ. பின் "இது கூட நல்லா தாம்ப்பா இருக்கு. ஆனா நான் ஆறாவது பூதம்னு சொன்னது எலக்ட்ரிக் பவரை- அதாவது மின்சாரத்தை."

"வாஸ்தவம் தாண்டா. நீ சொல்ற இந்த பூதம் இப்ப தமிழ்நாட்டை படுத்தற பாட்டை நீ இங்க இருந்து அனுபவிச்சா தாண்டா தெரியும். நம்ம மதுரைல பதினாறு நேரம் பவர்கட்!"

வாசந்தி அப்படி சொன்ன நொடி ஸ்ரீ முகத்தில் அதிர்வுச் கவனங்கள்.

"நீ எதுக்குடா இப்ப இதுக்கு வருத்தப்பட்றே?"

"இல்லம்மா, என்னோட ரிசர்ச்சை நான் இண்டியால இம்ப்ளிமெண்ட் பண்ணா தாம்மா எல்லாருக்கும் பிரயோஜனமா இருக்கும். ஏன்னா, இது நான் பிறந்த நாடு. என் அறிவு இங்க பயன்பட்றது தானே சிறப்பானது?"

"வேண்டாம் ஸ்ரீ. இந்தப் பிறந்த நாட்டுப் பாசம்லாம் உனக்கு வேண்டவே வேண்டாம். இங்க இருக்கற அரசியல் வாதிகளை ஓவர்லுக் பண்ணி உன்னால இங்க எந்தத் திட்டத்தையும் இம்ப்ளிமெண்ட் பண்ண முடியாது.

மூலிகைப் பெட்ரோல் எடுத்துக்காட்றேன்னு சொன்ன ராமர் பிள்ளை எங்கே இருக்கார்னே தெரியல. இந்த ஊர்ல கல்நெஞ்சு இருந்தா போதும் ஜமாய்க்கலாம். ரோடு போட்றேன், பாலம் கட்றேன்னு சில்லரையை பெட்டி பெட்டியா அள்ளலாம். ஜனங்களும் வீட்டுக்கு வெளிய நடக்கற எதைப் பத்தியும் கண்டுக்கறதே கிடையாது.

நீ நம்ம கல்வி தாய் நாட்டுக்குப் பயன்படலையேன்னு வருத்தமே படாதே."

சந்திரசேகர் சொன்னதில் உள்ள நிஜங்கள் காரின் ஏ.சி. குளிரை மீறிக்கொண்டு ஸ்ரீகணேஷைச் சுட்டது.

"அப்பா. யு.எஸ் லயும் நிறைய பிராப்ளம்ஸ் இருக்குப்பா. அந்த ஊர் பிரச்னைகளைச் சொன்னா நம்ம ஊர் தேவலைன்னு சொல்லிடுவீங்க."

"ஸ்ரீ நீ இன்னும் உன் ரிசர்ச்சை பத்தி விளக்கமா சொல்லவே இல்லையே?" அம்மா வாசந்தி இடையிட்டாள்.

"சொல்றேம்மா. இப்ப மின்சாரத்துக்கு காற்றாலை, நிலக்கரி, அப்புறம் எரிசக்தின்னு சில விஷயங்கள் தானே பயன்படுது?"

"நீர் மின்சாரத்தை மறந்துட்டியா?" சந்திரசேகர் எடுத்துக் கொடுத்தார்.

"அதுவும் தாம்ப்பா. நான் வேகமா காத்து உருவாகற எல்லா இடத்துலயும் மின்சாரம் தயாரிக்க முடியும்னு நிரூபிச்சிருக்கேன்ப்பா."

"புரியும் படி சொல்லேன்."

"இப்ப ஒரு பஸ் இருக்கு எண்பது கிலோ மீட்டர் வேகத்துல அது ஓடவும் செய்யுது. அப்போ பஸ்ஸோட ஃபேஸ்ல முகப்பகுதில பலமா காற்று

வந்து மோது இல்லயா?"

"ஆமா."

"இந்த காற்றைக் கொண்டு ஒரு மூணு மணி நேரத்துக்கு ஒரு கிலோ வாட் மின்சாரம் தயாரிக்க முடியும்."

"எப்படி?"

பஸ்ஸோட டாப்ல அதுக்கான யூனிட்டை ஃபிக்ஸ் பண்ணிடணும். அதுல எடைகுறைவான சிறகுகள் இருந்து அது வேகமா சுழலும். அப்படி சுழலும் அந்த சிறகுக்குப் பின்னால டைனமோ இருக்கும். அதுல உள்ள காந்தம் எலெக்ட்ரிக் பவரை உற்பத்தி செய்யும். அதைக் கடத்தி பேட்டரில சார்ஜ் பண்ணலாம். இதனால ஆயிரம் பஸ் மூணு நேரத்துக்கு ஆயிரம் கிலோ வாட் மின்சாரத்தைத் தயாரிக்கும். அதை அந்த பஸ்ஸோட தேவைக்கும் பயன்படுத்தலாம். மிச்சத்தை வித்து காசாக்கலாம்."

"அடடே, ரொம்ப சிம்பிளா இருக்கே? ஆமா, இது ஏன் மத்தவங்களுக்கு தோணலை?"

"அப்பா, கேட்க சிம்பிளா இருக்கற இதுக்குப் பின்னால குட்டி குட்டியா நிறைய தடங்கல்களும் இருக்கு நான் ஒரு பஸ் மேல நானே வடிவமைச்ச யூனிட்டை ஃபிக்ஸ் பண்ணி பஸ்ஸோட பேட்டரியை ஃபில் பண்ணி காமிச்சேன். இதுல இன்னும் ரொம்ப தூரம் போக வேண்டியிருக்கு."

"தெரியும் ஸ்ரீ, எந்த ஒரு விஞ்ஞானியும் எடுத்த எடுப்புல வெற்றியடைஞ்சதா சரித்திரமே கிடையாது. மைக்கேல் ஃபாரடேல ஆரம்பிச்சு ஐன்ஸ்டீன் வரை திரும்பிப் பார்த்தா, அவங்க எதைச் செய்யணும்கறத விட எதை செய்யக் கூடாதுன்னு இந்த உலகத்துக்குச் சொன்னதுதான் அதிகம்."

அவர்களுக்குள்ளான பேச்சு மெல்ல திசை மாறவும் தொடங்கியது.

"ஸ்ரீ"

"என்னப்பா"

"நீ ஒரு பெரிய டிடெக்டிவ் பர்பசனாலிடியா வருவேன்னுதான் நான் கணக்குப் போட்டு வெச்சிருந்தேன். ஆனா சம்பந்தமில்லாம சயின்டிஸ்ட் ஆயிட்டியேடா?"

"நோப்பா, எனக்குள்ள அந்த தாகமும் அப்படியே இருக்கு. இப்பகூட வரும்போது என் டேப் (tab) ல புதுசா வந்துருக்கற ஒரு மர்ம நாவலை படிச்சுதான் பொழுதுபோச்சு. சின்ன வயசுல ஒரு பொண்ணு காணாம போய்டறா, அவளைக் கண்டு பிடிக்கறதுதான் கதை. எவ்வளவு த்ரில் தெரியுமா?"

ஸ்ரீகேட்க சந்திரசேகரும் வாசந்தியும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கெண்டனர்.

"என்னப்பா இப்ப எதுக்கு இப்படி ஒரு லுக்?"

"இங்கேயும் ஒரு பொண்ணு காணாம தாம்ப்பா போயிருச்சு."

"வாட்?"

"உன் கிட்ட நாங்க பேச நினைச்ச விஷயமே அதாம்ப்பா. வந்த உடனேயே பேச வேண்டாம்னு தான் உடனே அதை ஆரம்பிக்கல. உனக்கு என் ஃப்ரண்ட் சந்தானத்தைத் தெரியும்தானே?"

"அவருக்கு ஒரு பெண் இருக்காப்பா..."

"வாட்!"

"ஆமாம் ஸ்ரீ, அவனும் மோகனாவும் இஷ்யூ இல்லாத துரதிர்ஷ்டசாலிகள்னு நாம நினைச்சது பொய். அவங்களுக்கு பெண் இருக்கா. இப்ப அவளுக்கு கிட்டத்தட்ட உன் வயசு!"

"இண்ட்ரஸ்ட்டிங். பழைய ஹிந்திப்படம் பாக்கற மாதிரி இருக்கு."

"புது ஹிந்திப் படம் மட்டுமென்ன, அதுவும் இப்படித்தான் இருக்கு."

"நீங்க விஷயத்தைச் சொல்லி முடிங்க"

வாசந்தி தூண்டிவிட சந்திரசேகரும் விளக்கமாகச் சொல்ல ஆரம்பித்தார்.

"ஸ்ரீ, சந்தானம் ஒரு கோடீஸ்வரன். வருஷம் ஆயிரம் கோடிக்கு பிசினஸ் பண்றவன். மாசம் ஆயிரம் பேருக்கு சம்பளமும் தர்றவன். ஆனா இது எதுவும் அவனோட சொத்து பத்து கிடையாது. அவ்வளவும் மோகனாவோட அப்பா அருணாசலம் கிட்ட அவரோட பி.ஏ.வா வேலை பார்த்தவன்னா உனக்கு ஆச்சரியமா மட்டும் இல்ல அதிர்ச்சியாவும் இருக்கும்."

"ரியலி?"

"ஆமாம்ப்பா, சந்தானத்தோட பின்னணி ரொம்ப சாதாரணப் பின்னணி. அவன் அப்பா ஒரு கோயில் குருக்கள்! கோயில்ல மணியடிச்சா தான் வீட்ல உலை கொதிக்கும். சந்தானம் நல்லா படிச்சு ஸ்டேட் ரேங்க் எடுத்ததால போஸ்ட் கிராஜிவேட்டாவும் சுலபமா வரமுடிஞ்சுது. அந்த குவாலிஃபிகேஷன் தான் அருணாசலம் அவனை தன் ரைட் ஹேண்டா வச்சுக்கவும் காரணமா இருந்தது. அதுவே அருணாசலம் மகளான மோகனாவை காதலிக்கவும் காரணமா மாறிடிச்சு."

சந்திரசேகர் சொல்லச் சொல்ல ஸ்ரீ முகம் ஆச்சரியமான ஆச்சரியத்தில் அப்படியே புதைந்து போனது.

"நம்ப முடியலை இல்லை."

"ஆமாம்ப்பா, சந்தானம் அங்கிளை ஒரு லவ்வர் பாயா என்னால கற்பனைகூட பண்ண முடியலை."

"நிறைய விஷயங்கள் இந்த மாதிரி இருக்கப்பா. இந்தக் காதலை அருணாச்சலத்தால ஜீரணிக்க முடியலை. உடனே சந்தானத்தை டிஸ்மிஸ் பண்ணி அவன் மேல ஒரு திருட்டு கம்ப்ளைண்டும் போலீஸ்ல கொடுத்து அவனைத் தூக்கி மூணு வருஷம் உள்ளயும் போட்டுட்டார்."

"ஐயோ, மிஸ்டர் அருணாச்சலம் அவ்வளவு க்ருயல் பர்சனாலிடியா?"

"பல கோடிஸ்வரர்கள் அப்படிதாம்ப்பா. பணம் காசை விட ஸ்டேட்டஸ்ங்கற விஷயத்துக்கு பவர் அதிகம். அது மிஸ்டர் அருணாசலத்தை பிசாசா பிடிச்சு ஆட்டிச்சு. கூடவே அவர் மச்சினன் பத்மநாபன் ஒரு சகுனி. இந்த சகுனி எப்படியாவது மோகனாகிட்ட இருந்து சந்தானத்தைப் பிரிக்க திட்டம் போட்டார். அதுல ஒரு தற்காலிக வெற்றியும் அவருக்குக் கிடைச்சது.

இதுல ஒரு குறிப்படவேண்டிய விஷயம் என்னன்னா சந்தானம் திருடிட்டான் என்பதை மோகனாவும் நம்பினது தான்! நம்பற மாதிரி பண்ணினான் இந்த சகுனி."

"அப்புறம் என்னப்பா ஆச்சு?"

ஸ்ரீகேட்க, கார் சென்னை நகர ட்ராஃபிக் சந்தடிகளில் சிக்கி முக்கி முன்னேறிக் கொண்டிருந்தது.

"அப்புறம் என்ன, சந்தானமே வெறுத்துதான் போனான். அவன் அப்பாவான குருக்களும், அம்மாவும் விஷம் குடிச்சு தற்கொலை

செய்துகிட்டாங்க."

"ஓ..."

"ரொம்ப பேத்தடிக் ஸ்ரீ! இந்த இக்கட்டுல மோகனா கன்சீவ் ஆயிருந்ததுதான் பெரிய கொடுமை."

"மைகாட்! அது எப்படி?"

"என்னப்பா கேள்வி இது? வாலிப வயசு... பை த பை மோகனாதான் இந்த விஷயத்துல முதல்ல துணிஞ்சவ! நமக்கு ஒரு வாரிசு உருவாயிட்டா அப்பாவால நம்மளைப் பிரிக்க முடியாதுன்னு அவதான் திட்டம் போட்டு கல்யாணம்னு ஒண்ணு நடக்கறதுக்கு முன்பே இப்படி ஒரு தப்புக்குத் துணிஞ்சது."

"ஆனாலும் அருணாலம் அங்கிள் ஜெயிச்சிட்டார். அப்படித்தானே?"

"ஆமாம் ஸ்ரீ, சந்தானம் ஜெயில்ல இருக்க, இங்க மோகனா கன்சீவ் ஆனது தெரியவரவும் கருக்கலைப்கிக்கு வேகமா ஏற்பாடு நடந்தது. அனா அதுல நிறைய காம்ப்ளிகேஷன்ஸ். டாக்டர் கருவை கலைச்சா மோகனா உயிருக்கு ரொம்ப ஆபத்துன்னுட்டார். அருணாசலமும் அசரலை. அருணாசலத்தோட மச்சினனான பத்மநாபன்கற சகுனி வேற ஒரு திட்டம் போட்டார். இன் ஃபேக்ட் அருணாசலத்தோட மனசாட்சியே பத்மநாபன்னா அதுல ஆச்சரியப்பட எதுவுமில்லை. இந்த பத்மநாபன் சொல்லித்தான் சந்தானம் மேல திருட்டுப் பழியும் விழுந்தது.

இப்ப இதே பத்மநாபன் தான் மோகனாவை தன் கஸ்டடில எடுத்துக்கிட்டார். இங்க இருந்தா ஊர் உலகத்துக்குத் தெரியவரும்னு கொடைக்கானல் பங்களாவுக்குக் கொண்டு போய் அங்க வெச்சு ரகசியமா பாத்துக்கிட்டார்.

மோகனாவுக்கு பிரசவமும் ஆச்சு. ஆனா தன்னோட திட்டப்படி குழந்தை செத்துப் போயிட்டதா மோகனாவையும் நம்ப வெச்சுட்டார். ஆனா உண்மைல குழந்தை சாகலை! இப்ப உயிரோட இருக்கற விஷயத்தை சொன்னதும் அதே பத்மநாபன் தான்!"

சந்திரசேகர் ஒரு கதையைச் சொல்வதுபோல் சொல்லி சஸ்பென்ஸோடு நிறுத்தினார். அதற்குள் அவர்கள் பங்களாவும் வந்து விட்டது.

"ஸ்ரீ... நீ குளிச்சு முடிச்சு சாப்பிட்டு வா. நாம போய் சந்தானத்தைப் பார்ப்போம். போற வழியில் நான் மிச்ச விஷயங்களைச் சொல்றேன்."

"சரிப்பா, ஆமா நான் அங்க்கிளை வந்து பார்த்து என்னப்பா பண்ணப்போறேன்?" ஸ்ரீகணேஷ் ஒன்றும் தெரியாத மாதிரி கேட்டான்.

"சரிதான் விடிய விடிய கதை கேட்டு சீதைக்கு ராமன்

சித்தப்பான்னானாம். டேய் நீ தாண்டா அந்தப் பெண்ணைக் கண்டுபிடிக்கவே போறே?"

"வாசந்தி எடுத்துக் கொடுத்தாள்."

"ஏம்மா, நாட்டுல போலீஸ், பிரைவேட் டிடெக்டிவ்னு எவ்வளவோ பேர் இருக்காங்களேம்மா?"

"அப்ப இந்த அசைன்மென்ட்டை நீ எடுக்கவிரும்பலையா ஸ்ரீ?"

"ஓ.. இதை ஒரு அசைன்மென்ட்டாவே ஆக்கி நான்னு முடிவே பண்ணிட்டீங்களா?"

"அதுக்குப் பல காரணம் இருக்கு ஸ்ரீ. சந்தானம் பொண்ணு உயிரோட இருக்கற விஷயம் அவன், அவன் மனைவியைத் தவிர பெருசா யாருக்கும் தெரியாது. அப்படித் தெரிஞ்சா அதுக்குப் பின்னால பல ஆபத்துக்களும் இருக்கு. முழுமையா எல்லாத்தையும் சொன்னாதான் உனக்கும் புரியும். நீ மட்டுமில்ல. நாங்களும் உன்கூட இருக்கோம். நாம எல்லாம் சேர்ந்துதான் தேடப்போறோம்.

அவ இப்ப ஒரு அனாதை விடுதில இருக்கறதா மட்டும் தெரியும். எந்த அனாதை விடுதி. அங்க அவ இப்ப எப்படி இருக்கான்னு எதுவுமே தெரியாது. எல்லாத்தையும் கண்டுபிடிக்கணும்."

"சரிப்பா, நீங்க சொன்னமாதிரி எல்லாத்தையும் கண்டு பிடிப்போம். விஷயமும் ரொம்பவே இண்ட்ரஸ்டிங்கா தான் இருக்கு எனக்கும் சேலஞ்சன்னா ரொம்ப பிடிக்கும். அதுலையும் இது டிடெக்டிவ் சேலஞ்ஜ்! ஒரு கை பாக்கறேன்" உற்சாகமாக சொல்லி சிரித்தான் ஸ்ரீகணேஷ்.

ஃ ஃ ஃ

திருமகள் முதியோர் இல்லத்தின் பிரார்த்தனைக் கூடத்தில் எல்லோரும் கூடி அன்றைய பஜனையும் முடிந்திருந்தது. ஹாலில் ஆள் உயர திருப்பதி பெருமாளின் படம் இருறமும் இடுப்புயர குத்து விளக்குகளின் சுடரொளி! பார்க்கவே ரம்மியமாக இருந்த அந்த இடத்தில் அனைவர்க்கும் தொன்னையில் வைத்து கொத்துக்கடலை சுண்டலை பிரசாதமாக தந்து கொண்டிருந்தாள் யாழினி!

அப்போது அந்த கூடத்துக்குள் பிரவேசித்திருந்தார் தொகுதி எம்.எல்.ஏ. வான தண்டபாணி! சேர்மன் ரங்காச்சாரியும் அவரை வரவேற்று தனது ஏ.சி. அறை நோக்கி அழைத்துச் செல்ல முயல, அவர் பார்வையோ யதார்த்தமாக யாழினி மேல் விழுந்தது.

விழுந்த பார்வையை அவரால் விலக்கவே முடியவில்லை.

# 4

'பத்துத் தலை இராவணனாவது
தன் மனத்தில் ஒரே ஒரு சீதையை
ஒளித்து வைத்திருந்தான்,
இந்த ஒரு தலை ராவணர்களின்
உள்மனதில் எத்தனை சீதைகளோ?

ஒரு வானம் இரு சிறகு' நூலில்
மு. மேத்தா.

அந்த எம்.எல்.ஏக்கு அறுபது வயதிருக்கும். ஆனாலும் டை அடித்த தலை, சலவை செய்த வேட்டி, சட்டை, ஒரு மீட்டர் சுற்றளவுக்கு கிறங்க அடிக்கும் ஜவ்வாது வாசனை என்று மன்மதத்தனமாக இருந்தார்.

பெரிய முகம், ஆனால் சிறிய கண்கள்! அந்த கண்களோடு அவர் யாழினியைப் பார்த்த பார்வையில் ஆயிரம் அர்த்தங்கள். யாழினியோ கர்மமே கண்ணாக எல்லோருக்கும் திரும்பவும் பிரசாதம் பொடுக்கத் தொடங்கி விட்டாள்.

அந்த எம்.எல்.ஏ. பார்வையை அங்கிருந்தவர்களில் அலமேலு கவனித்திருந்தாள். அது நல்ல பார்வை இல்லை என்பது உடனேயே அவள் மனதில் பதிவாகி முகத்தில் சலனமும் ஏற்பட்டு விட்டது.

"கடன்காரன்... எதுக்கு இப்படிப் பாக்கறான்? அவன் கண்ணைப்புடுங்க. இதுக்கு முந்தி பொம்மனாட்டியையே பாக்காதவனாட்டம்ல பாக்கறான்." என்று சற்று வாய்விட்டே முணுமுணுத்தாள். தண்டபாணியை சேர்மன் ரங்காச்சாரி தன் அறைக்கு அழைத்துச் சென்று உட்காரவும் பணித்தார். தண்டபாணியும் அமர்ந்தார். அப்படியே பவித்ரமான அவரது அறையை ஒரு பார்வையும் பார்த்தார்.

"நீங்க எங்க முதியோர் இல்லத்துக்கு வந்ததுல எனக்கு ரொம்ப சந்தோஷம்..." என்று ரங்காச்சாரியிடம் பேச்சும் தொடங்கியது.

"எனக்கும் தான் சாமி... நீங்களும் ரொம்ப நாளா கூப்டுட்டே இருக்கீங்க. சரின்னுதான் வந்தேன். ஆச்சு... அடுத்தவாரம் சட்டசபை கூட்டத் தொடர் ஆரம்பம். போனா பதினைஞ்சு இருபது நாள் என் கைல கிடையாது... சமயத்துல ஏன்தான் பொது வாழ்க்கைக்கு வந்தோமோன்னு கூட இருக்கும்."

"சேச்சே... நீங்கள்ளாம் அப்படி எல்லாம் நினைக்கக்கூடாது உங்கள மாதிரி பெரியவாள்ளாம் பொது வாழ்க்கைல இருந்து ஒதுங்கினா அப்புறம் இந்த சமூகத்தைக் கரை சேர்க்கறது யாரு?"

உபசாரமாகப் பேசினார் ரங்காச்சாரி.

"அதனால தானே விடாம நானும் அரசியல்ல தொடர்ந்துகிட்டே இருக்கேன்...போகட்டும் இன்னிக்கு உங்க இல்லத்துல ஏதாவது விசேஷமா...? தொன்னைல பொங்கல் சுண்டல்னு கொடுத்துகிட்டு இருந்த மாதிரி தெரிஞ்சுச்சே."

"அதுவா...? அது ஒண்ணுமில்ல... நித்யப்படி பஜனைதான். பஜனை முடிவுல எல்லாருக்கும் பிரசாதம் தர்றது வழக்கம். நவதானியத்துல தினம் ஒரு தானியம்...! அதுல சுண்டல் வயசானவங்களுக்கும் கொஞ்சம் ஊட்டச்சத்துள்ள ஐட்டங்களை இந்த சாக்குல கொடுத்த ஒரு சந்தோஷம் எங்களுக்கு..."

"சபாஷ்... கேக்கவே சந்தோஷமா இருக்கு. சரி... நான் என்ன செய்யணும்னு எதிர்பார்க்கறீங்க?"

எம்.எல்.ஏ. அடுத்து நேராக பாயிண்ட்டுக்கு வரவும் அந்த அறைக்குள் ரங்காச்சாரிக்கும் பிரசாதம் தர யாழினி உள்நுழையவும் சரியாக இருந்தது.

"சாருக்கும் பிரசாதம் கொடு யாழினி..." என்று அவர் கூறவும் யாழினி அவர் முன்னாலும் பிரசாத தட்டை நீட்டினாள். தண்டபாணியும் இரண்டாவது தடவையாக அவளை கண்களால் விழுங்கியபடியே பிரசாதத் தொன்னையை எடுத்துக் கொண்டார்.

இந்தமுறை அந்தக் கூரிய பார்வையை யாழினியும் கவனித்தாள். அவளை அது என்னவோ செய்தது. ஆனால் ரங்காச்சாரி கவனிக்கவில்லை.

யாழினி வேகமாக விலகிக் கொள்ள கொஞ்சம் சுண்டலை எடுத்து வாயில் பொட்டபடியே "இங்க எல்லாரும் வயசானவங்க தானா... இல்ல

இப்ப வந்துட்டுப் போன பாப்பா மாதிரி வயசுப் பொண்ணுங்களும் உண்டா?" என்று கேட்டார் தண்டபாணி.

"ஓ..நீங்க யாழினிய கேட்டீங்களா?"

"அந்தப் பொண்ணு பேர் யாழினியா...? நல்லா இருக்கே...!" .

"ஆமாங்க யாழினி ரொம்ப நல்ல பொண்ணு. காலேஜ்ல இப்ப எம்.பி.ஏ. படிக்கறா. படிப்புலயும் நம்பர் ஒன்..."

"ஆளும் நல்லா லட்சணமாதான் இருக்குது. ஆமா உங்க பொண்ணா?"

"ஐய்யோடா... யாழினி என் பொண்ணு இல்ல. ஆனா என் பொண்னு மாதிரி!"

"இது என்ன விக்கிரமாதித்தன் வேதாளம் கேட்ட கேள்விக்கு பதில் சொன்ன மாதிரி சொல்றீங்க..."

"நான் உள்ளதச் சொன்னேன். யாழினி ஒரு தொட்டில் குழந்தை இருபத்தி நாலு வருஷத்துக்கு முந்தி இந்த முதியோர் இல்லத்து வராண்டாவுல இருந்த தொட்டில்ல யாரோ அவளைக் கொண்டு வந்து போட்டுட்டாங்க. அதில் இருந்து அவ இங்கதான் வளர்ந்து வரா..."

"முதியோர் இல்லம்கறீங்க. இங்க எப்படி தொட்டில்?"

"நல்ல கேள்வி... அந்தத் தொட்டில் இங்க வேலைபாத்த ஒரு பொண்ணோட குழந்தைக்காக நான் தான் அவளுக்குக் கொடுத்திருந்தேன். காற்றோட்டமா வராண்டாவுல இருந்த அதுல யாழினி வந்து விழுவான்னு அப்ப நான் கற்பனை கூட செய்து பாக்கல..."

"அப்ப யாழினி மாதிரி நிறைய பெண்கள் இருக்காங்கன்னு சொல்லுங்க..."

"அதுதான் இல்ல... இது அரசாங்கத்துல ரெஜிஸ்தர் பண்ணப்பட்ட முதியோர் இல்லம். ஒரு முதியோர் இல்லம் நடத்த என்னவெல்லாம் விதிமுறைகள் உண்டோ அதை அப்படியே இங்க பின்பற்றுகிறோம். அனாதைக் குழந்தைகளை எடுத்து வளர்க்க வேற மாதிரியான ரூல்ஸ் அண்ட் ரெகுலேஷன்ஸ்! என்னால குழந்கைளுக்கான ரூல்ஸைப் பின் பற்ற முடியாத ஒரு சூழ்நிலை. அதோட அரசாங்கமே தொட்டில் குழந்தைத் திட்டத்தைக் கொண்டு வந்து விட்டதால எனக்கு அவசியமும் ஏற்படலை. ஆனா தவறுதலா இங்க விடப்பட்ட யாழினியைப்

புறக்கணிக்க எனக்கு மனசு வரலை. அவளை மட்டும் நான் கண்ணும் கருத்துமா வளர்த்துண்டு வரேன்..."

"அப்படியா சங்கதி... ஆமா அந்தப் பொண்ணுக்கு தான் ஒரு அனாதைன்னு தெரியுமா?"

"ஓ... நல்லாவே தெரியுமே! நான் அதை அவகிட்ட மறைக்க விரும்பல. அதே சமயம் அதனால அவ பாதிப்படையவும் நான் இடம் கொடுக்கலை."

"கேக்கவே ரொம்ப சந்தோஷமா இருக்கு சாமி... சரி நான் என்ன செய்யணும்னு சொல்லவேயில்லையே?"

"நீங்க இந்த இல்லத்துக்கு ஒரே ஒரு உபகாரம் பண்ணாபோதும். எனக்கு இங்க இப்ப இடப்பற்றாக்குறை. ஒரு ஏக்கர் அளவுக்கு இடம் கிடைச்சா அங்க தோட்டம், கோயில்னு பிரமாதமா இந்த இல்லத்தை விஸ்தரிச்சிடுவேன். அதோட ஆயிரம் பேருக்கு தினசரி என்னால அடைக்கலம் கொடுக்க முடியும். அதனால ஊருக்கு வெளிய வைகை ஆற்றையொட்டி இருக்கற புறம்போக்கு நிலத்துல ஒரு ஏக்கரை எங்களுக்கு பட்டா போட்டு தந்தா போதும். இது சம்பந்தமா நான் முதலமைச்சருக்கும் கடிதம் போட்டுருக்கேன். மாவட்ட கலைக்டர் கிட்டயும் மனு கொடுத்துருக்கேன்.

"விடுங்க... அந்த இடத்தை முடிச்சுத் தரவேண்டியது என் பொறுப்பு. அது முடிஞ்ச மாதிரின்னே வெச்சுக்குங்க. தாசில்தாரும் கலெக்டரும் ஏதாவது சட்டம் பேசினா நான் என் கை காசை போட்டு உங்களுக்கு அதைவிட நல்ல இடத்துல இடம் வாங்கித்தரேன். போதுமா?"

எம்.எல்.ஏ. விடம் வள்ளல் தன்மை பீரிட்டது.

"ரொம்ப சந்தோஷம்... இதுமட்டும் நடந்துட்டா போதும். நான் ஜென்மத்துக்கும் உங்கள மறக்கமாட்டேன்."

"நானும் இந்த முதியோர் இல்லத்தை மறக்கவே மாட்டேன். அடிக்கடி வந்து போவேன். அப்புறம் இது சம்பந்தாம ஏதாவது டாக்குமென்ட்ஸ் வேணுமின்னா நான் போன் பண்ணும்போது கொடுத்து விடுங்க"

"அதுக்கென்ன... நானே எடுத்துக்கிட்டு நேரா வந்துட்றேன் போதுமா?"

"அட நீங்க ஒண்ணு... நீங்க சேர்மன். சேர்மன் கணக்குப் பிள்ளை வேலையை எல்லாம் பார்க்கக் கூடாது. இதுக்கு ஒரு ஆபீஸ் பாய்

போதாது...?"

"இங்க எல்லாரும் எல்லா வேலையும் பார்ப்போம், வேலைல ஏற்றத் தாழ்வு கிடையாதுங்கறது எங்க கொள்கையும்கூட."

"சாமி... நான் காரணமாத்தான் சொல்றேன். நீங்க எதுக்கு வரணுமோ அதுக்கு வந்தாபோதும். நான் சொல்றது புரியதுதானே?"

"சரி... நான் யார் கிட்டேயாவது கொடுத்தே அனுப்பறேன். அனேகமா யாழினி தான் வருவா. ஏன்னா அவதான் சில்றை வேலை அவ்வளவையும் இழுத்துப் போட்டுண்டு செய்யறவ."

"அப்புறம் என்ன... அனுப்பி வையுங்க. தங்கமா போச்சு..." எம்.எல்.ஏ. சொல்லிக் கொண்டு புறப்பட்டார். புறப்பட்டு வாசலில் நிற்கும் காரில் ஏறுவதற்குள் யாழினி எங்கே? யாழினி எங்கே? என்று அவரிடம் ஒரு பெரும் தேடல்.

யாழினியும் ஒரு இடத்தில் தென்பட்டாள். வாளிப்பான அவளை ஏக்கத்தோடு பார்த்தபடியே தான் காரில் ஏறினார்.

காரும் புறப்பட்டது. காருக்குள் யாருக்கோ போன் போட்டார். இனி போனில்...

"மயில் வாகனம்..."

"அடடே தண்டபாணியா?"

"நானே தான்... எங்கைய்யா இருக்கே?"

"எதுக்கு தண்டபாணி கேக்கறே?"

"காரணமாத்தான்..."

"நான் இப்ப சேலம் ஏற்காடு எஸ்டேட் பங்களா ரெஸ்ட் ஹவுஸ்ல இருக்கேன்பா"

"கூட அந்த ரம்பையும் இருக்காளா?"

"பின்ன... குளிருக்கு நான் எந்தக் காலத்துல கம்பளிய போத்திக்கிட்டிருக்கேன்?"

"உனக்கு ஒரு ரம்பை கிடைச்ச மாதிரியே எனக்கும் ஒருத்தி கிடைக்கப்போறா."

"என்னய்யா சொல்றே?"

"இங்க மதுரைல ஒரு முதியோர் இல்லத்துல ஒரு அனாதைப்பிள்ளைய பார்த்தேம்பா. செதுக்குணமாதிரி சும்மா 'நச்சு'னு இருக்கா..."

"அங்க எங்க போனே நீ?"

"அந்த இல்லத்த நடத்தற ஐய்யருக்கு ஒரு காரியம் ஆகணும். எனக்கு போன் போட்டு கூப்ட்டுகிட்டே இருந்தான். சரின்னு போனேன். போனா அங்க இப்படி ஒரு சமாச்சாரம்."

"சமாச்சாரம் கிடக்கட்டும். அதை நடத்தறவரு ஒரு காரியம் ஐயருங்கறே. உன் போக்குக்கு ஒத்து வருவாரா?"

"ஊஹூம்... அதெல்லாம் சாத்யமேயில்லை. அந்தாள் உடம்பு பூரா நாமத்தை போட்டுக் கிட்டு மூச்சுக்கு முச்சு கிருஷ்ணா ராமான்ன சொல்லிக்கிட்டு இருக்கான். என்னையும் உலகமகா யோக்கியன் லிஸ்ட்லதான் வெச்சிருக்கான்..."

"போச்சுடா... அப்புறம் எப்படி அவனை கரெக்ட் பண்ணுவே...?"

"அதானா விசயம்.... அதுக்கெல்லாம் ஆயிரம் வழிங்க இருக்கு. இத்த சொல்லத்தான் கூப்ட்டேன்."

"பாத்துய்யா... பத்திரிகை டி.வி.காரங்க நாம எதுல சிக்குவோம்னு அலையறானுங்க. அவங்க சட்டைல எல்லாம் பொத்தான் கூட இப்ப கேமராவாதான் இருக்கு."

"மயில்வாகனம்... நீ தான் அடிக்கடி ஒரு பழமொழிய சொல்லிவியய்யா. காப்பான் பெருசா இல்ல கள்ளன் பெருசான்னா, கள்ளன் தான் பெருசுன்னு..."

"இப்பல்லாம் காப்பானும் கள்ளனா இருக்காங்கப்பா. அதனால சொன்னேன்."

"அதெல்லாம் நான் நேக்கா நடந்துகிட்டு ஜோலிய முடிச்சு விடுவேன். அவ ஒரு அனாதை. கேள்வி கேப்பாரே கிடையாது. இப்படி ஒரு ஐட்டத்தை விடலாமா?"

"பாத்து நடந்துக்கோ. அவ்வளவுதான் சொல்வேன்."

"கவலைப்படாதே... அவ எனக்கு மட்டுமில்ல. உனக்கும் தான்..."

தண்டபாணி சொன்னபடியே செல்போனை ஆஃப் செய்தார். அற்புதமான விஞ்ஞான கண்டுபிடிப்பு. இப்படி வக்ரமான பேச்சுக்களுக்கும் பயன்படுவதுதான் கொடுமை!

சந்தானத்தின் பங்களா! ஒரு துக்க காரியம் நடந்ததன் அடையாளமாக ஷாமியானா பந்தல் ஒன்று போடப்பட்டு நிறைய நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. அதில் போலீஸ் ஆபீசரில் இருந்து பேங்க் மேனேஜர்கள், டாக்டர்கள் என்று எல்லா மட்டத்து மனிதர்களும் அமர்ந்திருந்தனர்.

அவ்வளவு பேருக்கும் சந்தானத்தை விட அருணாசலம் தான் அதிக அளவுக்கு பழக்கம். சந்தானத்தின் அப்பா அம்மா மறைவுக்குப் பிறகு அருணாசலம் தான் அந்த இடத்தை சந்தானம் வரையில் நிரப்பியவர்.

அருணாசலத்துக்குத் தெரியாமல் சந்தானமும் எந்த முடிவையும் எடுத்ததில்லை. எனவே அருணாசலத்தின் மரணம் பெரிய தலைகள் அவ்வளவு பேரையும் இழுத்து வந்து விட்டது.

பொதுவில் மேல் மட்டத்து சாவுகளில் சப்தமான அழுகை, ஒப்பாரி இதற்கெல்லாம் பெரிதாக இடமிருக்காது. அழும் போது முகம் கோணும். அது புகைப்பட பதிவாகும். சமுதாயத்தில் செலிபிரிட்டியா இருப்பதால் அந்தப் புகைப்படங்களும் பத்திரிகைகளில் வரும். வாய்ப்பு அதிகம். எனவே அமுக்கமாக ஒரு பார்வை முடிந்தால் லேசான கண்கலங்கல். பின் மென்மையான ஒரு மார்புத் தழுவல். இது தான் கோடீஸ்வர எழவுகளின் லட்சணம்!

அங்கும் அப்படித்தான் இருந்தது.

அருணாசலம் மகள் பூரணி மட்டும் மிகுந்த சோகத்தோடு இருக்க, வருகின்றவர்களும் அவளிடம் வந்து துக்கம் கேட்டுவிட்டுப் போய் நாற்காலியில் அமர்ந்து கொண்டனர்.

உள்ளே மாடியில் தலைமுழுக்கு போட்ட ஈரத் தலையைகூட வாரியிராதபடி மிக ஹோம்லியாக திறந்த மார்பும் இடுப்பு வேஷ்டியுமாக சந்தானம். அவர் அருகில் மோகனா. அப்போது 'மே ஐ கம் இன்' என்றபடி உள் நுழைந்தான் அருணாசலத்தின் பேரனான தினேஷ்! நல்ல உயரம்- சரியான வாலிபமிடுக்கு. தினசரி ஜிம்முக்குப் போவதால் உடம்பில் நல்ல செழிப்பான கட்டுக்கள்!

"ஆண்ட்டி."

"சொல்லு தினேஷ்!"

"தாத்தாவோட ஃப்யூனரைல் சாம்பல் வந்துருச்சி. அதை ராமேஸ்வரம் போய் கடல்ல கரைக்கணும்னு எல்லாரும் சொல்றாங்க..."

"அப்ப அப்படியே செய்துடுப்பா..."

"அப்ப ராமேஸ்வரத்துக்கு நீங்க.." அவன் கேட்க, மோகனா சந்தானத்தைப் பார்த்தாள். சந்தானமோ "நான்லாம் எங்கேயும் வரலை... செத்துப்போன மாமாவும் ஒண்ணும் புனித ஆத்மா இல்லை. எல்லாம் இங்க இருக்கற மெரீனா கடல்ல கரைச்சா போதும்..." என்றார் படபடப்பான குரலில்...

அவர் அப்படி பேசியதும் நடந்து கொண்டதும் தினேஷ் வரையில் பெரிய ஆச்சரியம்.

தாத்தா சாவதற்கு முன் வரை அவர் உயிர் பிழைக்க எல்லா சாமியையும் வேண்டிக்கொண்டவரா இப்போது இப்படிப் பேசுகிறார்...?

என்ன நடந்திருக்கும்?

தினேஷிற்குள் பலத்த கேள்வி...

# 5

நீ எனக்கிருப்பதை பிறர் கேட்டாலொழிய
சொல்லிக் கொள்வதில்லை நான்.
நான் உனக்கிருப்பதை ஆதாரங்கள் அணிந்து
பறை சாற்றியாக வேண்டும் நீ!
எனக்குப் பிறகு என் நினைவுகளோடு
வாழ வைக்கிறார்கள் உன்னை.
உனக்குப் பிறகு உன் தங்கையோடு
வாழ வைக்கிறார்கள் என்னை...!
- ஜெயபாஸ்கரன் எழுதிய கவிதை வரிகளிலிந்து...

தினேஷ் தனக்குள் முளைத்த கேள்வியோடு நேராக அம்மா பூரணி முன்தான் போய்நின்றான். அப்போது பூரணியைப் பார்க்க துணைமேயரும் கார்ப்பரேஷன். கமிஷனரும் ஒன்றாக வந்திருந்தனர்.

"இன்னிக்கு யார் செத்தாலும் 'இமயம் சரிந்தது' ன்னு போஸ்டர் போட்றதுதான் வழக்கம். ஆனா உங்கப்பா நிஜமாவே பல விஷயங்கள்ல

இமயம். எங்க கட்சிக்கும் வாரி வாக் கொடுத்தவரு. நாங்க எங்களுக்கான ஒரு வள்ளலை இழந்துட்டதான் நினைக்கிறேன்." என்று துணை மேயர் மிக லௌகீகமாக பேசிக் கொண்டிருந்தார்.

பூரணியும் "உங்க வாரத்தைகள் ரொம்ப ஆறுதலா இருக்குங்க ஒரு நிமிஷம்" என்று விலகி தினேஷைப் பாத்தாள்.

"கொஞ்சம் தனியா பேசணும் மம்மி..." என்றான்.

அவளும் எழுந்து அவனோடு தனியே ஒதுங்கினாள்.

"என்ன தினேஷா... உன்னோட அருமை அங்கிள் திடீர்னு தவைகீழா மாறியிருக்காரு."

"புரியற மாதிரி சொல்லுடா."

"தாத்தா அஸ்தியை ராமேஸ்வரம் கடல்ல கரைக்கணும்னு சொன்னாங்க தானே?"

"ஆமாம்."

"இவர் இங்க மெரீனா பீச்சுல போய் கரைக்கச் சொல்றாரு. தாத்தாவும் ஒண்ணும் நல்ல ஆத்மா இல்லையாம்."

"அப்படின்னு யார் சொன்னது?"

"உன் அங்கிள்... அதாவது உன் அருமை வளர்ப்புத் தந்தை திருவாளர் சந்தானம்."

"நெஜமாவா?"

"இதோ இந்தக் காதால கேட்டுட்டு வந்து தான் உன் கூட பேசிக்கிட்டிருக்கேன்."

"ஏதாவது மூட் அவுட்ல எதையோ நினைச்சு பேசியிருப்பாரு. ஏன்னா உன் தாத்தா போனதுல அவருக்கு தான் அதிக இழப்பு. சொத்து பத்துல இருந்து தொழில் வரை சகலத்தையும் பாத்துக்கிட்டது உன் தாத்தா தானே?"

"எனக்கு அப்படித் தெரியல..."

"சரி, நான் பேசிக்கறேன். நீ போய் மத்தவேலைய பார்."

"மத்த வேலைன்னா... ராமேஸ்வரமா? மெரினா பீச்சா?"

"அதுக்கென்னப்பா அவசரம்?"

"மம்மி... ராமேஸ்வரம்னா இப்பவே கிளம்பணும். சென்னைல இருந்து கார்ல ராமேஸ்வரம் போக பன்னெண்டு மணி நேரத்துக்கும் மேல் ஆகும்."

"சரி... இரு நான் அங்கிள் கிட்ட பேசிட்டு சொல்றேன்."

"பூரணி அந்த வி.ஐ.பி. க்கள் கூட்டத்தில் இறுக்கமான முகத்தோடு நடந்து சந்தானம் இருந்த ஏ.சி. அறைக்குள் நுழைந்தாள். சந்தானம் கை கட்டி கண்மூடி அமர்ந்திருந்தார். அருகில் மோகனா."

"அங்கிள்"

"உம். பேரு?"

"நான் பூரணி... என்ன அங்கிள் உடம்புக்கு எதாவது முடியலையா?"

"உடம்பு, மனசு இரண்டையும் தான் உங்கப்பா ஒரு ஆட்டு ஆட்டிட்டுப் போயிட்டாரே"

சந்தானம் திருப்பிக் கேட்ட விதத்தில் ஒரு கோபமும் வருத்தமும் பளிச்சென்று தெரிந்தது.

0 51

"என்ன அங்கிள் சொல்றீங்க?"

"லுக். நான் இப்ப எதையும் பேசற நிலைல இல்ல. நீ போய் உங்கப்பன் அஸ்தியை கரைச்சுட்டு வந்து தலை முழுகற வேலையை பார்..."

"ஏன் அங்கிள் ஒரு மாதிரி பேசறீங்க?"

"நான் போசலை உன் அப்பன் பேச வெச்சுட்டான். சாகும்போது." நடந்ததைச் சொல்ல கோபத்தோடு முனைந்தவர் வாயை மோகனா வேகமாக மூடினாள்.

"போதும் நிறுத்துங்க மாமா இறந்த அதிர்ச்சியில உங்களுக்கு புத்தி பேதலிச்சுப் போச்சுன்னு நல்லா தெரியுது. பூரணி... நீ போம்மா. போய் உன் அப்பா அஸ்தியை ராமேஸ்வரத்துக்கே கொண்டு போய் கரைக்க ஏற்பாடு செய். நானோ இவரோ வரமுடியாது. நீதான் பாக்கறியே... இவர் ரொம்பவே டிஸ்டர்ப் ஆகியிருக்கார். மற்றபடி இங்க இவர் பேசினதை மனசுல வெச்சுக்காதே."

மோகனா அழகாக சமாளித்தாள்.

ஆஸ்பத்திரியில அப்பா சாகும்போது ஏதாவது சொன்னாரா?

பூரணி விடாமல் கேட்டாள்.

"பூரணி, நீ போய் ஈமக்கிரியை முடிச்சிட்டு வா. நா விவரமா சொல்றேன்..."

மோகனா தற்காலிகமாக சமாளித்தாள். பூரணியும் வெளிவந்தாள். முகம் மாறிவிட்டிருந்தது. கூடவே இருந்த தினேஷ் "நான் சொன்னது சரிதானே?" என்று கேட்டாள்.

"ஆமாண்டா... ஏதோ நடந்துருக்கு. எதுவா இருந்தாலும் இப்ப பேசற சூழ்நிலை இல்லை. நீ புறப்படு... நாம ராமேஸ்வரம் போவோம்."

பூரணி அவனை தயார்படுத்தினாள்.

கணேஷ் தயாராகி விட்டான். முரட்டு ஜீன்ஸ்பேண்ட், டெர்லின் டி ஷர்ட் என்று அவன் தலையை கோதி விட்டபடியே வந்து நின்றபோது சந்திரசேகருக்கு தன்னை இளவயதில் பார்ப்பது போல் இருந்தது. வாசந்தியும் அப்டியே தான் நினைத்தாள்.

"கணேஷ் கண்ணா... உன் அப்பா நான் முதன்முதலா பார்த்தப்போ இப்படியே தாண்டா இருந்தார்."

"ஹெரிடிட்டின்னு பின்ன சும்மாவா சொன்னாங்க?"

"ஹூம்... உன் அம்மாகிட்ட உனக்கொரு தம்பியோ தங்கையோ இருந்தா பெட்டரா இருக்கும்னு எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். கடைசி வரை கேக்கமாட்டேன்னுட்டா,"

சந்திரசேகர் கொஞ்சம் ஜாலிக்கு மாறினார்.

"போதும் ... பையன் கிட்ட பேசற பேச்சா இது?" சிணுங்கினாள் வாசந்தி.

"பேசலேன்னா அவனுக்கு எதுவும் தெரியாம போய்டுமா?"

அவர் கேட்க, அப்போது அவரது செல்போனில் அழைப் பொலி.

'உன்னையறிந்தால்- நீ உன்னையறிந்தால்' பாட்டுத்தான் அவர் ரிங்டோன்!

அவரும் காதைக் கொடுத்தார். மறுபக்கத்தில் மோகனா!

"சந்துருண்ணா..."

"யெஸ் மேடம்..."

"மேடமா?"

"பின்ன... ஒரு பெரிய தொழிலதிபர் மகளை மரியாதை இல்லாம பேரைச் சொல்லி கூப்பிடலாமா?"

"என்ன, பையன் U.S. ல இருந்து வந்துட்ட குஷியா என் கிட்டையும் ஆழம் பாக்கணுமா?"

"குஷின்னே பார்... அதான்சரி! இந்த ஆழம் பாக்கறதுன்னு சொன்னது தப்பான கருத்து."

"எப்படி இருக்கான் என் மருமகன்?"

"உன் மருமகனா?"

"ஆமா... என் அண்ணன் மகன் எனக்கு மருமகன் தானே?"

"தேங்க்ஸ் மோகனா... தேங்க்ஸ்... ஸ்ரீயை இப்ப நீ நேர்ல பார்த்தா என்னை நீ சந்தானத்தோட முதன்முதலா பார்த்தப்போ பார்த்த மாதிரியே இருக்கும்."

"அதுக்கு தான் போன் பண்ணேன். அவன் கூட எப்ப இங்க வரப் போறீங்க?"

"புறப்பட்டுக்கிட்டே இருக்கோம்மா?"

"சீக்கிரமா வாங்க. இங்க இவர் ரொம்பவே டிப்ரஸ் மூட்ல இருக்கார். பூரணி கிட்ட எல்லா உண்மைகளையும் போட்டு உடைக்கப் பார்த்தார். நான் சமாளிச்சேன்."

"அதுசரி... பூரணி இப்ப அங்க இருக்காளா?"

"அனேகமா அங்கிள் அஸ்தியோட அவ ராமேஸ்வரம் கிளம்பியிருப்பா."

"அவ இல்லாம இருக்கறதுதான் நல்லது..."

"நீங்க வாங்க... அவளை நான் எப்படியும் அனுப்பிடுவேன்..." மோகனா பேசி முடித்தாள். சந்திரசேகரும் செல்போனை பாக்கெட்டில் போட்டார். பத்து வருடம் முன்பு வாங்கிய பழைய போன்.

"ஏம்பா... இன்னுமா இந்த போனை வெச்சிருக்கீங்க?"

"ஏண்டா... நல்லா தானே வேலை செய்யுது?"

"அது சரி... இப்ப எவ்வளவு அட்வான்ஸ் டெக்னாலஜி எல்லாம்

வந்தாச்சு தெரியுமா?"

"அதெல்லாம சும்மாடா... விட்டா செல்போனை ஒரு நிமிடம் உத்துப் பார்த்தா பசி கூட எடுக்காதுங்கற அளவுக்கு சொல்வாங்க போல..."

"நீங்க என்ன சொல்ல வரீங்க?"

"எல்லா அட்வான்ஸ் டெக்னாலஜியோட ஒரு போனை விடவேண்டியதுதானே? அது என்ன கொஞ்சம் கொஞ்சமா விட்டுகிட்டு...?"

"ஒவ்வொண்ணாதானேப்பா கண்டுபிடிக்கமுடியும்?"

"அதான் இல்லை. எல்லாத்தையும் ஒரே தடவை கொடுத்துட்டா யாருமே புதுசு வாங்கமாட்டாங்க. அது அவங்க வியாபார தந்திரம்."

"ஆமா... செல்போன் நிறுவனங்களும் லாபகரமா நடக்க வேண்டாமா?"

இருவரும் செல்போனை தொட்டு பேசிக்கொள்ள வாசந்தி இடையிட்டாள்.

"ஸ்ரீ புறப்படுப்பா... இவர் கிட்ட ஆர்கியூ பண்ணாதே இவர் கழுதையை குதிரைன்னு சாதிப்பார். நம்பளால இவரை வழிக்குக் கொண்டு வரவே முடியாது."

"நோ மம்மி... அப்பா கேக்கறதுலயும் நியாயம் இருக்கு..." ஸ்ரீகணேஷ் மிக பேலன்ஸ்டாக பேசினான்.

அவர் வளவளத்தபோதும் ஈடுகொடுத்தான். 'அமெரிக்காவில் பேச விரும்பினாலும் காதுகள் கிடைக்காது. குறிப்பாக விமானத்தில் ஏறும்போது தமிழ் பாஷை லாக்கரில் வைத்துப் பூட்டப்படும் பத்திரங்கள் போல மனதில் அடைக்கப்பட்டு விடும். அப்புறம் குமுறலான ஆங்கிலம் தான்...

மெல்ல மெல்ல அங்கே மனதின் உள்மொழியாகவும் ஆங்கிலமே ஆகிவிடும். எங்காவது ஒரு தமிழர் கண்ணில் பட்டாலும் ஜென்மாந்தரத் தொடர்பு போல ஒரு அன்பு ஏற்படும்.

இதெல்லாம் நவீன கால அவஸ்தைகள்!

அதனால் தான் ஸ்ரீ வரையில் சந்திரசேகர் எதைப் பேசினாலும் அது அவனுக்கு இனிப்பாகவே இருந்தது. பேசிக் கொண்டே கிளம்பினார்கள்.

'இன்னோவோ' காரின் பின் பகுதிக்குள் மூவரும் அடங்கிட டிரைவரும் காரை எடுத்தான். சென்னை டிராஃபிக்கில் உராயாமல் காரை ஓட்ட அமெரிக்க ரிட்டர்ன்களால் முடியவே முடியாது.

அதற்கெல்லாம் நம்ம ஊர் ஆட்கள்தான் சரி.

காருக்குள் மடிமேல் அவன் டேப்!

அது அவனால் தட்டி எழுப்பப்பட்டு திரையில் அவர்கள் குடும்பப் போட்டோ! ஸ்ரீ கைக்குழந்தையாக இருந்தபோது எடுத்த படம்.

"நீ இன்னும் இந்தப் படத்தை மாத்தலையா? என்ற படியே திரையைப் பார்த்தார் சந்திரசேகர்."

"நோ... உங்களுக்கு செல்போன் மாதிரி எனக்கு இந்த போட்டோ. பை த பை நாம இப்ப சந்தானம் அங்கிளைத்தானே பார்க்கப் போறோம்?"

"எக்ஸாக்ட்லி."

"அவருக்கு ஒரு பொண்ணு. அவங்க பேர் பூரணி, ஆம் ஐ ரைட்?"

"எக்ஸாக்ட்லி"

"அந்த பூரணிக்கு ஒரே ஒரு சன். பேர் தினேஷ் ஆம் ஐ ரைட்?"

"கரெக்ட்..."

"இப்ப இந்த பூரணி தான் சந்தானம் அங்கிள் வரைல மகளைப் போல இருக்காங்க இல்லையா?"

"ஆமாண்டா... தனக்கு குழந்தை இல்லைங்கற எண்ணத்துல பூரணியை சந்தானம் தத்து எடுத்துக் கிட்டதாவே சொல்லலாம்..."

"ரைட் எனக்கு இப்ப மேஜரா ஒரு டவுட்..."

"என்னப்பா?"

"செத்துப்போன மிஸ்டர் பத்மநாபன்கற பூரணியோட அப்பா. அதாவது மோகனா ஆன்ட்டியோட தாய் மாமா சாகும்போது தானே, அவங்களுக்கு ஒரு பெண் குழந்தை இருக்குன்னாரு?"

"ஆமாம்ப்பா..."

"அவர் ஏம்ப்பா சாகும்போது இப்படி தனக்குள்ள இருக்கற ஒரு ரகசியத்தைச் சொல்லிட்டு சாகணும்?"

"அது எப்படிப்பா எங்களுக்குத் தெரியும்?"

"உங்களுக்குத் தெரியும்னு நினைச்சு நான் இந்தக் கேள்வியை கேட்கலை. இப்படி ஒரு கேள்வியை நீங்களும் கேட்டுக்குங்க. சந்தானம்-மோகனா கப்புள்சுக்கு ஒரு குழ்ந்தை இருக்குங்கற உண்மையை உயிரோட இருக்கற நாள்ள மறைச்சிட்டு தன் மகள் பூரணி வளர்ப்பு மகளா சந்தோஷமா இருக்கற இந்த தருணத்துல அவர் இந்த

உண்மையை சொல்லியிருக்கார்னா அதுக்குப் பின்னால ஒரு சரியான காரணம் இருக்கணுமே?"

"இதுல என்ன பாதிப்பு ... சந்தானம் பூரணியை உடனேயே விலகிப் போன்னா சொல்லிடப் போறான்."

"இல்லப்பா... மிஸ்டர் பத்மநாபன் சாகும்போது உண்மையை சொல்லிட்டு செத்ததுக்குப் பின்னால இன்னும் எனக்கு நிறைய கேள்விகள் இருக்கு..."

"ஸ்ரீ... நீ ஆப்ப இப்பவே களத்துல இறங்கிட்டேன்னு சொல்..."

"ஆமாம்மா... எனக்குள்ள இப்ப நிறைய கேள்விகள்..."

"அதுல ஒரு கேள்வியை கேட்டுட்டே... அடுத்தது?"

"இது தான் மிக முக்கியமான கேள்வி."

"மோகனா ஆன்ட்டியோட அப்பா அவர்கள் சந்தானம் அங்கிள் கிட்ட இருந்து பிரிக்கறதுக்காக, இந்த பத்மநாபன் அங்கிளையும் பயன்படுத்தி சந்தானம் அங்கிளை ஜெயிலுக்கே அனுப்பிட்டார் இல்லையா?

"ஆமாம்..."

"அப்படி ஜெயிலுக்கு அனுப்பப்பட்டவர் எப்படிப்பா திரும்பவும் மோகனா ஆன்ட்டிக்கே புருஷனானார்?"

"நல்ல கேள்வி. மோகனா கொஞ்ச நாள் கல்யாண எண்ணமே இல்லாம இருந்தா. நடுவுல சந்தானம் தப்பு பண்ணலைன்னு தெரியவரவும் அவனை ஏத்துக்கிட்டா. இதுதான் எனக்குத் தெரிஞ்சு நடந்தது."

"அவங்க ஏத்துக்கறது இருக்கட்டும். மோகனா ஆன்ட்டி அப்பாவும். இந்த மாமா பத்மநாபனும் எப்படி அதுக்கு ஒத்துக்கிட்டாங்க?"

"ஏம்ப்பா இப்ப நாம கண்டுபிடிக்க வேண்டியது அன்னிக்கு தொட்டில்ல போட்ட அந்தப் பெண்ணை. இப்ப எதுக்கு இந்த வேண்டாத கேள்விகள்?"

"இது வேண்டாத கேள்விகள் இல்லப்பா. இந்த கேள்விகளுக்குப் பின்னால் நிறைய உண்மைகள் இருக்கு... இந்தக் கேள்விகள் மட்டுமல்ல... இன்னும் சில முக்கியமான கேள்விகளும் இருக்கு" ஸ்ரீகணேஷ் தீர்க்கமாக பேசினான்.

# 6

அணைக்கமட்டுமே அறிந்திருந்த ஆண்களை

அணையாதிருக்க அருள்கிறவர்கள் பெண்கள்
வம்ச விருட்சம் ஆண்களால் அல்ல
பெண்களால் தான்
பெறுகிற வெற்றிக்குப் பின்னால் இருப்பவர்கள்
பெண்களென்கிறார்கள் வருகிற வெற்றிக்கு
முன்னால் இருப்பவர்கள் பெண்களே
முன்னால் தாய் –
பின்னால் தாரம்

''யாரும் யாராகவும்' கவிதை நூலில் ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன்.

ஸ்ரீ கணேஷ் பேசியது சந்திரசேகர் வாசந்தி இருவருக்குமே ஒரே புது தெம்பை தரத் தொடங்கியது. ''ஸ்ரீ... நீ கேட்ட இந்த கேள்விக்கான பதிலை எல்லாம் மோகனாவாலதான் சரியா சொல்ல முடியும். ஆகையால அவகிட்ட கேள். இப்ப நீ கேட்கவும்தான் எனக்கே நீ கேட்டது எவ்வளவு சரியான கேள்விகள்னு தோணுது.''

''வாசந்தி... அவனை நீ எதாவது சொல்லிக் குழப்பிடாதே'' என்று சந்திரசேகர் இடையில் புகுந்தார்.

நான் குழப்பலை... குழப்பறதுக்கு நான் என்ன முட்டாளா?

''ஐயோ நான் அந்த அர்த்தத்துல சொல்லலை,'' இருவரிடையேயும் ஒரு மெல்லிய சண்டை உருவாகப் பார்த்தது. அதற்குள் சந்தானத்தின் பங்களா வரவும் அவர்களாக அடங்கினர்.

காரும் உள்ளே புகுந்து நின்றது. மூவரும் இறங்கினார்கள். சுற்றிலும் ஒரு பார்வை பார்த்தபோது காலியான ஷாமியானா பந்தல் மட்டுமே கண்ணில் பட்டது. எவரையும் காணவில்லை. அதே சமயம் ''வாங்கண்ணா'' என்று வாசலுக்கே வந்து அழைத்தாள் மோகனா அப்போதுதான் ஸ்ரீ யையும் பார்த்தாள். அவன் அமெரிக்கா கிளம்பும் முன் பார்த்தது இடையில் கிட்டத்தட்ட ஐந்தாறு வருடங்களின் ஓட்டம். அந்த இடைப்பட்ட காலத்தில் ஸ்ரீ மிகவே வளர்ந்து விட்டிருப்பதை அவளால் உணர முடிந்தது. அவளை நோக்கி நடந்து வந்த ஸ்ரீ கணேஷை வைத்த கண் வாங்காமல் பார்த்தாள் மோகனா.

''ஹாய் ஆன்ட்டி...''

''ஹாய் ஸ்ரீ...''

''ஹவ் ஆர் யூ?''

''ஃபைன்! இது ரொம்ப சம்பிரதாயமான பதில் ஸ்ரீ. நிஜமா நானும் சரி

அங்கிளும் சரி ரொம்பவே நெர்வசா இருக்கோம். டு யூ நோ த ரீசன்..."

"யெஸ்... ஐ நோ! டொண்ட் ஒர்ரி... எல்லாம் சரியாயிடும்..."

அவன் கூறிட, அவள் அவனை இதமாக அணைத்து தன் அன்பை வெளிப்படுத்தினாள்.

"ஆமா, பங்களாவே வெறிச்சோடிக் கெடக்கே எங்க எல்லாரும்?" என்று கேட்டார் சந்திரசேகர்.

எல்லாரும் ராமேஸ்வரம் கிளம்பிப்போயிருக்காங்க. ஜஸ்ட் நௌ இப்பதான் எல்லா வேனும் புறப்பட்டுப் போச்சு.

"ஓ... ஆமா நீங்க போகலையா?"

அதுதான் போன்லையே சொன்னேனே... இங்க இவர் தலைகீழா மாறிட்டார்ணா! மாமா ஒரு ஏமாற்றுக்காரர்" அவருக்கு எதுக்கு ராமேஸ்வரம்? இங்க இருக்கற மெரீனா பீச் போதும்னு ஒரே ரகளை.

பேசியபடியே நடந்து சந்தானம் உள்ள அறைக்குள் நுழைந்தார்கள். சந்தானம் பைப்பில் புகையிலையை நிரப்பி அதைப் பற்ற வைத்து புகைத்துக் கொண்டிருந்தார். அதைப் பார்த்த சந்திரசேகரிடம் உடனேயே பதட்டம்.

"டேய். நீ ஒரு ஹார்ட் பேஷண்ட்டா. பைபாஸ் சர்ஜரி வேற ஆகியிருக்கு. நீ எப்படிடா இந்த எழவைத் தொடலாம் என்று ஒரே பாயாக பாய்ந்தார் சந்திரசேகர்."

"ப்ளீஸ் கீப் கொயிட் சந்திரா...! இதனாலதான் நான் இப்பக் கொஞ்சம் அமைதியாய இருக்கேன். ஓ ஸ்ரீ கணேஷ் வாப்பா! வா. உன்கிட்ட ஒரு நல்ல மாற்றம் தெரியுது. ஹைஜீனிக்கான யு.எஸ். உன்னையும் ஹை ஜீனிக்கா மாத்தியிருக்கறது நல்லா தெரியுது" என்று அவரும் அவனை கட்டி அணைத்தார்.

"போய் முதல்ல பைப்பை தூக்கி எறிடா. அப்பதான் ஸ்ரீ உன்கூட பேசுவான்" என்றார் சந்திரசேகர். சந்தானமும் பைப்பை பாத்ரூமுக்குள் சென்று பத்திரமாக வைக்க வேண்டிய இடத்தில் வைத்துவிட்டு வாய் கொப்பளித்தவராக வந்துநின்றார்.

"டேய்... நான் எல்லா விஷயத்தையும் ஸ்ரீ கிட்ட விவரமா சொல்லிட்டேன். ஸ்ரீயும் இன்வெஸ்டிகேஷனை ஸ்டார்ட் பண்ணிட்டான். அவனுக்கு இப்ப உன் கிட்ட நிறைய கேள்விகள் இருக்கு... ஸ்ரீ நீயும் கேளுப்பா..."

சந்திரசேகர் இருவருக்கும் இடையே பாலம் அமைத்துத் தந்தவராக

மகனைப் பார்த்தார். ஸ்ரீகணேஷ், சந்தானம், மோகனா என்ற இருவரையும் ஆழமாக ஒரு பார்வை பார்த்தான். வட்டமான சோபாவில் அனைவரும் அமர்ந்திருந்தார்கள்.

"என்னப்பா... என்ன அப்படிப் பார்க்கறே?"

"உங்கள ஒரு காதல் ஜோடியா இப்ப பாக்கறேன் அங்கிள். ஏன்னா என் வரைல அது ஒரு ஆச்சரியமான தகவல்."

"என் லைஃப் ஆச்சரியங்களுக்கும் அதைவிட அதிர்ச்சிகளுக்கும் பஞ்சமே இல்லை ஸ்ரீ. நீ என்ன கேக்க நினைச்சாலும் சரி... கேள்! எங்களுக்கு எங்க மகள் கிடைக்கணும். என் மனசு என் மகளை நினைச்சு தவியா தவிக்கறது உனக்குத் தெரியாது..."

"அங்கிள், இந்த அசைன்மெண்ட்டை ஐ மீன் உங்க மகளை கண்டுபிடிக்கற இந்த ஒரு பெரிய விஷயத்தை நீங்க போலீஸ் மூலமாவோ இல்லை பிரைவேட் டிடெக்டிவ்ஸ் மூலமாவோ ஏன் செய்ய முயற்சிக்கலை...?"

ஸ்ரீ எடுத்த எடுப்பில் அப்படி ஒரு கேள்வி கேட்பாள் என்று சந்தானம் எதிர்பார்க்கவில்லை. "ஏம்பா... உனக்கு இதுல இறங்க விருப்பமில்லையா?"

"அப்படி இல்ல அங்கிள். வெளிப்படையான ஒரு தேடலுக்கு அது வழி வகுக்கும். பேப்பர்ல விளம்பரம் தர முடியும், டி.வி.யிலயும் விளம்பரம் தரலாம்."

"அதே சமயம் இவ்வளவு நாளா என்ன செய்து கிட்டிருந்தோம்கற ஒரு கேள்வியும் கூடவே தோணும் இல்லையா?"

"அப்ப அதனாலதான் போகலையா?"

"இல்ல ஸ்ரீ. இவ மாமா பத்மநாபன் இப்பத்தானே அந்த ரகசியத்தைச் சொன்னார். சொன்னவர் முழுசா கூட சொல்லை. சொல்லி பாதி சொல்லாமலே அவர் உயிர் பிரிஞ்சிடிச்சு.

தொடக்கத்துல அவர்தான் எனக்கு பெரிய வில்லனா இருந்தவர். பின்னால அப்படியே தலை கீழே மாறி எனக்கு எல்லாமே அவர்தான்னு மாறிப்போனார். மோகனா அப்பா காலமாகவும் பத்மநாபன் அங்கிள் மேலதான் எல்லா சுமைகளும் விழுந்தது. என்னை அவர் கஷ்டப்படுத்தவே விரும்பலை. நான் இருக்கற வரை நீங்க கஷ்டப்படக்கூடாது" ன்னு சொல்லிக்கிட்டே இருப்பார்.

"அப்ப அவர் சாகறவரை உங்களுக்கும் அவருக்கும் நல்ல உறவுதான்

இருந்ததா?"

"நிச்சயமா... அதுல எந்த சந்தேகத்துக்கும் இடமில்லை."

"அது எப்படி அங்கிள் உங்கமேல திருட்டுப் பழி போட்டு உங்களை ஜெயிலுக்கு அனுப்பினவர் கிட்ட உங்களால திரும்பவும் சகஜமா பழக முடிஞ்சுது..."

"ஸ்ரீ... இந்தக் கேள்விகளை நீ இப்ப எதுக்குக் கேக்கறேன்னு நான் தெரிஞ்சிக்கலாமா"

"உங்க அங்கிள் பத்மநாபன் செயல்பாடுகள்ல நான் நிறைய முரண்பாட்டை பாக்கறேன். முதல்ல உங்க காதலுக்கு வில்லனா இருந்தவர் பின்ன அப்படியே தலைகீழா மாறி உங்களை ஏத்துக்கறார். அப்படி ஏத்துக்கிட்டவர் அப்பவே உங்களுக்கு குழந்தை இருக்கற விவரத்தை அதாவது, அவர் சாகும்போது சொல்லிட்டு போன ரகசியத்தை அப்பவே சொல்லியிருக்கலாமே... ஏன் அப்ப சொல்லலை?"

ஸ்ரீ கேட்கவும் சந்தானமும் யோசிக்கத் தொடங்கினார்.

"என்ன அங்கிள் யோசிக்கிறீங்க?"

"இல்ல... அவர் அப்ப சொல்லாதது கூட எனக்கு ஆச்சரியமில்லை. ஆனா இப்ப சாகும் போது சொல்லிட்டு செத்ததுதான் என் வரைல பெரிய ஆச்சரியம்."

"எப்படி?"

"சொல்லவேண்டிய காலத்துலயே சொல்லாதவர், சொல்ல அவசியமே இல்லாத் காலத்துல சொன்னது ஆச்சரியமான விஷயமில்லையா?"

"ஆமாம் ... யூ ஆர் ரைட்... இப்ப அவர் என் மகள் பத்தின உண்மையைச் சொல்ல பெருசா எந்த அவசியமும் இல்லைதான்..."

சந்தானமும் ஆமோதிக்க சந்திரசேகருக்கு கோபம்தான் வந்தது.

"சந்தானம்... முட்டாள் மாதிரி யோசிக்காதடா... ஸ்ரீ... இதுக்கு நான் உனக்கு வீட்லயே பதில் சொல்லிட்டேன். எப்பேர்ப்பட்ட தப்பான மனுஷனும் சாகும்போது நல்ல படியா நிம்மதியா சாகத்தான் விரும்புவாங்க. ரகசியம்ங்கறது ஒரு பாரம்! அதை சுமந்துகிட்டு சாக மனசு வராம, மனசாட்சியோட உறுத்தல் தாங்காம இந்த உண்மையை மிஸ்டர் பத்மநாபன் சொல்லியிருக்கார். இதுல இதுக்கு மேல சிந்திக்க ஏதுமில்லை."

பை த பை... இப்ப நாம வெளிப்படையா அந்தப் பொண்ணை

தேடப்போறோமா, இல்லை ரகசியமா தேடப் போறோமாங்கறதுதான் பிரதான கேள்வி. என் வரைல ரகசியமா தேடத் தேவையில்லை. வெளிப்படையாவே தேடலாம். யாராவது கேட்டா பத்மநாபன் சாகும்போது தான் உண்மையைச் சொன்னார்னு சொல்லிடறதுதான் பெட்டர்.

இப்ப அந்தப் பொண்ணு எந்த அனாதை இல்லத்துல இருக்கான்னு கண்டுபிடிக்கறது தான் முக்கியம். மற்ற கேள்விகள் தேவையே இல்லை..."

சந்திரசேகர் தன் மனதில் பட்டதை தேங்காய் உடைப்பதுபோல போட்டு உடைத்துவிட்டார். சந்தானத்துக்கும் என்ன சொல்வது என்று தெரியவில்லை. ஸ்ரீயை பார்த்தார். ஸ்ரீயின் நெற்றியில் ஏராளமான யோசனை வரிகள்.

"என்ன ஸ்ரீ... உன் அப்பா சொன்ன மாதிரியும் இருக்குக்கலாம் இல்லையா?"

"தாராளமா இருக்கலாம். அப்படி இருந்துட்டா இந்த பிரச்னைல தேடிக் கண்டுபிடிக்கறதைத் தவிர வேற சிக்கல்களுக்கு இடமில்லை. ஆனா, அப்படி இல்லைன்னா..."

"இல்லைன்னா?"

"இல்லைன்னா பெருசா ஒரு சிக்கல் இருக்க வாய்ப்பு இருக்குன்னுதான் அர்த்தம்..."

"இதோ பார்... நாம் பாசிட்டிவா நல்லதையே நினைப்போம். இப்ப அந்தப் பொண்ணை எப்படி கண்டுபிடிக்கறதுனு மட்டும் பேசுவோம்."

"ரைட், அப்படியே செய்வோம்..."

"அந்தப் பொண்ணை பத்தின விவரங்களை பேப்பர்ல விளம்பரமா கொடுத்தும் தேடலாம். போலீஸ் கம்ப்ளைண்ட் இரண்டுமே நம்ம குடும்பத்தை ஊர் உலகம் தப்பா பேச இடம் தரும். உங்க காதல் விவகாரத்தை போற வர்றவங்களெல்லாம் அசை போட இடம் கொடுக்கும்.

ஆகையால இதை எப்பாடு பட்டாவது நாமளே தேடிக் - கண்டுபிடிக்கறதுதான் சரி."

"ஆமாம் ஸ்ரீ, நீ சொல்றதுதான் சரி, இது வெளியே விவாதிக்கப்படறதை நான் விரும்பலை. காதும் காதும் வெச்ச மாதிரி இந்த விஷயத்தை நீ செய்யறத தான் நான் விரும்பறேன்."

"அப்படின்னா அங்கிள் எனக்கு இன்னும் சில விவரங்கள் தெரியணும்."

"என்னப்பா?"

"ஆண்ட்டி அந்தக் குழந்தை எந்த ஊர்ல பிறந்ததுன்னு சொல்ல முடியுமா?"

"கொடைக்கானல்லப்பா...! அங்க எங்க பங்களாவுல தான் அந்த குழந்தை பிறந்தது. டாக்டர், நர்ஸ் எல்லாம் பங்களாவுக்கே வந்து பாத்துக்கிட்டாங்க."

"அந்த டேட் ஞாபகம் இருக்கா?"

"அதை எப்படிப்பா என்னால மறக்க முடியும் ஒரு பெண் தன் வாழ்நாள்ல எதை மறந்தாலும் உயிர் வேதனையோட தான் பிள்ளை பெத்ததை மட்டும் மறக்கவே மாட்டாப்பா!"

"அப்படின்னா இப்ப அந்தக் குழந்தைக்கு 26 வயசாகணும். அப்புறம் அது பொண்ணுதான்னு எப்படித் தெரியும்..."

"பத்மநாபன் மாமா சாகும்போது சொன்ன விதத்துலதான் அது தெரிஞ்சது. அவ ஒரு அனாதை ஆஸ்ரமத்துல இப்பவும் உயிரோடதான் இருக்கான்னு சொன்னதோட மாமா உயிர் போயிடிச்சு."

"அப்படின்னா இந்த நொடில தெளிவா தெரியற விஷயம் அந்தக் குழந்தை ஒரு பெண் குழந்தை அவளுக்கு வயசு 26 ங்கறதுதான்... இல்லையா?"

"எக்ஸாக்ட்லி... பை த பை அவர் அனாதை ஆஸ்ரமத்துல கொண்டு போய் போட்டுட்டதா சொன்னதை வெச்சு கணக்கு பண்ணினா அந்த ஆஸ்ரமம் கொடைக்கானலை சுத்தித்தான் எங்கேயோ இருக்கணும். இல்லையா?" "நிச்சயமா... அதுக்குதானே வாய்ப்பும் அதிகம்."

"நான் இப்பவே கொடைக்கானல் போறேன். அங்க இருந்து சுற்றுவட்டாரத்துல எவ்வளவு ஆஸ்ரமங்கள் இருக்குன்னு பாக்கறேன். அதுல 26 வருஷத்துக்கு முந்தி இருந்தே இருக்கற ஆஸ்ரமத்தை கணக்குப் பண்ணி அந்த ஆஸ்மத்துக்கெல்லாமும் போய்ப் பாக்கறேன்."

"முதல்ல புறப்படு ஸ்ரீ... உனக்கு இதுக்காக எந்த மாதிரி உதவின்னாலும் செய்ய தயாரா இருக்கேன்..."

"சந்தானம் துடிதுடித்தார்."

"அவசியமே இல்லை அங்கிள். நீங்க டென்ஷனாகாம நிம்மதியா இருங்க. எல்லாத்தையும் நான் பாத்துக்கறேன். அதே சமயம் நான்

இப்படி ஒரு முயற்சியில இருக்கறது யாருக்கும் தெரியவேண்டாம். குறிப்பா மிஸ்டர் பத்மநாபன் மகள் பூரணி. அவங்களோட மகன் தினேஷுக்குத் தெரியவே கூடாது."

"அவங்களுக்கு ஏன் தெரியக்கூடாதுன்னு நினைக்கறே?"

"அப்ப தெரியட்டும்னு நீங்க நினைக்கறீங்களா?"

"தெரிஞ்சா என்ன... பூரணி இதைக் கேட்டு சந்தோஷம்தான் படுவா."

"அப்ப சரி... உங்க இஷ்டம்"

ஸ்ரீகணேஷ் இரு பொருள்பட சொன்னதில் ஏராளமான உள்ளர்த்தங்கள்!

# 7

'கொக்கென்று நினைத்தாயோ
கொங்கணவா' -இது
புராண காலப் பெண்ணின் கொதிப்பு!
'கொங்கையைப் பிய்த்தெறிந்து
கொழுந்தீயில் மதுரை' - இது
காப்பியப் பெண்ணின் கோபம்!
'கூந்தலை முடியமாட்டேன்' - இது
இதிகாசப் பெண்ணின் சபதம்!
வெள்ளையனை விரட்டிய நாச்சி- இது
வரலாற்றுப் பெண்ணின் ரௌத்ரம்!
ஆயிரம் ஆண்டுகள் நடுவே
அரசியல் அடலேறு
பிரதமராய் கொலையுண்டதே- இன்று
பெண்ணின் வரலாறு!
ஆண்டிப்பட்டிகளில் அசுர சூறாவளி
அரியனை ஏறும் ஆற்றல் பெண்கள்
அன்றாடம் நிதர்சனத்தில் அலுவலகத் துயர்கள்!
சந்தேகக் கணவன்கள்- என்றென்றும் தொடரும்
பாலியல் தொந்தரவு!
கள்ளிப் பாலிலழியும் கருணைக் கொலைகள்
ஊர்வலங்கள், கருத்தரங்கம், பேரணிகள்
ஒருநாள் மட்டும் 'உலக மகளிர் தினம்!'

நெல்லை ச. சுப்பையாவின் 'அக்னிச்சாரல்' நூலிலிருந்து...

கொடைக்கானல்!

யார் இதற்கு இப்படி ஒரு பெயரை வைத்தார்களோ தெரியாது. ஆனால், அவர்களை வாழ்த்த வேண்டும் என்று தோன்றியது ஸ்ரீகணேஷிற்கு.

அந்த ஊர் எல்லையைத் தொட்டிருந்தது அவனது கார். அடிவாரத்தில் இருந்து மேலே ஏறும்போதே கார் ஏ.சி.யை அணைத்து கண்ணாடிக் கதவு அடைப்புகளையும் இறக்கி விட்டிருந்தான். அதனால் காருக்குள் இயற்கையான ஜில்லென்ற காற்று!

திரும்பிய பக்கமெல்லாம் பசுமை. சூழலுக்கும் மனித மனதுக்கும் பெரிய தொடர்பு இருக்கிறது. சூழலைப் பொறுத்து மனமும் அதற்கேற்ப மாறிவிடுகிறது. ஸ்ரீகணேஷிற்கும் உற்சாகமாய் இருந்தது. வாழ்க்கை என்பது சுகமாய் அனுபவித்து வாழ்வதற்கு மட்டுமே என்றெல்லாம் தோன்றியது

அன்று குளிர் கொஞ்சம் அதிகம். சூடாக எதையாவது குடித்தால் அது ஒரு தனி சுகமாக இருக்கும் என்று தோன்றியது. அமெரிக்காவில் சாலையோரமாக மோட்டல்கள் இருக்கும். பார்க்க மிக நீட்டாக அதே சமயம் ஒரு வித சுடுகாட்டு அமைதியோடு இருக்கும். இங்கோ சாலை ஓரமாக டீக்கடை வெளியே மரபெஞ்சுகள். அதன்மேல் பிரிந்து கிடக்கும் தினசரி பேப்பர்கள். குல்லாய் போட்டுக் கொண்டு பீடி பிடிக்கும் மலைவாசிகள். இவர்களோடு மிளகாய் பஜ்ஜி கூட்டு சேர்ந்திருந்தது. அப்படியே கடையில் உள்ள ரேடியோவில் எஃப். எம். மின் பாடல் சப்தம்.

ஸ்ரீகாரை ஓரம் கட்டிவிட்டு இறங்கிச் சென்று ஒரு டீ சொன்னான். அப்படியே மணக்கும் பஜ்ஜியை பார்த்தான். நாக்கு வாங்கித்தா என்றது. மனமோ எண்ணெயின் வினோதமான வண்ணத்தைப் பார்த்து பயந்தது. இறுதியில் நாக்கு ஜெயித்தது. பஜ்ஜியும் நன்றாகவே இருந்தது. இதை எல்லாம் அமெரிக்காவில் கற்பனை கூட செய்து பார்க்க முடியாது.

அப்போது ஒரு இளம்பெண் கூடையில் தலையில் முளைத்த இலைகளை கிள்ளியிராத கேரட்டுகளுடனும் ப்ளம் பழங்களுடனும் அவன் முன்வந்தாள். ப்ளம்மின் சிகப்பு நிறமும் கேரட்டின் ஆரஞ்சு நிறமும் எதிரும் புதிருமாக தோன்றி ஸ்ரீகணேஷை ரசிக்க வைத்தது.

"வாங்கிக்குங்கய்யா... கண்ணுக்கு ரொம்ப நல்லது." எனறாள் அவள்.

"எவ்வளவு விலை?"

"ஒரு கட்டு அம்பது ரூபா..."

"வாவ்... அஞ்சே அங்சு குட்டிகாரட் அம்பது ரூபாயா?"

"ஏ புள்ள ... உனக்கு எத்தினி தடவை சொல்லியிருக்கேன் யாரா இருந்தாலும் ஒரே விலைதான் சொல்லணும்னு."- டீக்கடைக்காரன் இடையிட்டான். அவள் அதைக் கேட்டு "நீ சும்மா இருய்யா... சார் கேக்கட்டும் என் வியாபாரத்தை கெடுக்காதே. அப்புறம் உன் டீயோட லட்சணத்தை நான் பேச வேண்டிவரும்" என்றாள் அவள். ஸ்ரீ கணேஷிற்கு உடனேயே புரிய வேண்டியது புரிந்து விட்டது.

"சார் ஒரு கட்டு பத்து ரூபாதான் சார்... நீங்க படகு மாறி கார்ல வரவும் இது சர்னு அஞ்சு மடங்கு ஏத்திடிச்சு. இந்த பத்து ரூபாயே கூட ஜாஸ்திதான். ஒரு கிலோ கேரட் தோட்டத்துல இருபது ரூபா... இது கால் கிலோ கூட இருக்காது..."

டீக்கடைக்காரன் அவளை பொருட்படுத்தாமல் உண்மைகளை போட்டு உடைத்தான்.

"ஏ டீயி... உன் புத்திய காட்டிட்ட பாத்தியா? நீ கூடதான் பவுடர் பாலு, கலப்பட தேயிலைன்னு டீ போட்றே. ஒரு அவுன்ஸ் டீக்கு பத்து ரூபா வாங்கறே. ஒரு ரூவா பொறுமாய்யா உன் டீ?"

அவள் அவன் பக்கத்து தப்புகளை பட்டியல் போட்டாள். ஸ்ரீகணேஷுக்கு பகீர் என்றது.

"ஏய் ஓடிப்போயிடு... அப்புறம் சுடு தண்ணிய மூஞ்சில ஊத்திப்புடுவேன். அடிச்சி எரிஞ்சா ஏன்னா கேட்க நாதியில்லாத அனாதை நாயி... பேசிற பேச்சைப் பாரு..."

டீக்கடைக்காரனின் கோபத்தில் அவள் ஒரு அனாதை என்பது போல் தெரியவும் ஸ்ரீ கணேஷிடம் ஒருமின்னல். அவளுக்கும் இருபத்தைந்து இருபத்தாறு வயதுதான் இருக்கும்.

அவளோ அடங்காமல் அவனை முறைத்தாள், "ஆமா பெரிய ஜமீன் பரம்பரை திரும்புன பக்கமெல்லாம் சொந்தக்காரங்க உனக்கு. நான்தான் அனாதையாயிட்டேன்" என்றாள் பதிலுக்கு.

ஸ்ரீ இடையிட்டான்.

டீகடைக்காரரே விடுங்க. ஏம்மா உன் பேர் என்ன? என்றான் அவளிடம்.

"கேரட் வாங்காம பேரை மட்டும் கேட்டா என்ன அர்த்தம்?"

"வாங்கினாதான் சொல்வியா?"

"உங்களுக்கெதுக்கு என் பேரு?"

"சும்மா கேட்டேம்மா... பதிருக்கு பதில் தைரியமாவும் ஜான்சிராணி மாதிரி வீரமாவும் பேசறியேன்னுதான் கேட்டேன். பை த பை என் பேர் ஸ்ரீ கணேஷ். நான் அமெரிக்காவுல இருக்கேன். ஆனா, இந்தியா தான் என் தாய் நாடு. தமிழ் தான் என் தாய்மொழி."

ஸ்ரீகணேஷ் மிக சரளமானான். அவள் கேட்காமலே தன் பேரைச் சொல்லவும் அவளுக்கும் ஒரு நாகரிகக் கட்டாயம் அதனால் ஏற்பட்டது.

"என் பேரை தெரிஞ்சிக்கிட்டே கேக்கறீங்களே..." என்றாள்.

"என்னது... உன் பேர் எனக்குத் தெரியுமா,"

"பின்ன இப்ப கூட சொன்னீங்களே..."

"ஓ ஜான்சி ராணியா?"

"அதேதான் ஆனா இந்த மலைல யாரும் என்னை ஜான்சின்னே கூப்பிடமாட்டாங்க"

"வேற எப்படி கூப்பிடுவாங்க?"

"அது இருக்கட்டும் கேரட் வாங்கமாட்டீங்களா?"

"உன்னோட கூடையை அப்படியே அதோ என் கார் பின்னால இருக்கற டிக்கில வெச்சிடு" ஸ்ரீகணேஷ் சொல்லிக் கொண்டே பர்சில் இருந்து ஒரு ஆயிரம் ரூபாயை எடுத்தான். அவள் முகத்தில் உடனேயே பத்து தடவை சோப்பு போட்டு கழுவிக்கொண்டது போல் ஒரு பளிச்! கண்களும் அகல மாயின.

டீக்கடைக்காரன் முகமோ பதிலுக்கு இருண்டு போயிற்று. அவள் கூடையோடு காரை நோக்கி அகலவும் அவன் வாசிக்கத் தொடங்கிவிட்டான்.

"சார் அந்தக் கூடை நூறு ரூவா தேராது. இவ காரட்டை விலைக்கு வாங்கறவளும் கிடையாது. சரியான திருடி. இந்த மலைல இவளை நாங்க 'லேடிகேடி' ன்னு தான்கூப்பிடுவோம்.

டீக்கடைக்காரன் சொன்னதைக் கேட்டு சிரித்த ஸ்ரீகணேஷ் அவன் வசம் ஒரு ஐநூறு ரூபாயை தந்தவன் "சில்லரை வேண்டாம் மிச்சத்தை நீங்களே வெச்சுக்குங்க..." என்றான் அவன் முகமும் பளிச்!

"சார் நீங்க சினிமா எடுக்கறவரா சார்? என்றான்."

"அதெல்லாம் இல்லை. அதான் அமெரிக்காவுல இருக்கேன்னு சொன்னேனே..."

"இருந்தா என்ன... சினிமா எடுக்கக் கூடாதா?"

"இந்தப் பொண்ணுக்கு எதாச்சும் வேஷம் கீஷம் கொடுக்கப்போறீங்களா?"

"அப்படி எல்லாம் ஒண்ணுமில்ல..."

"அப்ப எதுக்கு சார் அதுக்கு ஆயிரம் ரூபா தந்தீங்க. அவ இனிமே உங்கள விடமாட்டா சார், ஏன் சார் அவ எதிர்ல. உங்க பர்சை காட்டினீங்க..."

"பயப்டாதீங்க... அந்தப் பெண்கிட்ட நான்தெரிசுக்க வேண்டிய விஷயங்கள் நிறைய இருக்கு உங்ககிட்டையும் தான்..."

"இதுகிட்ட தெரிஞ்சுக்க என்ன சார் இருக்கு. வாயத் திறந்தா பொய்யாதான்பேசுவா. பெரிய நடிகை சார்! ஒருநா எனக்கு புத்து நோய். மூணு மாசம்தான் உயிரோடு இருப்பேன்னு டாக்டர் சொல்லிட்டார். சாகறதுக்குள்ள நான் ஒரு மாதா கோயில் கட்டணும்னு ஒரு மணிநேரத்துல அஞ்சாயிரம் சேத்துட்டா சார்!"

டீக்கடைக்காரன் சொல்லி நிறுத்த அவள் கார் அருகில் இருந்தபடி "சார், வாங்க சார்... என்று கத்தினாள்.

"சார், கார்ல ஏறிக்கிட்டு போயிடுங்க. அவ தொத்து வியாதி மாதிரி. பிடிச்சா விடமாட்டா. அப்படி இப்படி அவளை யூஸ் பண்ணிக்கவும் விடமாட்டா. ஒருத்தனை கடிக்கக் கூடாத இடத்துல கடிச்சு பெரிய சிக்கலாயிடிச்சு..." டீக் கடைக்காரன் ஸ்ரீகணேஷை கொஞ்சம் சந்தேகமாகவும் எச்சரித்தான். ஸ்ரீகணேஷ் முகத்தில் மாற்றம். முறைத்தான்.

"தப்பா எடுக்காதீங்க சார். மனசுல பட்டதை நான் சொல்லிட்டேன்."

"நீங்க நினைக்கிற மாதிரி அந்த ஆள் நானில்லை. அந்த ஜான்சி ராணியால இந்த அலெக்ஸாண்டரை எதுவும் பண்ண முடியாது வரேன்..."

என்று காரை நோக்கி நடந்தான். டீக்கடைக்காரன் அடுத்து நடக்கப் போவதை கடையில் இருந்தபடியே கவனிக்கத் தொடங்கினான். அவள் ஸ்ரீகணேஷிடம் மிக பவ்யமாக பேசத் தொடங்கியிருந்தாள்.

"மலைல எங்க சார் போகணும்?"

"ஏதாவது ஒரு ஹோட்டலுக்கு..."

"கீரீன் பார்க்குக்கு போலாமா. நல்ல ஹோட்டல் சார்..."

"போலாமாவா?"

"இல்ல சார்... நான் வழி காட்றேன்னு சொன்னேன்."

"நான் போய்க்கிறேன்."

"அந்த கடைக்காரன் என்னை பத்தி ஏதாவது சொல்லியிருந்தா அதைக் கேட்காதே சார். அவன் போங்கு பிடிச்சவன்."

"சரி வண்டில ஏறு."

ஸ்ரீகணேஷ் அப்படிச் சொல்லவும் அவளிடம் ஒரே உற்சாகம். விறுவிறுவென்று போய் பின்னால் ஏறினாள். காரும் விறுவிறுவென்று போய் பின்னால் ஏறினாள். காரும் புறப்பட்டது. டீக்கடைக்காரனோ பெருமூச்சு விட்டான்.

திருமகள் இல்லம்!

மெயின் ஹாலில் ஸ்பீக்கரில் எம்.எஸ். ன் விஷ்ணு சஹஸ்ர நாமம் ஒலித்தபடி இருந்தது. ஒவ்வொருவராய் வந்து அடுத்து நடைபெற இருக்கும் பஜனைக்கு என்று விரித்து கடந்த ஜமுக்காளத்தில் அமர்ந்தபடி இருந்தனர்.

லட்சுமி நரசிம்மன் தன் அறையில் நெற்றிக்கு ஸ்ரீசூரணம் இட்டுக் கொண்டிருந்தார். அலமு டி.வி. பார்த்துக் கொண்டிருந்தாள். ஸ்ரீசூரணம் இட்டு முடித்தவர் சட்டையை எடுத்து அணிந்து கொண்டே அலமுவைப் பார்த்தார். அவளோ சீரியலில் மூழ்கிப் போயிருந்தாள்.

"நீ பஜனைக்கு வரலையா?" கேட்டார். அது அவள் காதிலேயே விழவில்லை.

"அடியே உன்னத்தான். பஜனைக்கு வரலியா?"

"ஏன் கத்தறேள்? நான் வரலை. நீங்க போங்கோ."

"அப்ப உனக்கு பஜனையைவிட சீரியல் பெருசா போயிடுச்சா?"

"இப்ப எதுக்கு என் வாயப் பிடுங்கறேள். நான் இப்ப தான் வாழவே ஆரம்பிச்சிருக்கேன். உங்களுக்கு உங்க இஷ்டம் எனக்கு என் இஷ்டம்."

அழுத்தமாய் டி.வி. யை விட்டு முகத்தை விலக்காமலே பேசினவளை எரிச்சலோடு பார்த்தபடி நகர்ந்தார் லட்சுமி நரசிம்மன்.

ஹாலில் அவரைப் போல ஆண்கள்தான் இருந்தனர். பெண்களே வந்திருக்கவில்லை! ரங்காச்சாரி சிரித்தபடி வந்தார். எல்லோரையும் பார்த்தார். கூடவே யாழினியும் வந்தாள். மங்சள் கலர் புடவையில் சிகப்பு பார்டர்! புடவை துணியிலேயே ரவிக்கை. ஒரு தெய்வீகம் பளிச்சென்று தெரிந்தது. மிருதங்கம், கஞ்சிரா மேடையில் தயாராக

இருந்தது. யாழினி போய் கஞ்சிராவை எடுத்துக் கொண்டாள். ரங்காச்சாரி மிருதங்கம் அருகில் உட்கார்ந்தார். எல்லோரையும் பார்த்தார்.

"ஒரு பொம்மனாட்டி கூட வரலை. யாழினியை விட்டு எல்லாரையும் அழைச்சுண்டு வர சொல்லுங்கோ" என்றார் லட்சுமி நரசிம்மன். தொனியில் கோபம் நன்றாக தெரிந்தது.

"வேண்டாம், பஜனைக்கு இஷ்டப்பட்டு வரணும்."

"அவா ஒரு நாளும் வரமாட்டா. அவா வரணும்னா எல்லா ரூம்லயும் இருக்கற டி.வி.யை எடுத்துடுங்கோ..."

"எப்படியோ அவங்க இங்க சந்தோஷமா இருக்காங்க தானே?"

"அதுசரி, சீரியலைப் பார்த்துட்டு மண்ணா போயிண்டுருக்கா. நீங்க சந்தோஷமா இருக்கறதா சொல்றேளே..."

"பஜனை ஹால்ல கோபம் கூடாது. இந்த திருமகள் இல்லம் சந்தோஷமா நிம்மதியா வாழ நினைக்கறவாளுக்கான ஒரு இடம். இந்த சீரியல் ஒரு நாள் அலுக்கும்போது அவங்க எல்லாம் நிச்சயம் பஜனைக்கு வருவாங்க. நாம பஜனையை ஆரம்பிப்போம்."

ரங்காச்சாரி அழகாக வழிப்படுத்தினார்.

"ஏம்மா யாழினி. நீ சீரியல் பார்த்தா அதுல ஒரு அர்த்தம் இருக்கு. ஆனா, நீ பஜனைக்கு வந்துருக்கே உனக்கு டிவி. பிடிக்காதா?" ஒருவர் யாழினியிடம் கேட்டார். மெல்லிய புன்னகையோடு "நாம பஜனையை ஆரம்பிக்கலாமா?" என்று கேட்டாள் யாழினி. அதுவே அவருக்கு பதிலாக விட்டது.

"ஆச்சரியமான பொண்ணும்மா நீ" என்றார் அவரே.

ஆமாம். யாழினி ஒரு ஆச்சரியமான பெண்ணுதான். அதிசயமான பொண்ணும்கூட என்வரையில் இந்த திருமகள் முதியோர் இல்லத்துல நடமாட்ற திருமகளா நான் யாழினியைப் பார்க்கிறேன். கடவுள் தந்த பரிசுதான் யாழினி. எனக்குப் பிறகு இந்த திருமகள் முதியோர் இல்லத்தை யாழினி நல்லவிதமா பார்த்துப்பாங்கறதுல எனக்கு கொஞ்சம் கூட சந்தேகமே இல்லை" என்ற ரங்காச்சாரி யாழினியை சற்று பரவசத்தோடு பார்த்தார்.

யாழினி பதிலுக்கு 'குறையொன்றுமில்லை மறை மூர்த்தி கண்ணா'- என்று பாட ஆரம்பித்தாள்! அதைக் கேட்ட லட்சுமி நரசிம்மனுக்கு கண்கள் கலங்கத் தொடங்கிவிட்டது. அவர்களை தவிக்க விட்டுவிட்டு

மஞ்சள் காமாலையால் உயிரை விட்டிருந்த அவரின் மகளான மீனாவுக்கு இந்தப் பாட்டுதான் மிக பிடித்தமான பாட்டு. அவர் வரையில் மீனாவே ஆகாயத்தில் இருந்து இறங்கி வந்து அவர் எதிரில் அமர்ந்து பாடுவது போல் இருந்தது. அதன் தொடர்ச்சியில் அலமுவும் டி.வி.யை அணைத்து விட்டு பஜனை ஹாலுக்கு வந்தது தான் அடுத்த கட்ட ஆச்சரியம். அவளும் யாழினியை மீனாவாகத்தான் பார்த்தாள். தொட்டுத் தொட்டு ஒவ்வொருவராக வர ஹாலும் நிரம்பிவிட்டது. பஜனையும் உச்சமாக களைகட்டி 'விட்டலன்' பாடலை எட்டிப் பிடித்திருந்தது.

பஜனைக்கும் பாண்டுரங்கனாகிய விட்டலனுக்கும் எப்போதும் நெருங்கிய தொடர்பு உண்டு.

'விட்டல விட்டல பாண்டுரங்க விட்டல' என்று பாடத் தொடங்கும்போது உடம்பு மனசு இரண்டிலும் ஆகாயப் பெரு வெளியில் இருந்து ஒரு அருள் மின்சாரம் பாய ஆரம்பித்துவிடும். கர்மப் படிமன்களை அது கழுவித் துடைத்து விட்டுத் தான் ஆளைவிடும். அது ஒரு சப்த சஞ்ஜீவி! அந்த சஞ்ஜீவி அங்கிருதோரை ஆக்கிரமித்த வேளை அந்த முதியோர் இல்லத்துக்கு வெளியே ஒரு போலீஸ் ஜீப் வந்து நின்றது.

# 8

போக்குவரத்து நெரிசலில் பிச்சையெடுக்கும்

இந்த நடுத்தர வயதுப்பெண்ணை

கவனிக்காமல் நகர முடியாது.

அவளைக் கவனிக்காமல் நகர்வது

அவளது கையில் பிச்சையெடுப்பதற்காக

வாடகைக்கு விடப்பட்ட குழந்தையைக்

கவனிக்காமல் நகர்வதைப் போன்றது.

அந்தக் குழந்தையைக் கவனிக்காமல் நகர்வது

தாய்மையின் ஈனத்தைக் கவனிக்காமல்

நகர்வதைப் போன்றது.

அதையும் கவனிக்காமல் நகர்வது

அவர்களை போதைக்காட்படுத்திப் பிழைக்கும்

சமூக விரோதிகளைக் கவனிக்காமல்

நகர்வதைப் போன்றது.

சமூக விரோதிகளைக் கவனிக்காமல் நகர்வது

சமூகத்தை கவனிக்காமல் நகர்வதைப் போன்றது

சமூகத்தை கவனிக்காமல் நகர்வது

உன்னை நீயே கவனிக்காமல் நகர்வதைப் போன்றது'

- 'தனிமையில் விளையாடும் பொம்மை'

விதை நூலில் கவிஞர் பழநிபாரதி"

அந்த திருமகள் முதியோர் இல்லத்தின் முன் ஒரு போலீஸ் ஜீப் வந்து நிற்பது என்பதே ஒரு அதிசயமான காட்சி என்றதான் கூற வேண்டும். ஜீப்பில் இருந்து சப்இன்ஸ்பெக்டர் பால்ராஜ் என்பவருடன் இரண்டு கான்ஸ்டபிள்களும் இறங்கினர்.

சப்இன்ஸ்பெக்டருக்கு நாற்பது வயது இருக்கலாம். கான்ஸ்டபிள்கள் அவரைவிடக் கூடுதல் வயதோடும் கொஞ்சம் தொந்தி; கொஞ்சம் சொட்டை; கொஞ்சம் கறுப்பு நிறம் என்று ஒரு தினுசாக இருந்தனர்.

அவர்களைப் பார்த்த மாத்திரத்தில் வாட்ச்மேன் குருசாமியிடம் ஒரு இனம்புரியாத பதட்டம். அவன் பதட்டப்படுவதை பால்ராஜும் உணர்நதார்.

"உள்ள யாருய்யா இருக்காங்க?" அவரிடம் விசாரிப்பு.

"நீங்க யாரைப் பார்க்கணுங்க...?"

"இந்த முதியோர் இல்லத்தோட டைரக்டர் யாருய்யா?"

"டைரக்டரா, அப்படியாரும் இல்லிங்களே..."

"என்ன யாரும் இல்லை. இந்த முதியோர் இல்லம் யாரும் நடத்தாம தானாவே நடக்குதா?"

"அப்படி இல்லைங்க... பெரியவர் இருக்காருங்க."

"யார் அந்தப் பெரியவர்? அவருக்கு பேர் கிடையாதா?"

"இருங்க போய் கூட்டிக்கிட்டு வரேன்..."

"ஏன் நாங்க உள்ள வரக்கூடாதா?" சப்இன்ஸ்பெக்டர் பால்ராஜின் அணுகுமுறையே அதகளமாக இருந்தது. குருமூர்த்தி உள்ளே செல்லச்செல்ல அவனை அவரும் மற்ற கான்ஸ்டபிள்களும் பின்தொடர்ந்தனர். உள்ளே செல்லச் செல்லவே பஜனை சப்தம் காதில் விழுந்தது. கான்ஸ்பிள்கள் இருவரும் சங்கடமான பாவனைகளோடு

ஒருவர் முகத்தை ஒருவர் பார்ததுக்கொண்டனர்.

பஜனையில் யாழினி பாடிக் கொண்டிருந்தாள். கண்களை மூடி உச்சஸ்தாயியில் அவள் இருந்த சமயம் சப்இன்ஸ்பெக்டர் வந்து நிற்பதை ரங்காச்சாரி கவனித்தார். பஜனை நடக்கும் இடம் புனிதமான இடம். அங்கே ஷூ கால்களுடன் அவர்கள் நிற்கவும் அவருக்கும் நெஞ்சப் பகுதியில் நர நரவென்று ஆயிற்று. உச்சஸ்தாயியில் இருந்து மெல்ல கீழிறங்கத் தொடங்கியிருந்த யாழினியும் அவர்களைப் பார்த்து பாடுவதை அப்படியே நிறுத்தினாள். பஜனையில் கலந்து கொண்டவர்களும் திரும்பிப் பார்த்து அதிர்ந்து போயினர்.

ரங்காச்சாரி எழுந்து பால்ராஜை நெருங்கினார்.

"நீங்கதான் இந்த முதியோர் இல்ல டைரக்டரா?"

"டைரக்டர் இல்ல... ஃபவுண்டர்! அதாவது இதை ஸ்தாச்சு நடத்திண்டு வரேன். எதுக்குக் கேக்கறேள்?"

"உங்கபேர்?"

"ரங்காச்சாரி..."

"ஐ.சி. அப்ப முதியோர் இல்லம் நடத்தி காசு பாக்கறது உங்க தொழில்னு சொல்லுங்க..."

"சாரி நீங்க என்ன சொல்றீங்க... இப்ப நீங்க இங்க எதுக்கு வந்திருக்கீங்கன்னு தெரிஞ்சுக்கலாமா?"

"இங்க எவ்வளவு பேர் இருக்காங்க. உங்க தினசரி நடைமுறை என்னன்னு எல்லாம் எனக்குத் தெரிஞ்சாகணும்."

"இதை எல்லாம் நீங்க எதுக்குக் கேக்கறேள்?"

"இந்த ஏரியாவோட சட்டம் ஒழுங்குக்கு நான் தான் பொறுப்பு தெரியும்தானே?"

"உங்க சட்டம் ஒழுங்குக்கும் இந்த முதியோர் இல்லத்துக்கும் என்ன சம்பந்தம்?"

"விளக்கமாக சொன்னாதான் உங்களுக்குப் புரியுமோ?"

"சுருக்கமா சொன்னாலே போதும். நீங்க எதுக்கு இப்படி என்கொயரி பண்றேள்னே தெரியலையே...?"

"இப்ப மதுரைல தீவிரவாதிகளோட நடமாட்டம் இருக்கறதா உளவுத்துறை கிட்ட இருந்து தகவல். அந்தத் தீவிரவாதிகள்ல யாராவது இங்க உங்க முதியோர் விடுதில ருக்கலாம் இல்லையா?"

பால்ராஜ், அப்படிக் கேட்ட மறுவினாடியே பகீர் என்றானது ரங்காச்சாரிக்கு.

"சார் திஸ் ஈஸ் டு மச்...! நான் இங்க பாதுகாப்பாகவும் ஆதரவாகவும் தான் இந்த இல்லத்தை நடத்தறேன். நீங்க கொச்சைப்படுத்திகேட்ட மாதிரி நான் இதை ஒண்ணும் ஒரு பிஸினஸா நினைச்சல்லாம் செய்யலை. என் சொத்து பத்தை எல்லாம் போட்டு ஒரு ஆத்மதிருப்திக்கு இதை நாள் நடத்தறேன்."

"அப்படின்னு நீங்க சொல்லலாம். ஆனா எதையும் முழுமையா அலசிப் பாக்காம நாங்க ஒரு முடிவுக்கு வர முடியாது. உங்க முதியோர் இல்லத்தை நீங்க சுத்திக் காட்றீங்களா இல்லை நானே போய்ப் பாத்துக்கட்டுமா?"

"நான் காட்றேன் சார். இங்க நீங்க நினைக்கற மாதிரி தப்பானவா யாரும் கிடையாது. யாருக்கும் பாரமில்லா அமைதியா தங்களுடைய முதுமையை கழிக்க நினைக்கற வங்க மட்டும்தான் இங்க இருக்காங்க."

"அதை நீங்க சொல்லாதீங்க. நாங்க சொல்றோம்..." என்றபடியே அவர் பார்வை யாழினிமேல் சென்றது. யாழினி பளிச்சென்று குத்து விளக்கு போல் கண்ணில் படவும் ஒரு வினாடி உடம்பில் ஒரு துடிப்பு.

"யார் இந்தப் பொண்ணு?"

"இவபேர் யாழினி என் செகரட்டரி மாதிரி..."

"அது என்ன மாதிரி?"

"அது அது... இவளும் இந்த இல்லத்துல தொட்டில் குழந்தையா இருந்து வளர்ந்தவ. இப்ப ஒரு செகரட்டரி இருந்தா என்னவெல்லாம் செய்வாளோ அதை எல்லாம் செய்யறா, அதான் அப்படி சொன்னேன்."

"ரங்காச்சாரி மென்று விழுங்கியபடி கூறிட பால்ராஜ் பார்வை யாழினியை கண்களாலேயே விழுங்குவது போல பார்த்தது. யாழினி புடவை தலைப்பை இழுத்து போர்த்திக் கொண்டாள்."

"ஆமா இப்படி வயசுப் பிள்ளைகளைகூட வெச்சுகிட்டு எப்படி இதை முதியோர் இல்லம்னு சொல்றீங்க?" பால்ராஜின் அடுத்த கேள்வி தலையில் சம்மட்டியை அடித்தது போல் இருந்தது.

"சார் நீங்க வந்ததில் இருந்தே தப்பா பேசறீங்க? யாழினியை நான் செகரட்டரின்னு சொன்னது தப்பு. அவ என் பொண்ணு. போறுமா?" ரங்காச்சாரிக்கும் கோபம் வந்தது.

"நீங்க நான் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாம வேற ஏதோ

சொல்றீங்க"

"இது முதியோர் இல்லம்தான். யாழினியை தவிர இங்க வயசுப் பொண்ணுன்னு யாருமே சிடையாது அதை தயவு செய்து புருஞ்சுக்குங்க..."

"இந்த ஒரு பொண்ணே கூட போதுமே. நியாயமா நீங்க இவங்கள அரசாங்க பெண்கள் விடுதியில இல்ல விட்ருக்கணும்?"

"சப்இன்ஸ்பெக்டர் சார்... நீங்க எதுக்கு இப்படி எல்லாம் பேசறேள்? முதல்ல தீவிரவாதி யாராவது இருக்காங்களா பார்க்கணும்னு சொன்னீங்க இப்ப யாழினி இங்க எப்படி இருக்கலாம்னு கேக்கறீங்க. உங்களுக்கு இப்ப என்ன வேணும். ஏன் இப்படி எல்லாம் பேசறீங்க?"

"ஒரு போலீஸ் ஆஃபீஸரா நான் என் கடமையை செய்து கிட்டு இருக்கேன். சட்டப்படி இந்தப் பொண்ணு இங்க இருக்கக்கூடாது. உங்களுக்கு ஒரு வாரம் டைம் தரேன். இந்தப் பொண்ணை பெண்கள் காப்பகத்துல கொண்டு போய் ஒப்படைச்சுடுங்க. அங்க மெடிக்கல் செக் அப்பெல்லாம் உண்டு. அதுல இவங்க விர்ஜின்னு புரூஃப் ஆகணும். இல்லை நீங்க இவள வெச்சு தப்பா நடந்துருக்கறதா நான் நடவடிக்கை எடுக்க முடியும். மைண்ட் இட்."

சப்இன்ஸ்பெக்டர் பால்ராஜின் பேச்சு அனலை வாரிக் கொட்டியது. கான்ஸ்டபிள்களிடம் இப்போது தனிப்பட்ட முணுமுணுப்பு.

"இவன் நிச்சயம் தண்ணி லாரில அடிபட்டு தான் சாகப்போறான்."

"ஹும்... நம்ம தலையெழுத்து இப்படி ஒரு காட்டான் நமக்கு மேல." என்று அவர்கள் பேசிக்கொள்ள பால்ராஜ வேகமாக திரும்பி நடக்கத் தொடங்கினார். ரங்காச்சாரிக்கு அவர் அப்படி பேசியது பொறுக்கவில்லை. கோபமும் வந்தது.

"ஒரு நிமிஷம் சார்..." என்று புறப்பட்டவரை தடுத்தார். அவரும் நின்று திரும்பினார்.

"நீங்க இப்ப பேசின எதுவுமே கொஞ்சமும் சரியில்லை நான் இந்த இல்லத்தை ஒரு கோயிலை விட புனிதமா கருதி நடத்திகிட்டு வரேன். இங்க தங்கியிருக்கறவங்கள இப்ப கூப்பிடறேன். கேக்கறீங்களா நான் எப்படி இந்த இல்லத்தை நடத்தறேன்னு...?"

"என்ன... வேலிக்கு ஓணான் சாட்சியா?"

இங்க உங்க அரவணைப்புல இருக்கறவங்க உங்களவிட்டுக் கொடுத்துப் பேசுவாங்களா? என்ன பேச்சு இது...

மிஸ்டர் ரங்காச்சாரி... எனக்கு இங்க இருக்கறவங்க அபிப்ராயம் தேவையில்லை. நான் என்ன சொன்னேனோ அதைச் செய்யுங்க முதல்ல... அப்புறம் நீங்க அரிச்சந்திரனா இல்ல மகாத்மாகாந்தியான்னு முடிவு பண்ணலாம்."

"சரி இங்க இருக்கறவங்க வேண்டாம். வெளிய யார் வந்து சொன்னா கேப்பீங்க"

"உங்களுக்காக என்ன எம்.எல்.ஏ., எம்.பி. யா வருவாங்க நானும் அதைக் கேட்டு வாயை மூடிக்க?"

"வருவாங்க சார். வருவாங்க... தொகுதி எம்.எல்.ஏ தண்டபாணியை நான் சொல்லச் சொல்லட்டுமா?"

"என்னது எம்.எல்.ஏ. உங்களுக்காக பேசுவாரா?"

"பேசறது மட்டுமில்லை... இந்த முதியோர் இல்லம் இன்னும் பெருசா நடக்க புறம்போக்கு இடத்தில் எங்களுக்கு இடமே ஒதுக்கச் சொல்றேன்னு சொல்லியிருக்கார்."

"அப்படியா?"

"உங்களுக்கு சந்தேகமா இருந்தா போன் பண்ணி கேட்டுப்பாருங்க..."

"ரியலி..."

"நான் வேணா இப்பவே போன் பண்ணட்டுமா?"

"அப்ப ஒண்ணு பண்ணுங்க நான் இப்ப புறப்படறேன். நீங்க அவர்கிட்ட இந்த முதியோர் இல்லம் ஒரு டிசிப்ளினான இல்லம்னு ஒரு லெட்டர் மட்டும் எழுதி வாங்கிட்டு வந்து கொடுத்துடுங்க. அதுபோதும் எனக்கு."

"அப்படின்னா அதிக பட்சம் 24 மணி நேரத்துல அந்த லெட்டர் உங்க ஸ்டேஷனுக்கு வரும். நீங்க போகலாம்."

ரங்காச்சாரி ஒரு புதிய தெம்ப்போடு பேசவும் பால்ராஜும் சிரித்தபடியே சென்று ஜீப்பில் ஏறினார். கான்ஸ்டபிள்களும் தொடர்ந்து சென்று ஏறிக் கொண்டனர்.

பால்ராஜ் ஜீப் புறப்பட்டது. செல்போனில் எம்.எல்.ஏ. தண்டபாணிக்கே போன் செய்தார்.

"குட்மார்னிங் சார். நான் பால்ராஜ் பேசறேன்"

"என்னவே... நான் சொன்ன விஷயம் என்னாச்சு?"

"அதுக்கு தான் கூப்பிட்டேன். இப்ப நான் அந்த முதியோர்

இல்லத்துக்குத்தான் போய்ட்டு வரேன்."

"என்ன சொல்றாரு ஐய்யரு?"

"நான் போட்டபோடுல ஆடிப்போயிட்டான் மனுஷன். ஒரு அனாதை புள்ளைய அதுலயும் பொம்பள புள்ளைய நீ எப்படிய்யா வெச்சுக்கிட்டிருக்கலாம். போய் முதல்ல மகளிர் காப்பகத்துல கொண்டு போய் விடுன்னேன். மனுஷன் வெலவெலத்துட்டான்."

"அப்பால?"

"என்ன அப்பால உங்ககிட்ட காண்டக்ட் சர்டிஃபிகேட் கேட்டு வருவான். கேரம் போர்டுல காய்னை கரெக்டா பாக்கெட் பண்ற மாதிரி பண்ணியிருக்கேன். வருவான் பாருங்க..."

"எலேய் நான் இப்ப கொடைக்கானல்ல இருக்கேன்?"

"அதனால என்ன? நேர்ல. அங்கேயே வரச் சொல்லுங்க."

"இங்க அந்த கெழட்டுப்பய வந்து என்ன புண்ணியம்? குளிர்ல நடுங்கவா?"

"எல்லாத்தையும் என் கிட்டையே கேப்பீங்களாக்கும். குளிர்க்கு யார் வந்தா நல்லா இருக்குமோ அவளையும் கூட்டிக்கிட்டு வந்து பாக்கச் சொல்லுங்க..."

"நீ அப்படி வர்றியாக்கும்?"

"வேணும்னா சொல்லுங்க. நானும் வர்றேன். நானும் கம்பெனி கொடுக்கேன்."

"அதுவும் சரிதான். சரிவுடு அவன் போன் பண்ணட்டும். நான் பாத்துக்கறேன்."

"அப்படியே என் ப்ரமோஷன் விஷயத்தையும் மறந்துடாதீங்க."

"காரியம் பழமா முடியட்டும். என் பீரியட் முடியறதுக்குள்ள உன்னை ஏ.எஸ்.பி. லெவலுக்கு கொண்டு போறேனா இல்லையா பார்."

"சந்தோஷம். வெச்சுட்றேன்"

சப்இன்ஸ்பெக்டர் பால்ராஜ் போனை கட் செய்ய கான்ஸ்டபிள்கள் இருவரும் தலைகுனிந்தபடி இருந்தனர்.

கொடைக்கானல் ஹோட்டல் கிரீன் பார்க்! அறை எண் 306. தட்டப்படவும் திறந்தான் ஸ்ரீகணேஷ். வெளியே ஒரு பாலிதீன் பையுடன் நின்று கொண்டிருந்தாள் ஜான்ஸி ராணி.

"வெளிய கார்டன்ல வெயிட் பண்ணு... வரேன்" என்றபடி கதவை டக்கென்று மூடினான் ஸ்ரீகணேஷ். ஜான்சி ராணி என்கிற அந்த கொடைக்கானல் லேடி கேடிக்குக் கொஞ்சம் சுருக்கென்றது.

முகத்தை சுழித்தபடியே இந்த பார்ட்டியை மடக்கறது கொஞ்சம் கஷ்டம் தான்... என்று முணுமுணுத்துக் கொண்டே நடந்தாள் ஜான்சிராணி. எதிரில் ஹோட்டலின் பேரர்களில் ஒருவன்.

"என்னா கேடி... உன்னை ரிசப்ஷன்ல உள்ள எப்படி விட்டாங்க?" என்றான்.

"மூடிக்கிட்டு போய் வேலைய பாருடா. நான் தான் கஸ்டமரை கூட்டிகிட்டு வந்து ரூம் புக் பண்ணவ. என்னாண்டையேவா?" என்று பதிலுக்கு சிலுப்பிக் கொண்டாள் ஜான்சி.

"ஓ.. நீ இப்ப இதுல வேற இறங்கிட்டயா?"

"அதிகம் பேசறே நீ... இப்ப சொல்றேன் கேட்டுக்கோ. ஒரு நாள் நான் இந்த ஹோட்டலையே வாங்குவேன். அப்ப தெரியும் நான் யாருன்னு."

ஜான்சிராணியின் பதில் அவனுக்கு மிகையாகத்தான் தோன்றியது. ஆனால், ஜான்சியோ 'இந்த சான்ஸை விட மாட்டேன்' என்று தனக்குள் கூறிக்கொண்டாள்.

# 9

"ஆதிரைத்திருநாள் ஒன்றில் சங்கரன்
ஆலயத்து ஒரு மண்டபம் தன்னில் யான்
சோதி மானோமு தன்னந்தனியாய்ச்
சொற்கள் ஆடியிருப்ப, மற்றாங்கவள்
பாதி பேசி மறைத்துப்பின் தோன்றித் தன்
பங்கயக் கையில் கொணர்ந்தே. 'ஒரு
சேதி! நெற்றியில் பொட்டு வைப்பேன் என்றனள்;
திலகமிட்டனள் செய்கை அழிந்தனன்!"

-மகாகவி பாரதியார்

ஹோட்டலுக்கு வெளியே தோட்டம் வெகு அழகாக இருந்தது. மெத்தென்று மெத்மெத்தென்று புல்வெளி!எல்லா வண்ணங்களிலும் பூக்கள் பூத்திருக்கும் ஓரம் சாரம்! அடர்வாக சாம்பிராணிப் புகை போட்டது போல நிலவிக் கொண்டிருக்கும் மேகக் கூட்டம்... ஆனால் இதில் எதிலும் ஜான்சிக்கு ரசனை செல்லவில்லை.

உள்ளூர் கோயில் க்ஷேத்திரமாகவே இருந்தாலும் அங்கே

வசிப்பவர்களுக்கு அது பல கோயில்களில் அதுவும் ஒன்று என்பதுபோல் தான் தெரியும் என்பார்கள். ஜான்சிக்கும் கொடைக்கானல் மெல் பெரிய ஈர்ப்பு இல்லை. ஒரு சேனல் ரிப்போர்ட்டர் ஒரு நிகழ்ச்சிக்காக கொடைக்கானலை சுற்றித் திரிவோர்களிடம் பேட்டி கண்டபோது ஜான்சி முன்னாலும் மைக் நீண்டது.

"இந்த தடவை சீசன் எப்படி இருக்கு?" என்று ரிப் பேர்ட்டர் கேட்க, ஜான்சி புலம்பத் தொடங்கி விட்டாள்.

"என்ன ஊருங்க இது? நல்லா தலைல தண்ணி ஊத்தி குளிக்க முடியல. எப்ப பார் குளிரு. எங்க பார் குளிரு எதைத் தொட்டாலும் சிலுசிலுன்னே இருந்தா என்ன பண்ண?

உடம்பு நடுங்கி நடுங்கி அதனாலேயே வலிக்குதுப்பா" என்றாள். முற்றிலும் மாறுபட்ட பதில். ஜான்சியை ரிப்போர்ட்டர் சற்று அதிர்வாகப் பார்த்தார். பின் "அப்ப இந்த ஊர் உங்களுக்கு பிடிக்கலையா?" என்றும் கேட்டார்.

"சுத்தமா பிடிக்கலை... ஐப்பசி கார்த்திகை மார்கழி மாசத்துல எல்லாம் இந்த ஊர்க் காரங்களே வெளிய வர மாட்டாங்க. எனக்கும் பொழப்பு போயிடும். மந்தமா இருட்டுக்குள்ள படுத்தே இருக்கணும் கொடுமைங்க!" என்னும் அவளின் பதில் அவருக்கு மிக புதிது அப்போது அருகில் சோளக்கதிர் சுட்டு வந்து விற்கும் ஜோசப் என்பவன் "நாயி.. உனக்கு எல்லாம் மெட்ராஸ்ல சைதாப்பேட்டை கூவம் ஆத்தோரமா கொண்டு போய் உடணும். அப்ப தெரியும் இந்த கொடைக்கானல் அருமை என்று முணங்கியிருந்தான். ஜான்சி அந்த மலையை விட்டு கீழே இறங்கியதே இல்லை என்பது தான் அதற்குக் காரணம்.

யார் இருக்கிறார்கள் என்று கீழிறங்க?

ஹோட்டல் கார்டனில் ஶ்ரீ கணேஷிற்காக தவித்துக் கொண்டே க்ளைமேட்டை நொந்தபடி அவள் நின்றபடி இருக்க கணேஷும் வந்தான். டைட் ஜீன்ஸ், ஜெர்கின்ஸ், கோட், தலையில் மங்கி குல்லாய், கூலிங்கிளாஸ் என்று ஒரு சினிமா ஹீரோ போலவே அவள் கண்களுக்கும் தோன்றினான்.

கார்டனில் நாற்காலிகள் கிடந்தன. அதில் ஒன்றில் அமர்ந்து கொண்டான். அவளையும் எதிரில் அமரச் சொன்னான்.

"உட்காரு."

"இல்லிங்க... ஆங், ஹோட்டல் நல்லாருக்கா?"

"உம்."

"கொடைக்கானல்லயே இதுதான் சூப்பர் ஹோட்டல் இங்க இடம் கிடைக்கறது ரொம்ப கஷ்டம். இப்பகூட வேற ஒருத்தர் புக் பண்ண ரூமைத்தான் உங்களுக்கு தந்திருக்காங்க. நீங்க மட்டும் தனியா வந்துருந்தா இல்லன்னு சொல்லியிருப்பாங்க."

"அப்படியா?" அவன் திருப்பிக்கேட்ட விதத்தில் ஒரு சின்ன நக்கல்.

"அய்ய, நான் ஏங்க பொய் சொல்றேன். நம்பாம அப்படியாங்கிறீங்களே?"

"அது சரி, நான் உங்கிட்ட கொஞ்சம் மனம் விட்டு பேசணும். பேசலாமா?"

அவன் தயாரானான். அவளுக்கோ அவன் மனம் விட்டு என்று சொன்ன வார்த்தை கொஞ்சம் நெருடியது. ஜான்சியிடம் இப்படி இதற்கு முன் பலபேர் பேசியிருக்கிறார்கள். 'நீ அழகா இருக்கே, சென்னைக்கு வந்தே பெரிய சினிமா நட்சத்திரமாயிடுவே' என்றும் பிட் போட்டு அவளை அனுபவிக்க முயன்றிருக்கிறார்கள். இவனும் அந்த ரகமோ என்று ஒரு வினாடி தோன்றியது. அது முகத்திலும் ஒரு கேள்விக்குறியாக பரவியது.

"என்ன எதுவும் பேசாம நிக்கறே?"

"இல்ல என்கிட்ட மனம் விட்டு பேச என்ன இருக்குது? அதன் யோசிச்சேன்"

"அதை நான் பேசி முடிச்ச பிறகு சொல்லு."

"சரி பேசுங்க..."

"நீ முதல்ல உட்காரு. நீ நின்னா எனக்கு கால் வலிக்கும்"

"அது இல்ல. நான் உங்க எதிர்ல உக்காந்தா இங்க இருக்கற அவ்வளவு பேரும் என்னை ஒரு மாதிரி பார்ப்பாங்க."

"ஒரு மாதிரின்னா?"

ஒரு மாதிரின்னா ஒரு மாதிரிதான்.

"அப்படின்னா இங்க உனக்கு நல்லபேர் இல்லையா?"

ஸ்ரீகணேஷ் கையாட்டி கேட்ட விதமே அவளை ஒரு உலுக்கு உலுக்கி விட்டது. விசுக்கென்று எதிரில் அமர்ந்தாள் அவனையும் மலங்க மலங்க பார்த்தாள். அவன் அதை ரசித்தான். பின்,

"உன் பேர் என்ன சொன்னே?"

"ஜான்சி ராணி."

"உனக்கு யாரும் இல்லே நீ ஒரு அனாதைன்னு சொன்னேல்ல?"

"ஆமாம்."

"எப்ப இருந்து நீ அனாதை?"

"எப்ப இருந்துன்னா, எனக்கு தெரியல."

"அப்ப உன் அப்பா அம்மா?"

"எல்லாம் எனக்கு மாதா தான்."

"யூ மீன் மதர் மேரி?"

"எக்ஸாக்ட்லி"

"ஓ, நீ இங்கிலீஷ்லாம் பேசுவியா?"

"வெள்ளைக்காரங்க நிறைய பேர் வருவாங்க. அப்ப அவங்க கிட்டையும் வியாபாரம் செய்யணுமில்ல?"

"இன்ட்ரஸ்ட்டிங், ஆமா எவ்வளவு படிச்சிருக்கே?"

"பத்தாம் வகுப்பு ஃபெயில்."

"வாவ்! பத்தாவது வரை படிச்சிருக்கியா?"

"ஃபாதர் சூசை காலேஜ்ல கூட படிக்கவைக்க தயா இருக்கார். ஆனா எனக்கு படிப்பு பிடிக்கலை."

"அது யார் ஃபாதர் சூசை?"

"பாதிரியாருங்க! இங்க மைக்கேல் பார்க்குல ஒரு மாதா கோவில் இருக்கு. அதுக்கு அவர்தான் ஃபாதர்."

"ஓ.. அவர்தான் உன்னை வளர்த்து ஆளாக்கினவரா?"

"ஆமா, ஆனா இப்ப அவர் இல்லை. மாதாகிட்ட போயிட்டார்."

"அப்ப கோவிலை யார் பாத்துக்கறா?"

"யாருமில்லை. வாட்ச்மேன் ராயப்பன் தான் பாத்துக்கறான். புது பாதிரியாரை வேளாங்கண்ணியில இருந்து பெரிய ஃபாதர் அனுப்பித் தரணும்."

"கோவிலுக்கு நல்ல கூட்டம் வருமா?"

"வந்து பாருங்க தெரியும். எங்க மதர் ரொம்ப சக்தி வாய்ந்தவங்க."

"சரி உன் வயசு என்ன?"

"யாருக்கு தெரியும்?"

"வயசு கூடவா தெரியாது?"

"பிறந்த தேதியே தெரியாதப்ப, வயசு எப்படி தெரியும்?"

"சரி நீ எங்க பொறந்தேன்னாவது தெரியுமா?"

"இந்த மலைலதான் அது எனக்கு நல்லா தெரியும்?"

"அப்ப அப்பா அம்மாவைத் தெரிஞ்சிருக்கணுமே?"

"தெரிஞ்சா நான் ஏன் சார் இப்படி கேரட்டு குச்சிக் கிழங்கெல்லாம் விக்கறேன்? அவங்கள போய் பார்த்து இரண்டுல ஒண்ணு பாத்துருக்க மாட்டேன்?"

"அப்ப உனக்கு உன்னை பத்தி என்னதான் தெரியும்?"

"யாரோ தப்பு பண்ணி என்னை பெத்து அந்த ராயப்பன் கைல கொடுத்து அனாதை ஆஸ்ரமத்துல போடச்சொல்லிட்டு போயிட்டாங்க. ராயப்பனுக்கு என்னை ஆஸ்ரமத்துல கொண்டு சேர்க்க மனசு இல்லை. தானே வளர்த்தான். ஃபாதரும் உதவி செய்தார்!"

"பாவம் நீ... உன் கதையைக் கேட்டா எனக்கு ரொம்ப பரிதாபமா இருக்கு. பை த பை உன்னோட வாட்ச்மேன் ராயப்பனை நான் பார்க்கலாமா?"

"அவனை எதுக்கு பாக்கணும்?"

"காரணம் இருக்கு."

"அதை பாக்கறத விட சும்மா இருந்துடலாம்."

"ஏன் அப்படி?"

"எப்பவும் ஐயா தண்ணியிலயே இருப்பான். கேட்ட குளிருக்கு குடிச்சாதான் இதமா இருக்குன்னுவான்."

"இட்ஸ் ஓ. கே. ஹில் ஸ்டேஷன்ல ட்ரிங்க்ஸ் சாப்பிட்றது சகஜம் தான்."

"சார் சாப்பிட்றது வேற. அதுலயே கிடக்கறது வேற. இதுல ராயப்பன் இரண்டாவது ரகம்."

"அதையும் தான் பாக்கறேனே?"

"நீங்க பார்த்து என்னாகணும்?"

"உன்னை பத்தி நான் இன்னும் கொஞ்சம் தெரிஞ்சிக்க விரும்பறேன்."

"தெரிஞ்சு?"

"அதை நான் போகப் போக சொல்றேன்?"

"அப்ப நீங்க ஒரு ஏஜென்ட்டுன்னு சொல்லுங்க."

"ஏஜென்ட்டா?"

"ஆமாம்... ஏஜென்ட்டுதான்! என்னமாதிரி அப்பா அம்மா இல்லாத அனாதைகளை விலைக்கு வாங்கி துபாய், சவூதி அப்புறம் அமெரிக்கா, கனடான்னு மேல் நாடுகளுக்கு விக்கற ஏஜென்ட்டு தானே நீங்க?"

"மைகாட்... நீ தப்பா புரிஞ்சிகிட்டே நான் அப்படி எல்லாம் கிடையாது."

"போதும் சாமி போதும். பாக்க நல்லா இருக்கியே என் மனசுக்கும் ரொம்ப பிடிச்சிருக்கேன்னு கொஞ்சம் நெருங்கி வந்தா அடிப்படையையே ஆட்டப் பாக்கறியே?"

ஜான்சி பேசியபடியே எழுந்து கொண்டாள். முகத்தில் பலமான மாற்றம்.

"ஜான்சி உட்கார். நீ தப்பா புரிஞ்சுகிட்டு பேசறே. உண்மைல நான் யார் எதுக்கு வந்துருக்கேன்னு சொல்றேன், தெரியும் உனக்கு."

"ஐயோ சாமி. ஆளை விடுங்க! நான் நாலு காசு சம்பாதிக்க கொஞ்சம் பொய் சொல்றவதான். ஆனா ரொம்ப சுத்தமானவ. என்னை யாரும் எதுவும் செய்ய முடியாது. தெரிஞ்சிக்குங்க.." ஜான்சி அவன் பேச்சைக் கேட்க விரும்பாதவளாக விறுவிறுவென்று கிளம்பிவிட்டாள்.

ஸ்ரீகணேஷ் தான் கொஞ்சம் அவசரப்பட்டு முன்னதாகவே சில விஷயங்களைப் பேசி விட்டோமோ என்று கூடத் தோன்றியது! இருந்தும் அவள் மைக்கேல் பார்க் என்று சொன்ன அட்ரசும் அங்கே உள்ள மாதா கோவிலும் ஞாபகத்துக்கு வந்தன!

உன்னை நான் உன் இடத்துலயே வந்து பாக்கறேன். என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

அதே ஹோட்டலின் அறை ஒன்றில் அரசியல்வாதி தண்டபாணி இருந்து குளிருக்கு ஷாலெல்லாம் போர்த்திக் கொண்டிருந்தார். எதிரில் டிவியில் ஒரு புலி மான்குட்டியை துவம்சம் செய்து கொண்டிருந்தது. எப்போதும் இப்படி நேரிடையான பதிவுகளில் மூழ்குவதுதான் அவரது விருப்பம். சிலரது மன அமைப்பு அப்படி? அப்போது போனில் அழைப்பு. மறுபுறத்தில் ரங்காச்சாரி, சிரித்தபடியே எடுத்து காதைக் கொடுத்தார்.

"அடடே...அனாதை ஆஸ்ரமத்து பெரியவரா?"

"தப்பா சொல்றேள். நான் நடத்தறது காப்பகம் அனாதை அஸ்ரமம் இல்லை."

"சரி ஏதோ ஒண்ணு. என்ன விஷயம்?"

"அதை ஏன் கேக்கறேள்" ரங்காச்சாரி நடந்ததை சொல்லி முடித்தார்.

"ஃப்பூ இவ்வளவு தானாக்கும்?

"என்னண்ணா இவ்வளவுதானான்னு சாதாரணமா சொல்லிட்டேள்"

"பின்ன, அந்த சப் இன்ஸ்பெக்டர்லாம் ஒரு ஆளாங்க?"

"உங்க பதவி முன்னால அவர் ரொம்ப சின்னவரா இருக்கலாம். ஆனா நான்லாம் சாதாரண பப்ளிக்."

"கவலைய விடுங்க. அதான் நான் இருக்கேன்ல. அனா ஒரு வயசுப் பொண்ணை நீங்க வெச்சிருக்கறதும் சட்டப்படி கொஞ்சம் சிக்கலான விஷயம் தான்."

"ஐயோ என்னண்ணா நீங்களும் தப்பா சொல்றேனே" யாழினி பிறந்த குழந்தையா இருக்கறப்ப இருந்து என் அணைப்புல வளர்ந்தவ. என் பொண்ணு மாதிரி அவ."

"மாதிரி தானே, உங்களுக்கே பொறந்தவகிடையாதே,"

"நீங்ககேக்கறத பார்த்தா எனக்கு பயமா இருக்கு?"

"பயப்படாதீங்க. நான் சிக்கலை தொட்டுக் காட்டுனேன். காலமும் இப்ப கெட்டு கிடக்குல்ல. சாமி கும்புட கோவிலுக்கே நிம்மதியா போய் வரமுடியலியே. இடுப்புல குண்டு இருக்கான்னு பரிசோதனை பண்ணி பாத்துடடுல்ல விட்றாங்க?"

"இதோ பாருங்கோ. நான் இப்ப உங்களதான் நம்பி இருக்கேன். அந்த சப்இன்ஸ்பெக்டர் இன்னொரு தடவை என் காப்பகம் பக்கம் வரக்கூடாது. என் யாழினிக்கும் எதுவும் ஆயிடக்கூடாது.

"சரி நான் இப்ப என்ன பண்ணனும். அந்த ஆள் போன் நம்பர் தாங்க. நான் இரண்டில ஒண்ணு பாக்கறேன்."

"அதெல்லாம் வேண்டாம். எங்க காப்பகம் பத்தி நீங்க நல்லவிதமா ஒரு லெட்டர் தந்தா போதும்."

"ஒண்ணு என்ன, ஒம்போது தரேன். நேர்ல வாங்க."

"இதோ இப்பவே வரேன்."

"நான் கொடைக்கானல்ல இருக்கேன்?"

"ஐயோடா, நான் இப்ப என்ன பண்ணுவேன். 24 மணி நேரத்துல உங்க கிட்ட லெட்டர் வாங்கிண்டு வந்து தரேன்னு சொல்லியிருக்கேனே,

உங்களை கொரியர் பண்ணச் சொன்னாக்கூட லேட்டாயிருமே."

"அதனால என்ன, மதுரைல இருந்து கொடைக்கானல் என்ன ஏழாயிரம் மைல் தூரத்திலயா இருக்கு, காரை எடுத்தா மூணே மணிநேரம்!"

"அதுக்கில்ல, நான் ஆஸ்துமா பேஷண்ட். ஹில் ஸ்டேஷன் ஒத்துக்காது."

"நீங்க எதுக்கு இந்த சில்லரை விஷயத்துக்காக வந்து கிட்டு. பாப்பாவை அனுப்பி வையுங்க."

"யாரு யாழினியையா?"

"பின்ன, அதைதான் எனக்கும் தெரியுமே?"

"அது இல்... வயசுப் பொண்ண அவ்வளவு தூரம் தனியா அனுப்பறது எப்படின்னு தான்..." சொல்லச் சாரி தயங்கியபோதுத, "அப்பா இப்படி கொடுங்க, நான் போறேன். எதுவும் ஆயிடாது. சார்... நானே நேர்ல வரேன் நீங்க அடரசை சொல்லுங்கோ" என்று இடையிட்டாள் யாழினி. தண்டபாணி முகத்திலும் பளிச்சென்று வெளிச்சம்.

# 10

'அந்தப் புறாக்கள் அஃறிணை
குருத்வாரா ஓரமும் கூட்டமாய்
இரை தேடலாம்...
சிலுவைகள் மீதமர்ந்தும்
சிறகுகள் கோதலாம்
தாகமா... தர்கா வாசலில்
தண்ணீர் பருகலாம்...
ஊர்வலமாய் தெரு எதுவழியும்
திரும்பிப் பறக்கலாம்...
எல்லாம் முடிந்து கோபுர உச்சியில்
கூட்டில் அடையலாம்...
தெரிந்தால் சொல்
தினை மாறும் வழி!'

-கவிஞர் நெல்லை ஜெயந்தா.

கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது போல யாழினியே நேரில் வருகிறேன் என்று கூறவும் தண்டபாணியிடம் ஒரே மகிழ்ச்சி...

"சபாஷ் சபாஷ் பாப்பா! நான் ஹோட்டல் கிரீன் பார்க்ல தான்

இருக்கேன். நீங்க இப்படித்தான் இருக்கணும். பாவம் பெரியவர். வயசான காலத்துல அவரை அலைக்கழிக்கறதும் தப்பு. நீயே வந்து கடிதத்தை வாங்கிக்கிட்டுப் போறதுதான் சரி. நீ உடனே புறப்பட்டுவா கண்ணு." என்று பொங்கி வழிந்தார்.

யாழினி போனை வைத்தாள்.

ரங்காச்சாரியையும் பார்த்தாள். அவரிடம் தயக்கம் கொடி கட்டிப் பறந்து கொண்டிருந்தது.

"என்னப்பா யோசனை. அதான் அவரும் 'நேரில் வா கடிதம் தரேன்' னு சொல்லிட்டார் இல்ல...?"

"அதுக்கில்லம்மா... உன்னை அனுப்பறது எனக்கு சரியா படலை."

"நீ ஒரு பையனா இருந்தா பரவாயில்லை. முதல்ல கிளம்புன்னு சொல்லியிருப்பேன்..."

"அப்போ நான் பையனா பொறக்காம போயிட்டேன்னு நீங்க வருத்தப்படறீங்களா? பெண்ணா பிறந்தாலே எதுக்கும் லாயக்கு இல்லேன்னு அர்த்தமா...? நீங்களாப்பா இப்படி பேசறீங்க? இது ஆண்-பெண் சரிநிகர் சமான காலம். எதையும் ஒரு பெண் எதிர்கொள்ள தயாரா இருக்கணும்னு வார்த்தைக்கு வார்தைத சொல்ற நீங்களா இப்படிச் சொல்றீங்க?"

"யாழினி. நான் சொன்ன அர்த்தமே வேறம்மா. நீ அது தெரியாம பேசாதே. சரி, புறப்படு, நானும் உன் கூட வரேன். வயசுப் பொண்ணை முன்பின் தெரியாத இடத்துக்குத தனியா அனுப்பற ஒரு தப்பை நான் செய்யத் தயாரா இல்லை."

ரங்காச்சாரியும் அவளோடு புறப்படத் தயாரானார். அது யாழினியை மிகவே பாதித்தது.

"இல்லப்பா. நீங்க என் கூட வந்து அந்த மலைக்குளிர்ல கஷ்டப்படவேண்டாம். உங்க ஆஸ்துமாவைப் பற்றி உங்களைவிட எனக்குதான் நல்லா தெரியும். நீங்க இருங்க நான் போய்ட்டு வரேன்."

"யாழினி பிடிவாதம் பிடிக்காதே, எனக்கு பதிலா சீனுவையாவது கூட்டிண்டு போ."

"எதுக்கு? ஒரு பொண்ணால தனியா எதையும் சாதிக்க முடியாதுங்கற எண்ணம்தானே என் கூட துணைக்கு ஆள் அனுப்பறேன்னு சொல்லக் காரணம்? இப்ப சொல்றேன்... நான் இனி இங்க மட்டுமல்ல எங்கேயும் தனியா தான் போவேன், வருவேன்! தனியா ஒரு பெண்ணால எல்லா

காரியங்களையும் செய்து காட்ட முடியும்னு நான் நிரூபிக்கிறேன். எம்.எல்.ஏ. தரப்போற கடிதத்தைக் கூட வர்ற வழியில் நானே போலீஸ் ஸ்டேஷன்ல கொடுத்துட்டும் வரேன்."

யாழினி ஆவேசமானாள். பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்காகி விட்டதை ரங்காச்சாரியால் புரிந்து கொள்ள முடிந்தது. ஒவ்வொருக்குள்ளும் ஒரு தன்மானம் இருக்கிறது. அதைத் தொடாமல் பேசத் தெரிந்தாலே நாம் எதிர்பார்ப்பது நடக்கும். தப்பித் தவறி தொட்டுவிட்டாலும் அந்த காரியம் கெட்டுவிடும். அப்போதைக்கு ரங்காச்சாரிக்கு அந்த எண்ணம்தான் தோன்றியது. இன்னொரு புறம் யாழினி சொல்வதிலும் தவறில்லை. நாலு இடத்திற்குத் தனியா போய் வந்தால் அல்லவா ஒரு அனுபவம் ஏற்படும். நாளை தனக்குப் பின் காப்பகத்தை நடத்தவும் அவளை விட்டால் யார் இருக்கிறார்கள்?

என்று தனக்குத்தானே கேட்டுக்கொண்டு சமாதானமானவர் வாடகை காருக்கு போன் செய்யத் தயாரானார். அதையும் தடுத்தாள்.

"ஏம்மா?"

"டாக்சின்னா போக வர மூவாயிரம் ரூபா கிட்ட ஆயிடும். அது நம்ம காப்பகத்தோட ஒரு நாள் டிபன் செலவு நான் பஸ்லே போய்ட்டு பஸ்லயே வரேன். தனியா கார்ல போக நான் என்ன கோடீஸ்வரியா?" என்று திருப்பிக் கேட்டாள். ரங்காச்சாரி அவளை பிரமிப்போடு பார்த்தார்!

சந்தானத்தின் பங்களா! பத்மநாபனின் ஆளுயர வரை படம் ஒன்றுடன் ஒருவன் ஹாலுக்குள் நுழைந்திருந்தான். அவனுக்காகவே காத்துக்கொண்டிருந்தாள் பூரணி. அவன் வரவும் வேகமாக முன் வந்து நின்றாள். அவன் அந்தப் படத்தை பேப்பர்களைச் சுற்றி எடுத்து வந்திருந்தான். அவள் வந்து நிற்கவும் அந்த பேப்பர்களை விலக்கி விட்டான். உள்ளே பத்மநாபன் ஸ்கொயர் ஸ்பெக்ஸ் ஒன்றை அணிந்தவராக கம்பீரப் பார்வை பார்த்துக் கொண்டிருந்தார்.

ஓவியர் அச்சு அசலாக ஒரு புகைப்படத்தைப் பார்த்து வரைந்திருந்தார்.

"வவ் எக்ஸ்லண்ட்!" என்று வாய் விட்டு பாராட்டினாள் பூரணி. அப்படியே மோகனா, சந்தானத்தைப் பார்த்தவள், "எப்படி இருக்கு?" என்று கேட்டாள். சந்தானம் வெறித்தார். மோகனா மட்டும் "நல்லா இருக்கும்மா" என்றாள். மோகனா சொன்ன விதத்தில் கொஞ்சம் கூட உயிரே இல்லை.

"அமா இப்ப எதுக்கும்மா இவ்வளவு பெரிய படம்? சந்தானம் கேட்டார்."

"இங்க ஹால்ல மாட்டத்தான்... தினேஷ்தான் இப்படி வரைய ஏற்பாடு செய்தான்."

"அப்ப ஹால்ல இந்தப் படத்தை மாட்டப்போறிறயா?"

"ஆமாம்... நீங்கதான் உங்க கையால முதல் மாலை போட்டு தொடங்கப்போறீங்க."

பூரணி ஆசையாக் சொன்னாள். ஆனால், சந்தானம் முகம் அதைக் கேட்டு இறுகத் தொடங்கியது. மோகனா அதை உணர்ந்தவளாக "பூரணி... ஹால்ல வேண்டாம் நீ உன் அறைல மாட்டிக்கோ. இது நாலு பேர் வந்த போகற இடம். இங்க நான் என் அப்பா அருணாசலத்தோட படத்தையே மாட்டலை... ஏன்னா இந்த மாதிரி போட்டோ மாட்றது அதுக்கு மாலை போடறதெல்லாம் ரொம்ப பழைய சம்பிர தாயங்கள். நாம இப்ப இன்டர்நெட் யுகத்துல இருக்கோம்." என்றாள். அதற்கு மேல் நின்றால் பேச்சு வளரும் என்பது போல அங்கிருந்து விலகத் தொடங்கினாள். எல்லாவற்றையும் கவனித்தபடி இருந்த தினேஷ் பூரணி அருகில் வந்தான். அந்தப் படத்தை கொண்டு வந்தவனைப் பார்த்து "நீ புறப்படு. உன் பேமென்ட்டை ஆஃபீஸ்ல போய் வாங்கிக்கோ." என்றவன், பூரணியை வெறித்துவிட்டு அந்தப் படத்தையும் எடுத்துக் கொண்டு தனது அறை நோக்கி நடந்தான். அவனை பின் தொடர்ந்தாள் பூரணி. அறையில் ஒரு சரியான இடம் பார்த்து படத்தை சற்று சாய்த்து வைத்தான் தினேஷ். பின் அந்தப் படத்தை பாரத்தபடியே பூரணி காதில் விழும்படியாக பேசத் தொடங்கினான்.

"தாத்தா... நீங்க செத்துப்போகவும் இங்க உங்க மேல இருந்த மதிப்பு மரியாதைன்னு அவ்வளவும் செத்துப் போக தோடங்கியாச்சு. இந்தக் குடும் பத்துக்காக நீங்க உழைச்சதெல்லாம் வேஸ்ட்! சந்தானம் அங்கிள் இப்ப உங்க பேரை கேட்டாலே கசந்து வடியறார். ஆன்ட்டியும் மாறிட்டாங்க. தாத்தா நீங்க செத்து இன்னியோட ஒரு வாரம் ஆகுது. அதுக்குள்ளே இவ்வளவு மாற்றங்கள். எங்களை எப்ப வீட்டை விட்டு துரத்தப் போறாங்களோ தெரியல. அதுவும் கூடிய சீக்கிரத்துல நடந்துடும்னு நினைக்கறேன்" என்று முடித்தான். பூரணி அவனையே பதிலுக்கு கூர்ந்து பாரத்தாள்.

"என்ன பாக்கறே? நான் சொன்னது அதிர்ச்சியா இருக்கா உனக்கு...?"

"அதிர்ச்சியா மட்டுமில்ல தினேஷ் ஆச்சரியமாவும் இருக்கு. உன்னோட அங்கிள் எப்படி இப்படி மாறினார்?"

"அவர் இனி என் அங்கிள் இல்லை. ரொம்ப பாசத்தைப் மொழியாதே."

"அப்படியே பாசத்தோட பழகிட்டேண்டா. அதை மாத்திக்கறது கஷ்டம்."

"வேண்டாம் மம்மி... இந்த பாசத்தை அவங்க மதிக்கறதா தெரியல. அப்புறம் நீதான் ரொம்ப வருத்தப்படுவே..."

"அதான் பட ஆரம்பிச்சாச்சே. இன்னும் என்ன?"

"தாத்தா சாகும்போது ஏதோ நடந்துருக்கு ஆஸ்பத்திரியில இருந்து வந்ததுல இருந்துதான் சந்தானம் அங்கிள்கிட்ட மாற்றமே."

"இதை நீயும் இந்த ஒரு வாரத்துல பலதடவை சொல்லிட்டே. அதை இப்ப நேரடியாவும் பாத்துட்டோம்."

"இதோ பார்... நாம நமக்குள்ள திரும்பத் திரும்ப பேசிக்கறதுல எந்த பிரயோஜனமும் இல்லை. அங்கிள் கிட்ட நானே நேரடியா கேட்டுடலாம்னு இருக்கேன். என்ன சொல்றார்னும் பாக்கறேன்."

"தினேஷ் அவசரப்பட்டு கோபமா அவர்கிட்ட பேசிடாதே. இது நம்ம வீடு இல்லை. அவங்க வீட்லதான் நாம இருக்கோம். அதை மறந்துடக்கூடாது."

"என்னம்மா சொல்றே. சோத்துக்கு செத்தவங்கள இங்க எவ்வளவு அவமானம் ஏற்பட்டாலும் சகிச்சுக்கிட்டு வாழ்வோம்னு சொல்றியா?"

"பதட்டப்படாதே நீ நினைக்கற மாதிரி அப்படி எல்லாம் நடக்காது .சந்தானம் அங்கிளுக்கும் மோகனாவுக்கும் நான் மாமா பொண்ணு மட்டுமில்ல... சொந்த மகள் மாதிரி."

"மண்ணாங்கட்டி. உன்கிட்ட பேசறது வேஸ்ட். மோகனா ஆன்ட்டி கிட்டியே நான் என்ன நடந்ததுன்னு கேட்டுடறேன். அதான் ஆஸ்பத்திரியில் ஏதோ நடந்துருக்குன்னு நல்லா தெரியுதே இன்னும் என்ன?"

தினேஷ் இளரத்தக் கொதிப்போடு பேசிவிட்டு மோகனாவைத் தேடி நடக்க ஆரம்பித்தான். பூரணியும் அவனைத் தடுக்கவில்லை. அவளும் பின் தொடர்ந்தாள். மனதில் சுமப்பதற்கு கேட்டு விடுவதும் நல்லதுதானே?

மோகனா ஆழ்ந்த சிந்தனையில் இருந்தாள். அப்போது அறைவாசலுக்கு தினேஷும் பூரணியும் வந்து விட்டனர். அதே வேளையில் மோகனாவின் டச் ஸ்க்ரீன் செல் அவள் எதிரில் கிடந்து சப்தமிட்டது. கையில் எடுத்து திரையைப் பார்த்தாள். திரையில் ஸ்ரீகணேஷின்

புகைப்படம் சிரித்தது. அவனிடம் இருந்துதான் அழைப்பு. உற்சாகமாக பேசத் தொடங்கினாள்.

"ஹாய் ஶ்ரீ... எப்படி இருக்கே?"

"நல்லா இருக்கேன் ஆன்ட்டி." -ஶ்ரீ கூறவும் சந்தானமும் மோகனா எதிரில் வந்து அமர்ந்தார். அவளும் ஸ்பீக்கரை ஆன் செய்தவளாக... "ஶ்ரீ உன் அங்கிளும் இப்ப என் கூட தான் இருக்கார். நானும் இப்ப ஸ்பீக்கரை ஆன் பண்ணிட்டேன். நீ இப்ப எங்க இரண்டு பேர் கூடயும் பேசலாம்."

"ஓ தேங்க்ஸ் ஆன்ட்டி."

"அப்புறம் கொடைக்கானல் எப்படி இருக்கு. எதாவது தகவல் தெரிஞ்சதா?"

"நான் இங்க வந்து நல்லா செட்டில் ஆயிட்டேன். இந்த ஊரைப் பத்தி நல்லா தெரிஞ்ச ஒரு நபர் இருந்தா நல்லதுன்னு நினைச்சேன். அதுக்கு தகுந்த மாதிரி ஜான்சின்னு ஒரு பொண்ணு. ரொம்ப வித்தியாசமான கேரக்டர் அவ! அவளை கூட வெச்சுகிட்டுதான் நான் உங்க மகளை கண்டுபிடிக்கப் போறேன்."

"அது யாருப்பா ஜான்சி. வித்தியாசமான கேரக்டர்னு வேற சொல்றே... உனக்கு வேற ஆள் கிடைக்கலியா?"

"அப்படி இல்லை ஆன்ட்டி. இவளும் ஒரு அனாதை. இங்க இருக்கிற சர்ச்சுல ஒரு ஃபாதர் அரவணைப்புல வளர்ந்துருக்கா. கொஞ்சம் உங்க ஜாடையும் இருக்கு. ஆகையால் இவளே உங்க மகளா இருக்கவும் ஒரு வாய்ப்பு இருக்கு."

"என்ன சொல்றே ஶ்ரீ... அந்த ஜான்சிகிட்ட எங்கஜாடை இருக்கா... அவ நான் பெத்த மகளா இருக்கவும் வாய்ப்பிருக்கா?"

"ஆமாம் ஆன்ட்டி வாய்ப்பு இருக்குன்னுதான் சொன்னேன். இவளேன்னு முடிவு பண்ணலை. அதுக்கு முன்னால நிறைய விஷயங்களை க்ளியர் பண்ணிக்கவேண்டியிருக்கு. அதுக்காக ராயப்பனகற ஒரு நபரை பாக்கத்தான் புறப்பட்டுகிட்டு இருக்கேன்."

"ஶ்ரீ... நீ இவ்வளவு சீக்கிரமா எங்க மகளை நெருங்குவேன்னு நாங்க கொஞ்சம் கூட எதிர்பார்க்கலை"

"சாரி ஆன்ட்டி. நீங்க அவசரப்படாதீங்க. இந்தப் பெண்ணை நான்

தற்செயலாதான் சந்திச்சேன். இவளுக்கு கொடைக்கானலே அத்துப்படி. அதேசமயம் சாகும்போது உங்க அங்கிள் உங்ககிட்ட சொன்னபடி அந்த குழந்தை ஒரு அனாதை இல்லத்துலதான் இருக்குன்னார். ஊர், பேர்னு எதையும் சொல்லலை. ஆகையால கொடைக்கானல்ல உள்ள அனாதை இல்லங்களை கண்டுபிடிச்சு அதுல உங்க குழந்தை பிறந்த தேதியான டிசம்பர் 25 ... அதாவது கிறிஸ்துமஸ் அன்னிக்கு பர்டடிகுலரா 1989 ம் வருஷம்கறது ரொம்ப முக்கியம். அந்த வருஷம் எந்த குழந்தையாவது ஒப் படைக்கப்பட்டதா இல்லை தொட்டில்ல போடப்பட்டதான்னு விசாரிக்கப் போறேன். இந்த தகவல் ஜான்சியோட ஒத்துபோகணும். அந்த சமயம் குழந்தை பிறந்த ஊர்லையே ஒருத்தர் அதை இருக்க விடமாட்டாங்க. எங்கையாவது தூரக் கொண்டுபோய் விடத்தான் பார்ப்பாங்க. அப்படிப் பார்த்தா கொடைக்கானலுக்கு பக்கத்துல இருக்கற பெரிய நகரங்கள் திண்டுக்கல்லும் மதுரையும்தான். அந்த பக்கமா பழனியையும் கணக்குல எடுத்துக்கலாம். இதுல மதுரைக்கு நிறைய சான்ஸ் இருக்கு. அதுக்கு முன்னால கொடைக்கானலுக்குள்ளேயே முழுசா விசாரிச்சுடப் போறேன். பெண் குழந்தைன்னு தெரியும். பிறந்த தேதி, வருஷம் தெரியும் . இதுபோதும் ஆன்ட்டி. நான் எப்படியும் கண்டுடிச்சிடுவேன்."

"ரொம்ப சந்தோஷம் ஸ்ரீ. எங்க மகள் எப்படியாவது கிடைச்சிட்டா போதும். அந்த பத்மநாபன் எங்க காதல் வாழ்க்கையோட ரொம்பவே விளையாடிட்டான். அந்த ஆளை நம்பி நானும் மோசம் போயிட்டேன். நல்லவேளை சாகும் போதாவது உண்மையைச் சொன்னானே..."

சந்தானமும் வெடித்தார். ஒட்டுமொத்த அந்த பேச்சு, அறைவாசலில் நின்று கொண்டிருந்த பூரணி, தினேஷ் காதுகளில் விழுந்ததும் அவர்களிடம் ஸ்தம்பிப்பு!

# 11

"மம்மி என்கிறது வரலாறு
பாடம் பண்ணிய உடலை.
மம்மி என்கிறது குழந்தை
தன்னை பெற்றெடுத்த தாயை. பாடம்
பண்ணிக்கொண்டிருக்கிறோமா
உயிருடன் தாயை?"

- 'மனத்தடி நீர்' கவிதை தொகுப்பில் கவிஞர் தெ. வெற்றிச்செல்வன்.

ஸ்தம்பித்து நின்று விட்ட பூரணியும் தினேஷும் அதற்கு மேல் உள்ளே சென்று என்ன ஏது? என்று விசாரிக்கவில்லை. மௌனமாக அங்கிருந்து திரும்பத் தொடங்கினர். அவர்கள் இருவரும் வந்துவிட்டுத் திரும்புவதை அறைக்குள் இருந்த சந்தானமும் மோகனாவும் கூட உணரவில்லை.

பூரணியும் தினேஷும் அறைக்குள் நுழைந்த நொடி தினேஷ் கதவை தாழிட்டான். பூரணிக்கும் நெஞ்சில் சலனம்.

"மம்மி..."

"ம்"

"அங்கிள் பேச்சில பத்மநாபன் தாத்தா அவர் காதல் வாழ்க்கையோட விளையாடிட்டதா சொன்னாரே... என்ன மம்மி அது.?"

"அது ஒரு பழைய கதை..."

"ஆனா, அந்தக் கதையாலதான் இப்ப பிரச்னை..."

"உண்மைதான். உயிரோட இருந்த வரை கடவுளா இருந்த உன் தாத்தா உண்மைகள் சிலவற்றை பேசப் போய் இப்ப பெரிய எதிரியா மாறிட்டார். உண்மை தந்த பரிசைப் பார்த்தியா?"

"அது என்ன உண்மை மம்மி... உனக்குத் தெரியுமா? கொஞ்சம் விளக்கமா சொல்... நான் இந்த வீடுதான் என் உலகம்னு நினைச்சுக் கிட்டிருக்கேன். ஆனா, இங்கேயே நாம அகதிகள் போல மாறிப் போயிடுவோமோங்கற பயம் இப்ப எனக்கு வந்திருக்கு..."

"எனக்கும் தாண்டா..."

"என் கேள்விக்கு பதில் சொல்... சந்தானம் அங்கிள் தன் காதல் வாழ்க்கைன்னு ஏதோ சொன்னாரே... அது என்ன?"

"அவங்க காதலிச்சு கல்யாணம் செய்துகிட்ட வங்கன்னுதான் உனக்கும் தெரியுமே தினேஷ்..."

"அதுமட்டும் தெரிஞ்சா போதாது... அவங்களுக்கு ஒரு குழந்தை பிறந்ததா... அது தெரியுமா உனக்கு?"

"தினேஷ் அப்ப நீ பிறந்துட்டே தாய் வீட்டுக்கு வந்துருந்த நான் பேறுகாலம் முடிஞ்சு உன்னை கூட்டிக்கிட்டு டெல்லிக்குப் போயிட்டேன். ஏன்னா உன் அப்பா அப்ப டெல்லியிலதான் வேலைல

இருந்தார். அதனால இங்க என்ன நடந்ததுன்னு எனக்கு எதுவும் தெரியலடா..."

"சரி, நாம ரெண்டு பேரும் அறை வாசல்ல இருந்து கேட்டதுலருந்து என்ன புரிஞ்சிகிட்டே?"

"மோகனாவுக்கும் சந்தானம் அங்கிளுக்கும் குழந்தைப் பிறந்திருக்கு. அது செத்துப்போயிட்டதா சொல்லப்பட்டது பொய். அது இப்ப எங்கேயோ ஒரு அனாதை இல்லத்துல இருக்கு."

"கரெக்ட் தாத்தா தான் அப்ப அந்தக் குழந்தை இறந்துட்டதா ஏதோ ஒரு அனாதை விடுதியில் கொண்டு போய் சேர்த்துட்டார். இந்த ரகசியத்தைத் தான் குற்ற உணர்வு காரணமா நிம்மதியா சாகணும்னு சாகும்போது சொல்லிட்டு செத்திருக்கார்..."

"ஆமா... அதுதான் நடந்திருக்கணும்..."

"அந்தக் குழந்தைக்கு கிட்டதட்ட இப்ப என் வயசு. அதைத் தேடி தான் அந்த ஸ்ரீ போயிருக்கான்..."

"கரெக்ட்..."

"என்ன கரெக்ட் தாத்தா இந்த உண்மையை ஒரு நாள் கூடவா உன் கிட்ட சொல்லலை"

"சொல்லலையேடா..."

"பத்திகிட்டு வருது... சாகும்போது மட்டும் என்ன பெரிய ஞானோதயம்?"

"அதான் நீயே சொன்னியேடா குற்ற உணர்ச்சின்னு."

"நான் ஒரு அனுமானத்துல அப்படிச் சொன்னேன். ஆமா குழந்தையை எதுக்காக தாத்தா அப்ப பிரிக்கணும்?"

"என்னடா கேக்கறே... எனக்குப் புரியலை..."

"இல்ல... குழந்தை செத்துட்டதா எதுக்கு அன்னிக்கு தாத்தா அப்படிச் சொல்லணும்?"

"அதான் சொன்னேனேடா... மோகனாவோட காதலை அருணாசலம் அங்கிள் எத்துக்கலை. அப்பா மூலமா இரண்டு பேரையும் பிரிக்கப் பார்த்தார். முதல்ல குழந்தை செத்துட்டதா நம்ப வெச்சிருக்கணும். அடுத்து இவங்கள பிரிக்கப் பார்த்து முடியாம போயிருக்கணும்."

"சரி... இவங்களதான் பிரிக்க முடியலேல்ல... அப்பவே குழந்தை உயிரோட இருக்கற உண்மையை தாத்தா சொல்லியிருக்கலாம் இல்லையா?"

"இதோ பார்... உன் தாத்தா ஏதோ ஒரு திட்டத்தோடதான் அப்படி நடந்துகிட்டிருக்கார். அது என்ன ஏதுன்னு நாம இப்ப ஆராய்ச்சி பண்றதுல புண்ணியமில்ல. இனி நாம என்ன செய்யறதுன்னு யோசிப்போம்."

"என்ன செய்யறதா? ஸ்ரீ அந்தப் பொண்ணொட வந்தா அப்புறம் நீ இந்த வீட்டுப் பொண்ணு கிடையாது. வளர்ப்பு மகளே இடத்தை காலி பண்ணு. எங்க சொந்த பொண்ணு வந்தாச்சுன்னு இந்த சந்தானம் சொல்ல ரொம்ப நேரமாகாது."

"என்னடா அங்கிள் பேரைச் சொல்லி மரியாதை குறைவா பேசறே?"

"இனி அவருக்கென்ன மரியாதை. அவர்தான் நம்மை துரத்தப் போறாரே..."

"தினேஷ்... இப்படி அவசரப்பட்டு முடிவெடுக்காதே. பொறுமையா இரு. என்ன நடக்குதுன்னு பாக்கலாம்..."

"மம்மி... எப்பவும் கொஞ்சமாவது பிராக்டிகலா யோசி. நாம ஒருவேளை இந்த வீட்லயே வாழ முடிஞ்சாலும் பழைய மரியாதை நமக்கு இருக்காது. தாத்தா, அதாவது உன் அப்பா எல்லாத்தையும் நாசப்படுத்திட்டாரு. இன்ஃபாக்ட் அந்த சத்தானம் இடத்துல நான் இருந்தாலும் இப்படித்தான் இருப்பேன்..."

"இப்ப நீ என்ன தாண்டா சொல்ல வரே?"

"இந்த வீட்ல நாம கொஞ்சமும் செல்வாக்கு இழக்காம வாழவழி இருக்கு..."

"செல்வாக்கை இழந்துட்டதா நீ முடிவே பண்ணிட்டியா?"

"பாவம் மம்மி நீ... இந்த நிமிஷம் சந்தானம் அங்கிள் உன்னை ஒரு பத்து தடவையாவது கூப்பிட்டுப் பேசிருப்பார். கார் சாவியை தேட்றதுல இருந்து இன்னிக்கு என்ன கலர்ல கோட் போடலாம்கறது வரை அவர் உன்கிட்ட பேசாத விஷயம் ஏது?"

"ஆமாண்டா. நீ சொல்லும்போதுதான்புரியுது. நாம ராமேஸ்வரம் போய்ட்டு வந்து ரெண்டு நாள் ஆச்சு. மோகனாவும் சரி, அங்கிளும் சரி

என்கிட்ட ஒரு வார்த்தைகூட பேசவே இல்லை..."

"மம்மி... இப்படி ட்யூப்லைட்டாவே இருக்காதே. நான் அடுத்து என்ன செய்யப் போறேன்னு கவனி..."

"என்னடா செய்யப்போறே?"

"அதான் கவனின்னு சொன்னேன்ல?"

தினேஷ் மர்மமாகவே பேசினான். பூரணிக்கு வயிற்றைக் கலக்க ஆரம்பித்துவிட்டது.

ஃ ஃ ஃ

கொடைக்கானல் மாதாகோயில்! ராயப்பன், மாதா சிலை முன் உள்ள கேண்டில் ஸ்டாண்டில் பாதி எரிந்து அணைந்து போயிருந்த மெழுகுவர்த்தி ஒன்றை எற்றுவிட்டு பரிதாபமாக மாதாவை பார்த்தான்.

மாதாவின் முகத்தில் அளப்பரிய கருணை, கையில் குழந்தை ஏசு குதூகலச் சிரிப்போடு ராயப்பனை பார்த்திட அவனுக்குள் சலிப்பான பிரார்த்தனைக் குரல்!

"மாதாவே... யேசப்பா... நானும் நினைவு தெரிஞ்ச நாளா உங்களுக்கு மெழுகுத் திரி போடறேன். ஆனா, என்னை இந்த மலைல குளிருக்கு அடங்கின ஒரு ஜென்மமாவே வெச்சிருக்கீங்களே?"

மாதா... ஒரு சிங்கிள் டீ இப்ப பத்து ரூபா! அதுவும் ஒரு அவுன்சுதான் இருக்கும். குடிக்கற தண்ணி பாட்டில் பதினஞ்சு ரூபா! உன்னை யாருடா அந்த தண்ணிய வாங்கச் சொன்னது போய் அருவித் தண்ணிய குடின்னு மட்டும் சொல்லிடாதே மாதா... அதைக் குடிச்சா அப்புறம் டாக்டர் பர்னபாசுக்குத்தான் கொண்டாட்டம். தண்ணில அவ்வளவு கிருமி. அதனால நோய்...! இப்படி விலைவாசி விக்கற இந்த நாள்ல நான்லாம் எப்படி மாதா பொழைக்கறது?

உனக்கே கூட பெருசா மதிப்பு இருக்கிற மாதிரி தெரியல மாதா. முன்னல்லாம் தினசரி சர்ச்சுக்கு வந்து மெழுகு ஏத்துணவங்கல்லாம் இப்ப வாரம் ஒரு தடவை வரவே அலுத்துக்கறாங்க மணிக்கணக்குல உன் நாமத்தை ஜெபிக்கற காலம்லாம் மலை ஏறிடிச்சு."

ராயப்பன் புலம்பிக் கொண்டே போனான். இது வாடிக்கைதான். அதைக் கேட்டபடியே வந்தாள் அன்னமேரி. அந்த சர்ச்சின் ஸ்வீப்பர் அவள் . எப்போதும் கையில் துடைப்பம் இல்லாவிட்டால் பக்கெட் என்றுதான்

பார்க்க முடியும் அவளை... வயது ஐம்பது ஆகிறது. திருமணமே செய்துகொள்ளவில்லை. கன்னியாஸ்த்ரீக்களுக்கு உரிய கட்டுப்பாடுகள் அன்னமேரிக்குப் பிடிக்காததால் அவளால் அந்த வாழ்க்கைக்குள் நுழைய முடியவில்லை. படிப்பும் இல்லை. ஆதரிக்கவும் யாருமில்லை. காலம் இறுதியில் அவளை குப்பைக் கூட்டுபவளாக ஆக்கிவிட்டது. சர்ச்சில் மட்டுமல்ல பிரிகேடியர் பால்ராஜ் பங்களா, நடிகர் குமரனின் பங்களா என்று கொடைக்கானலின் பெரிய பங்களாவுக்கெல்லாம் அன்னமேரிதான் ஸ்வீப்பர். திருடுவது தெரியாமல் திருடுவதிலும் ரகசியமாய் சுருட்டு பிடிப்பதிலும் கெட்டிக்காரி.

"என்னய்யா மாதா முன்னால நின்னு இன்னிக்கும் புலம்ப ஆரம்பிச்சிட்டியா?"

"நீயா... வாயப்பிடுங்க வந்துட்டியா?"

"உங்கிட்ட புடுங்க என்னய்யா இருக்கு. நீயே ஒரு ஓட்டக்காலணா, உடைஞ்சடப்பா..."

"ஆமா நீ பெரிய விக்டோரியா மகாராணி."

"என்ன பதிலுக்கு பதிலா...?"

"பின்ன... உன்கிட்ட அடங்கிப்போக நான் என்ன கேனயனா?

"பெரிய புத்திசாலிதான் போ... ஆமா... இங்க நின்னு மாதா முன்னால பொலம்பறதுக்கு அந்த ஜான்சி மாதிரி கேரட்டு, சோளக்கருதுன்னு சுட்டுகிட்டு போய் விக்கலாம்ல"

"இப்ப நான் உன்கிட்ட கேட்டேனா... மூடிகிட்டு இடத்தை காலிபண்ணு..."

"சரி சரி... தண்ணிக்கு வக்கத்து போய் ஒரு குவார்டருக்கு என் பின்னால வருவேல்ல அப்ப வெச்சுக்கறேன்..."

"ஆமா... குவாட்டரு, ஃபுல்லுன்னு ஸ்டாக் வெச்சிருக்கறவ மாதிரியே பேசு. நீயே ஒரு குப்பைக்கூடை."

"வார்த்தைய அளந்து பேசு ராயப்பா. இப்ப நான் உன்கிட்ட ஒரு ஃபுல்ல காட்டுனா நான் சொல்றபடி கேட்பிய நீ..."

"ஃபுல்லா... உன்கிட்டயா?"

ராயப்பன் கண்கள் அகலமானது.

"வா காட்றேன்." என்று சர்ச்சின் ஸ்டோர் ரூம்பக்கமாய் அவனை அழைத்துச் சென்றாள். உள்ளே ஒரு உடைந்த பக்கெட்டுக்குள் ஒரு துணியை போட்டு மூடிய நிலையில் கிடந்தது ஒரு ஃபுல் பாட்டில்.

ராயப்பனுக்கு அதைப் பார்த்த நொடி எச்சில் ஊற ஆரம்பித்துவிட்டது. அதை ஆசையாக எடுக்க கையை நீட்டினான். அந்தக் கைமேல் விளக்கு மாற்றின் கைப்பிடிப் பக்கத்தாலேயே ஒரு போடு போட்டாள் அன்னமேரி.

"கையை எடுய்யா... எடு. எடு..."

"ஐயோ அன்னம் நீ என் ஏஞ்சல்! நெசமாலுமே விக்டோரியா மகாராணி. ஒரு வாய் குடிக்கவிடேன்."

"விடறேன். அதுக்கு முந்தி நான் இப்ப ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்லப்போறேன். அதை நல்லா கேட்டுக்கோ."

"நான் குடிக்கறேன். நீ அப்ப சொல்லேன்."

"தண்ணி உனக்குள்ள ஏறிட்டா நீ மாதா முன்னாலயே குத்தாட்டம் போடுவியே. அப்புறம் என் பேச்ச எங்க கேட்பே?"

"அப்படி என்னத்த நீ சொல்லப் போறே?"

"நான் சொல்லப் போறது சாதாரண விஷயம் இல்லையய்யா. நான் சொல்றதக் கேட்டு நீயும் நடந்துகிட்டா இப்படி தண்ணிக்கு லோல் படவேண்டாம். நானும் இந்த விளக்கு மாத்தை தூக்கி வீசிடுவேன்."

"அன்னம் நீ எப்ப பேசினாலும் நல்லா புரியும். ஆனா, இன்னிக்கு என்னாச்சு உனக்கு... குழப்பறியே!"

"குழப்பலை... உங்கிட்ட பேசலாமா வேண்டாமான்னு இன்னும் யோசிச்சுக்கிட்டே இருக்கேன். அதான் உனக்கு அப்படித் தோணுது..."

"சரி என்னா மேட்டர்? சட்டுன்னு சொல்."

"சொல்றேன். நீ இப்ப ஃபாதர் கரிய மாணிக்கம் வீட்டுக்கு போயிருந்தப்ப உன்ன தேடிக்கிட்டு ஒருத்தர் வந்தார். நான் இருந்ததால என்கிட்ட உன்னைபத்தி கேட்டார். நானும் எதுக்குக் கேக்கறீங்கன்னேன். அதுக்கு அவர் சொன்ன பதிலை கேட்டதும் ஆடிப்போயிட்டேன்."

"நீ யாரைச் சொல்றே? எவனாவது கடன்காரன் வந்து என்னை வெட்டி

பொலி போட்றுவேன்னு சொன்னானா?"

"இதோ பார்... நான் இப்ப சொல்லப் போறத சொல்லி முடிக்கற வரை நீ ஒரு வார்த்தைகூட குறுக்க பேசக் கூடாது. இந்த சர்ச்சுல வளர்ந்து வராளே சண்டி ராணி ஜான்சி..."

"ஆமா..."

"இப்ப தானே சொன்னேன் ஒரு வார்த்தைகூட பேசக் கூடாதுன்னு..."

"ஆமான்னு கூடவா சொல்லக் கூடாது?"

"தலைய மட்டும் ஆட்டு... உன் கிட்ட மட்டும் வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டுன்னு பேசவே முடியாதுய்யா?"

அலுத்துக் கொண்ட அன்னமேரி திரும்பத் தொடர்ந்தாள்.

"நல்லா கேட்டுக்கய்யா. ஸ்ரீகணேஷ்னு ஒரு வாலிபப் பணக்காரன் பணக்காரன்னா சாதாரண பணக்காரன் இல்லை. கோடி... கோடி...கோடீஸ்வரன்!"

"உம்"

"அவன் இந்த கொடைக்கானல் மலைல ஒரு இருபது இருபத்தைஞ்சு வருஷத்துக்கு முந்தி அனாதையா தூக்கிப் போடப்பட்ட ஒரு பொட்ட புள்ளைய தேடிக்கிட்டு வந்தான். ஜான்சி பத்தியும் கேட்டான். அவள் அனாதைங்கிறீகளே! அவள யார் எப்ப இந்த சர்ச்சுல கொண்டு வந்து விட்டாங்க? விவரம் தெரியுமான்னு கேட்டான். நீ வரணும். அப்புறம் ஃபாதர் வரணும்னு சொல்லி அப்போதைக்கு அவனை சமாளிச்சேன். சரி, நான் போய்ட்டு வரேன்னுட்டு போய்ட்டான். அவன் போகவும் இந்த ஜான்ஸி வந்தா. பார்க்க விடைப்பா ஒரு கோபத்தோட தெரிஞ்சா. என்னன்னு கேட்டேன்.

எவனோ ஒருத்தன் நான் அனாதைன்னு தெரிஞ்சி நூல் விட்டான். என்னை பெத்தவங்க கிட்ட சேக்கறேன்னு சொல்லி பம்பாய் கல்கத்தாவுல விபசார விடுதில தள்ளி விட்றதுதான் அவன் திட்டம்னு ரொம்பவே புலம்பினா.

அப்பதான் எனக்கும் இவ நம்பள பாத்துட்டு போற ஸ்ரீகணேஷைத்தான் சொல்றான்னு தெரிஞ்சிச்சு நான் உடனேயே கணக்கு பண்ணிட்டேன். நிஜத்துல அந்த ஸ்ரீகணேஷ் அப்படிப்பட்டவன் இல்லை. அவன் நிஜமாவே பிறந்தப்ப அனாதையாக்கப்பட்ட ஒரு பொண்ணை

தேடித்தான் வந்துருக்கான். ஆனா, இவ அவனை சந்தேகப்பட்டிருக்கா இதான் மேட்டர்.

அன்னமேரி சொல்லி நிறுத்தினாள். ராயப்பனிடம் வெறுப்பு. கூடவே அவன் கண்களில் அவன் மனசுக்குள் போடும் திட்டம் நன்றாக தெரிந்தது.

"என்னய்யா... நான் கோடுபோடவும் நீ உனக்குள்ள ரோடு போட ஆரம்பிச்சிட்ட மாதிரி தெரியுது..."

"பின்ன...? எவ்வளவு நாளைக்கு இப்படி எடுபிடியாவே இருக்கறது. பேப்பரை திறந்தா எல்லாரும் கோடிகோடியா ஊழல் பண்ற விஷயம்தான் வருது. லட்சத்துக்கே இப்ப மதிப்பு இல்லை அன்னம்! எல்லாரும் கோடி கோடியாதான் சுருட்றாங்க. ஆத்து மண்ணு, கடற்கரை மண்ணுன்னு கல்லு, மண்ணுலகூட காசைப் பாத்துடறாங்க. ஆனா, நான் இங்க இன்னும் மணி அடிச்சிகிட்டுதான் இருக்கேன்..."

"நீ என்ன பண்ணப் போறே முதல்ல அதைச் சொல்லு என்னாண்ட..."

"என்னத்த சொல்றது? ஜான்சிதான் அவன் தேடிக்கிட்டு வந்த பொண்ணு. அதுக்கு என்ன செய்யணுமோ அதை செஞ்சிட வேண்டியது தான்..."

"குடிய்யா இந்த ஃபுல்ல... இப்பதான்யா நீ ஆம்பளை. இனி நானும் நீயும் கூட கோடீஸ்வரங்க தான்..." என்று ரொம்பவே உற்சாகமாகத் தொடங்கினாள் அன்னமேரி.

ஹோட்டல் முன்னால் ஆட்டோ ஒன்றில் இருந்து இறங்கிக் கொண்டிருந்தாள் யாழினி. ஜில்லென்ற கொடைக்கானல் குளிர் அவளுக்கு புதிது. எனவே புடவை யால் உடம்பை மொத்தமாக இழுத்து மூடிக் கொண்டிருந்தாள்! அப்போது ஸ்ரீகணேஷும் கார் சாவிக் கொத்தை தூக்கிப்போட்டு பிடித்தபடி வந்து கொண்டிருந்தான்!.

# 12

'தெரிவது உனக்கு அவள் கண்களில் வண்டும் மீனும்
பூவும்...
தெரிவதில்லை
கண்ணீர்!
ஏடுகளில் முன்பக்கத்தில்

அட்டையில்...
வீடுகளில் பின்பக்கத்தில்
அடுப்பங்கரையில்'

- 'பெண்' எனும் கவிதையில் கவிஞர் காசி. அனந்தன்

சாவிக் கொத்தை தூக்கிப் போட்டுப் பிடித்தபடி வந்த ஸ்ரீகணேஷிடம் இருந்து அந்த சாவிக்கொத்து கைநழுவி பக்கவாட்டில் அவனை கடக்கப் பார்த்த யாழினியின் காலடியில் போய் விழுந்தது. அதைப் பார்த்து சற்று படபடத்த ஸ்ரீகணேஷிவிடம் யாழினியே அந்தச் சாவிக்கொத்தை குனிந்து எடுத்துத் தந்தாள். பளிச்சென்ற அவன் முகமும் ட்ரிம் செய்திருந்த அவன் மீசையும் அவளை ஒரு வினாடி ஈர்த்தது. அவனுக்கும் யாழினியின் சுடர் முகம் ஒரு மின்னலைப் பார்த்த தயக்கத்தைத்தான் ஏற்படுத்தியிருந்தது. இது போன்ற பார்வைகளும் மிக சக்தி வாய்ந்தவை. பெரிதாக தாக்கம் ஏற்படுத்துபவை. ஸ்ரீகணேஷிடமும் அந்த தாக்கம் தெரிந்தது.

"தேங்க்யூ..." என்றான் பதவிசாக.

"பரவால்ல... இதானே க்ரீன் பார்க் ஓட்டல்...?" – யாழினி கேட்டாள்.

"ஆமாம். நீங்களும் ஒரு டூரீஸ்டா... இந்த ஊருக்குப் புதுசா?"

- அவர்களிடையே பரஸ்பர பேச்சுவார்த்தை மெல்ல ஆரம்பமானது.

"நான் டூரிஸ்டெல்லாம் இல்லை... ஒரு முக்கியமான வேலையா கொடைக்கானல் வந்துருக்கேன். இந்த ஹோட்டல்லதானே எம்.எல்.ஏ. தங்கியிருக்கார்?"

"சாரி... எனக்கு அவ்வளவு டீடெய்லெல்லாம் தெரியாது நீங்க ரிசப்ஷன்ல கேளுங்க."

"ரொம்ப நன்றி" - யாழினி தேங்க்ஸ் என்று ஆங்கிலத்தில் சொல்லாமல் 'நன்றி' என்று தமிழில் சொல்லியபடி ரிசப்ஷன் நோக்கிச் செல்லத் தொடங்க, ஸ்ரீகணேஷ் அதையும் வெகுவாக ரசித்தபடி தனது அறைநோக்கிச் செல்லத் தொடங்கினான். ரிசப்ஷனில் இருந்து பார்க்க முடிந்த தூரத்தில்தான் இருந்தது. அவன் அறை, யாழினியும் ரிசப்ஷனை நெருங்கியவளாக எம்.எல்.ஏ. பற்றி விசாரிக்கத் தொடங்கினாள். ரிசப்ஷனில் இருந்த பெண் யாழினியை பதிலுக்கு மேலும் கீழும் பார்த்தவளாக "உங்க பேர் என்ன?" என்று கேட்டாள்.

"யாழினி..."

"மதுரைல இருந்து வர்றீங்கதானே?"

"ஆமாம்."

"நீங்க வந்தா உங்கள ரூம்ல வெயிட் பண்ணச் சொன்னார் சார்... இந்தாங்க கீ..."

- அவள் ஒரு அறையின் சாவியை எடுத்துத் தந்தாள். யாழினிக்கு சற்று களுக்கென்றது.

"ரூம்ல தங்கச் சொன்னாரா.. அப்படின்னா அவர் இப்ப ஹோட்டல்ல இலலையா?"

"இல்லை... வெளிய ஒரு எஸ்டேட் வரை போயிருக்கார்.

"எனக்கு ரூமெல்லாம் வேண்டாம். நான் வெளில இந்த ரிசப்ஷன்லயே வெயிட் பண்றேன்..." - என்றபடி சாவியை வாங்காமல் ரிசப்ஷன் ஹாலில் கிடந்த சோபா ஒன்றில் போய் அமர்ந்தாள் யாழினி.

ரிசப்ஷனில் இருந்த பெண்ணுக்கு அது சற்று ஏமாற்றமாக இருந்தது. உடனேயே அவள் எதிரில் எம்.எல்.ஏ.வுக்கு போன் செய்து பேசத் தொடங்கினாள்.

"சார்... அவங்க வந்துட்டாங்க. நான் ரூம் கீ தந்தேன். அவங்க ரிசப்ஷன் ஹால்லேயே இருக்கேன்னு சொல்லிட்டாங்க..." என்றாள்.

ரிசப்ஷனில் அவள் பேசிய பேச்சு யாழினியின் காதுகளிலும் விழுந்தது. பதிலுக்கு எம்.எல்.ஏ. என்ன சொன்னார் என்று தெரியவில்லை.

சிலுசிலுப்பு அப்பி எடுப்பதாக இருந்தது. இவ்வளவு தூரம் குளிரும் என்று அவள் எதிர்பார்த்திருக்கவில்லை. எனவே புடவைத் தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டாள்.

நேரம் ஓடியபடியே இருந்தது. யாழினியின் செல்போனில் அழைப்பொலியாக மணி ஓசையுடன் கூடிய நாராயண நாமம் ஒலித்தது. வேகமாக செல்போனை எடுத்துப் பாத்தாள். மறுமுனையில் ரங்காச்சாரியின் அழைப்பு.

"யாழினி..."

"அப்பா"

"இப்ப எங்க இருக்கே... கொடைக்கானல் ரீச் ஆயிட்டியா?"

"ஆயிட்டேன்பா... ஹோட்டல்ல எம்.எல்.ஏவுக்காக காத்திருக்கேன். அவர் ரூம்ல இல்லை. எங்கேயோ எஸ்டேட்டை பார்க்கப் போயிருக்காராம்."

"ஐ.சீ. இருந்து பத்திரமா பார்த்துட்டு அப்படியே லெட்டரை வாங்கிடு. எனக்கு போன் பண்ணு..."

"கட்டாயம்பா..."

"ஜாக்கிரதைம்மா... ஜாக்கிரதை..."

"நான் பார்த்துக்கறேன்.பா... நீங்க தைரியமா இருங்க..."

- யாழினி அவரை சமாதானம் செய்தாள். அப்போது ரிசப்ஷனுக்கு வந்திருந்த ஒருவன் யாழினியை வைத்த கண் வாங்காமல் பார்த்தான். பார்த்தபடியே போன் பேசத் தொடங்கினான்.

"சார் பொண்ணு சும்மா தளதளன்னு இருக்கா - பெரிய ஆள்தான் சார் நீங்க..." என்றான். அப்போது யதார்த்தமாக ரூமைப் பூட்டிக்கொண்டு வந்த ஸ்ரீகணேஷ் காதிலும் அவன் பேசிய பேச்சு கேட்டது.

ஸ்ரீகணேஷுக்கு சற்று பகீரென்றது. அப்படியே ஒதுங்கி எங்கேயோ பார்த்தபடி நின்றுகொண்டு அவன் பேசுவதை கவனிக்க ஆரம்பித்தான்.

"அவ ரிசப்ஷன்லதான் உட்கார்ந்திருக்கா. நீங்க எஸ்டேட்டுக்கு கூட்டிட்டு வரச்சொன்னதா சொல்லிக் கூட்டிகிட்டு வந்துடறேன். இங்க ஹோட்டல்ல கொஞ்சம் கூட சரிப்படாது. டூரிஸ்டுங்க வேற அதிகம் நம்ம எஸ்டேட்டுல நாம வச்சதுதானே சட்டம்?"

- கேட்டபடியே யாழினியை நோக்கிச் சென்றான். ஸ்ரீகணேஷுக்கு ஏதோ தவறு நடக்கப் போகிறது என்பது தெளிவாக புரிந்துவிட்டது. நின்று கவனிக்க ஆரம்பித்தான். அவன் அவளிடம்...

"மேடம் நீங்கதான் யாழினியா...?"

"ஆமாம். நீங்க...?"

"நான் எம்.எல்.ஏ.வோட பி.ஏ. அவர் இப்போ பக்கத்துல எஸ்டேட்ல இருக்கார். உங்களை அங்க கூட்டிக்கிட்டு வரச்சொன்னார்."

"எஸ்டேட்டுக்கா அது... அது எங்க இருக்கு?"

"இங்கதான் பக்கத்துலதான் இருக்கு"

"அவர் இங்க இருக்கறதாதானே போன்ல சொன்னார்...?"

"இங்கதான் அவர் ரூம் போட்டுத் தங்கியிருக்கார். அதே சமயம் எஸ்டேட்ல வேலை இருக்கிறதால அங்க இருக்கார்..."

"இங்க அவர் வரமாட்டாரா?"

"அங்க சுப்ரீம் எஸ்டேட்ல வேலை முடிய ராத்திரி ஆயிடும் போலிருக்கு. உங்கள காக்க வைக்க வேண்டாம்னுதான் அங்க கூட்டிகிட்டு வரச் சொன்னார். நீங்க வந்தா உங்க லெட்டரை வாங்கிட்டு போய்க்கிட்டே இருக்கலாம்."

"ரொம்ப நேரமாகுமா?" - யாழினியில் குரல் தழைந்து அதில் ஒருவித தயக்கமும் பயமும் தெரிந்தது.

"அதெல்லாம் ஒண்ணுமில்ல... எங்க கார்லயே உங்கள நான் கூட்டிட்டுப் போய், நீங்க ட்ராப் பண்ணச் சொல்ற இடத்துல ட்ராப் பண்ணிடுவேன்..."

- அவன் சளைக்காமல் அவளுக்கு பதிலைச் சொல்ல யாழினியிடம் தயக்கம் தொடர்ந்தது. சேலைத் தலைப்பை முடிச்சுப் போட்டு முடிச்சு போட்டு அவிழ்க்கத் தொடங்கினாள். அவன் உடனே எம்.எல்.ஏ.வுக்கே அவள் எதிரில் போன் செய்தான். அவளிடமும் தந்தான். அவரும் பேசினார்.

"என்னம்மா வந்துட்டியா?"

"ஐயா வந்துட்டேன்யா. உங்களதாய்யா பார்க்கணும்."

"அப்ப புறப்பட்டு வந்துடு. என்ன தயக்கம்?"

"அது... அது..."

"தயக்கப்பட என்னம்மா இருக்கு. படிச்ச பொண்ணு நீ சும்மா தைரியமா வேகமா இருக்க வேண்டாமா?"

"சரிங்க... வரேன்க... அதே சமயம் நான் உடனே திரும்பப் போகணும். நீங்க கொடுக்கப் போற லெட்டர்லதான் என்னோட எதிர்காலம், எங்க முதியோர் இல்லத்தோட எதிர்காலமும் இருக்குங்க..."

"அதெல்லாம் பேசிக்கலாம் நீ வாம்மா..."

- பேச்சு முடிந்தது. அவளும் புறப்பட்டாள். ஸ்ரீகணேஷிடம் பரபரப்பு.

அவனது துப்பறியும் மூளைக்கும் மின் மினிகள் பறக்க ஆரம்பித்தன. யாழினியும் அவன் தன்னை கவனிப்பதை கவனிக்காமல் குனிந்த தலையோடு அவனை பின் தொடர்ந்து சென்று ஒரு காரில் ஏறிக்கொள்ள, காரும் புறப்பட்டது.

"பாவம் அந்தப் பொண்ணு... இந்த மாமாப் பையன் கிட்ட வசமா மாட்டிக்கிட்டா. இனி அவ்வளவுதான்! கூல்ட்ரிங்க்ஸ்ல மயக்கமருந்தை கலந்து கொடுத்து வேலையமுடிச்சு அனுப்பிடுவாங்க. தனக்கு நடந்த கொடுமையை வெளியே சொன்னா வெட்கக்கேடுன்னு இந்தப் பொண்ணும் வெளியே சொல்லாது. இவங்களிக்குன்னு பொண்ணுங்களும் வசமா சிக்கறாங்களேப்பா."

-என்று ஹோட்டலில் வேலை பார்க்கும் இருவர் பேசிக் கொள்வதும் ஸ்ரீகணேஷின் காதில் விழுந்தது. இதற்கு மேலும் இதை வேடிக்கை பார்ப்பது ஆபத்து என்று உள்ளுணர்வும் அவனை பிராண்ட ஆரம்பித்தது.

ஒரு பெண்ணை தேடி வந்திருக்கும் இடத்தில் ஒரு பெண்ணுக்கு ஆபத்து! அதை எப்படியாவது தடுத்துவிட துடித்தது அவன் மனது. அப்போது எதிரில் ராயப்பனும் அன்னமேரியும் அவனைப் பார்க்க வந்தபடி இருந்தனர்.

அன்னமேரியை அந்த சமயத்தில் கணேஷ் எதிர் பார்த்திருக்கவில்லை. அவளும் அவனைப் பார்த்தவளாக, "சார்தான் ராயப்பா, உன்னைத் தேடி வந்தவர். ஜான்சிதான் இவர் தேடிவந்த பொண்ணுன்னு நீ சொல்லவும்தான் எனக்கே தெரியும். மாதா உன்னையும் சரி, ஜான்சியையும் சரி கைவிடலை. எல்லாத்தையும் விவரமா நீயே அய்யாகிட்ட சொல்லு."

- என்று அவன் எதிரில் அவள் பேசியதிலேயே கணேஷுக்கு பெரிய இன்ப அதிர்ச்சி. அவன் அதிர்ச்சிக்கு ஆளாக வேண்டும் என்றே அன்னமேரி திட்டமிட்டு பேசிநால் எப்படி அதிர்ச்சி ஏற்படாமல் போகும்?

அவனும் கணேஷ் முன் "ஸ்தோதிரங்க..." என்று பவித்தரமான ஒரு கிறிஸ்த்தவனாக கும்பிட்டான்.

"நீங்க..."

"அய்யா இவர் தாங்க ஜான்சியை வளர்த்த ராயப்பன். நீங்க தேடி வந்த

சர்ச்சுல இவர்தான் எல்லாம் ஜான்சியும் அனாதையா சர்ச் வாசல்ல விடப்பட்ட ஒரு குழந்தைதான். எனக்கு சந்தேகமேயில்லீங்க... நீங்க தேடி வந்தது ஜான்சியையேதான்..."

"அன்னமேரி அவனை ஒரே அமுக்காக அமுக்கியே தீருவது என்பது போல பேசினாள். ஆனால், கணேஷ் மனம் முழுக்க யாழினியைப் பற்றிய எண்ணமாகவே இருந்தது. அவளை எப்படியாவது காப்பாற்ற வேண்டிய ஒரு வேகம் அவனுக்குள் பீறிட்டது. அவளை அவன் சுப்ரீம் எஸ்டேட் என்று குறிப்பிட்டு, எஸ்டேட்டுக்கு அழைத்துச் சென்றது பளிச்சென்று நினைவில் ஃப்ளாஷ் போட்டது."

"இங்க சுப்ரீம் எஸ்டேட் எங்க இருக்குன்னு உங்களுக்குத் தெரியுமா?" - என்று அவர்களிடமே கேட்டான்.

"எதுக்கு கேக்கறீங்க?"

"சொல்லுங்க... தெரியுமா?"

"நல்லா தெரியுமே... ஆனா, இங்க இருந்து ரொம்ப தூரத்துல இல்ல இருக்கு..."

"சரி...அது எவ்வளவு தூரத்துல இருந்தாலும் பரவாயில்லை... வந்து வழியை காட்டுங்க."

"அங்க ஏதாவது முக்கியமான வேலைங்களா?"

"ஆமா... இப்போ எதுவும் பேசவேண்டாம். யாராவது ஒருத்தர் என்னோட வாங்க... மிஸ்டர் ராயப்பன் நீங்க வாங்க"

- கணேஷ் தனது காரை நோக்கி வேகமாக சென்று கிளப்பிக்கொண்டு வந்தான்.

ராயப்பனும் ஏறிக்கொண்டான். அன்னமேரி குழம்பிப் போனாள்.

காரும் கொடைக்கானலின் பனிபடர்ந்த சாலையில் வேகமெடுக்கத் தொடங்கியது.

"சார் நீங்க என்னைய பார்க்க வந்தப்போ நான் ஃபாதர் வீட்டுக்குப் போயிருந்தேன். ஜான்சியை பத்தி விசாரிச்சுக்கத்தான் நீங்க வந்ததா அன்னமேரி சொன்னிச்சு. அது பாவங்க ஒரு அனாதை! யாரோ சர்ச் வாசல்ல கொண்டு வந்து போட்டுட்டுப் போயிட்டாங்க. அதுல இருந்தே நான் தான் அதை எடுத்து வளர்த்துகிட்டு வரேன். இப்ப பார்க்க அவ ஒரு

முரட்டுப் பொண்ணா தெரிவா, ஆனா, அது ரொம்ப நல்ல பொண்ணுங்க..."

- ராயப்பன் கணேஷின் மனநிலை தெரியாமல் பேச ஆரம்பித்துவிட்டான். கணேஷிற்கு அதெல்லாம் எதுவும் காதில் விழவில்லை. யாழினி போனில் எம்.எல்.ஏ.வுடன் பேசும்போது பேசிய பேச்சு அப்படியே திரும்ப எதிரொலித்தபடி இருந்தது. 'நீங்க கொடுக்கப்போற லெட்டர்லதான் என்னோட எதிர்காலம் அந்த முதியோர் இல்லத்தோட எதிர்காலம்னு எல்லாமே இருக்கு' என்று அவள் சொன்னது கச்சிதமாக ஞாபகத்துக்கு வந்தது.

ஏதோ ஒரு சிபாரிசுக் கடிதம். அதை சாக்காக வைத்து அவளை கெடுக்கப் போகிறார்கள். அவள் பேசியதிலிருந்து அவள் நிச்சயம் ஒரு அனாதையாகத்தான் இருக்க வேண்டும் என்ற ஒரு யூகமும் கணேஷுக்கு ஏற்பட்டது. இப்படி ஒரு நிலையில் அந்த எஸ்டேட்டுக்குள் நுழைந்து நடக்க இருக்கும் ஆபத்தில் இருந்து அவளை எப்படிக் காப்பாற்றுவது? என்று மனதிற்குள் கேட்டுக் கொண்டவன், காரை சட்டென்று ஓரம் கட்டினான். தன் செல்போனில் ஹோட்டல் ரிசப்ஷனை தொடர்பு கொள்ள நினைத்தவன் வினாடியில் மாறியவனாக ராயப்பனிடம் செல்போன் இருக்கிறதா என்று கேட்டான். அவனும் தந்தான். அதிலிருந்து ரிசப்ஷனை தொடர்பு கொண்டான். ரிசப்ஷனிலிருந்து அந்தப் பெண்ணும் பேசினான்.

"மேடம்நான் எம்.எல்.ஏ.வோட பி.ஏ. பேசறேன். சார் இப்ப சுப்ரீம் எஸ்டேட்ல இருக்கிறதா தெரியுது. செல்போன்ல அவரை பிடிக்க முடியல. சுப்ரீம் எஸ்டேட் லேண்ட் லைன் நம்பர் கொஞ்சம் கிடைக்குமா?"

- அவனது புத்திசாலித்தனத்துக்கு உடனேயே பரிசாக அந்த எண்ணும் கிடைத்தது. ராயப்பனுக்கோ கணேஷின் செயல் பெரிதும் ஆச்சரியமாகவே இருந்தது. ஒன்றும் புரியவுமில்லை. இவன் நிஜமாலுமே எம்.எல்.ஏ. - வின் உதவியாளனா என்று ஒரு பார்வை... கணேஷோ லேண்ட் லைனில் சுப்ரீம் எஸ்டேட்டை பிடித்திருந்தான்.

"யார் பேசறது?"

"நான் எஸ்டேட் சூப்பர்வைசர் பேறேங்க... நீங்க யாருங்க...?"

"அங்க எம்.எல்.ஏ. இருக்காரா?"

"எம்.எல்.ஏ.வா நீங்க யாருங்க...?"

"இருக்காரா.. முதல்ல அதுக்கு பதில் சொல்"

"இ... இருக்காருங்க"

"அவரை முதல்ல பேசச் சொல்"

"என்ன விஷயம்?"

"நான் CBI போலீஸ் பேசறேன். இப்ப அவரை கூப்பிடப் போறியா இல்லையா?"

"ஹலோ யார் பேசறது?"

CBI-ல இருந்து பேசறோம். உங்களை பார்த்து ஒரு லெட்டர் வாங்க ஒரு பொண்ணு வந்துகிட்டிருக்கானு எங்களுக்குத் தெரியும். அந்த பொண்ணு வந்துட்டாளா?"

- கேள்வி எம்.எல்.ஏ. வை திகைக்க வைத்தது!

# 13

'தலையில் பூவிலங்கு
கையில் பொன் விலங்கு
காலில் வெள்ளி விலங்கு
சுவாசத் தடைக்கு
மூக்கிப் கல் விலங்கு
ஒவ்வொரு மூச்சிலும்
அவள்
விலங்குகளை நுகர்கிறாள்'
விலங்குகள்' கவிதையில் கவிஞா கந்தர்வன்.

எம்.எல்.ஏ.விடம் திகைப்பு. பதிலுக்கு "அந்தப் பொண்ணு என்னைப் பார்த்து சிபாரிசுக் கடிதம் வாங்க வர்ற விஷயம் உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று மென்று விழுங்கியபடியே கேட்டார் எம்.எல்.ஏ.

"உங்களுக்கு இது தேவையில்லாத கேள்வி. அந்த பொண்ணு கேக்கற லெட்டரை முதல்ல கொடுத்து வேகமா திருப்பி அனுப்பற வழியைப் பாருங்க. அந்த முதியோர் இல்லத்த நடத்தறவங்களுக்கும் சி.பி.ஐ.

கமிஷனருக்கும் நல்ல நட்பு உண்டு. இது தெரியாம அந்தப் பொண்ணுகிட்ட ஏதாவது தப்பு தண்டா பண்ணி மாட்டிக்கப் பார்க்காதீங்க.

இந்தப் பக்கமாய் ஸ்ரீ கணேஷ் மிகச் சாதுர்யமாக பேசிவிட்டு தொடர்ந்து பேச்சு வளர்ந்துவிடாதபடிக்கு போனை கட் செய்தான். அதற்குள்ளேயே அவனுக்கு வியர்த்து விட்டது. அருகில் இருந்து பார்த்தபடி இருந்த ராயப்பனுக்கு தலை சுற்றியது.

முதலில் எம்.எல்.ஏ.வின் பி.ஏ. பேசுவதாகச் சொல்லி ஹோட்டல் ரிசப்ஷனில் எஸ்டேட் நம்பரை வாங்கியவன், இப்போது சி.பி.ஐ என்கிறான். தன் போனில் பேசாமல் என் போனை வேறு வாங்கிப் பேசுகிறான். இவன் உண்மையில் யார்?

ராயப்பன் நெற்றி முன் பூச்சிகள் பறக்கத் தொடங்கின. அதுவரை அவன் ஸ்ரீ கணேஷைப் பார்த்த பார்வை அப்படியே மாறிப் போனது. ஸ்ரீயும் ராயப்பன் வெறிப்பதை வேகமாகப் புரிந்து கொண்டான். உள்மனது எம்.எல்.ஏ.விடம் அந்தப் பெண் சிக்காமல் மீண்டு வரவேண்டும் என்று துடித்தது. வெளிப்பார்வையோ ராயப்பனை எப்படி சமாளிப்பது என்று யோசித்தது.

"என்ன அப்படி பாக்கறே?"

"இல்ல. ஏதோ சி.பி.ஐ. அப்படி இப்படின்னீங்களேன்னு பாக்கறேன்..."

"அதுவா. நான் அப்படி சும்மா சொன்னேன்."

"எம்.எல்.ஏ பி.ஏங்கற மாதிரியும் பேசினீங்களே?"

"அதுவும் சும்மா."

"என்ன தம்பி சொல்றீங்க. எனக்கு தலை சுத்துது."

"அதெல்லாம் நீங்க ஒண்ணும் பயப்பட வேண்டாம். எம்.எல்.ஏ.வைப் பாக்க ஒரு பொண்ணு வந்திருந்தா. அவளுக்கு எம்.எல்.ஏ.கிட்ட சிபாரிசுக் கடிதம் வேணும். ஆனா, எம்.எல்.ஏ. ஒரு டைப்புங்கற மாதிரி கேள்விப்பட்டேன். அதான் சி.பி.ஐ.ங்கற பேர்ல கொஞ்சம் பயத்தை ஏற்படுத்தினேன்."

"அப்படிங்களா விஷயம். நான் ரொம்பவே குழம்பிட்டேன் தம்பி."

"பயப்பட வேண்டாம். நான் பயமுறுத்தினது வேலை செய்யுதான்னு

பாக்கணும். சுப்ரீம் எஸ்டேட்டுக்குப் போய் தூர இருந்து கவனிப்போம். கொஞ்சம் வர்றீங்களா?"

"அது... அது..."

"தயங்காம வாங்க. ஒரு பொண்ணுக்கு ஆபத்துன்னு தெரிஞ்சி எனக்கென்னன்னு போறத விட ஒரு கேவலம். பாவம். எதுவுமில்லை. கமான்."

ஸ்ரீ காரை திரும்பவும் கிளப்பினான். ராயப்பனும் வேறு வழியின்றி வழியை காட்டத் தொடங்கினான்.

எம்.எல்.ஏ.விடம் படபடப்பு குறையவேயில்லை. அவரது அடிவருடிகளில் ஒருவன் நெருங்கி வந்து "என்னண்ணே, ஏன் ஒரு மாதிரி இருக்கீங்க" என்று ஆரம்பித்தான்.

"என்னத்தடா சொல்ல... அந்தப் பொண்ணுவில்லங்கம் பிடிச்சவளா இருப்பா போல."

"யாருண்ணே, அந்த அனாதைப் பொண்ணா?"

"ஆமாண்டா, அனாதை தானே கொஞ்சம் விளையாடுவோம்னு நினைச்சது தப்பா போச்சு."

எம்.எல்.ஏ.கையை உதறும் போதே எஸ்டேட் பங்களா வாசலில் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது. யாழினியும் இறங்கினாள். சேலைத் தலைபை தோளைச் சுற்றி மூடியபடி அந்த பங்களாவை ஏறிட்டாள்.

சுற்றுச் சூழலிலும் பச்சை கொட்டி கிடந்தது. இதமான சிலுசிலுப்பு வேறு.

"வாம்மா" என்று அவளை உள்ளே அழைத்துச் சென்றான் காரில் அவளோடு வந்தவன். யாழினிக்கு சற்று நடுக்கமாக இருந்தது. முதியோர் இல்லத்தில் பஜனையின் போது சொல்லும் அனுமன் சாலீஸா ஞாபகத்துக்கு வந்தது. உதடுகள் அதை முணுமுணுக்கத் தொடங்கின.

செருப்பை உதறிவிட்டு கார்ப்பெட் போடப்பட்ட தரையில் காலை வைத்து உள்நோக்கி நடந்தபோது காலிலும் ஜிலுஜிலுப்பு ஏறத்தொடங்கியது.

ஹாலில் எம்.எல்.ஏ. காத்துக் கொண்டிருந்தார்.

அவர் கையில் கடிதம் தயாராக இருந்தது.

யாழினி வந்து நின்றவளாக அவரைப் பார்த்து கும்பிட்டாள்.

"அடடே வந்துட்டியாம்மா இந்தா நீ கேட்ட லெட்டர். இனி அந்த எஸ்.ஐ உங்க முதியோர் இல்லம் பக்கமே வர மாட்டான். நான் இப்ப போன் பண்ணியும் சொல்லிடறேன். பாவம் உன்னை நான் இவ்வளவு தூரம் வரும்படி செய்துட்டேன். ரொம்ப சாரிம்மா.

"எம்.எல்.ஏ.வின் கரிசனமான பேச்சு யாழினியை அப்படியே தளர்த்தி நிம்மதிப் பெருமூச்சு விடச் செய்தது. சுற்றி இருக்கும் அவரது தொண்டரடிப் பொடிகளுக்கோ பெரிய ஆச்சரியம். யாழினியும் வந்த வேகத்தில் கடிதத்தை வாங்கிக் கொண்டு ஒரு கும்பிடு போட்டு விட்டுப் புறப்பட்டாள்.

"டேய் பாப்பாவை பத்திரமா பஸ் ஸ்டாண்டுல கொண்டு போய் விட்டுட்டு வாங்கடா." என்று அவர் தொடர்ந்து கட்டளையிடவும் அவளை அழைத்து வந்தவனே திரும்பவும் அவளை விட்டு வருவதற்காக புறப்பட்டான். புறப்படும் முன் எம்.எல்.ஏ.வை ஒரு மாதிரி பார்த்தான். எம்.எல்.ஏ.வும் பதட்டமாக ஜாடை காட்டினார். ஏதோ விபரீதம் என்று மட்டும் அவனுக்குப் புரிந்தது. யாழினியும் காரில் ஏறிக் கொள்ள கார் புறப்பட்டது. அந்த சப்தம் கேட்ட பிறகே எம்.எல்.ஏ.விடம் சற்று நிம்மதி.

"என்னண்ணே, என்னாச்சுண்ணே உங்களுக்கு, இன்னிக்கு ஒரு பெரிய விருந்தே இருக்குன்னு நாங்கல்லாம் கொண்டாட்டமா இருந்தோம். நீங்க என்னடான்னா கால்ல உழுவாத குறையா அந்தப் பிள்ள கைல லெட்டரைக் கொடுத்து அனுப்பி வைக்கறீங்க."

"என்ன பண்ணச் சொல்றே, அவளை இந்தப்பக்கம் அனுப்பிட்டு அந்த அய்யா சி.பி.ஐ.க்கு தகவல் கொடுத்துருப்பான் போல."

"சி.பி.ஐக்கா?"

"அட ஆமாண்டா, சி.பி.ஐ ஆஃபீஸர் அந்த அய்யருக்கு ரொம்ப பழக்கமாம். நல்லவேளை இங்க நாம அதை தொட்டு வைச்சு கிட்டு இருக்கும் போது போன் வந்துருந்தா சிக்கலாயிருக்கும் நானும் என் பதவியும் மயிரிழைல தப்பிச்சோம்.

"அடக் கெரகமே. அந்த அய்யருக்கு சி.பி.ஐ வரை செல்வாக்கா. இது தெரியாமதான் அந்த சப்இன்ஸ்பெக்டரும் - பண்ணியிருக்கானா?"

"விடு, அந்த எஸ்.ஐ.க்கு முதல்ல போனைப் போட்டு அந்த முதியோர் இல்லம் பக்கமே இனி போயிடாதேன்னு சொல்லு. இந்தப் பொண்ணு

கொண்டு போற லெட்டரைப் பார்த்த உடனேயே அவன் புரிஞ்சிக்குவான். எதுக்கும் நீ போன் போட்டுச் சொல்லிடு."

"அண்ணே இதெல்லாம் பெரிய விஷயம். நீங்களே பேசிடுங்கண்ணே."

"நான் இப்ப பேசற மனநிலை இல்லை. நான் சொன்னதை நீ செய்."

- எம்.எல்.ஏ. அந்தக் குளிரிலும் சட்டைக் காலரை தூக்கி விட்டவராக மார்புப் பக்கம் "உஸ்" என்று ஊதி விட்டுக் கொண்டார்.

அவனும் எஸ்.ஐ.க்கு போன் போட தயாரானான்.

மலைப்பாதையில் ஸ்ரீயின் கார்! எதிரில் யாழினியின் கார் வருவதும் அவள் பின் சீட்டில் அமர்ந்திருப்பதும் நன்றாக தெரிந்தது. அந்த கார் ஸ்ரீயின் காரை கடக்கவும் ஸ்ரீயும் காரை வளைத்துப் பின் தொடரத் தொடங்கினான்.

"என்ன தம்பி திரும்பிட்டீங்க?"

"நான் போன் பண்ணது ஒர்க் அவுட்டாயிடிச்சு. அந்தப் பொண்ணுதான் திரும்பி போய்க்கிட்டிருக்கா."

"அது சரி. நாம பின் தொடர்ந்து போய் என்ன பண்ணப் போறோம்?"

"பேசாம வாங்க. அந்தப் பொண்ணுகிட்ட நான் பேசணும். இந்த மாதிரி தனியால்லாம் வராதீங்கன்னு எச்சரிக்கையும் செய்யணும்."

"நல்ல எண்ணம் தான். ஆனா, நீங்க வேலியில போற ஓணானை ரொம்பவே தான் உங்க வேட்டிக்குள்ளே விட்டுக்கறீங்க."

"செய்வன திருந்தச் செய்'னு கேள்விப்பட்டதில்லையா?"

"சரி தம்பி ஜான்சி பத்தி எதுவுமே பேசாம வர்றீங்களே?"

"இந்தப் பெண் இந்த கொடைக்கானலை விட்டு நல்லபடியா போகட்டும். அப்புறம் உங்ககிட்ட ஜான்சியை பத்தி தெரிஞ்சிக்கறத விட வேற என்ன வேலை இருக்கு?"

- பேச்சுக்குப் பேச்சு வேகத்துக்கு வேகம் என்று ஸ்ரீயின் கார் யாழினியின் காரை பின் தொடர்ந்தபடியே இருந்தது. அந்த காரும் கொடைக்கானல் டவுனுக்குள் புகுந்து பஸ் ஸ்டாண்ட் அருகே சென்று நின்றது. பஸ் ஸ்டாண்டுக்குள் மதுரை செல்லும் பஸ்ஸும் நின்று கொண்டிருந்தது. யாழினி இறங்கிச் சென்று மதுரை செல்லும் பஸ்ஸில்

ஏறிக் கொண்டாள். பின் தொடர்ந்து வந்திருந்த ஸ்ரீயும் காரை ஓரமாக நிறுத்தி ராயப்பனையும் காருக்குள்ளேயே இருக்கச் சொல்லிவிட்டு ஓடிவந்து மதுரை பஸ்ஸில் ஏறினான். உள்ளே யாழினியை தேடினான். அவளும் தட்டுப்பட்டாள். அவள் அருகில் இருவர் அமர இடம் இருந்தது. நேராக சென்று அவள் அருகே அமர்ந்தான். அவள் லேசான அதிர்வோடு அவனைப் பார்த்தாள்.

"என்னத் தெரியல. ஹோட்டல்ல பார்த்தீங்களே."

"உம்."

"வந்த வேலை முடிஞ்சிருச்சா. புறபட்டுட்டீங்க போல இருக்கு."

"முடிஞ்சிச்சு... அதான் கிளம்பிட்டேன். நீங்க எதுக்கு இதை எல்லாம் கேக்கறீங்க?"

"காரணமிருக்கு. ஒரு சிபாரிசு கடிதத்துக்காக தானே நீங்க எம்.எல்.ஏ.வைப் பார்க்கப் போனீங்க."

"ஆமாம். அது எப்படி உங்களுக்குத் தெரியும்?"

"அது மட்டுமா, அதுக்கு மேலயும் தெரியும். எனக்கு பெருசா கடவுள் சிந்தனையோ நம்பிக்கையோ கிடையாது. ஆனா, இப்ப கடவுள் இருக்கறது ஒரு வேளை உண்மையோன்னு நினைக்கறேன்."

"நீங்க பேசறதே எனக்குப் புரியல. உங்களுக்கு இப்ப என்ன வேணும்?"

"மேடம் நீங்க இப்ப ஒரு பெரிய ஆபத்துல இருந்து தப்பியிருக்கீங்க. உடனே பயந்து அது என்ன ஆபத்துன்ன விவரமெல்லாம் கேட்காதீங்க. நீங்க இப்ப பாதுகாப்பா உங்க முதியோர் இல்லத்துக்குப் போய் சேர்ந்தா போதும். அங்க போய்ட்டு உங்களுக்கு விருப்பம் இருந்தா என் நம்பருக்கு போன் பண்ணுங்க. அப்புறமா விவரமா நடந்ததைச் சொல்றேன்." - என்றபடியே ஸ்ரீகணேஷ் தன் விசிட்டிங் கார்டை அவளை நோக்கி நீட்டினான். அவள் வாங்கத் தயங்கினாள்.

"ப்ளீஸ் வாங்கிக்குங்க. நான் சைட் அடிக்கற பொறுக்கியோ, பொம்பளை பின்னால சுத்தற ரோமியோ எல்லாம் இல்லை. நான் ஒரு சயின்டிஸ்ட்! யு.எஸ்.ல இருக்கேன். இங்க கொடைக்கானலுக்கு ஒரு முக்கிய வேலையா வந்தேன். வந்த இடத்துல தான் உங்களைப் பார்க்க நேர்ந்தது. பல விஷயங்கள் தெரிய வந்தது. எப்படியோ நீங்க வந்த வேலை நல்லபடியா முடிஞ்சிடிச்சு. அந்த எம்.எல்.ஏ உங்ககிட்ட

மரியாதையாதானே நடந்துகிட்டார்.?"

"நான் எதிர்பார்த்ததுக்கும் மேல மரியாதையா நடந்துகிட்டார். ஆனா, நீங்க இப்ப பேசறது எதுவுமே எனக்கு புரியல, என்ன சொல்ல வர்றீங்கன்னும் தெரியல."

"எல்லாத்தையும் விவரமா போன்ல சொல்றேன். உங்களுக்கு ஒரு ரிக்வெஸ்ட்! இனி தப்பித் தவறியும் தனியா இந்த மாதிரி இடங்களுக்கு வந்துடாதீங்க. இப்ப நல்லபடியா போய்ட்டு வாங்க. சாரி போங்க வந்துடாதீங்க. டிரைவர் பஸ்ல ஸ்டார்ட் பண்ணிட்டார். நா வர்றேன்."

- மிக இதமான குரலில் அவள் காதுகளுக்கு மட்டுமே விழும்படியாக பேசிவிட்டு பேசிய வேகத்தில் பஸ்ஸிலிருந்து இறங்கிக் கொண்டான் ஸ்ரீ கணேஷ் யாழினி ஒன்றும் புரியாமல் அவனது விசிட்டிங் கார்டைப் பார்த்தாள். அதில் அவன் பெயருக்குப் பின்னால் இருந்த பட்டங்கள் அவளுக்குள் மலைப்பைத்தான் தந்தது. கூடவே அப்படி என்ன ஒரு பெரிய ஆபத்து தனக்கு வந்திருக்க முடியும் என்றும் ஒரு கேள்வி.!

அந்த பஸ்ஸும் மலைப்பாதையில் மதுரை நோக்கி விரைய ஆரம்பித்திருந்தது!

சாலை ஓரமாக நிறுத்தியிருந்த தன் காரை நெருங்கி அதில் ஸ்ரீ ஏறிய போது உள்ளே ஒரே பீடிப் புகை! ராயப்பன் தான் பீடி பிடித்துக் கொண்டிருந்தான். ஸ்ரீ வரவும் கதவைத் திறந்து தூக்கி எரிந்தான். ஸ்ரீயைப் பார்த்து மிரள விழித்தான்.

"என்னய்யா நீ, இப்படியா காருக்குள்ளே சிகரெட் பிடிப்பே என்ன சிகரெட்டுய்யா அது ஒரே நாத்தம்."

"சிகரெட் இல்ல தம்பி பீடி"

"மை குட்னஸ்" என்றபடியே சீட்டின் பின்புறம் இருந்து ஸ்ப்ரே ஒன்றை எடுத்து காருக்குள் ஸ்ப்ரே செய்தான்.

"தம்பி, அந்தப் பொண்ண பார்த்து பேசிட்டீங்களா?"

"உம். உ.ம்."

"நம்ம மேட்டரை இப்ப பேசலாமா?"

"தாராளமா. இப்பதான் எனக்கும் கொஞ்சம் மனசு ரிலாக்சா இருக்கு எப்பவும் ஒரு நல்ல காரியம் செய்யறதுல இருக்கற திருப்தியே

தனிதான்."

"நீங்க ரொம்ப வித்யாசமான தம்பியா இருக்கீங்க. நான் என் வாழ்க்கைல தப்பு தப்பாதான் எல்லாரையும் பாத்துருக்கேன். ஆனா, நீங்க ரொம்ப நல்லவரா இருக்கீங்க. உண்மையில எங்க ஜான்சி ரொம்ப கொடுத்து வெச்சவ."

- ராயப்பன் அழுத்தமாக சொல்லவும் ஸ்ரீயிடம் ஒரு அழுத்தமான மௌனம்.

"என்ன தம்பி யோசிக்கறீங்க?"

"இல்ல, நான் தேடவே இன்னும் ஆரம்பிக்கலை. ஆனா நான் தேடி வந்த பொண்ணு ஜான்சிதான்னு நீ சொல்றதை யோசிச்சேன். ஒரே ஆச்சரியமா இருக்கு."

"இதுல ஆச்சரியப்பட என்ன இருக்கு நீங்க சொன்ன எல்லா விஷயத்தையும் அன்னமேரி வந்து சொல்லிச்சு. அது அவ்வளவும் ஜான்சிக்கு ஒத்துப்போகுது, அதுதான் சொன்னேன்."

"அது உண்மையா கூட இருக்கலாம். ஆனா, ஜீன் டெஸ்ட்டுன்னு ஒண்ணு இருக்கு அதுல ஓ.கே.யானாதான் ஜான்சியை நாங்க ஒத்துக்க முடியும்." - ஸ்ரீ அப்படி சொன்ன நொடி ராயப்பனிடம் பெரும் திகைப்பு!

# 14

'இந்த உலகம்
என்றும் இளமையுடன்
நம்பிக்கை வாழ்ந்து
வளருகின்ற அசோகவனம்
அங்கொன்று இங்கொன்றாய்ச்
சீதை சிறையிருப்பாள்
அணியிழந்து ராமர்கள் தவிப்பார்
என்றாலும்... என்றாலும்
ஆறுதலாய் திரிசடைகள்
ஔடதமாய் சஞ்ஜீவி மலைகள்
தாவி வர அனுமன்கள்
என்றும் இருப்பர்.
ஆயிரம் தோல்விகளினூடும்
இந்த உலகம் இனிதாகும்'

நன்றி கவிஞர் வ.ஐ.ச.ஜெயபாலன்

திகைத்த ராயப்பன் ஸ்ரீ கணேஷைப் பார்த்த பார்வையில் ஏமாற்றமும் கூடவே விட்டுவிடக்கூடாது என்கிற தவிப்பும் நன்றாக தெரிந்தது.

"என்னய்யா அப்படி பாக்கறே... ஜீன் டெஸ்ட்டுன்னா என்னன்னு தெரியும் தானே?"

"தெரியலீங்களே... டெஸ்ட்டுன்னாலே பரிசோதனைன்னு தானேங்க அர்த்தம்.."

"பரவால்ல... உனக்கு டெஸ்ட்டுன்னா என்னன்னு தெரிஞ்சிருக்கே..."

"அது என்ன தம்பி ஜீன் டெஸ்ட்டு."

தமிழ்ல "மரபணு சோதனை'ன்னு சொல்வாங்க. நம்ம உடம்போட செல்லும் நம்மள பெத்தவங்களோட செல்லும் எப்பவும் ஒத்துப்போகும். அதைதான் சொன்னேன்."

"ஸ்ரீ கொடுத்த விளக்கம் ராயப்பனை மேலும் திகைக்க வைத்தது.

"அப்ப அந்த டெஸ்ட்டுல ஒத்துப்போகாட்டி ஒத்துக்க மாட்டீங்களா?"

"அது எப்படி ஒத்துக்க முடியும். பெத்தவங்களுக்கு அவங்க தொலைச்ச குழந்தை தானே வேணும்?"

"அதான் இந்தக் குழந்தை அனாதையா சர்ச் வாசல்ல கிடந்துச்சுன்னு சொல்றேன்ல."

"என்னோட அங்கிள் மாதிரியே வேற யாராவது கூட அப்படி தூக்கிப் போட்டிருக்கலாமில்லையா?"

"ஸ்ரீயின் பதிலுக்கு பதிலான கேள்வி ராயப்பனின் நம்பிக்கையில சரிபாதியைச் சாய்த்துவிட்டது.

"என்ன ரொம்ப யோசிக்கறே... அந்தக் காலத்து குழந்தைங்க தொலைஞ்சு போனா உடம்புல இருக்கற மச்சம். போட்டுகிட்டிருந்த சங்கிலி கொலுசுன்னுதான் அடையாளம் வெச்ச ஏத்துப்பாங்க. இப்ப அப்படி இல்லை. யாரா இருந்தாலும் ஜீன் டெஸ்ட்டுதான். விஞ்ஞானம் அந்த அளவு வளர்ந்தாச்சு."

என்றபடியே காரை கிளப்பினான். ராயப்பன் அதன்பின் எதுவுமே பேசவில்லை. மௌனமாகிவிட்டான்.

ஹோட்டலும் வந்தது.

ராயப்பன் இறங்கிக் கொண்டான்.

"நீ போய் ஜான்சியை கூட்டிக்கிட்டு வா, நான் அவ கிட்ட கொஞ்சம் பேசணும்" என்றான் ஸ்ரீ.

"அது கிட்ட பேச என்னங்க இருக்கு?"

"அப்ப நீ சொல்றதநான் நம்பணும்னு நீ எதிர்பாக்கறியா, அவளுக்கு என்கூட சென்னைக்கு வந்து இந்த டெஸ்ட்டுல எல்லாம் கலந்துக்க விருப்பம் இருக்கா இல்லையான்னு நான் தெரிஞ்சிக்க வேண்டாமா?"

- ஸ்ரீயின் கோபமான கேள்விக்கு ராயப்பனால் சரியான ஒரு பதிலைக் கூறமுடியவில்லை. மௌனமாக சரி என்பது போல தலையாட்டிவிட்டு நகர்ந்தான்.

அவன் எப்போது வருவான் என்று காத்துக் கொண்டிருந்தாள். அன்னமேரி. ஸ்ரீயை விட்டு அவன் வரவும் ஓடிவந்தாள்.

"யோவ்... எங்கய்யா போய்ட்டுவரீங்க. அந்த தம்பி நம்ம ஜான்சி விஷயத்துல என்னய்யா சொன்னிச்சு?"

- படபடவென்று பாய்ந்தாள் அன்னமேரி.

"அட நீ வேற. ஏதோ சொல்வாங்களே பிள்ளையார் பிடிக்க போய் குரங்காகிடும்னு... நான் அதை நினைச்சு போய் கைய பிசைஞ்சு கிட்டிருக்கேன். நீ புரியாம கேள்வியா கேக்கறியே..

- அவள் கேட்க அவனும் ஜீன் டெஸ்ட் பற்றி ஸ்ரீ கணேஷ் சொன்னதைச் சொல்லிமுடித்தான்.

"ஏசுவே... இப்படி எல்லாம் கூட இருக்காய்யா..?"

"இருக்காவா... ஜான்சிய கூட்டிக்கிட்டு இப்ப நாம ஹோட்டலுக்குப் போகணும். தெரிஞ்சிக்கோ..."

"அப்ப டெஸ்ட்டுல பாஸானாதான் ஜான்சி அவங்க தேடற பொண்ணா... இல்லாட்டி?"

"அவ வேற யாரோ பெத்துப்போட்ட ஒரு அனாதை அவ்வளவுதான்..."

"யேசுவே... இப்ப என்னய்யா பண்றது?"

"என்ன பண்றதா... அதான் ஜான்சிய கூட்டிக்கிட்டு வரச் சொன்னார்னு சொன்னேன்ல."

"ராயப்பன் சொன்னபடியே பீடியை எடுத்து செருகி நெருப்பு வைத்தான். இருவரும் கொடைக்கானலின் அந்த வளைவான மலைப்பாதையில் நடந்தபடியே அடுத்து என்ன செய்வது என்று யோசிக்கத் தொடங்கினர்!

ஹோட்டல் அறையில் ஸ்ரீ கணேஷ் சோபாவில் அமர்ந்த நிலையில் தன் டேபில் மெயில் பாக்சை திறந்திருந்தான். உள்ளே இருந்து ஏராளமான மெயில்கள்... சரிபாதிக்குமேல் அமெரிக்காவில் அவனது நண்பர்களிடம்

இருந்து ஒவ்வொன்றுக்கும் பதில் அளித்துவிட்டு நிமிர்ந்தபோது அவனது ஆன்ட்ராய்ட் செல்போனில் அழைப்பொலி.

அழைத்தது மோகனா. ஸ்ரீயும் பேசத்தயாரானான்.

"ஹாய் ஆன்ட்டி."

"ஸ்ரீ... எப்படி இருக்கு கொடைகானல்?"

"ஓ.கே. ஆன்ட்டி."

"ஹோட்டல் சௌகர்யமா இருக்கு...?"

"நோ பிராப்ளம் ஆன்ட்டி பை தபை எனக்கு இப்ப உங்க எதிர்பார்ப்பு எப்படிப்பட்டதுன்னு நல்லா தெரியும். நாம ஃபார்மாலிட்டீஸ்ல டயத்த வேஸ்ட் பண்ண வேண்டாம்னு நினைக்கிறேன்."

"பரவால்ல ஸ்ரீ... பார்மாலிட்டீஸ் லைஃப்ல ஒரு பார்ட் தானே?"

இருக்கலாம். ஆனா இப்ப அதைவிட முக்கியம் நான் கொடைக்கானல் வந்து என்ன செய்தேங்கறதுதான்."

"நிச்சயமா புத்திசாலித்தனமா நீ ஏதாவது செய்துருப்பே. என் பொண்ண பத்தி ஏதாவது தெரிய வந்ததான்னு நானும் ஒண்ணும் அவசரப்பட்டு எல்லாம் கேக்க மாட்டேன்..."

"கேக்காம கேக்கறீங்க... பரவால்ல! இந்த விஷயத்துல நீங்க கொஞ்சம் அதிர்ஷ்டசாலின்னுதான் சொல்வேன்."

"எப்படிப்பா?"

- மோகனாவின் கேள்விக்கு ஜான்சி குறித்த தகவல்களை அவளிடம்

சொல்லத் தொடங்கினான் ஸ்ரீ கணேஷ் அவள் முகத்திலும் ஒரு ஜொலிப்பு.

"ஸ்ரீ.. நீ இவ்வளவு வேகமா ஒரு பெண்ணை கண்டு பிடிபேன்னு நான் கொஞ்சம்கூட எதிர் பார்க்கவேயில்லை. எனக்கு இப்பவே அந்த ஜான்சியைப் பார்க்கணும் போல இருக்கு.."

"ஆன்ட்டி அவசரம் வேண்டாம். உங்க டாட்டர் விஷயத்துல ஜான்சி ஒரு ஆரம்பம்தான். அவளே முடிவாவும் இருந்துட்டா அதைவிட சந்தோஷம் எதுவும் இல்லை. ஆனா. அப்படி இல்லாம போகவும் நிறைய சான்ஸ் இருக்கு.."

"என்னப்பா இப்படி சொல்றே?"

"நீங்க தொலைச்சது பச்சைக் குழந்தையை... இப்ப அவ ஒரு கன்னிப் பொண்ணு... அடையாளம்னு எதுவும் தெரியாத நிலை. நமக்கு இருக்கற ஒரே விஷயம் ஜீன் டெஸ்ட்! ஆகையால நீங்க பொறுமையா இருந்துதான் தீரணும்..."

- ஸ்ரீ எந்த வித பதட்டமும் இன்றி தெளிவாக சொன்னதை மோகனாவும் மறுப்பின்றி கேட்டுக்கொண்டாள்.

"கவலப்படாதீங்க. வந்த இடத்துல ஒரு நல்ல காரியம் செய்தேன். அதை அட்வென்சர்னு கூட சொல்லலாம்.

"என்ன ஸ்ரீ என்னென்னவோ சொல்றே. அப்படி எந்த அட்வென்ச்சரை பண்ணினே?"

"அதை நேர்ல சொல்றேன்... இப்போதைக்கு ஜான்சியை வரச்சொல்லியிருக்கேன். அவ சென்னைக்கு என்கூட வருவாளான்னு பாக்கணும். அப்படியே நாளைக்கு இந்த கொடைக்கானல்ல ஏதாவது அனாதை இல்லம் இருக்கான்னு விசாரிச்சு அங்கயும் புகுந்து பாக்கப்போறேன்.

என் கைல இருக்கற ஒரே குறிப்பு உங்களுக்கு பெண் குழந்தை பிறந்த அந்த தேதிதான். அதன்படி இன்னிக்கு அந்தப் பொண்ணுக்கு இருபத்தி நாலு வயசு ஆறுமாசம் பதினேழு நாள்! இந்த வயசுக் கணக்கோட நான் சந்திக்கப்போற பெண்களும் ஒத்துப் போகணும். பார்ப்போம்...

"ரொம்ப சந்தோஷம் ஸ்ரீ... அங்கிள்கிட்ட உன்னோட முயற்சிகளை சொல்றேன். அவசியப்பட்டா நாங்க இரண்டு பேரும் கூட அங்க கிளம்பி

வரோம்."

"நிச்சயமா ஆன்ட்டி... நான் நீங்க வரவேண்டி இருந்தா நிச்சயம் சொல்வேன்."

"மோகனாவோடு பேசி முடித்தான். டேப்பையும் தூக்கி கட்டில் மேல் போட்டான். சற்று சோம்பல் முறிக்கத் தோன்றியது. முறித்தான். டிவியை போட்டதில் விளம்பரப் பொய்கள்... ஒரு மிட்டாய்க்காக ஒருவர் கோர்ட்டில் மயங்கி எல்லாம் விழுகிறார். எரிச்சலாய் வந்து டி.வியை அணைத்தான். அந்த நொடி மனதுக்குள் பஸ்ஸில் புறப்பட்டுச் சென்ற யாழினிதான் நிமிர்ந்தாள். புடவைத் தலைப்பை இழுத்து மூடிக்கொண்டு ஒரு மருண்ட மான்குட்டிபோல அவள் அவன் மனதுக்குள் ஜில்லென்று பரவத் தொடங்கினாள்.

சற்று அலட்சியமாக இருந்திருந்தாலும் அவள் நிலை மிக பரிதாபமாக ஆகியிருக்கும். அந்த வகையில் அவளைக் காப்பாற்ற முடிந்த சந்தோஷம் அவன் முகத்தில் ஒரு பெரு மிதமாக ஓடிற்று.

யாழினியும் மதுரையை எட்டியிருப்பாள் என்று நினைத்துக்கொண்டே படுக்கையில் விழுந்தான்!

மதுரை சூரப்பாளையம் பஸ் ஸ்டாண்ட்! யாழினி அந்த கொடைக்கானல் பஸ்ஸில் இருந்தும் உதிர்ந்தவளாக வெளியே வந்தாள். ஆட்டோக்காரர்கள் உரசிக் கொண்டு வந்தனர். ஏறி அமர்ந்தாள். அமர்ந்த நிலையிலேயே ரங்காச்சாரிக்கு போன் செய்தாள்.

"அப்பா நல்ல விதமா நான் லெட்டரோட வந்துட்டேன். ஆட்டோவுல ஏறிட்டேன்.." - என்றாள்.

அவளுக்குள்ளேயும் ஸ்ரீகணேஷின் நினைப்பு மெலிதாக முளைக்கத் தொடங்கியது. அவன் தந்த விசிட்டிங் கார்டு பர்சில் துருத்தலாய் தெரிந்தது. அப்படியே அவன் விருப்பம் இருந்தால் பேசச் சொன்னதும் நினைவில் ஓடியது பத்து நிமிடத்தில் வைகை ஆற்றங்கரையை ஒட்டிய அந்த முதியோர் இல்லத்துக்கு முன் உதிர்ந்தாள். உள்ளே நுழைந்தவளை வாக்கிங் போய்க் கொண்டிருந்த பல பெரியவர்கள் பார்த்தனர். முதியோர் இல்ல உதவியாளன் ஸ்ரீனிவாசன் எதிரில் வந்தான்.

"வா யாழனி... சார் காத்துக்கிட்டிருக்கார்." - என்றான்

யாழினி ஓடினாள். அறையில் ரங்காச்சாரி முன்னால் முதல் காரியமாக அந்த லெட்டரைக் கொடுத்தாள். ரங்காச்சாரியோ அதைப் பார்த்து

சிரித்தார்.

"என்னப்பா சிரிக்கறீங்க..?"

"ஆமாம்மா.. இப்ப இதுக்கு அவசியமே இல்லாம போயிடிச்சும்மா.."

"என்னப்பா சொல்றீங்க."

"அதை ஏன் கேட்கறே அந்த போலீஸ் கொஞ்சம் முந்திதான் வந்தான். வந்தவன் தலைகீழ நடந்துகிட்டான். நான் உங்ககிட்ட ரொம்ப தப்பா நடந்துகிட்டேன், மன்னிச்சிடுங்க சார்... சி.பி.ஐ லெவல்ல உங்களுக்கு தொடர்பு இருக்குன்னு தெரிஞ்சிருந்தா நான் வந்தே இருக்க மாட்டேன்ன சொன்னான்,'

"எனக்கு ஒண்ணுமே புரியல.."

- ரங்காச்சாரி சொல்லச் சொல்ல யாழினி மனதுக்குள் ஸ்ரீ கணேஷ்தான் நிமிர்ந்தான். யாழினியும் அவன் பஸ்ஸில் சந்தித்து பேசியதை சொல்லி அவன் தந்த விசிட்டிங் கார்டையும் தந்தாள்.

ரங்காச்சாரி தாமதிக்காமல் அவனுக்கு போன் செய்தார். அவனும் பேசினான். அவர் சி.பி.ஐ என்று சொன்ன மாத்திரத்தில் நடந்த அவ்வளவையும் அவரிடம் விளக்கினான்.

அதைக் கேட்கக் கேட்க அவரிடம் அதிர்வு உச்சகட்டமாய் அவர் இதயத்தில் ஒரு பெரும் கொந்தளிப்பு. அப்படியே சுருண்டு விழத்தொடங்கினார் ரங்காச்சாரி!

# 15

"விக்கல் வரும் போதெல்லாம் அம்மா சொல்கிறாள்

யாரோ நினைக்கிறார்கள் என்று... கோபம் கோபமாக வருகிறது. யாரோவா நீ?"

நன்றி இயக்குனர் லிங்குசாமி

சுருண்டு விழுந்த ரங்காச்சாரி யாழினிக்குள் பெரும் அதிர்வை மூட்டினார்.

"அப்பா. என்னாச்சுப்பா?" என்றாள் பலத்த குரலில் அதற்குள் உதவியாளன் சீனிவாசன் வந்து விடவும் கீழே விழுந்தவரை

தொட்டுத்தூக்கினான். அதற்குள்ளாகவே குப்பென்று வியர்த்துவிட்டது அதுவே அவருக்கு ஹார்ட் அட்டாக் என்பதை அவர்களுக்குப் புரிய வைத்து விட்டது. ரங்காச்சாரியின் வசமிருந்த செல்போன் அணையாமல் இயங்கியபடியே இருந்தது. அதன் வழியாக யாழினி அப்பா என்று குரல் கொடுத்ததெல்லாம் அவரோடு பேசியபடி இருந்த ஸ்ரீ கணேஷ் காதுகளிலும் விழுந்தது.

அதனால் ஸ்ரீ கணேஷிடமும் தவிப்பு. சீனிவாசன், ரங்காச்சாரியை அப்படியே தோளில் தூக்கிப் போட்டவனாக வேகமாக புறப்பட்டான். நடந்தபடியே "யாழினி... ஆட்டோ இல்ல டாக்சிய வேகமா இப்ப பிடிக்கணும். அப்பாக்கு ஹார்ட் அட்டாக்" என்றான்.

இருவரும் இப்படி பதட்டமாய் பேசிக்கொண்டு வருவதை அந்த முதியோர் இல்லத்தில் இருந்த மற்றவர்களும் பாத்துவிட்டு ஓடி வந்தனர். இடையில் ரங்காச்சாரியின் கையில் இருந்து செல்போன் நழுவி கீழே விழவும் யாழினி குனித்து அதை கையில் எடுத்துக் கொண்டாள். எடுத்துக் கொண்ட வேகத்தில் அந்த திருமகள் முதியோர் இல்லத்துக்கு வெளியே ஓடியவள் ஒரு ஆட்டோவை கூவி மறித்து நிறுத்தினாள். ரங்காச்சாரியோடு சீனிவாசன் ஏறிக்கொள்ள யாழினியும் தொற்றிக் கொள்ள ஆட்டோ ஆஸ்பத்திரிநோக்கி ஓட ஆரம்பித்தது!

ஹோட்டலில் ஸ்ரீ கணேஷிடம் தீவிரமான சிந்தனை. தான் செல்போனில் நடந்ததை சொல்லியிருக்கத் தேவையில்லையோ என்றும் ஒரு கெள்வி அவனுக்குள் எழும்பியது. ரங்காச்சாரிக்கு எதுவும் ஆகிவிடக்கூடாது என்றும் அவனுக்குள் ஒரு வித தவிப்பு, திரும்ப போன் செய்த ரங்காச்சாரி நிலையை விசாரிக்கலாமா என்றும் தோன்றவே திரும்ப அழைத்தான். அவன் அழைத்த அந்த நொடியில் ஆட்டோ ஆஸ்பத்திரிக்குள் நுழைந்திருந்தது. யாழினி போனை ஆட்டோவில் இருந்து இறங்கியபடியே அட்டெண்ட் செய்தாள்.

"போன்ல யார்னு தெரிஞ்சுக்கலாமா?" என்று தயங்கியபடியே கேட்டான்.

"நான் யாழினி பேசறேன். நீங்க?"

"நான் கொடைக்கானல்ல இருந்து ஸ்ரீ கணேஷ் சாருக்கு என்னாச்சு?"

"அப்புறமா கூப்பிடுங்க சார். அப்பாக்கு ஹார்ட் அட்டாக்" - யாழினி குரல் உடையச் சொன்னாள். சொன்ன வேகத்தில் போனையும் கட் செய்தாள். அதற்குள் ஸ்ட்ரெச்சா வந்து ரங்காச்சாரி உடம்பு நோக்கிச்

சென்று விட்டது. டாக்டரிடம் சீனிவாசனே நடந்ததைச் சொல்லி முடித்தான். அவரும் வெளியே அவர்களை நிறுத்தி விட்டு உள்ளே சென்றார். ஒரு அரைமணி நேர அவகாசத்துக்குப் பிறகு திரும்பியவா "சிவியர் அட்டாக்" என்று தான் ஆரம்பித்தார்.

"ஐயோ சார். உயிருக்கு?" - யாழினி கேட்டு முடிக்கு முன் "இப்ப எதுவும் சொல்லமுடியாது. பைபாஸ் சர்ஜரி பண்ணியே தீரணும். என்றார். பின் அவர் சென்று விட சீனிவாசன் யாழினியை ஊன்றிப் பார்த்தான்.

"என்ன சீனு அண்ணா அப்படிப் பாக்கறே?" - யாழினி வறண்ட உதடுகள் பிரிய கேட்டாள்.

"அப்பாக்கு ரொம்ப தைரியமான மனசு. ஆனா அவருக்கு இன்னிக்கு அட்டாக் வந்துருக்கறதை நினைச்சா என்னால நம்பவே முடியல."

"என்னாலயும் தாண்ணா."

"ஆமா அது யார் போன்ல?"

"அப்பா யார் கூட பேசினார்னு தானே கேக்கறே?"

"ஆமாம்."

"கொடைக்கானல்ல ஸ்ரீ கணேஷ்னு ஒருத்தர் என்னை மீட் பண்ணினார். இனிமே தப்பித்தவறி கூட தனியா இந்த மாதிரி வந்துடாதீங்கன்னும் சொன்னார். அவர் கூட தான் அப்பா பேசினார். அப்ப அவர் என்ன சொன்னார்னு தெரியல. அப்பாவுக்கு இப்படி ஆயிடுச்சு."

"நிச்சயமா நல்ல விஷயம் இல்லை யாழினி. ஆமா உனக்கு அங்க ஏதாவது பிரச்சினை வர இருந்தா?"

"அப்படி எல்லாம் எதுவுமில்லை. அந்த எம்.எல்.ஏ. எஸ்டேட் பங்களாவுக்கு வரச் சொன்னப்போ கொஞ்சம் பயமா இருந்தது. ஆனா. அங்க போன உடனே சிபாரிசு கடிதத்தைக் கொடுத்துட்டார்.

"அங்கே உன் கைல சிபாரிசு கடிதத்தைக் கொடுக்கும்போதெ இங்க அந்த சப் இன்ஸ்பெக்டர் வந்து அப்பாகிட்ட சிரிச்சு வழிஞ்சான். எனக்கே எல்லாம் ஆச்சரியமா இருந்தது.

"அண்ணா நீ சொல்றத எல்லாம் பார்த்தா பிரச்னை எல்லாம் தீர்ந்துடிச்சின்னு நல்லா தெரியுது. ஆனா அப்பாக்கு ஹார்ட் அட்டாக் வந்திருக்கு வாஸ்தவத்துல அப்பா இப்ப நிம்மதியால்ல இருக்கணும்?"

"அங்கதான் எனக்கும் குழப்பம், வேற ஏதோ நடந்துருக்கு அது என்னன்னு அந்த ஸ்ரீ கணேஷ்கிட்டயே கேட்டா தெரிஞ்சிட்டு போகுது."

- என்றபடியே ஸ்ரீ கணேஷை தொடர்பு கொண்டான் சீனிவாசன்.

ஸ்ரீயும் லைனில் வந்தான்.

"வணக்கம் சார். நான் ரங்காச்சாரி சாரோட உதவியாளர் சீனிவாசன் பேசறேன்."

"சாருக்கு இப்ப எப்படி இருக்கு?"

"அவர் இப்ப ஐ.சி.யுல இருக்கார். சிவியர் அட்டாக்! ஆமா அட்டாக் வர்ற அளவுல மோசமான விஷயம் எதையாவது சார்கிட்ட பேசினீங்களா?"

- சீனிவாசனின் கேள்விமுன் ஸ்ரீ கணேஷ் சற்று மௌனம் சாதித்தான்.

"சார், நான் பேசறது உங்க காதுல விழுதா?"

"நல்லா விழுது மிஸ்டர் சீனிவாசன். நான் பேசின விஷயம் சாரை இப்படி அட்டாக்ல பிடிச்சுத் தள்ளும்னு நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கலை."

"அப்ப ஏதோ ஒரு மோசமான விஷயம் தான் பேசியிருக்கீங்க அப்படித்தானே?"

"ஆமாம் மிஸ்டா சீனிவாசன். அது ஒரு மோசமான விஷயம் தான். ஆனா யாழினிக்கு நல்ல நேரம்னு நான் நினைக்கிறேன். இல்லேன்னா இப்ப அவங்க உங்க கூட இப்ப இருக்கற நிலைல இருந்திருக்க மாட்டாங்க."

"அப்படி என்ன நடந்தது மிஸ்டர் கணேஷ்?"

"வேண்டாம். நான் போன்ல இன்னொரு தடவை நடந்ததைச் சொல்லி உங்களுக்கும் அதிர்ச்சியளிக்க விரும்பலை. நான் மதுரைக்கு வரும் வேலை இருக்கு அப்ப நேர்லயே உங்ககிட்ட எல்லா விஷயத்தையும் சொல்றேன். இப்போதைக்கு சாரோட உடம்பைப் பாத்துக்குங்க. அவர் குணமாகணும். அதுதான் எனக்கு இப்ப ரொம்ப முக்கியம். அவருக்கு விபரீதமா ஏதாவது நடந்தா அப்புறம் என்னால தூங்க முடியாது. அவரை கவனமா பார்த்துக்குங்க. பை த பை இப்ப எந்த ஆஸ்பத்திரியில அட்மிட் பண்ணிருக்கீங்க?"

- ஸ்ரீ கணேஷ் கேட்க சீனிவாசனும் கூற. ஸ்ரீ அதை கவனமாக குறித்துக் கொண்டான்!

சென்னையில் சந்தானத்தின் பங்களாவுக்குள் ஸ்ரீ கணேஷின் அப்பா சந்திரசேகரின் கார் புகுந்து நின்றது. சந்திரசேகருடன் ஸ்ரீ கணேஷின் அம்மா வாசந்தியும் இணைந்து இறங்கி உள் நுழைந்தனர். ஹாலில் சந்தானமும் மோகனாவும் காத்துக் கொண்டிருக்க, இருவர் வரவும் உற்சாகமாய் பேச்ச ஆரம்பமானது.

"சந்திரா, உன் பிள்ளை ஒரு சயின்டிஸ்ட் மட்டுமில்லடா. நல்ல துப்பறியும் நிபுணன்கறதையும் நிரூபிச்சிட்டான்" என்றார் சந்தானம்.

"சந்தானம் எல்லாத்தையும் மோகனா என் கிட்டையும் சொன்னா. ஸ்ரீ. எங்ககிட்டயும் பேசினான். யாரோ ஜான்சின்னு ஒரு பொண்ணாமே?"

"ஆமாம் சந்திரா. அவ எங்கள் மகளா இருந்துட்டா அதைவிட சந்தோஷம் எதுவுமில்லை. ஆனா ஸ்ரீ கணேஷ் ரொம்ப அட்வான்சா யோசிக்கறான். யாரா இருந்தாலும் ஜீன் டெஸ்ட்டெல்லாம் பண்ணனும்னு சொல்லிட்டான்.

"பின்ன, அந்த வசதிகள் இருக்கும் போது அதைப் பயன்படுத்திக்கறதுல ஒண்ணும் தவறு இல்லையே."

- அவர்கள் ஹாலில் அமர்ந்து வெளிப்படையாக பேசிக் கொள்வதை மாடியில் இருந்தபடி கவனித்துக்கொண்டிருந்தான் தினேஷ்! அவன் கவனிப்பதை மோகனாவும் கவனித்தாள். உடனேயே அவர்கள் பேச்சை தணிவாக்கிக் கொள்ள சைகை காண்பித்தாள்.

தினேஷ் அதையும் கவனித்தவனாக அங்கிருந்து விலகி அவன் அம்மாவான பூரணியின் இடம் நோக்கிச் சென்றான். பூரணி லேப் டாப்பில் தீவிரமாக ஏதோ செய்து கொண்டிருந்தாள். தினேஷ் வரவும் ஏறிட்டாள்.

"என்ன தினேஷ், ஹால்ல சந்திரா அங்க்கிள் வந்துருக்கார் போல இருக்கு?" என்று கேட்கவும் செய்தாள்.

"ஆமாம்மா. உன் அருமை அங்க்கிள் சந்தானமும் தன் மகள் கிடைச்சுட்ட மாதிரி ஒரு சந்தோஷத்தோட பேசிக்கிட்டிருக்கார். யாரோ ஜான்சியாம் - கொடைக்கானல்ல இருக்காளாம்."

- தினேஷ் காதில் விழுந்ததை அப்படியே சொன்னான் பூரணி மௌனமாக கேட்டுக் கொண்டாள் மேற்கொண்டு எதுவும் பேசவில்லை.

"என்னம்மா, எதுவும் பேச முடியல இல்ல?"

"பேச என்னடா இருக்கு. இப்படி எல்லாம் நடக்கும்னு நாம நினைச்சுக்கூட பார்க்கலையே."

"சந்தானம் அங்கிள் உன்கிட்ட அந்த ஸ்ரீ கணேஷ் எதுக்கு கொடைக்கானல் போயிருக்கான்னு ஒரு வார்த்தைகூட பேசலையா?"

"இல்ல."

"நீ பேசறதுக்கென்னம்மா?"

"என்னன்னு?"

"எல்லாத்தையும் என் கிட்ட தான் கேட்பியா? உனக்கு எதுவும் தெரியாதா?"

"சரி கேட்கறேன். அங்கிள் என்ன சொல்றார்னும் பாக்கறேன்."

"தாத்தா இறந்ததுல இருந்து சந்தானம் அங்கிளும் சரி மோகனா ஆண்ட்டியும் சரி பெருசா நம்மகிட்ட பேசவே இல்லை. இன்னிக்கு ஃபேக்டரில போனஸ் போட்றாங்க. எப்பவும் போனஸ் தரும்போது என்னை கூட இருக்கச் சொல்வார் சந்தானம் அங்க்கிள். இந்த தடவை ஒரு வர்த்தைகூட சொல்லலை."

"புரியுது தினேஷ். ஒரு பக்கம் என் அப்பாவோட சாவு - மறுபக்கம் இந்த வீட்டுல நாம அனாதையா நம்மை உணரக்கூடிய ஒரு நிலை எனக்கும் கொஞ்சம் பயமா தான் இருக்கு."

"பயமா இருக்கா? நம்மை எப்ப வீட்டைவிட்டு வெளிய போன்னு சொல்லிடுவாங்களோன்னு எனக்கு பக்கு பக்குன்னு இருக்கு."

- தினேஷ் மிகவே உணர்ச்சி வயப்பட்டான். "சரி, இப்பவே போய் அங்கிள் கிட்ட என்ன நடக்குதுன்னு நானும் கேட்கறேன்" என்று லேப் டாப்பை மூடினாள் பூரணி. அந்த வேகம் குறையாமல் ஹாலுக்கு வந்தாள். ஹாலில் அவர்களிடம் கலகலப்பான பேச்சு பூரணியும் தினேஷும் வரவும் சந்தானம் முகம் மாறியது. மோகனாவும் சற்று சலனத்தோடு பார்த்தாள்.

"என்ன மோகனா. என்னைப் பாக்கவும் ஒரு மாதிரியாயிட்டே நானும் மனம் விட்டு பேசத்தான் இப்ப வந்திருக்கேன்."

"யூ ஆல்ரைட் பூரணி. நானும் உன்கிட்ட பேசணும்னு தான் இருக்கேன்."

"என்ன நடக்குது மோகனா இந்த வீட்டுல. என் அப்பா இறந்ததுல

இருந்து இங்க எல்லாமே மாறிப்போச்சு, தினேஷ் கூட ரொம்ப அன்னியமா தன்னை உணர்றான். நாங்க ரெண்டு பேரும் எவ்வளவு ஃபீல் பண்றோம் தெரியுமா?"

- பூரணி சுற்றி வளைக்காமல் நேரடியாக விஷயத்துக்கு வந்து விட்டாள்.

"பூரணி, நீ ஃபீல் பண்றதெல்லாம் இருக்கட்டும். உன்னை நான் என் மகளா தான் இவ்வளவு நாளும் நடத்தி வந்துருக்கேன். அதுல உனக்கு எந்த சந்தேகமும் இல்லையே?"

சந்தானம் பூரணிக்கு பதில் சொல்லத் தயாரானார்.

"அதுல எந்த சந்தேகமும் எனக்கு இல்லைன்னு தான் உங்களுக்கும் நல்லா தெரியுமே?"

"ஆனா, உன் அப்பாவால இப்ப நான் நொறுங்கிப்போய் உக்கார்ந்திருக்கேன். எங்க வாழ்க்கைல அவர் எவ்வளவு பெரிய தப்பு பண்ணியிருக்கார்னு உனக்குத் தெரியுமா?"

"சொன்னா தானே தெரியும்?"

"சொல்றேன். எனக்கும் மோகனாவுக்கும் ஒரு குழந்தை பிறந்தது. அதுவும் பெண் குழந்தை ஆனா அது பிறக்கும் போதே செத்துட்டதா அன்னிக்கு மோகனாவையும் என்னையும் நம்ப வெச்சுட்டார் உன் அப்பா. உண்மை என்னன்னா அந்த குழந்தை சாகலை, இப்ப அவ அனாதையா ஏதோ ஒரு அனாதை விடுதில வளர்ந்து கிட்டிருக்கா."

"அப்ப இந்த உண்மையை தான் என் அப்பா சாகும் போது உங்க கிட்ட சொன்னாரா?"

"ஆமாம். நல்லவேளை சாகும்போதாவது உன் அப்பா இதைச் சொன்னாரேன்னு நான் சந்தோஷப்பட்றேன். அதே சமயம் இவ்வளவு நாளா எங்களுக்கு அவர் செய்த துரோகத்தை நீ கொஞ்சம் நினைச்சுப்பார்.

"புரியுது. நாங்க என்ன தப்பு செய்தோம்,"

"நீ தப்பு செய்ததா நான் சொல்லலியே பூரணி."

"அப்ப எங்க கூட ஏன் உங்களால எப்போதும் போல பேச முடியலை?"

"பேசப் பிடிக்கலை. எங்க மகள் எங்கையோ அனாதையா கஷ்டப்பட்டுக்கிட்டிருக்க, உன்னை உன் அப்பா எங்க மகள் இடத்துல

இங்க உக்காத்தி வெச்சதை ஜீரணிக்க முடியல. இதை எல்லாம் நீ அனுபவிச்சுப் பார்த்தாதான் புரியும்."

"போதும் நீங்க இவ்வளவு சொன்னதே போதும். நாங்க இனி என்ன செய்யணும்னு சொல்லிட்டீங்கன்னா ரொம்ப நல்லா இருக்கும்."

"பூரணி, நாங்களா உன்னையோ உன் மகனையோ இங்க இருந்து போகச் சொல்ல மாட்டோம். அதனால நீ பயப்பட வேண்டாம். எவ்வளவோ பேர் இந்த வீட்ல சாப்பட்றாங்க. நீங்களும் சாப்பிட்றதுல எதுவும் குறைஞ்சுடப் போறதில்லை."

- சந்தானம் சொன்ன வார்த்தைகள் பூரணி வரையில் விலாவில் தைத்த ஊசியாக வலிக்க ஆரம்பித்தது, தினேஷோ மனதுக்குள் ஒரு புதுமுடிவுக்கு வந்திருந்தான்!

# 16

தாய்விட்டில்
வளர்ந்தாள்
புகுந்த வீட்டில்
தேய்ந்தாள்
நிலவு தான் பெண்!

ஒரு முடிவை மனதுக்குள் எடுத்துவிட்ட தினேஷ் சந்தானம் சொன்னதால் கிட்டத்தட்ட உயிரே போய் விட்டது போல ஒரு வலியோடு நின்றபடி இருந்த பூரணியைப் பார்த்து:

"அம்மா.. வாங்க போகலாம்! அங்கிள் பேசறதுல ஒண்ணும் தப்பில்ல, சொன்ன மாதிரி அவர் இடத்துல இருந்தாதான் நமக்கும் அந்த வலி தெரியும், என்று சந்தானம் மோகனா இருவருக்கும் வக்காலத்து வாங்குவது போல பேசினான்.

பூரணியே அதைக் கேட்டு ஆச்சரியப்பட்டாள். ஸ்ரீ கணேஷின் அப்பாவான சந்திரசேகரும் தாயான வாசந்தியும் கூட அதைக் கேட்டு ஆச்சரியத்தோடு தினேஷைப் பார்த்தனர்.

"சாரி ஆன்ட்டி. சாரி அங்கிள். அன்னிக்கு என் தாத்தா வால இல்லாமப் போன உங்க பொண்ணு சீக்கிரமா திரும்பக் கிடைக்கணும்! உங்க துக்கமும் வருத்தமும் நீங்கணும் அதுதான் இப்ப என் விருப்பம். அம்மா நீ வா."

- என்று தினேஷ் பூரணியை இழுத்துக் கொண்டு நடந்தான். அந்த பங்களாவில் பூரணிக்கான அறைக்குள் நுழைந்த மாத்திரத்தில் கதவைச் சாற்றினான். பூரணியும் அவன் நடந்து கொள்ளும் விதம் புரியாமல் அவனை ஏறிட்டாள்.

"என்னம்மா பாக்கறே?"

"பாக்காம, நம்மளை புழு மாதிரி நினைச்சு நீங்க வெளியே போக வேண்டாம். எவ்வளவோ பேர் இந்த பங்களாவுல சாப்பிட்றாங்க. நீங்களும் சாப்ட்டுட்டுப் போங்க'ன்னு கேவலமா பேசறார் உன் அங்கிள். நீ அதைக் கேட்டுட்டு ரோஷத்தோட எகிறிக்குதிப்பேன்னு பார்த்தா அவர் பேசினது சரிதான் கற மாதிரி பேசறியேடா..?"

"எகிறிக் குதிச்சா என்னம்மா ஆகும்?"

"என்ன ஆகும்னா?"

"இல்ல நானோ நீயோ ரோஷப் பட்றதால என்ன புண்ணியம்? உன் அப்பா தான் சாகும்போது பெரிய குண்டை போட்டுட்டு செத்துப் போயிட்டாரே?"

"என் அப்பா அப்படி எல்லாம் சொல்லியிருப்பாரான்னு எனக்கு சந்தேகமா இருக்குடா?"

"சொல்லியிருப்பார்களேன்னு வெச்சு யோசி. அவர் அப்படிச் சொல்லலைன்னா எதுக்காக கணேஷை கொடைக்கானலுக்கு அனுப்பனும். அவனையும் பெரிய துப்பறியும் புலியா பாராட்டி சொரிஞ்சுவிட்டுக்கணும்.?"

"சரி, அப்பா சொன்னார்னே வெச்சுப்போம். அப்பா செய்த தப்புக்கு நாம என்னடா பண்ணுவோம்?"

"இந்தக் கேள்விக்கு தான் சந்தானம் அங்கிள் அழகா பதில் சொல்லிட்டாரே. திரும்பவும் கேக்கறே?"

"என்னடா பதில் அது நாம என்ன சோத்துக்குச் செத்த வங்களாடா?"

"சொன்னாலும் சொல்லலைன்னாலும் இப்ப அது தானம்மா நம்ம நிலை?"

"தினேஷ் நீயா இப்படி பேசறே?"

"நான் தான் பேசறேன். உணர்ச்சிவசப்பட்றதால ஒரு புண்ணியமும்

இல்லை. இங்க மானம் ரோஷம்னு பேசி வீட்டை விட்டு நாம நாகரிகமாக வெளியேறலாம் தான். ஆனா, நான் அப்படி நடந்துக்க விரும்பலை"

"ஏண்டா? நீயும் படிச்சவன் தானே? உன் அப்பா சொத்துன்னு நமக்கு வீடு வாசல் இருக்கு நீ வேலைக்குப் போய் சம்பாதிச்சா நாமளும் தலை நிமிர்ந்து வாழலாமே?"

"இங்க இருந்துகிட்டும் தலைநிமிர்ந்து வாழ முடியும்மா!"

"அது எப்படிடா, அந்தப் பொண்ணை கண்டுபிடிச்சுக் கூட்டிகிட்டு வந்துட்டா நம்ம நிலை இன்னும் மோசமாப் போயிடும்கறது உனக்கு தெரியாதா?"

"அப்ப இவ்வளவு நாள் கம்பீரமா இந்த பங்களாவுல வாழ்ந்த வாழ்க்கையை அப்படியே தலைமுழுகிட்டு என்னை வேலைக்குப் போகச் சொல்றியா?"

"தினேஷ், நீ விரும்பினாலும் விரும்பலேன்னாலும் அதுதானேடா இன்னைக்கு நம்ம நிலை?"

"எப்படிம்மா இவ்வளவு சுலபமா உன்னால என் வரைல இப்படி ஒரு முடிவுக்கு வரமுடியுது?"

"நான் சுலபமால்லாம் வரலைடா, ரொம்ப வருத்தத்தோட தாண்டா சொல்றேன்."

"அப்ப உன் மாமா அருணாசலத்தோட சொத்துக்கு நான் வாரிசா வரணும்கற கனவுக்கு என்ன அர்த்தம்?"

"அது ஒரு கனவு தானேடா. கனவுகள் பலிக்கறது ஒரு அபூர்வமான விஷயம்னு எனக்குத் தெரியும்டா."

"அப்படின்னா இனி இந்த பங்களாவோட சாரி இந்தக் குடும்பத்தோட வீடு, வாசல், தொழிற்சாலை, எஸ்டேட்னு எதுவும் நமக்கு சம்பந்தமில்லை. இவ்வளவு நாள் இதெல்லாம் நம்மோடதுன்னு நான் நினைச்ச இதுக்காக உழைச்சதெல்லாம் உன் வரைல கனவா?"

"தினேஷ். நீ எதுக்கு இப்படி விடாம ஆர்கியூ பண்றே? மோகனாவுக்கு ஒரு வாரிசு இருக்குன்னு தெரிஞ்ச நிலைல உன்னை தங்களோட மகனா மோகனா தத்து எடுத்து இந்த சொத்துக்கு உன்னை ஒரு வாரிசா அவளால எப்படி நியமிக்க முடியும்.?"

"ஏன் முடியாது?"

"எப்படிடா? எனக்கு நீ என்ன நினைக்கறேன்னே புரியல!"

"அம்மா இது 2014. இன்டர்நெட் யுகம்! எந்த விஷயத்துலவும் இனிமே உலகப் பார்வை தான். அப்படி இருந்தாதான் சாதிக்க முடியும்."

"நான் கேட்ட கேள்விக்கு சம்பந்தமே இல்லாம இன்டர்நெட் உலகப் பார்வைன்னா என்னப்பா அர்த்தம்?"

"அம்மா, நீ இன்னும் பழைய சிந்தனைகளோடையே இருக்கே. ஒரு பிரச்னையை பல கோணங்கள்ல பார்க்க உனக்குத் தெரியல. இந்த மாதிரி சிக்கல்கள் பலருக்கு வந்துருக்கு இன்டர்நெட்டை ஓபன் பண்ணி உள்ள போய்ப் பார்த்தா தெரியும். உனக்கு? அதுக்குள்ள அவார்ட் வாங்கின பல ஆங்கிலப் படங்கள் இருக்கு. அதுல நான் சொல்ற ஒரு படத்தை டவுன் லோட் பண்ணிப்பார். அப்பதான் உனக்குத் தெரியும்."

"நான் பாக்கறது இருக்கட்டும். நீ தான் பார்த்தவனாச்சே? நீ என்ன தெரிஞ்சு கிட்டேன்னு சொல்லு."

"இதே மாதிரி ஒரு பிரச்னை லண்டன்ல ஒருத்தருக்கு வந்தது. அவர் அங்க ஒரு பெரிய தொழிலதிபர். பல கோடிகளுக்கு அதிபதி. ஒரு நாள் அந்தத் தொழிலதிபரைக் கூப்பிட்டு சாரி, நீ இனி இந்த சொத்துக்களுக்கு சொந்தக் காரன் இல்லை. இடத்தை காலி பண்ணு'ன்னு சொன்னப்போ அவர் எப்படி இடிஞ்சு போயிருப்பார்னு நான் உனக்கு சொல்லத் தேவையேயில்லை."

"நீ என்ன பண்ணப் போறே அதைச் சொல்."

"அந்தக் கோடீஸ்வரன் என்ன பண்ணானோ அதையே நானும் பண்ணப்பேறன்."

"அதுதான் என்ன?"

"கவலைப்படாதே இவங்க தேட்ற அந்தப் பெண்ணை இவங்களால கண்டுபிடிக்க முடியாது."

"என்னடா சொல்றே?"

"ஸ்ரீ கணேஷ் எதையும் கண்டுபிடிக்க நான் இனி அனுமதிக்கமாட்டேன்."

"ஐய்யோ, புரியும்படி சொல்லுடா!"

"வேண்டாம். உனக்கும் எதுவும் தெரிய வேண்டாம். நான் என்ன செய்யப்போறேன். அதை எப்படி செய்யப் போறேங்கறதை நீயே போகப் போகப் பார்த்து தெரிஞ்சுக்கோ."

"என்கிட்டயே சஸ்பென்ஸாடா?"

"என்ன செய்யச் சொல்றே. நீ ஒரு பத்தாம் பசலியா இருக்கே. சந்தானம் அங்கிள் ஒரு வார்த்தை சொன்னதுக்கே ஒடிஞ்சும் போயிட்டே நான் அப்படி இல்லை. என்னால இந்த வீட்டை விட்டெல்லாம் போக முடியாது. போகவும் மாட்டேன், இது எல்லாமே என் சொத்து நான் தான் இதோட வாரிசு.

- தினேஷ் கண்கள் சிவக்க சொன்னபோது பூரணிக்கே அவனைப் பார்க்க பயமாக இருந்தது.

"தினேஷ் வேண்டாண்டா. நீ தப்பான பாதைல போய் உனக்கு ஏதாவது ஆகிடப்போகுதுடா."

"நீ தப்பா சொல்றேம்மா, தப்பை தப்பில்லாம பண்ணா அதுல ஒரு தப்பும் இல்லை. இது ஆயிரம் லட்சங்களுக்கான காலம் இல்லை, கோடிகளுக்கான காலம்! முன்னே ஒரு ஊருக்கு அஞ்சாறு கோடீஸ்வரங்கள் இருந்தா அதிகம். இன்னிக்கு தெருவுக்குத் தெரு எல்லாருமே கோடீஸ்வரர்கள் தான். ஒரு த்ரீபெட்ரூம் அபார்ட்மெண்ட்டோட விலைகூட கோடியிலதான் தொடங்குது. இப்படி ஒரு காலத்துல தமிழ் சினிமா கதாநாயகன் மாதிரி நேர்மை, நாணயம் பார்த்து மூட்டை தூக்கிவண்டி இழுத்து ஒரு பாட்டு பாடி அதுக்குள்ள கோடீஸ்வரனாகறதெல்லாம் சினிமால மட்டும்தான் நடக்கும். நிஜத்துல  தப்பு பண்ணாதான் வாழவே முடியும். அதுலயும் சின்னத்தப்பு பண்ணக்கூடாது, பண்ணா பெரிய தப்பா பண்ணணும். சின்ன தப்பு பண்ணா அவன் இளிச்சவாயன். போலீஸும் சின்சியரா பிடிச்சி தண்டனை வாங்கித் தந்துடு வாங்க. அதுவே நீ ஆயிரம் கோடி இரண்டாயிரம் கோடின்னு பண்ணிப்பார். உனக்கு சல்யூட் அடிப்பாங்க. அடிச்சுகிட்டும் இருக்காங்க காட்டட்டுமா?"

- தினேஷ் ஆவேசமாகக் கேட்ட விதமே பூரணிக்கு வயிற்றைக் கலக்கிவிட்டது!

ஃ ஃ ஃ

கொடைக்கானல் ஹோட்டலுக்குள் மதுரைக்குப் புறப்பட தயாராகிக்

கொண்டிருந்தான் ஸ்ரீ கணேஷ் அப்போது வெளியே யாரோ வந்து நிற்கும் சப்தம் கேட்டு திருப்பிப் பார்த்தான். அன்னமேரி மற்றும் ஜான்சியோடு ராயப்பன் வந்திருந்தான்! கணேஷை தன் பேச்சாலே காதலிக்கச் செய்தவள் ஏனோ மௌனமாக இருக்க ராயப்பன் மட்டும் பேசினான்.

"என்ன சார் பெட்டில எல்லாத்தையும் எடுத்து வெச்சுகிட்டு இருக்கீங்க. ரூமை காலி பண்ணப் போறீங்களா?"

"ஆமாம். மதுரைக்குக் கிளம்பிக்கிட்டிருக்கேன்."

"என்னய்யா இது திடீர்னு?"

"ரொம்ப அவசரமான விஷயம். நாம ஒரு பொண்ண காப்பாற்றினோமில்ல...?

"ஆமா, அதுக்கென்ன சார், அதுபோன பஸ் ஏதாவது ஆக்ஸிடென்ட் ஆயிடிச்சா?"

"வாயக்கழுவுய்யா, கேக்கறத பார். இது வேற பிரச்னை."

"சரி, அந்த உடுங்க. இங்க எங்க ஜான்சியை என்ன பண்ணப் போறீங்க?"

நீ கேக்கற விதமே சரியில்லையே, ஜான்சியை நான் என்ன பண்ணணும்?"

"ஐயோ சார், நான் ஒரு பெல் ரன்னர். எங்க பாஷைல சொன்னா மணி அடிக்கற ஒரு அடிமை. எனக்கு பேசத் தெரியலங்க. ஜான்சியை நீங்க கூட்டிகிட்டு போய் ஏதோ ஜீன்ஸ் பேண்ட்டுன்னு ஏதோ டெஸ்ட் பண்ணணும்னு சொன்னீங்களே? அதைத்தான் கேட்டேன்.

"அதுவா, அப்ப ஜான்சி அதுக்கெல்லாம் தயாரா?"

"என்ன கேள்விங்க இது. ஒரு அனாதைக்கு அப்பா – அம்மா இருக்கறது தெரிஞ்சபிறகு மனசு சும்மா இருக்கலாமா? ஜான்சி இப்பவே அப்பா - அம்மாவைப் பாக்க துடிச்சிட்டு கருக்காய்யா, அவ எல்லாத்துக்கும் ரெடி."

"குட் அதே சமயம் டெஸ்ட்ல ரிசல்ட் தப்பா வந்தா வருத்தப்படக்கூடாது."

"இப்பவே ஏன் தப்பா வரும்னு நினைக்கணும். நிச்சயம் நல்லவிதமா

வரும்கற நம்பிக்கை எங்களுக்கு இருக்கு"

"சரி, நான் மதுரைக்கு போய்ட்டு திரும்பி வருவேன். அப்ப நாம அடுத்த கட்டம் பத்தி யோசிக்கலாம். என்ன ஜான்சி. நீ வாயைத் திறந்து எதையும் பேச மாட்டியா?"

- பெட்டியை மூடி நம்பர் லாக் செய்தபடியே கேட்டான் ஸ்ரீ கணேஷ் ஜான்சி அதற்கு எதனாலோ அளவாக சிரித்தாள்!

ஆஸ்பத்திரியில் ரங்காச்சாரிக்கு பைபாஸ் சர்ஜரி தொடங்கி விட்டிருந்தது. யாழினியோடு அந்த இல்லத்தில் இருக்கும் பல பெரியவர்களும் ஆபரேஷன் தியேட்டருக்கு வெளியே நின்று கொண்டிருந்தனர். யாழினி கூப்பிய பையும் கண்ணீர் விழிகளுமாகத்தான் இருந்தாள் அப்போது அங்கே ஸ்ரீ கணேஷ் வரவும் ஆச்சரியத்தோடு பார்த்தாள், கணேஷும் அவளை பரிவோடு நெருங்கினான்.

"ஹலோ."

"நீங்க?"

"நான் கணேஷ், மறந்துட்டீங்களா அதுக்குள்ள?"

"சேச்சே இங்க எப்படி வந்தீங்கன்னு கேட்டேன்."

"மிஸ்டர் சீனிவாசன் கிட்ட அட்ரஸ் வாங்கியிருந்தேன். அதை வெச்சுதான் வந்தேன். சாருக்கு இப்ப எப்படி இருக்கு?"

"பைபாஸ் சர்ஜரி நடந்துகிட்டிருக்கு. ஆமா அப்பாகிட்ட நீங்க என்ன சொன்னீங்க?"

"நத்திங் நாம இப்ப அதைப் பேச வேண்டாம். சாருக்கு சீரியஸா ஒண்ணும் இல்லையே?"

"அப்படி சொல்ல முடியாது" - யாழினி கண்ணீர் வழிய சொன்னது ஸ்ரீ கணேஷ் நெஞ்சை உலுக்கியது. அப்போது ஹெல்மெட்டை கழற்றாதபடி ஒருவன் அங்கே வந்து கணேஷை உற்றுப் பார்த்துவிட்டு திரும்பி வெளியே சென்றான். சென்றவன் அங்கிருந்தபடி தினேஷை தொடர்பு கொண்டான்.

"சார் அந்த கணேஷ் இப்ப ஆஸ்பத்திரிக்குள்ளதான் சார் இருக்கான்."

"குட் அவனை விடாம ஃபாலோ பண்ணிகிட்டே இரு. சரியான

நேரத்தை நீயே தேர்ந்தெடுத்து அவன் காரை ஆக்ஸிடென்ட் பண்ணவேண்டியது உன் வேலை. ஒண்ணு அவன் சாகணும் - இல்லேன்னா அவன் காலம் முழுக்க படுத்த படுக்கையா இருக்கணும். இரண்டுல எது நடந்தாலும் சரி."

"அதெல்லாம் நான் பாத்துக்கறேன் சார். நீங்க மட்டும் பேசின பணத்தை பேங்க்குல போட மறந்துடாதீங்க."

"என் செல்போன்ல உக்காந்த இடத்துல அக்கவுண்ட் ட்ரான்ஸ்ஃபா பண்ண எனக்கு இரண்டு நிமிஷம்தான். அந்தக் கவலை உனக்கு வேண்டாம். உனக்கு 24மணி நேரம் டைம். உன்கிட்ட இருந்து எனக்கு நல்ல சேதி வரணும். - தினேஷின் குரலில் கட்டளை!

# 17

"நீ
நம்பிக்கையை
யானை முடியில்
வைத்தாய்
புலியின் நகத்தில்
வைத்தாய்
நரியின் பல்லில்
வைத்தாய்
ஒன்பது கற்களில்
வைத்தாய்
எண்ணில் வைத்தாய்
ஒரு போதும் நீ
உன்னில்
வைக்கவில்லை!

தினேஷின் கட்டளையை தொடர்ந்து அந்த ஹெல்மெட் அணிந்தவன் தன் பைக்கை கிளப்பிக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு நேர் எதிரில் இருக்கும் டீக்கடை ஒன்றின் முன்னால் போய் வண்டியை ஓரம் கட்டினான்.

ஸ்ரீகணேஷ் வந்திருந்த கார் சாலை ஓரமாக ஒரு புங்கை மர நிழலில் நின்று கொண்டிருந்தது. அதைப் பார்த்தபடியே யாருக்கோ போன் செய்தான்.

"அதிகபட்சம் பத்து நிமிஷத்துல நீ.கே.ஆர்.ஹாஸ்பிடல் வாசலுக்கு வரே. கேரளாவுல சுட்ட டாடா சுமோவை எடுத்துக்கிட்டு வா.. இங்க ஒருத்தனை ஆக்சிடெண்ட்டுங்கற பேர்ல போட்டுத் தள்ளனும். கதை பிசிறில்லாம முடிஞ்சா உனக்கு மட்டுமே 2 லட்சம்! நீயும் ஒரு மூணுமாசம் கேரளாவுக்குப் போயிடணும். இங்க கேஸையும் போலீஸ் ஊத்தி மூடிடும்."

என்று தொழில் சுத்தமாய் பேசி முடித்தான்.

உள்ளே ஆபரேஷன் நடந்து கொண்டிருந்தது. வெளியே விசிட்டர் அறையில் ரங்காச்சாரி நல்ல விதமாக பிழைத்தெழ வேண்டும் என்கிற பிரார்த்தனையோடு பலர் இருக்க, பேங்க் வரை போய் ஆஸ்பத்திரியில் கட்டுவதற்காக பணத்தோடு வந்திருந்த அந்த முதியோர் இல்லத்து உதவியாளன் சீனிவாசன் வந்த வேகத்தில் கேஷ் கவுண்டருக்குப் போய் பணத்தைக் கட்டிவிட்டுத்தான் திரும்பி வந்தான்.

அங்கே யாரிடமும் பெரிதாக பேச்சில்லை.

ஒருவர் விஷ்ணு சஹஸ்ரநாமம் சொல்லிக் கொண்டிருந்தார். ஒரு பெண்மணி சுப்ரமணிய புஜங்கம் சொல்லிக் கொண்டிருந்தாள். யாழினிக்கு கந்த சஷ்டி கவசம் வேகமாய் சொல்ல வரும். அவள் அதை சொன்னபடி இருக்க, ஸ்ரீ கணேஷ் சீனிவாசனுக்காகத்தான் காத்திருந்தான். சீனிவாசன் வரவும் ஆஸ்பத்திரி நாற்காலியை விட்டு எழுந்திருந்தவனாக சீனிவாசனை இனம் கண்டு கொண்டு சிரித்தான். சீனிவாசன் கழுத்தில் தொங்கிய அடையாள அட்டை அவனை தெளிவாக அடையாளம் காட்டிற்று.

"ஹலோ சார்."

"ஹலோ நீங்க...?"

"ஐ ஆம் ஸ்ரீ கணேஷ் போன்ல பேசினேனே..."

"ஓ நீங்கதானா அது.. எப்ப வந்தீங்க..?"

"வந்து ஒரு பதினைஞ்சு நிமிஷமாச்சு உங்களுக்காகத் தான் காத்திருக்கேன்."

"அப்படியா.. ஒன் மினிட்." என்று சீனிவாசன் விலகிச் கென்று அங்கிருந்த ஒருவரிடம் எதையோ சொல்லிவிட்டு வந்தான்.

"நாம கேன்டீனுக்குப் போய் காபி சாப்பிட்டுகிட்டே பேசுவோமா?" -

என்று கேட்டபடியே கேன்டீன் நோக்கி நடக்க. ஸ்ரீ கணேஷும் தொடர்ந்தான். யாழினி அமைதியாக அதை கவனித்தபடி இருந்தாள், அவளுக்குள் ஆபரேஷன் நல்லவிதமாய் முடிய வேண்டுமே என்கிற ஒரே எண்ணம்!

கேன்டீனில் ஸ்ரீ கணேஷ் கொடைக்கானல் சம்பவத்தை விவரமாகவே சொல்லத் தயாராகி விட்டிருந்தான்.

"மிஸ்டர் சீனிவாசன் யாழினி எதுக்காக கொடைக்கானல் வந்தாங்கன்னு உங்களால விவரமா சொல்ல முடியுமா?"

"நான் சொல்றது இருக்கட்டும். அங்க விபரீதமா ஏதாவது நடக்க இருந்ததா?"

"ஆமாம் ஆனா, அது இந்த செகண்ட் வரை யாழினிக்குத் தெரியாது. தெரிஞ்சா எச்சரிக்கைங்கற பேர்ல பயம்தான் அதிகமாகும். அதுலயும் நீங்க கடவுளா நினைக்கற ஒருவர் ஆபரேஷன்ல இருக்கும் போது நான் அவங்க கிட்ட அந்த அதிர்ச்சிக்குரிய சம்பவத்தைச் சொல்ல விரும்பலை." ஆனா, சொல்லாம இருக்கறதும் சரி இல்லை... நீங்களே - தருணம் பார்த்துச் சொல்லிடுங்க."

"நிச்சயமா.. அதே சமயம்.. விவேகமாதான் நீங்க நடந்துகிட்டிருக்கீங்க" யாழினி ரொம்ப நல்ல பொண்ணு. எங்க திருமகள் முதியோர் இல்லத்தோட திருமகளே அவள் தான்! இந்த சொஸைட்டியோட எந்த முரட்டுத்தனமான பக்கங்களும் அவளுக்குத் தெரியாது. அவ ஒரு தொட்டில் குழந்தையா இந்த இல்லத்துக்கு கிடைச்சாலும், தான் பெற்ற மகளாதான் ரங்காச்சாரி சார் நினைக்கறார். - சீனிவாசன் சொன்ன மறுநொடி.

"மை குட்னெஸ். யாழினி ஒரு தொட்டில் குழந்தையா?" என்கிற ஒரு விதிர்ப்பு ஸ்ரீகணேஷிடம்!

"ஆமாம். இந்த விஷயமே ரங்காச்சாரி சார் சொல்லித்தான் எனக்குத் தெரியும். - ஸ்ரீ கணேஷ் முகத்தில் உடனேயே புதிதாக ஒரு மலர்ச்சி உருவாகத் தொடங்கியது.

"ஆமா... எந்த வருஷம் யாழினி இங்க வந்து சேர்ந்தா? அது தெரியுமா உங்களுக்கு?"

"அதெல்லாமே ரங்காச்சாரி சாருக்குதான் தெரியும். அவருக்கு எதுவும் ஆயிடக்கூடாது அதுதான் இப்ப எங்க எல்லோருடைய

பிரார்த்தனையும்."

"எதுவும் ஆயிடாது. நீங்க தைரியமா இருங்க."

"போகட்டும். கொடைக்கானல்ல யாழினிக்கு வந்த ஆபத்து எப்படிப்பட்டது? முதல்ல அதை விளக்கமா சொல்லுங்க. சீனிவாசன் கேட்க ஸ்ரீ கணேஷும் எம்.எல்.ஏ திட்டம் போட்டதையும் தான் சி.பி.ஐ என்று கூறி முறியடித்ததையும் சொல்லி முடித்தான், அதைக் கேட்ட நொடியில் இருந்து சீனிவாசனிடமும் திகைப்பு பல வினாடிகள் பேச்சே வர வில்லை.

"மிஸ்டர் சீனிவாசன். என்ன ரொம்பவே உங்களுக்கு அதிர்ச்சியா இருக்கா?"

"இருக்காதா சார்... கடவுள் தான் உங்களை அங்க இருக்க வைத்து யாழினியைக் காப்பாத்தியிருக்கார். நீங்க உண்மைல பெரிய உதவி செய்திருக்கீங்க. ரொம்ப ரொம்ப நன்றி."

"நீங்களும் எனக்கொரு உதவி செய்யணும்?"

"சொல்லுங்க. நான் என்ன செய்யணும்?"

"நான் பெருசா கடவுள் நம்பிக்கை இல்லாதவன். ஆனா, டிசிப்ளின்லயும் எதிக்ஸ்லயும் ரொம்ப நம்பிக்கை உள்ளவன். கடவுள்னு ஒருத்தர் இருந்தா அவரை யார் படைச்சாங்கற கேள்விக்கு எனக்கு இதுவரை யாரும் சரியான பதில் சொன்னதில்லை, இந்த பூமி சூரியன்ல இருந்து உதிர்ந்து விழுந்த ஒரு துண்டுப் பகுதி... சூரியனைப் பிரியவும் வானத்துல விழத் தொடங்கி, தன் சூடெல்லாம் கொஞ்சம் கொஞ்சமா ஆறி அதனால வாயு மண்டலம் உருவாகி அது பூமியோட மேற்புறம் போர்வை மாதிரி சூழ்ந்துக்கவும் ஒரு விசைப்பாடும் உருவானது.

அதுக்குப்பிறகு பூமி ஒரு குறிப்பிட்ட இடத்துல மிதக்க ஆரம்பிச்சு, அப்புறம் சுழல ஆரம்பிச்சு அப்புறம் இரவு பகல் உருவாகி அதற்குப் பிறகு மழை, அப்புறம் தாவரங்கள், உயிரினங்கள்னு வந்து அந்த பரிணாம தொடர்ச்சியில் தான் நீங்களும் நானும் பிறந்து இந்த ஹோட்டல் கேன்டீன்ல காபி சாப்பிட்டுகிட்டும் இருக்கோம்."

"எதுக்கு இப்ப இவ்வளவு நீண்ட விளக்கம்?"

"நான் அடிப்படையா ஒரு சயின்டிஸ்ட் இப்டித்தான் விஞ்ஞானமா சிந்திக்கறவன் பேசறவன். என் வரைல ஒரு சம்பவம் நடக்குதுன்னா

அதுக்கு முன்னும் பின்னும் ஒரு சரியான காரணம் இருக்கணும். இருக்கவும் செய்யும். இதுக்கு நடுவுல தற்செயலா சில விஷயங்கள் இந்த காரணங்கள் எதுவும் இல்லாமலே நடந்துருது. அப்ப ஒரு த்ரில்லும் உருவாயிடுது. அப்படி ஒரு திரில்லதான் நான் இருக்கேன்."

"மிஸ்டர் கணேஷ் எனக்கொரு உதவி செய்யணும்னு கேட்டுட்டு எதுக்கு இவ்வளவு பெரிய பீடிகை?"

"சொல்றேன்... நடக்கறத எல்லாம் பார்த்தா உங்க கடவுள் ஒருவேளை நிஜமா இருக்காரோன்னு கூட நினைக்கத் தோணுது. இல்லேன்னா யாழினி ஒரு தொட்டில் குழந்தைன்னு நீங்க என்கிட்ட சொல்வீங்களா?"

"அதுக்கும் நீங்க இப்படி பீடிகை போட்றதுக்கும் என்ன சம்பந்தம்?"

"யாழினி மாதிரி ஒரு தொட்டில் குழந்தையை தேடிப் புறப்பட்டுருக்கற ஒருத்தன்தான் நான்."

"கொஞ்சம் விவரமா சொல்ல முடியுமா?" - சீனிவாசன் கேட்க ஸ்ரீ கணேஷும் சந்தானம் மோகனா என்று ஆரம்பித்து சகலத்தையும் கூறி முடித்தான். சீனிவாசனிடம் ஒரு திகைப்பு கலந்த பிரமிப்பு.

"என்ன மௌனமாயிட்டீங்க?"

"மௌனமாகாம..? கதைகள்லதான் இப்படிப்பட்ட சம்பவங்களைப் படிச்சிருக்கேன். அதை நிதர்சனமா சந்திக்க நேரும்போது ஆச்சரியமும் அதிர்ச்சியும் ஏற்பட்றத எப்படி ஸ்ரீகணேஷ் தவிர்க்க முடியும்?"

"அப்ப யாழினி தான் நான் தேடிவந்த பொண்ணுன்னு நீங்க நினைச்சுட்ட மாதிரி தெரியுதே...?"

"அதுக்கு நிறைய வாய்ப்பு இருக்கற மாதிரிதான் எனக்கு படுது. நீங்க சொல்ற காலகட்டம் யாழினியோட வயசுன்னு எல்லாமே கிட்டத்தட்ட சரியா இருக்கே...?"

"யாழினி மாதிரியே கொடைக்கானல்ல ஒரு பொண்ணு பேர் ஜான்சி. அவளும் என் பரிசீலனைல இருக்கா."

"ஓ.. இன்னொரு பெண்ணும் உங்க லிஸ்ட்டுல இருக்காளா?"

"அந்தப் பெண்ணும் தற்செயலாதான் தெரியவந்தா. நான் இந்த விஷயத்துல இறங்கினப்போ மலைப்பா இருந்தது. என்கிட்ட இருக்கற ஒரே விஷயம் அந்தப் பெண் குழந்தையோட பிறந்த தேதி மட்டும்தான்.

அதே நாள்ல தான் அவளை தொட்டில் குழந்தையாக்கி மோகனா ஆன்ட்டி கிட்டயும் 'உங்களுக்குப் பிறந்த குழந்தை செத்துப் போச்சுன்னு சொல்லிட்டாங்க. வேற எந்த ஆதாரமும் கிடையாது. அதனால யாரா இருந்தாலும் ஜீன் டெஸ்ட்டுங் மரபணு சோதனை செய்து பார்த்துத்தான் ஒத்துக்கணும்ங்கறதுதான் இப்ப எங்கத் திட்டம்."

நல்ல திட்டம்தான். விஞ்ஞான வசதி இருக்கும்போது எதுக்கு சிரமப்படணும்?"

"எனிவே...நாம பல விஷயங்கள்ல ரொம்பவே நெருங்கிட்டோம். ரங்காச்சாரி சார் குணமாகட்டும் அவர்கிட்ட வந்து நானே பேசறேன். யாழினியே நான் தேடிவந்த பெண்ணா இருந்தா ரொம்பவே சந்தோஷப்படுவேன்."

"நானும் கடவுளை வேண்டிக்கறேன். ரங்காச்சாரி சார்கிட்ட சரியான சமயத்துல சொல்றேன். ஆமா நீங்க தேடிவந்த பெண் குழந்தையோட பிறந்த தேதியைத் தர முடியுமா? நான் முதியோர் இல்ல ரெக்கார்ட்ஸ்ல யாழினி பத்தி ஏதாவது தெரிய வருதான்னு பாக்கறேன்."

"அது என் டைரில இருக்கு. நான் உங்களுக்கு அதைப் பார்த்துட்டு போன் பண்றேன். அதே சமயம் நீங்க இனி யாழினியை எங்கேயும் தனியா மட்டும் அனுப்பாதீங்க. அந்த போலீஸ், எம்.எல்.ஏ.கிட்ட எச்சரிக்கையா இருங்க. அவங்க வாலாட்டினா எனக்கு தகவல் தாங்க. சந்தானம் அங்கிள் கிட்ட சொன்னா போதும் அவர் சி.எம். வரை போயிடுவார்."

"நான் பாத்துக்கறேன் ஸ்ரீகணேஷ். உங்க உதவிக்குத் திரும்பவும் என்னோட நன்றி."

"வெரிகுட் நான் புறப்பட்றேன்... சார். நல்ல ரெகவர் ஆன உடன் எனக்கு தகவல் தாங்க. வரேன்." - ஸ்ரீ கணேஷ் புறப்பட்டான். திரும்ப ஆபரேஷன் தியேட்டருக்கு அருகில் உள்ள விசிட்டர்ஸ் வெயிட்டிங் ரூமுக்கு வந்து யாழினியிடமும் சொல்லிக் கொண்டான்.

இந்த முறை அவளை 'நீயே நான் தேடி வந்த பெண்ணாக இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்பது போல பார்த்தான். அவளுக்கும் அவன் பார்வையில் ஒரு மாற்றம் இருப்பது தெரிந்தது. அவன் விலகவும் சீனிவாசனிடம் கேட்டாள்.

"ஆமா இவ்வளவு நேரம் எங்க போய்ட்டீங்க?"

"முக்கியமான விஷயம் பேசணும்னார். அதான் கேட்டீனுக்குக் கூட்டிகிட்டுப் போனேன்."

"என்ன பத்திதானே?" *

"உன்ன பத்தியேதான்." - சீனிவாசன் சொன்னதை கூர்மையாக உள் வாங்கிக் கொண்டாள்.

"அப்ப கொடைக்கானல்ல என்ன சுத்தி எதாவது தவறா நடக்க இருந்ததா?" - என்று படபடப்பாகக் கேட்டாள். "கொஞ்சம் அப்படித்தான். அந்த எம்.எல்.ஏ. நீ ஒரு அனாதை தானேன்னு உன்கிட்ட தப்பா நடந்துக்க திட்டம் போட்டிருக்கான். ஆனா, ஸ்ரீகணேஷ் சாமர்த்தியமா அதை நடக்க விடாம தடுத்தார். இதை உன்கிட்ட சொல்ல வேண்டாம். நீ அதிர்ச்சியடைவேன்னார். ஆனாலும் நான் சொல்லிட்டேன். ஏன்னா  நீ எச்சரிக்கையா இருக்கணும்னு நினைக்கறேன். தப்பித்தவறிகூட துணையில்லாம எங்கேயும் போயிடக் கூடாதுன்னும் நினைக்கறேன். அதேசமயம் இன்னொரு நல்ல விஷயமும் இருக்கு. அது மட்டும் நடந்துட்டா நீ கோடீஸ்வரி! அது என்னன்னு அப்புறமா சொல்றேன்."

- சீனிவாசன் 'நீ எச்சரிக்கையா இருக்கணும்' என்று சொன்ன பிறகு அவர் சொன்ன எதுவும் அவள் காதில் விழவில்லை. மாறாக தன்னைக் காப்பாற்றிய ஸ்ரீகணேஷ் பற்றிய எண்ணம் அவளுக்குள் பெரிதாக எழும்ப ஆரம்பித்திருந்தது. கூடவே ஒரு பயமும் நடுக்கமும் உருவாகி விட்டிருந்தது!

ஆஸ்பத்திரிக்கு வெளியே ஸ்ரீகணேஷ் தன் காரை நெருங்கி அதில் ஏறி அமரவும் ஒரு பத்தடி தொலைவில் நின்றிருந்த டாடா சுமோ ஒன்றும் புறப்பட்டது. மரக்கடை வாசலில் நின்றபடியே இரண்டு வாகனங்கள் புறப்படுவதையும் பார்த்தபடியே இருந்தான் அந்த ஹெல்மெட்காரன்.

மதுரை நகர சந்தடிகளில் ஸ்ரீயின் கார் புகுந்து புகுந்து முன்னேறத் தொடங்கியது.

அந்த டாடா சுமோவும் பின்தொடர்ந்தது. காளவாசல் சிக்னலை ஸ்ரீகணேஷின் கார் கடக்கவும் சிக்னல் விழுந்ததில் பின்தொடர்ந்து வந்த டாடா சுமோ வேறுவழியின்றி தேங்கி நின்றது.

உள்ளே டிரைவிங் சீட்டில் இருந்தவன் முகத்தில் கடும் சலனம். திரும்பவும் சிக்னல் கிடைத்து வண்டியை எடுத்தவன் அசுரவேகம்

காட்டத் தொடங்கினான்.

ஆனால், ஸ்ரீகணேஷ் வெகுதூரம் போய்விட்டதால் அவன் எந்தப் பக்கம் போனான் என்றும் தெரியவில்லை. எரிச்சலாக வந்து வண்டியை ஓரம் கட்டியவன் உடனேயே ஹெல்மெட்காரனுக்கு போன் செய்தான்.

"சார்... சிக்னல்ல தாண்டிப் பேயிட்டான். எந்தப் பக்கம் போனான்னே தெரியல..."

"அடச்சீ! என்னடா இப்பதான் கிளம்பினே அதுக்குள்ள போன் பண்றியே சூரப்புலிதான்னு நினைச்சேன். கடைசில அவனை மிஸ் பண்ணிட்டு நிக்கறியே. இப்படி இருந்தா இந்த லைன்ல நீ எப்படி குப்பை கூட்டுவே."

- ஹெல்மெட்காரன் எரிந்து விழுந்தான். இவனுக்கும் சங்கடமாகத்தான் இருந்தது. அதே சமயம் பார்க்க முடிந்த தூரத்தில் ஒரு ஹோட்டல் வாசலில் ஸ்ரீகணேஷ் கார் வந்து நிற்பதும் தெரிந்தது.

மீண்டும் அவனிடம் உற்சாகம்.

"கார் மிஸ் பண்ணலை. கேச் பண்ணிட்டேன். இந்த தடவை விட மாட்டேன்" என்றான் பலமான குரலில்!

# 18

'காரணங்கள்

இருக்கலாம்

தவிர்ப்பதற்கும்

பிரிவதற்கும்...

இணைவதற்கும்

மனம் போதும்!'

டாடா சுமோவில் இருந்துகொண்டு உற்சாகமாக பேசிய பேச்சு ஹெல்மெட்காரனை சந்தோஷப்படுத்தியது "பெருமாள்... நீ இந்த தடவை கோட்டை விட்டுடக் கூடாது..." என்றான் ஹெல்மெட்காரன்

"நிச்சயமா விடமாட்டேன் - இவனை தட்டிட்டு உடனே போன் பண்றேன். அடுத்த பத்தாவதுநிமிசம் என் அக்கௌண்ட்ல பணம் வந்து சேர்ந்துடனும்.

"பத்தாவது நிமிசமில்ல. அஞ்சு நிமிசம் போதும். புறப்படு" - பேச்சு முடிந்தது. டாடா சுமோக்காரன் பெயர் பெருமாள் என்றும் தெரிய வந்தது.

பெருமாள் எப்போதும் காப்பாற்றுபவர். இங்கே அப்படி ஒரு நல்ல பெயரில் அசுரன்.

டாடா சுமோவும் ஹோட்டலை நெருங்கி ஒரமாய் நின்றுகொண்டது. ஸ்ரீகணேஷ் சாப்பிடச் சென்றிருப்பது நான்றாகத் தெரிந்தது. ஒரு அரை மணி கால அளவில் ஸ்ரீகணேஷும் வெளியில் வந்தான். பீடாவை சுவைத்தபடியே காரில் ஏறப்போன சமயம் செல்போன் ஒலிக்கவும் அப்படியே கதவருகே நின்றுகொண்டே பேச ஆரம்பித்தான்

யாழினி தான் அவனை அழைத்திருந்தாள்.

"ஹலோ சார்... நான் யாழினி..."

"ஓ யாழினி... வாட் எ சர்ப்ரைஸ்..."

"சர்ப்ரைஸா...?"

"நிச்சயமா... நீங்க போன் பண்ணுவீங்கன்னு நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கல..."

"நன்றி சொல்லத்தான் கூப்பிட்டேன்."

"என்ன சொல்றீங்க நீங்க... எனக்கெதுக்கு நன்றி?"

"சீனு எல்லா விஷயத்தையும் என்கிட்ட சொல்லிட்டார் நான் ஒரு நிமிஷம் உறைஞ்சு போயிட்டேன். கடவுள் தான் உங்க வடிவத்துல வந்து என் மானத்தை காப்பாத்தினவர்?"

"அப்ப கடவுளுக்குல்ல சொல்லணும்."

"அதான் சொல்லிக்கிட்டிருக்கேன்."

"ஓ.. நான் அப்ப கடவுளா?"

"என்ன கேட்டா நீங்க அதுக்கும் மேல... இவ்வளவு பெரிய உதவிய செய்திட்டு அதை நீங்க எனக்குத் தெரியாம பாத்துகிட்டது தான் இதுல உச்சம்..."

"இப்பகூட உங்களுக்கு தெரிஞ்சதுல எனக்கு வருத்தம் தான் மேடம்."

"மேடமா... யாழினின்னு நட்போட பேசுங்க. மேடம் என் வரைல காலனி ஆதிக்க வார்த்தை..."

"நான் அப்படி நினைக்கல. பெண்களுக்கான ரொம்ப கௌரவமான ஒரு சொல்லாதான் நான் நினைக்கறேன். ஆண்களை சார்னு கூப்பிட்ற மாதிரி..."

"சாரி மிஸ்டர் ஸ்ரீகணேஷ்... 'சார்'ங்கற வார்த்தைக்கு அடிமைங்கற ஒரு பொருள் இருக்கற மாதிரி கேள்விப்பட்டுருக்கேன்."

"அப்படின்னு கம்யூனிஸ்டுகள் சொல்வாங்க. அவங்க இந்த 'சாரை' முதுலாளித்துவமா பார்ப்பாங்க ஆனா, அப்படி யாரும் எடுத்துக்கறதில்ல..."

"அழகா தமிழ்ல நண்பரேன்னு கூப்பிட்டு போகலாம். ஆனா, தூய தமிழ் பேசற ஒரு உணர்வை தருவதால யாரும் பேசறதுல்லன்னு நினைக்கறேன்."

"யாழினி நீங்க நிறைய படிப்பீங்களோ?"

"ஓ..நான் இவ்வளவு தூரம் பேசினதே என்னை ஒரு படிப்பாளியா காட்டிடுச்சா...?"

"ஒரு கேள்விக்கு நேரா பதில் சொல்றது ஒருவிதம். பதிலையே கேள்வியா ஆக்கி கேக்கறது இன்னொரு விதம். நீங்க இரண்டாவது ரகம்..."

"பாராட்டுறீங்களா... இல்லை மிருதுவா திட்டுறீங்களா?"

"ஓ... யாழினி... உங்க பேரும் ஸ்வீட் - உங்க அப்ரோச்சும் வெரி ஸ்வீட்."

"என் அப்பா ஆசையா வெச்ச பேர். எனக்கே என் பேர் ரொம்பப் பிடிக்கும்னா பாத்துக்குங்களேன்."

"வாவ்... அப்ப ஒரு பேர் தனக்கு பிடிக்கணும்கறது ரொம்ப முக்கியமோ?"

"இல்லையா பின்னே... உங்க பேர் எப்படி?"

"என் பேரை எனக்கு ரொம்பப் பிடிக்கும். என்ன ஒரு சிக்கல்னா அம்மா என் பேரோட முதல் எழுத்தை மட்டும் சொல்லி ஸ்ரீ. ஸ்ரீன்னு கூப்பிடுவாங்க அப்பா கணேஷ்னு கூப்பிடுவார். பெரும்பாலும் ஸ்ரீகணேஷ்னு கூப்பிட்றவங்க ரொம்பக் குறைவு."

"எனிவே... யாழினி நீங்க இப்ப சந்தோஷமான ஒரு மனநிலை இருக்கறது நல்லா தெரியுது. அதுமட்டுமில்ல ஆஸ்பத்திரில உங்க அப்பாவும் ரெகவர் ஆயிட்டார்னு நல்லா தெரியுது."

"ஆமாம்... அப்பா கண் விழிச்சு அவர் கூட பேசிட்டு வந்துதான் பேசுறேன். டாக்டரும் இனிமே எந்த ஆபத்தும் இல்லைன்னு சொன்னதைக் கேட்ட பிறகுதான் என் மனசும் சமாதானம் ஆச்சு."

"கவலைப்படாதீங்க. அவர் பூரண குணமாகி வீடு வந்து சேருவார். அவருக்கு எந்த சிக்கலும் வராது."

"ரொம்ப நன்றி மிஸ்டர் ஸ்ரீ..."

"ஸ்ரீகணேஷ்னு சொல்லுங்க..."

"சாரி... ஸ்ரீகணேஷ். ஸ்ரீகணேஷ்..."

- அவள் இருமுறை புன்னகையோடு சொல்லி முடிக்க, அவனும் செல்போனை பாக்கெட்டில் போட்டவனாக காரில் ஏறினான்.

அப்பப்பா...!

டாடா சுமோவுக்குள் தேவுடு காத்துக்கொண்டிருந்த பெருமாளும் சுறுசுறுப்பானன்.

"இந்த செல்போன் வத்து எங்க எப்ப யார்கூட பேசுவாங்கன்னே தெரியமாட்டேங்கு" - என்று புறப்படவும் டாடா சுமோவும் பின்தொடரத் தொடங்கியது.

காருக்குள் ஸ்ரீகணேஷிடம் ஒரு ஏகாந்த மனநிலை. யாழினி ஒரு பண்பட்ட பெண்ணாகவும் மிகுந்த உலகப் பார்வை உள்ளவளாகவும் அவனுக்குள் விஸ்வரூபமெடுத்திருந்தாள். கொடைக்கானலில் அவளை அப்படி எல்லாம் உணர முடியவில்லை. இத்தனை அழகான இந்தப் பெண்ணே நான் தேடி வந்த பெண்ணாகவும் அமைந்து விட்டால் எத்துனை நன்றாக இருக்கும்?

அவனுக்குள் கேள்விகள்... ஆனால், பின்னாலேயே விதி ஒரு அசுர வடிவில் வந்து கொண்டிருப்பது தெரியாத நிலை. அவன் கார் 'துவரிமான்' வழியாக நான்கு வழிச் சாலையை எட்டிப் பிடிக்கவும் செய்தது. இடதுபுறம் திரும்பினால் திருநெல்வேலி. நாகர்கோவில் என்று செல்லும். அதுவே வலதுபுறம் என்றால் திண்டுக்கல். கரூர், சேலம் என்று செல்லும் அவன் கார் வலதுபுறம் திரும்பியது. திண்டுக்கல்லுக்கு

முன்னால் கொடை ரோட்டில் திரும்பி கொடைக்கானலுக்குச் செல்ல வேண்டும். அங்கே உள்ள ஜான்சியை வைத்து ஜீன் டெஸ்ட்டை முடித்துவிட வேண்டும். பிறகு மதுரை வந்து யாழினியை பரிசோதிக்கத் தயாராக வேண்டும்.

மனதுக்குள் திட்டமிட்டுக்கொண்டே காரின் வேகத்தை நூற்றி இருபது கிலோ மீட்டருக்குக் கொண்டு செல்லத் தொடங்கினான். ஆனால், அவனை பக்கவாட்டில் கடந்தது பெருமாளின் கார், கடந்த வேகமே ஸ்ரீகணேஷை அதிர வைத்தது. அப்படியே மெதுவாகவும் ஓடத் தொடங்கிது. ஸ்ரீ பாதையின் வலதுபுற பிரிவிலேயே சென்றபடி இருந்தான். அவனை இடதுபுற பிரிவுக்கு நகர வைத்து அப்படியே சாலையை ஒட்டிய பெரும் பள்ளத்தில் முட்டி மோதி கவிழ்ந்துவிட வேண்டும் என்கிற பெருமாளின் திட்டம் மிக வேகமாக செயல்முறைக்கு வந்தது.

வலது ஒரமாக மெதுவாக சென்ற படி இருந்த பெருமாளை தாண்டுவதற்காக இடதுபக்க சாலையில் காரைச் செலுத்தி வேகமானான் ஸ்ரீ...! பெருமாளும் அவனுக்குச் சமமாக வலதுபுறம் வேகமெடுத்தான். ஸ்ரீக்கு பெருமாளின் முந்தைய வேகம் தற்போதைய பக்கவாட்டு வேகம் எல்லாமே சந்தேகத்தை தரத் தொடங்கியது. ஆனால், பெருமாள் அதற்கு மேல் ஸ்ரீகணேஷை யோசிக்கவிடவில்லை. தன் டாடா சுமோவை ஸ்ரீகணேஷின் காரோடு உரச முற்பட ஸ்ரீயும் இடதுபுறமாக வேகமாக ஒதுங்க, காரும் தார் ரோடை விட்டு மண் பகுதிக்குள் இறங்கியது. அப்படி இறங்கிய நொடியே ஒரு பெரும் மோதலை பெருமாளின் கார் பக்கவாட்டிலேயே செய்ய, அப்படியே ஸ்ரீ கணேஷின் காரும் முட்செடிகள் நிரம்பிய பக்கவாட்டு பள்ளத்தில் உருண்டு விழத் தொடங்கியது.

நால்வழிச் சாலையிலும் கண்ணுக்கெட்டிய தூரம் யாரும் இல்லை. பெருமாளும் சிறிது தூரம் சென்று காரை நிறுத்திவிட்டு திரும்பிப் பார்த்தான். உருண்டு விழுந்த காரின் கதவு திறந்து கொண்ட நிலையில் தலையில் ரத்தக் கசிவோடு மயங்கியவனாக ஸ்ரீகணேஷ் வெளியே தொங்கிய படிகிடப்பது தெரிந்தது.

உயிர் போனாலும் சரி. இல்லை அந்தக் காயத்துக்கு எழுந்திருக்க முடியாதபடி ஆனாலும் சரி... பெருமாள் வேகமானான். தன் செல்போனில் அந்தக் காட்சியை வேகமாய் படம் எடுத்துக்கொண்டான். தொலைவில் ஒரு பஸ் வருவது தெரியவும் ஓடிச்சென்று தன் சுமோவை கிளப்பியவன் அதன் பின் சிட்டாக பறக்கத் தொடங்கினான். காரின்

பயணத்துக்கு நடுவில் செல்போனில் கைகள் இயங்க ஆரம்பித்தன. எடுத்த படம் எம்.எம்.எஸ்-ல் ஹெல்மெட் காரனுக்கு ட்ரான்ஸ்ஃபர் ஆனது கூடவே "சார்... சாரியத்த கச்சிதமா முடிச்சுட்டேன்" என்றான்!

சென்னை, பங்களாவில் தினேஷிடம் பரபரப்பு. அருகில் வந்தாள் அவன் அம்மா பூரணி.

"இப்ப கீழ மோகனாவும் அவ புருஷனும் பேசிக் கிட்டிருந்ததைக் கேட்டேன். அந்த ஸ்ரீகணேஷ் இன்னொரு பெண்ணையும் கண்டுபிடிச்சிருக்காளாம். பேர் எவ்வளவோ யாழினியோ மாலினியோனு சொன்னான்."

"அதுக்கென்னமா?"

"இல்ல... அவன் ரொம்ப வேகமா இருக்கான்னு சொல்ல வந்தேன்."

"அந்த வேகத்தை பாத்துகிட்டுதானே இருக்கேன்."

"என்னடா சொல்றே?"

"ஒண்ணுமில்லம்மா நீ போ... போய் உன் வேலைய பார்." - தினேஷ் அவளை கத்தரிக்கும்போது அவன் கை பேசியில் அழைப்பு.

"சார்... காரியம் கச்சிதமா முடிஞ்சது. அந்த ஸ்ரீகணேஷ் கிடக்கற நிலையை எம்.எம்.எஸ். பண்ணியிருக்கேன். ஓப்பன் பண்ணிப் பாருங்க" - பதிலைத் தொடர்ந்து செல்போனில் எம்.எம்.எஸ். ஆப்ஷனில் செயல்பட்டதில் ஸ்ரீகணேஷ் ரத்த வெள்ளத்தில் கிடக்கும் காட்சி கண்ணில் பட்டது. அதைப் பார்த்த நொடி தினேஷ் முகத்தில் பூரிப்பு. அருகில் நின்று கொண்டிருந்த பூரணியிடமும் அந்தக் காட்சியை காட்டினான். அவளுக்கு பகீரென்றது.

"தினேஷ்"

"பயப்படாதே. என் திட்டம் பக்காவா செயல்படத் தொடங்கிடிச்சு. இனி இவன் ஒண்ணு பொணம், இல்லை முடம். அருமை மோகனா ஆண்ட்டியோட அருந்தவப் புதல்வியை இனி தேடப் போறது நான்தான். அதாவது, நான் கொண்டு வரப்போறவதான் மோகனா ஆன்ட்டியோட பொண்ணு."

- தினேஷ் பேசிக்கொண்டே அக்கவுண்ட் ட்ரான்ஸ்ஃபரில் இறங்கினான்!

யாழினியின் கைபேசிக்கு அழைப்பொலி... காதைக் கொடுத்தவள் அப்படியே நிலைகுலைந்துபோனாள்!

# 19

செல்லரித்த
மூங்கில் குடிசை
ஓலையின் நுனியில்
மழைத்துளி
எப்போது விழுமோ?

நன்றி: 'மழை பெய்த பிறகு' கவிதைத் தொகுப்பில்
'பேராசிரியர்' க. ராமச்சந்திரன்

யாழினி நிலை குலைந்து நிற்பதை அருகில் இருந்து கவனித்த சீனிவாசனுக்கும் என்னவோ ஏதோ என்கிற பதட்டம்.

- யாழினியும் பேசிமுடித்துவிட்டுட கலவரம் குறையாமல் நின்றாள்.

"என்ன யாழினி... யார் போன்ல."

"இன்ஸ்பெக்டர்."

"இன்ஸ்பெக்டரா... யார் இங்க வந்து நீ இங்க இருக்கறது சரியில்லைன்னு அந்த எம்.எல்.ஏ.வுக்கு மாமா வேலைபாத்தானே அந்த ஆளா?"

"ஐயோ அவனில்ல. இது வேற ஒருவர் விஷயமும் வேற?"

"என்ன விஷயம்னு சொல்லு." - சீனுவிடம் குரல் வெடித்தது.

இங்க வந்து அப்பாவை பார்த்துடடு உன் கிட்டயும் பேசிட்டுப் போன அந்த ஸ்ரீகணேஷுக்கு ஆக்சிடெண்ட் ஆயிடிச்சாம்! ஆக்சிடெண்ட் ஸ்பாட்ல கிடந்த செல்போன்ல கடைசியா ஸ்ரீகணேஷ் பேசினது என்னோட நம்பரோட அதனால அந்த நம்பரைக் கூப்பிட்டு என்கிட்ட ஆக்சிடெண்ட் மேட்டரை சொன்னார் இன்ஸ்பெக்டர்."

"மைகாட் ஆக்சிடெண்ட் ஆனது எங்கே?"

"மதுரைல இருந்து திண்டுக்கல் போற வழியில வாடிப்பட்டிக்கு கொஞ்சம் முன்னாலயாம்."

"உயிருக்கு எதாவது?"

"ஜி.எச்சுக்கு வரச் சொன்னார். - போனாதான் சீனுன்னா தெரியும்."

"கணேஷ் குடும்பத்துக்குத் தகவல் தந்தாச்சாமா?"

தந்திருப்பாங்க. அதான் செல்போன்ல எல்லா நம்பரும் இருக்கே?

- யாழினி குரலில் சுரத்தே இல்லை. ஒருபுறம் ரங்காச்சாரி படுக்கையில் - மறுபுறம் ஒரு தென்றலாய் வந்து ஒரு பெரும் ஆபத்தில் இருந்து சொல்லாமல் கொள்ளாமல் காப்பாற்றியவனும் ஆஸ்பத்திரியில் தன் மேல் அன்பு கொண்டிருப்பவர்களுக்கு இது சோதனைக் காலமா என்ன?

அவள் மனது நடுங்க ஆரம்பித்தது. சீனு வேகமாக ரங்காச்சாரி இருந்த அறைக்குள் சென்றான். அவர் ஆழ்ந்த மயக்கத்தில் இருந்தார். எப்போது கண்விழிப்பார் என்று கேட்டதற்கு எப்படியும் 24 மணி நேரமாகும் என்கிற பதில் கிடைத்தது. அந்த பதிலோடு யாழினியிடம் வந்த சீனு "புறப்படு யாழினி" என்றான்.

"ஜி.எச்.சுக்கா?"

"ஆமாம். நமக்கு பெரிய உதவிய செய்தவர் அந்த ஸ்ரீகணேஷ். அவருக்கு நாம இப்ப என்ன என்ன செய்யணுமோ அதைத் செய்தே தீரணும்."

"உண்மை தான். அதேசமயம் இங்க அப்பாவை எப்படி விட்டுட்டு?"

"அப்பா இப்ப பிரச்னையே இல்லை யாழினி. அவர் மயக்கத்துல இருக்கார். கண்விழிக்க 24 மணி நேரம் ஆகுமாம். ஜி.எச்.சுக்கு போய் நம்மால என்ன செய்ய முடியும்னு பார்ப்போம்."

- சீனு அவளை இழுத்துக்கொண்டு ஆட்டோ பிடித்தான்.

சென்னையில் ஸ்ரீகணேஷின ஆக்சிடெண்ட் செய்தி மோகனாவை அடைந்தபோது அப்படியே நிலைகுலைந்து போய் உக்கார்ந்துவிட்டாள். சந்தானமும் ஸ்தம்பித்துதான் போனார். ஸ்ரீகணேஷின் அப்பா அம்மாவான வாசந்தியும் சந்திரசேகரும் அழுத்தமான சோகத்தோடு வந்து அவர்கள் எதிரில் 'மதுரைக்குப் புறப்படலாமா?' என்பது போல பார்த்தனர்.

"சந்திரா வெரி சாரிடா... தைரியமா இருடா" என்று மெல்ல பேச்சை எடுத்தார் சந்தானம்.

"நான் தைரியமாதான்டா இருக்கேன். கணேஷ் ரொம்ப நல்ல பிள்ளடா. நானும் நினைவு தெரிஞ்சு ஒரு பாவமும் பண்ணதில்ல. இது ஏதோ

கெட்ட நேரம் - மற்றபடி பெருசா என் மகனுக்கு எதுவும் ஆயிடாதுங்கற நம்பிக்கை எனக்கு இருக்கு" என்று முத்து கோர்த்த மாதிரி பேசினார் சந்திரசேகர். அவரால் அப்படி பேசமுடிந்தது. ஆனால், வாசந்தியால் பேசமுடியவில்லை. பிள்ளை பாசம் அவளை பிசைந்து கொண்டே இருந்தது. வாய்விட்டு அழுதுவிட்டாள். அப்போது கையில் விமான டிக்கெட்டுக்கான பிரிண்ட் அவுட்டுடன் எதிரில் வந்தான் தினேஷ்!

"மாமா மதுரைக்கு ஃப்ளைட் டிக்கெட் ரெடி. நானும் உங்க கூட வரேன்" என்றான். முகத்தில் செயற்கையான சோகத்தை உருவாக்கிக் கொண்டிருந்தான். அப்படி நடிக்க வராததால் ஒதுங்கியிருந்தாள் அவன் அம்மாவான பூரணி.

அவளுக்குள் சந்திரசேகர் பேச்சு. நெருடியபடியே இருந்தது. "நான் எந்த பாவமும் செய்ததில்லை. என் மகனும் மிக நல்லவன். அவனுக்கு எதுவும் ஆகிவிடாது. இது ஏதோ கெட்ட நேரம்" என்று அவர் பேசியது அவள் மனதை அறுத்துக்கொண்டே இருந்தது.

இப்படி தினேஷ் வரையில் தன்னால் பேச முடியுமா என்று கேட்டுக் கொண்டவளுக்கு லேசாக நெஞ்சையடைத்தது. ஆனால், தினேஷ் மிக வேகமாக இருந்தான். இனி இந்த வீட்டின் அவ்வளவு செயல்பாடுகளும் தன் மூலமாக மட்டுமே நடைபெறும். நடைபெற்றாக வேண்டும்' என்று அவன் தீர்மானித்து விட்டதை அவன் செயல்பாடுகள் பூரணிக்கு உணர்த்திக் கொண்டிருந்தன.

சந்தானமும் மோகனாவும் கூட அவன் உள் மனதின் சூது தெரியாமல் அவன் மிக இயல்பாக நடந்துகொள்வதாகத் தான் நினைத்தனர்.

பங்களா முகப்பில் ஏர்போர்ட்டுக்கு புறப்படுவதற்குத் தயாராக கார் காத்திருந்தது. அதில் அவனே அவர்களின் சூட்கேஸ்களை எடுத்து வைத்தான். வேலைக்காரர்கள் இருந்தும் அவர்களை பார்வையாலேயே தூர நிறுத்தினான். காரில் புறப்படுவதற்கு முன் பூரணியை தேடி வந்தான். அவளை அர்த்த புஷ்டியோடு ஒரு பார்வை பார்த்தான். அவளோ ஈன சுரத்தில் "பாத்து தினேஷ் எனக்கு பயமா இருக்கு" என்றாள்.

"பயப்பட்றதா இருந்தா செத்துடும்மா. நீயும் பயந்து எனக்குள்ளயும் அத ஏற்படுத்த முயற்சி செய்யாதே. இதுநான் பிறந்து வளர்ந்த இடம். இங்க என் கொடி மட்டும்தான் பறக்கணும். பறக்கும்" என்று அழுத்தமான உச்சரிப்போடு அதே சமயம் தழைத்தக் குரலில் அவள் காதில் மட்டும் விழும்படி பேசிவிட்டுப் புறப்பட்டுவிட்டான்.

ஜி.எச்!

யாழினியும் சீனுவும் வந்து பார்த்தபோது ஸ்ரீகணேஷ் ஒரு ரத்தப் பொட்டலம் போல் இருந்தான். பார்க்கவே கண்களைக் கரித்தது. டாக்டர்களும் நர்ஸும் "இப்ப எதுவும் சொல்ல முடியாது" என்கிற பதிலைத்தான் சொன்னார்கள். நல்லவேளையாக கேஸ் ஃபைல் செய்வதற்காக போலீஸார் இருவர் காத்திருந்தனர். அவர்கள் யாழினி. சீனுவிடம் பேசத் தொடங்கினர்.

"ரொம்ப மோசமான ஆக்சிடெண்ட்டும்மா இது. ரோட்ல போறவங்க தகவல் தந்து ஹைவேஸ் பெட்ரோல் கார்ல போய் பாக்கும்போது உடம்புல இருக்கற ரத்தம் அவ்வளவும் போயிருந்தது. ஒரு கை சுத்தமா அவுட் கால்லயும் ஃப்ராக்சர். பொழச்சாலும் ஒருத்தர் தயவு இல்லாம வாழறது கஷ்டம்" என்று அவர்களிடம் தயங்கித் தயங்கி சொன்னார். அதைக் கேட்ட நொடி கண்களில் மளுக்கென்று கண்ணீர் திரண்டு விட்டது யாழினிக்கு சீனிவாசனுக்கும் பதைத்தது.

"சார் இவரோட பேரண்ட்ஸுக்கு தகவல் தந்தாச்சா?"

"தந்தாச்சாவா? அவங்க இப்ப சென்னைல இருந்து விமானத்துல கிளம்பிட்டாங்க. தினேஷ்ங்கறவர் இப்பகூட பேசினார். பையன் பெரிய இடம் போல இருக்கு."

"அதுசரி... எப்படி சார் ஆக்சிடெண்ட் ஆச்சு. அது பத்தி எதாவது தெரிஞ்சிச்சா?"

"தெரியல. பேஷண்ட் கண் முழிச்சு சொன்னா தான் உண்டு. கார் நொறுங்கிக்கிடக்குது. இப்ப கூட ஆக்சிடெண்ட் ஸ்பாட்லதான் கிடக்குது. கிரேன் வேன் போய் வீடியோ எடுத்துட்டு அப்புறமா அப்புறப்படுத்துவாங்க."

- போலீஸ்காரர் பேச்சில் தகவல்கள் இருந்தன. வருத்தம் இருப்பதாகத் தெரியவில்லை. அவருக்கு இது தொழில்.

- சீனுண்ணா இப்ப என்னண்ணா பண்ணலாம்?" யாழினி பரிதாபமாக கேட்டாள்.

"கணேஷும் பேசற நிலைல இல்ல. கணேஷ் அப்பா அம்மா வரட்டும். அவங்கள பாத்து ஆறுதல் சொல்லிட்டு புறப்படுவோம். நம்மால இப்ப முடிஞ்சது அது மட்டும்தான் யாழினி" என்றான் சீனு. அவன் பேச்சு அவளுக்குள் இனம் தெரியாத சோகத்தை தான் ஏற்படுத்தியது. ஒரு

சலிப் புணர்வும் ஏற்பட்டது. எதாவது செய்தே தீரவேண்டும் என்பது போல ஒரு வேகமும் எற்பட்டது.

"என்ன யாழினி... அவங்க வரறவரைல காத்திருக்கலாம் தானே?"

"நிச்சயமா. அதேசமயம் கணேஷுக்காக நான் எதையாவது செய்யத் துடிக்கறேன் சீனுண்ணா."

"நீ மட்டுமா. நானும்தான்! ஆனா, இப்ப நாம செய்ய முடிஞ்சது பிரார்த்தனை மட்டும்தான்."

- அவன் அப்படி சொல்லவும் அதை கப்பென்று பிடித்துக்கொண்டாள் யாழினி.

"கரெக்ட்டுண்ணா. பிரார்த்தனை தான் இப்ப நமக்கு இருக்கற ஒரேவழி. அதை நான் இந்த மண்ணையே ஆட்சி செய்யற மீனாட்சியம்மன் சன்னதில போய் செய்யப் போறேன். அவ இருக்கறது சத்தியம்னா நான் கோயில்ல இருந்து திரும்பி வரும்போது கணேஷ் வரைல ஒரு நல்ல விஷயமாவது என் காதுல விழனும், வாண்ணாபுறபடுவோம்."

"நானா?"

"ஏன் சீனுன்னா?"

"இல்ல, அவங்க எப்ப வேணா வரலாம். அப்ப நான் இருந்தா நல்லதுன்னு நினைக்கறேன். நீ வேணும்னா போய்ட்டு வா."

"சரிண்ணா. நான் ஒரு ஆட்டோ பிடிச்சு போய்ட்டு வந்துட்றேன். என் கைல என் செல்போன் இருக்கு கணேஷ். அப்பா அம்மா வந்தா உடனே தகவல் கொடு."

"தரேன். நீ சீக்கிரமா போய்ட்டுவா."

- யாழினி வேகமெடுத்தாள். ஜி.எச்.சுக்கு வெளியே கூட மருந்து நெடி வீசிற்று. டிராஃபிக் இடைஞ்சலுக்கு நடுவில் ஆட்டோக்காரர் அநியாயத்துக்கு நூறு ரூபாய் கேட்டார். அங்கிருந்து கோயில் வாசல் ஒரு கிலோ மீட்டர் கூட இருக்காது. யாழினி அதை எல்லாம் பொருட்படுத்தும் நிலையில் இல்லை.

ஆட்டோவும் கடாமுடா சப்தமுடன் கிழக்கு கோபுர வாசலுக்கு முன்னால் ஒரு குறிப்பிட்ட இடத்தில் நின்றது. இறங்கி ஓடினாள். பொற்றாமரைக்குளம் இடதுபுறத்தில் இருந்து அதில் தண்ணீர்

தேக்கப்பட்டிருந்தது. குளத்துப்படிகளில் பலர் அமர்ந்திருந்தனர். நக்கீரனும் அவ்வைப் பிராட்டியும் ஏறி இறங்கிய படிகள்! ரங்காச்சாரி பொற்றாமரைக்குளம் பற்றி நிறையவே யாழினிக்குச் சொல்லியிருக்கிறார்.

"ஒரு காலத்தில் அதில் தங்கத்திலேயே தாமரைகள் பூத்தன. அதனால்தான் அதற்கு பொற்றாமரைக் குளம் என்றே பெயர் வந்தது" என்றவரிடம் "அது எப்படி தங்கம் தாவரம் போல பூக்க முடியும்" என்று யாழினியும் கேட்கப் போக, ரங்காச்சாரி சொன்னதெல்லாம் மறக்க முடியாதவை.

"அந்தக் கோயிலை நமக்கு இருக்கற அறிவால புரிஞ்சுக்க முயற்சி செய்தா அது முடியாதும்மா. அது நம்ப முடியாத அதிசயங்களுக்கு சாட்சியா நிக்கற கோயில். உள்ள இருக்கற மீனாட்சி வெறும் கல் இல்ல. அந்த விக்ரகம் பச்ச மரகதக்கல்லால ஆனது. மரகதக் கல் புதன் கிரகத்தோட காரகத்துவத்தை பிரதிபலிக்கக் கூடியது. அதனால மதுரை, புதனுக்குண்டான ஒரு ஸ்தலமும் கூட. அடுத்து புதனோட அதிதேவதை விஷ்ணு அதாவது பெருமாள்! ஆகையால மீனாட்சியை வணங்கும்போது பெருமாளை வணங்கினதுக்கும் அது சமமாயிட்றது. புதன்தான் மருந்துக்குரிய கிரகம். ஆகையால மீனாட்சி தரிசனம் நோய் நிவாரணமும் கூட" - என்று ஒரு நாள் அவர் சொன்னதெல்லாம் உள் ஓடிட, நேராக மீனாட்சியின் முன்பு வரிசையில் முட்டி மோதியவளாக போய் நின்றாள்.

மீனாட்சியம்மன் விக்ரகமும் நடந்த, நடக்கப்போற அவ்வளவும் உனக்குத் தெரியும். நான் என் வாழ்க்கைல இப்படி ஒரு துக்கமான நாளை சந்திச்சதே இல்லை. ஒரு பக்கம் என் அப்பா. இன்னொரு பக்கம் என் மானத்தைக் காப்பாத்தின கணேஷ். இரண்டு பேருமே உயிருக்கு போராட்ற நிலை. எனக்கு இப்ப உன்னை விட்டா உதவ பெருசா யாருமே இல்லம்மா. உன் ஆட்சி நடக்கற மதுரைல என் நம்பிக்கைக்கு விரோதமா எதுவும் நடக்கக் கூடாது. கணேஷ் ரொம்ப நல்லவர் மா. என் மானத்தைக் காப்பாத்தினவர். அவருக்கு எதுவும் ஆகக்கூடாது. அவர் நல்ல படியா எழுந்துடணும், அவர் பூரண குணமான உடனேயே நான் அவரோடயே உன் சன்னதிக்கு வந்து உனக்கு மாலை போட்டு அர்ச்சனை பண்றேம்மா. இதுக்கு மேல நான் உன்கிட்ட என்ன பேச? எனக்கு எல்லா விதத்துலயும் பக்கத் துணையா இரு."

- வேண்டி முடித்தாள். பட்டர் குங்குமம் தரும்போது மனோரஞ்சிதப் பூ ஒன்றையும் சேர்த்து தந்தார். அப்படி நடந்தால் மனதில் நினைத்தபடியே

நடக்கும் என்று மீனாட்சி கூறிவிட்டதாகப் பொருள்.

வாசம் மிகுந்த அந்தப் பூ யாழினியின் கூந்தலில் ஏறிக் கொண்டது சன்னதியை விட்டு புறப்பட்டாள். திரும்பவும் குளத்தங்கரை. கோயிலுக்கு வந்தால் சிறிது நேரம் அமர்ந்து விட்டு செல்லவேண்டும் என்னும் விதி ஞாபகத்துக்கு வரவே குளத்தங்கரையிலேயே அமர்ந்தாள். பக்கத்தில் பட்டுப்புடவையும் வட்டக்குங்குமமுமாய் மீனாட்சியே நேரில் வந்ததுபோல ஒரு பெண்மணியும் வந்து அமர்ந்தாள். வாஞ்சையாக பார்த்தாள். மெலிதாக சிரித்தாள். யாழினிக்குமே அந்தப் பார்வையும் சிரிப்பும் பிடித்துப் போனது. பதிலுக்கு சிரிக்க முற்பட்டான். ஆனால், முடியவில்லை.

"என்னம்மா... ஒரு உயிருக்கு இரண்டு உயிரை காப்பாத்த துடிக்கறே போல இருக்கே?"

- அந்தப் பெண்மணி கேட்கவும் யாழினியிடம் ஒரு சிலிர்ப்பு

# 20

'வானம் எனக்கு கற்றுத் தந்தது;
பௌர்ணமிகளால் நிரம்ப,
அமாவாசைகளால் காலியாக,
உதயத்திலும் அஸ்தமனத்திலும் ஒரே
மாதிரி சிவந்திருக்க,
எங்கும் இருக்க...
எங்கும் இல்லாதிருக்க..'

நன்றி: மலையாளக் கவிஞர் சச்சிதானந்தர்
தமிழாக்கம் : கவிஞர் சிற்பி. பாலசுப்பிரமணியன்

யாழினி சிலிர்ப்போடு அந்த பெண்மணியைப் பார்த்தாள். அந்த பெண்மணியின் முகத்தில் பலமான மஞ்சள் பூச்சு நெற்றியை சரியாக பிரித்து மையத்தில் குங்குமத்தை அங்கு அழகாக பிசிறில்லாத வட்டமாக வைத்திருந்தாள். கூந்தலிலும் சரம் சரமாய் மல்லிகை கதம்பம்.

சில பெண்களை எவ்வளவு முயன்றாலும் காமுகர்களால் கூட தவறாகப் பார்க்க முடியாது. இந்தப் பெண்ணும் அப்படி ஒரு பெண்ணாக இருந்தாள்.

"என்னம்மா பாக்கறே... எனக்கு எப்படி தெரியும்னா?"

"ஆமாம். நீங்க யாரு?"

"நானா... முகத்தை வெச்சே மனசுக்குள்ள இருக்கறத சொல்றவ... குறி சொல்றவள்னு வெச்சுக்கையேன்."

"குறி சொல்றவளா.. அதாவது ஜோசியம்."

"உம். அப்படியும் சொல்லலாம்."

"ஆனா, எனக்கு அதுல எல்லாம் நம்பிக்கை இல்லைம்மா."

"நம்பற நேரம் வரும்போது நம்பித்தானே தீரணும்."

"அம்மா உங்களப் பார்த்தா ரொம்ப நல்லவங்க மாதிரி இருக்கீங்க. என்னைக் கொஞ்சம் தனியா விடுங்க. நான் இப்ப ரொம்ப மோசமான மனநிலைல இருக்கேன்."

"அது தெரிஞ்சுதானே நானே வந்துருக்கேன்."

"விடமாட்டீங்களா?"

"சரிம்மா. விலகிக்கறேன்! ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சொல்றேன். ஒரு உயிர் போயே தீரும். அப்படி போன ஃபிறகு இதே இடத்துக்கு வா. நான் இங்க தான் சுத்தி கட்டிருப்பேன். அப்ப உனக்கு அபூர்வமான விசயம் ஒண்ணு கால்வேன்."

- அந்தப் பெண்மணி கிளம்பிவிட்டாள். யாழினிக்கு அவள் பேசிய எதுவும் மனதில் நிற்கவில்லை. 'ஒரு உயிர் வாயே தீரும்' என்று சொன்னது மட்டும் மனதில் பசை போட்டு ஒட்டிக்கொண்டது. இங்கே குளத்தங்கரை பக்கமே வந்திருக்க வேண்டாமோ என்றும் தோன்றிற்று. வந்து உட்காரப் போய்தானே அந்தப் பெண்மணியும் வந்து மனதில் தீப்பிடித்தது? மளுக்கென்று கண்களில் கண்ணீர் தேங்கி விட்டது.

'ஒரு உயிர் போயே தீரும்' என்கிற அந்தப் பெண்ணின் குரல் திரும்பவும் அவள் நெஞ்சை அறுக்க ஆரம்பித்தது. கடவுளே ஒரு உயிரும் போகக்கூடாது. என் வரையில் இரண்டு பேருமே மிக முக்கியமானவர்கள் என்று தனக்குள் சொல்லிக் கொண்டவள் உட்கார்ந்தது போதும் என்று எழுந்து நடக்கத் தொடங்கினாள்.

ஆஸ்பத்திரி வாசலில் நின்ற காரில் இருந்து முதலில் இறங்கியவன் தினேஷ்தான். பின்புறம் இருந்து சந்தானமும் மோகனாவும் இறங்கினர். தொடர்ந்து வந்த காரில் இருந்து சந்திரசேகரும் வாசந்தியும் இறங்கினர்.

வாசந்தி தரையைத் தொட்ட மாத்திரத்தில் நடக்கவில்லை. ஓட்டமெடுத்தாள்.

"வாசந்தி இரு வந்துட்றேன்" - என்று சந்திரசேகர் பேசியது காதிலேயே விழவில்லை. ரிசப்ஷனிஸ்ட் முன்னால் நின்றவள் ஸ்ரீ கணேஷ் பெயரைச் சொல்லி வார்டு நம்பரைக் கேட்டாள். ரிசப்ஷனில் கூறவும் படபடப்போடு வார்டு நோக்கி நடக்க ஆரம்பித்து விட்டாள்.

எமர்ஜென்சி வார்டின் வெளிப்புறமாய் மரப்பெஞ்சுகள் போடப்பட்டு பெரும் கூட்டம் அதன் மேல் அமர்ந்திருந்தது. அவர்களில் ஒருவர் முகத்தில் கூட சுரத்தை இல்லை.

"புது பைக் வாங்கித் தராதீங்க. வாங்கித் தரா தீங்கன்னு தலையால அடிச்சிக்கிட்டேனே... கேட்டீங்களா?" என்று ஒரு பெண் அழவும் அந்தப் பெண்ணுக்கு ஆறுதல் கூறிடக் கூட தோன்றாதபடி ஒருவர் வெறித்தபடி இருந்தார். புதிய பைக்கில் சிட்டாக பறந்த வாலிபன் ஒருவன் விபத்துக்குள்ளாகி அங்கேதான் சேர்க்கப்பட்டிருந்தான். இன்னொரு புறம் ஒரு குடும்பம் அழுது கொண்டிருந்தது.

"நீங்க பைக் வாங்கித்தந்ததால அழுவறீங்க. நாங்க வாங்கித் தரலை அதனால விஷத்தை குடிச்சிட்டான் எங்க பையன். வாங்கித் தந்தாலும் எமன் வந்துட்றான். தராட்டியும் வந்துட்றானே..." என்று அந்த குடும்பத்து நபர் புலம்பும்போது கச்சிதமாய் வந்துநின்றாள் வாசந்தி. அவள் அங்கு வரும் போது தானா எமனைப் பற்றி அவர்கள் பேச வேண்டும்? வாசந்திக்கு வியர்த்து மயக்கம் வரப் பார்த்தது. I.C.U-வின் கதவுகள் உள் தாழிடப்பட்டிருந்தன. உள்ளே செல்ல யாருக்குமே அனுமதியில்லை. அந்தக் கதவுக்கு முன்னாலே நின்று தவித்தாள் வாசந்தி.

ஒரு பெண் வரையில் அவளுக்கு கன்னி கழிவது ஒரு கட்டம். அது நல்ல விதமாக ஈடேற வேண்டியது ஒரு படி. அடுத்து அவள் மலடியில்லை. எனும்படியாக பிள்ளை பெறுவது. இது இரண்டாவது படி. அப்படி பெற்ற பிள்ளையை நல்லவிதமாய் ஆளாக்குவது. ஆளாகிவிட்ட பிள்ளையின் வழியாக இன்னொரு பிள்ளை வந்து 'பாட்டி' என அழைக்கும்போதுதான் அவள் பாட்டுடையவள் ஆகிறாள். இல்லாவிட்டாள் அவள் பாட்டுடையவள் அல்ல. போட்டு உடைத்தவள் என்றாகிவிடும்.

நான் யார்...? பாட்டுடையவளா... இல்லை போட்டு உடைத்தவளா? வாசந்திக்கு தவிதவியென்று தவித்தது மனது. சந்திரசேகர் போல

திடமாக மனதை தூக்கி நிறுத்திக் கொள்ள முடியவில்லை. உளவியல் தெரிந்ததால் அது அவருக்கு சாத்தியமயிற்று. ஆனால், தாய்மை உளவியல் பார்த்து மனதை எஃகு போல மாற்றிக்கொள்ள முடியாதபடி தவித்தது.

சந்திரசேகரும் சந்தானமும் மோகனாவும் அந்த வார்டுக்கு வந்தபோது கதவுக்கருகே அதைத் திறந்து கொண்டு உள்ளே போக முயன்றபடி இருந்தான் வாசந்தி. அப்போது தான் மோகனாவுக்கும் ஒரு தாக்கம் ஏற்பட்டது. 'தன் பிள்ளை என்ற ஒன்று இருந்து அது இப்படி உள்ளே கிடக்க நேர்ந்திருந்தால் தனக்கும் இதைவிடக் கூடுதலாக துடிப்பு ஏற்கப்பட்டிருக்குமோ? அவளுக்கும் கேள்வி எழும்பிய நொடி ஓடிப்போய் வாசந்தியை ஒட்டி நின்றவளாக அவளுக்கு ஆதரவாக தோளைப்பற்றிக் கொண்டாள்.

"தைரியமா இரு வாசந்தி... நிச்சயமா பயப்படும்படியா எதுவும் ஆயிடாது."

"மோகனா... நீ என்ன சொன்னாலும் சரி... கணேஷைப் பாக்காம என்னால நிலைப்பட முடியாது" - என்று வாசந்தி வாய்விட்டு புலம்ப அங்கே ஒரு மூலையில் நின்று கொண்டு போனில் யாருடனோ பேசியபடி இருந்த சீனிவாசன் போனை கட் செய்துவிட்டு வேகமாக வந்தான். சந்தானம், சந்திரசேகர் இருவரையும் நெருங்கி 'எக்ஸ்யூஸ்மீ சார்... நீங்கதான் கணேஷ் பேரண்ட்சா?' எனக் கேட்டான்.

"எக்ஸாக்ட்லி" - நீங்க?

"நான் சீனிவாசன் திருமகள் முதியோர் இல்லத்தோட ஃபவுண்டர் சங்காச்சாரியோட உதவியாளன்."

"ஓ.. நீங்கதானா அது?" - எனும் போதே தினேஷ் வந்து "அங்க்கிள் வாங்க டாக்டர் கூப்பிட்றார்" என்றான். தினேஷ் சீனிவாசனை பொருட்படுத்தவேயில்லை. அவன் அழைக்கவும் அவர்களும் அவன் பின்னே செல்லத் தொடங்கிவிட வாசந்தியும் மோகனாவும் கூட பின்தொடர்ந்தனர். சீனிவாசன அந்த இருவரையும் பார்த்தான். அதில் மோகனா வாசந்தியை தோளைப் பற்றி அணைத்தபடி நடந்த விதம் அப்படியே அவனுக்குள் யாழினியை ஞாபகப்படுத்தியது. ஒரு மின்னல் ஒன்று சரேல் என்று வெட்டியது போல் இருந்தது. கணேஷ் சொன்னதெல்லாமும் நினைவுக்கு வந்தது. யாழினிதான் ஒருவேளை அவன் தேடிவந்த பெண்ணோ? பாடி லாங்வேஜ் எனப்படும் உடல் மொழி அப்படியே பொருந்துகிறதே... சீனிவாசனுக்குள் நின்ற இடத்தில்

எண்ணங்கள் கொப்பளிக்க ஆரம்பித்தன. கச்சிதமாக கையில் பிரசாதமோடு யாழினியும் வந்து கொண்டிருந்தாள். நெருங்கியவளை சீனிவாசன் அதே நினைப்போடு பார்த்தான்.

"என்ன சீனுண்ணா... எதுக்கு அப்படிப் பாக்கறே?"

"காரணமாத்தான் யாழினி... ஆமா, கோயிலில் தரிசனம் நல்லவிதமாக கிடைச்சதா?"

"பயங்கர கூட்டம்ணா. நிக்கவே விடலை. அப்படியே நடந்தபடியே தான் கும்பிட முடிஞ்சது. ஆனாலும், பட்டர் குங்குமத்தோட மனோரஞ்சிதப்பூவைத் தந்தார். அது எனக்கு நல்ல சகுணமா பட்டது. ஆனா, நான் பொற்றாமரைக்குளம் பக்கம் போயிருக்கக் கூடாது."

"ஏன் யாழினி?"

"பாக்க மங்களமா ஒரு அம்மா அங்க இருந்தாங்க அவ்வளவு அழகு."

"அவங்களுக்கென்ன?"

"என்னவா? கிட்ட வந்து அவங்க குறிசொல்றேன்னு ஆரம்பிச்சிட்டாங்க."

"ஏதாவது சொன்னாங்களா?"

"சொன்னாங்க. ஆனா, நான் எனக்கு அதுல எல்லாம் நம்பிக்கை இல்லைன்னு சொல்லிட்டேன். இருந்தும் ஒரு விஷயம் சொன்னாங்க. அதுல இருந்தே மனசு அடங்காம துடிக்குது."

"என்ன சொன்னாங்க கமான்... கமான்..."

"வேண்டாம்ணா... அது என்னோட போகட்டும்."

"நல்ல விஷயமா இருந்தா சொல்ல வேண்டியது தானே?"

"இருந்தா தான் சொல்லிடுவேனே?"

"அப்ப கெட்ட விஷயமா?"

"ஆமாம்... இரண்டு உயிர்ல ஒரு உயிர் போயிடும்னாங்க."

யாழினி சொன்ன நொடி சீனிவாசன் முகம் அப்படியே மாறிவிட்டது.

"சீனுண்ணா... என்ன உன்னையும் இப்ப பயம் தொத்திக்கிச்சா?"

"ஆமாம்மா... நீ சந்தோஷமான விஷயம் சொல்லப் போறேன்னுதான் நான் நினைச்சேன்."

"அவங்க என்னை விடலை. 'நான் சொன்னபடி நடந்த பிறகு நீ திரும்ப இங்க வா... இங்கதான் நான் இருப்பேன். அப்ப நான் உனக்கு அபூர்வமான விசயம் சொல்வேன்'னாங்க என்ன அபூர்வமான விசயமோ? ஏண்ணா இப்படி இந்த ஜோசியம் சொல்றவங்க தேடி வந்து எதையாவது சொல் லிட்டுப் போறாங்க. இப்படி எதாவது பயமுறுத்தற மாதிரி சொன்னாதான் நாம அவங்ககிட்ட பயந்து போய் ஜோசிய பாப்போமா... அதுக்குதானே?"

- யாழினி கேட்டது சீனிவாசன் காதிலேயே விழவில்லை. அவனுக்குள்ளேயும் இப்போது ரங்காச்சாரியா? கணேஷா? யார் உயிர் போகப் போகிறது என்கிற கேள்வி வேகமாய் எழத் தொடங்கி விட்டது.

"ஆமா... கணேஷ் பேரண்ட்ஸ் இன்னுமா வரலை?" - யாழினியின் கேள்வி சீனுவின் காதிலேயே விழவில்லை.

"சீனுன்னா..."

"ஆங்... கூப்பிட்டியா?"

"என்னண்ணா... என் பயம் இப்ப உன்னையும் பிடிச்சிக்கிச்சா... நான் துணிச்சலா எல்லாத்தையும் மீனாட்சி காலடில போட்டுட்டு வந்துட்டேன். அவ பாத்துக்கட்டும்."

"அதுவும் சரிதான். ஆமா, என்ன கேட்டே?"

"பேரண்ட்ஸ் வந்துட்டாங்களான்னேன்."

"பேரண்ட்ஸ்... பேரண்ட்ஸ்... ஓ வந்துட்டாங்களே."

- சீனு அவள் பொதுவாக பேரண்ட்ஸ்? என்று மட்டும் கேட்டதை ஆச்சரியத்தோடு எடுத்துக் கொண்டான். யாழினி தான் சந்தானம் - மோகனா மகள் என்றால் அவர்கள்தானே யாழினியின் பேரண்ட்ஸ்?

மின்னல் போல அவனுக்குள்ளே கேள்வி. எவ்வளவு கச்சிதமாக இவள் கேட்கிறாள்.

ஒரு வேளை இதுதான் அபூர்வ தகவலோ?

இதைத்தான் கோயிலில் அந்தப் பெண்மணி அப்படி சொன்னாளோ? - அவனுக்குள் தொடர்ந்து எண்ண ஓட்டம் யாழினிக்கு அவன் அப்படி

தன்னை மறந்து யோசிப்பது ஆச்சரியத்தையே தந்தது.

"சீனுண்ணா... என்னாச்சு... அடிக்கடி உனக்குள்ளேயும் கரண்ட் கட்டா?" - என்று நகைச்சுவையாக கேட்டாள்.

"இல்லம்மா... இப்பதான் ரொம்ப பிரைட்டா நான் பல விஷயங்களை யோசிக்கறேன். வாழ்க்கையை நினைச்சா எனக்கு பிரமிப்பா இருக்கு. கோடானு கோடி பேர் இந்த உலகத்துல. ஆனா, ஒருத்தர் முகம் போல இன்னொருத்தருக்கு இல்ல. ஒருத்தர் குரல் போலவும் இன்னொருத்தருக்கு இல்லை. கடவுள் நிஜமா பெரிய படைப்பாளிம்மா. நினைச்சாலே பிரமிப்பா இருக்கு. அவன் நடத்தற நாடகமும் அதன் காட்சிகளும் இன்னும் பிரமிப்பா இருக்கு."

- சீனுவின் அந்த விசாரம் யாழினிக்கு ஒரு பேராச்சரியம்.

"ஆமா - இப்ப இப்படி தத்துவமா பேசற நேரமா? நான் ஒண்ணு கேட்டா நீ ஒண்ணு சொல்றியே..."

"நீ என்ன கேட்டே....?"

"கணேஷ் பேரண்ட்ஸ் எங்கே?"

"ஓ அவங்களா... நீ உன்னோட பேரண்ட்ஸைத்தான் கேக்கறியோன்னு நான் நினைச்சேன்."

- யாழினி கேட்ட அந்த நொடி டாக்டரை பார்க்க போயிருந்த அவர்கள் வார்டு முகப்பு நோக்கி வந்த வண்ணமிருக்க, கூடவே வந்திருந்த தினேஷ் அவர்களோடு வந்த நிலையிலேயே யாழினியையும் சீனுவையும் பார்த்தான். யாழினி அப்போது அவனைப் பார்த்த விதம் அப்படியே மோகனா பார்ப்பது போலவே இருந்தது. அந்த நொடியே அவனுக்குள் ஒரு பெரும் பகீர் உணர்வு!

# 21

'ஆயிரம் வார்த்தைகளைக் காட்டிலும்
ஒரு செயல் மேன்மையானது
ஆயிரம் செயல்களைக் காட்டிலும்
ஒரு சாதனை மேம்பட்டது.
ஆயிரம் சாதனைகளைக் காட்டிலும்
ஒரே ஒரு உள்ளத்திலாவது நம்பிக்கை
விளக்கேற்றுவது வாழ்க்கையின்

பொருளை முழுமையாக்குவது...'

நன்றி: வெ. இறையன்பு ஐ.ஏ.எஸ்.

தினேஷ் யாழினியைப் பார்த்த நொடியே அவள்தான் மோகனாவின் தொலைந்துபோன மகள் என்பதற்கான ஒரு புகைப்பட ஃப்ளாஷ் போல அவனுள் ஒளிவிட்டு அடங்கியது. அதைத் தொடர்ந்து மோகனாவும் யாழினியும் பார்த்துக்கொண்டால் நிச்சயம் தனக்கேற்பட்டது போலவே

தாக்கங்கள் ஏற்படக் கூடும் என்பது வரை மிக வேகமாய் கணக்கு போட்டவன், "ஆன்ட்டி... நாம கேன்டீனுக்குப் போய் ஒரு காபி சாப்ட்டுட்டு வருவோம்." - வந்த வேகத்தில் திரும்பினான். மோகனாவோ "எனக்கு எதுவும் வேண்டாம்" என்றாள். வாசந்தியும் ஆமோதித்தாள். அந்த சாக்கில் அவர்கள் அங்கேயே நிற்க நேர்ந்தது. ஐ.சி.யு. வுக்கு வெளியே நின்றிருந்த சீனிவாசன் யாழினியிடம், "அதோ அவங்க தான்..." என்று கை காண்பித்தான். அவன் சுட்டிக் காட்டியது அவர்கள் நான்கு பேரையும்தான். அதற்குள் தினேஷ் வற்புறுத்தி அவர்களை திரும்பி அழைத்துச் செல்லத் தொடங்கியிருந்தான்.

"என்னண்ணா வந்தவங்க எங்க திரும்பிப் போறாங்க?"

"தெரியலியே. நீ இரு நான் போய் விசாரிச்சிட்டு வரேன்."

சீனு யாழினியை வார்டுக்கு வெளியில் நிறுத்தி விட்டு, அவர்களைத் தேடி நடக்க ஆரம்பித்தான்.

யாழினிக்கு மனதில் ஒரு வெறுமை பொதுவாக கோயிலுக்குப் போய்விட்டு வந்தால் தெம்பாக இருக்கும். ரங்காச்சாரி அது ஏன், எதனால், எப்படி என்பதற்குச் சொன்ன விளக்கம் தான் அவள் வரையில் பிரமானம்.

பொதுவாக, கோயிலுக்கு நம்பிக்கை இல்லாதவர்கள் செல்வதில்லை. எனவே கோயிலுக்குள் இருப்பவர்கள் அவ்வளவு பேரும் நம்பிக்கை உடையவர்கள் என்பது ஒரு பாசிட்டிவான விஷயம். அடுத்து அவர்கள் மனம் அங்கே வழிபாட்டுக்குப்பிறகு லேசாகி விடுகிறது. இது இரண்டாவது பாசிட்டாவான விஷயம்.

மூன்றாவதாக, கோயிலில் பேணப்படும் தூய்மை, மங்கலச் சொற்கள் மற்றும் மந்திரங்கள் காரணமாக உருத்திரண்டிருக்கும் சக்தி என்பது மூன்றாவது பாசிட்டிவான விஷயம். இப்படி ஒன்றுக்கு மூன்று பாசிட்டி

வான விஷயங்கள் உள்ள ஒரே இடம் கோயிலாக மட்டுமே இருக்க முடியும். களிப்பைத் தரும் ஒரு கலை அரங்கில் கூட பாசிட்டிவ் எனர்ஜி திரண்டு இருப்பதாகக் கூற முடியாது. இதனால்தான் கோயிலுக்குப் போய்விட்டு வந்தாலே ஒரு சந்தோஷம் மனதுக்கு வந்துவிடுகிறது. ஆனால், இன்று அதற்கும் இடமில்லாத மனம் ஏன் இப்படி அலைபாய்கிறது? அந்தப் பெண் எதற்காக இப்படி தேடி வந்து 'ஒரு உயிர் பிரியும்' என்று மனதுக்குள் தீயை மூட்டிவிட்டுச் செல்ல வேண்டும் என்று அவளுக்குள் ஒரே அலைபாய்ச்சல்.

அதற்கு தோதாக உள்ளே ஒரு விபத்துக்குள்ளான நபரின் உயிர் பிரிந்துவிட்ட நிலையில் டாக்டர் ஒருவர் வெளியில் வந்து உரியவர்களைக் கூப்பிட்டு அதைச் சொல்லத் தொடங்கும் போதே, "ஐயோ என்னை விட்டுட்டு போயிட்டியா?" என்று ஒரு பெண் வெடித்து அழத் தொடங்கியது யாழினியை ஒரு உலுக்கு உலுக்கிவிட்டது.

அதற்கு மேல் அங்கு நிற்க அவளுக்குப் பிடிக்கவில்லை. அதே சமயம் சீனு அவர்களைத் தொடர்ந்த நிலையில் கேன்டீனில் அவர்களை நெருங்கியிருந்தான். சீனிவாசனைப் பார்த்தும் பார்க்காதது போல தினேஷ் நிற்க, "ஹலோ சார் நான் தான் சீனிவாசன். உங்களுக்கு தகவல் தந்தது நான்தான்" என்றான் சந்தானத்திடம்.

"ஹலோ மிஸ்டர் சீனிவாசன் வெரி சாரி - நீங்க இதுக்கு முந்தியே அறிமுகப்படுத்திக்கிட்டும் நான்தான் சரியா உங்க கூட பேசலை. உங்க தகவலுக்கு ரொம்ப நன்றி. நாங்க உங்களுக்கு ரொம்ப கடமைப்பட்டுருக்கோம்"

"அதெல்லாம் இருக்கட்டும் சார். சீஃப் டாக்டரைப் பாத்தீங்களா. என்ன சொன்னார்?"

"தற்காலிகமா உயிருக்கு ஆபத்து எதுவுமில்லைன்னு சொல்லிட்டார். ஆனா, ஹெவி டேமேஜ்... அது எப்படிப்பட்ட டேமேஜ்னு போகப் போகத்தான் தெரியும்."

"அப்படி எல்லாம் எதுவும் ஆயிடாது சார். ஏன்னா ஸ்ரீகணேஷ் ரொம்ப நல்ல மனுஷன். நல்லவங்களுக்கு சோதனைகள் வரும். ஆனா அது வேதனையா நிச்சயம் மாறாது."

"ஓ. தேங்க்யூ. தேங்க்யூ ஜென்டில்மேன். எங்களுக்கும் அதுதான் வேணும். கமான் ஹேவ் எ கப் ஆஃப் காபி. சாருக்கும் ஒரு காபி சொல்லு தினேஷ்" - என்று சந்தானம் சற்று பரவசமானார்.

"இல்ல சார் இப்பதான் சாப்ட்டேன். நீங்க வரணும்னு தான் காத்திருந்தேன். இங்க நீங்க எங்க தங்கப் போறீங்க?"

"தங்கறது... தங்கறது..." - சந்தானம் அதற்கு பதில் தெரியாதவராக தினேஷைப் பார்க்க அவன், "அதைப் பத்தி நீங்க கவலைப்பட வேண்டாம் சார் நாங்க பாத்துக்கறோம்" என்றான்.

"அதுக்கில்ல சார், நீங்க தங்கப்போற ஹோட்டல் இல்ல உங்க வீட்டு முகவரில தெரிஞ்சா அப்புறமா நாங்க வந்து பார்ப்போம். எங்க வரைல ஸ்ரீகணேஷ் ஒரு மூணாம் மனுஷர் இல்ல. எங்க முதியோர் இல்லத்தைச் சேர்ந்த யாழினிங்கற பொண்ணுக்கு அவர் மறக்க முடியாத உதவியை செய்தவர்."

"சரி, நீங்க இப்ப கிளம்புங்க - அப்புறமா நான் போன் பண்றேன்" - தினேஷ் தன்னை வெட்டி விடுவதிலேயே குறிப்பாக இருப்பது சீனுவுக்கு புரியத்தொடங்கிவிட்டது.

சந்தானம் விடாமல் "கணேஷ் அப்படி என்ன உதவி செய்தான்?" என்று கேட்டு விடவும். தினேஷுக்கு சாணியை மிதித்தது போல ஒரு சங்கடம். எங்கே யாழினி தேடிக் கொண்டு வந்து விடுவாளோ என்றும் ஒரு நெருடல்.

ஆனால், சீனு அதுதான் சாக்கு என்று அந்த கொடைக்கானல் விஷயத்தை தொடவில்லை.

"சார், நான் எல்லா விஷயத்தையும் விவரமா சொல்றேன். இப்ப நீங்க கணேஷ் சாரை நேர்ல பார்த்தாதான் உங்களுக்கெல்லாம் கொஞ்சமாவது நிம்மதியா இருக்கும்" - என்றான். அது தலைகவிழ்ந்து கண்ணீருடன் அமர்ந்திருந்த வாசந்தியை சரேலென்று நிமிர்த்தியது.

"எங்கப்பா, அதுக்கு இப்ப வழியில்லன்னு சொல்லிட்டாங்களே" என்றாள். அப்போது அவள் கண்களில் இருந்து கண்ணீர் உருண்டு விழுந்தது. மோகனா அதை வேகமாக துடைத்துவிட்டாள். அப்போது அவளைப் பார்த்த சீனுவுக்கு யாழினியை திரும்பப் பார்ப்பது போல ஒரு ரிசம்ப்லன்ஸ்...

"அம்மா, காரணமில்லாம எதுவும் நடக்கல. கணேஷுக்கு இப்படி ஆனாது கூட நல்லதுக்குதான்னு நான் நினைக்கறேன். அவர் யாரை தேடி வந்தாரோ அவங்க கிடைச்சு நீங்க கணேஷோட அவங்களயும் கூட்டிகிட்டு போகப் போறீங்கன்னு என் மனசுக்குப் படுது" என்றான்

மிக இதமான குரலில். அது மோகனாவுக்கு மிக சுகமாக இருந்தது.

"உங்க வார்த்தை பலிக்கட்டும் தம்பி? என்றாள் சற்று நைந்த குரலில். இதற்கு மேல் விட்டால் ஆபத்து என்று தினேஷுக்குள் ஒரு சிகப்பு விளக்கு பலமாக எரியத் தொடங்கியது."

"மிஸ்டர் சீனு, கொஞ்சம் இப்படி வாங்க" - என்று சீனுவை தள்ளிக்கொண்டு கேன்டீனுக்கு வெளியில் வந்தான். அங்கே யாழினியும் நின்று கொண்டிருந்தாள். நல்லவேளை அவள் உள்ளே வந்திருக்கவில்லை என்று தினேஷுக்கு தோன்றியது.

"என்ன சார் எதுக்கு அங்க இருந்து என்னை தனியா கூட்டிக்கிட்டு வந்தீங்க?" - சீனு சற்று கோபமாகவே கேட்டான்.

"எல்லாம் காரணமாத்தான். அவங்க இப்ப ரொம்ப துக்கத்துல இருக்காங்க. இந்த நேரத்துல நீங்க கணேஷ் பத்தி எதாவது சொல்லி அதனால அவங்க வருத்தம் அதிகமாயிட்டா?"

- தினேஷின் பதில் சீனுவுக்கு அவன் எப்படிப்பட்டவன் என்பதை துல்லியமாக புரிய வைத்துவிட்டது.

"என்ன சார் அவ்வளவு கூடவா காமன்சென்ஸ் இல்லாம நடந்துப்பேன்?"

"நீங்க நடந்துக்குவீங்கன்னு சொல்லலை. ஒருவேளை வாய் தவறி" - சீனிவாசனை தினேஷ் சமாளித்தபடியே யாழினையை ஊன்றிப் பார்த்தான். அவன் பார்வை நல்ல பார்வை இல்லை என்பது யாழினிக்கும் தெரிந்தது. புடவை தலைப்பை இழுத்து மூடிக்கொண்டு அவள் வேறு எங்கோ பார்க்கத் தொடங்கினாள்.

"ஆமாம் உங்க பேர் என்ன சொன்னீங்க?"

"எதுக்கு கேக்கறீங்க..."

"ஏன் சார் பேரைக்கூட சொல்ல மாட்டீங்களா, இல்ல உங்களுக்கு உங்க பேரண்ட்ஸ் பேரே வைக்கலையா?"

"என்ன மிஸ்டர் உங்க பேச்சே ஒரு மாதிரி இருக்கே?"

"என் பேச்சு ஒரு மாதிரி இல்லை. உங்க பேச்சு தான் ஒரு மாதிரி இருக்கு."

"சரி அப்படியே இருக்கட்டும். நீங்க கிளம்புங்க. இனி நாங்க

பாத்துக்கறோம்."

"ஏன் சார் இவ்வளவு பதட்டப்படறீங்க. நாங்க உங்களுக்கு எந்த வகைல தொந்தரவா இருக்கோம்?"

"தொந்தரவா, நீயா? - தினேஷ் சட்டென்று ஒருமையில் பேச ஆரம்பித்தான்."

"என்ன மிஸ்டர் நீ, நான்னு ஒருமைல பேசறீங்க, நல்லா இல்லை இது."

"லுக்... உங்க முதியோர் இல்லத்துக்கு எதாவது டொனேஷன் வேணும்னா கேள். தரேன். வாங்கிட்டுபோய்க் கிட்டே இரு. கணேஷை காப்பாத்தினேன் - உதவி செய்தேன்னுட்டு எங்க பேரண்ட்ஸோட மட்டும் நெருங்காதே. அது உனக்கு நல்லதில்ல."

- தினேஷ் திரும்பத் திரும்பிப் பார்த்தபடியே பேசியது சீனிவாசனை மிகவே பாதித்துவிட்டது. அவன் பேச்சுக்கு ஒரு பதிலடியை அப்போதே கொடுக்க வேண்டும் போல தோன்றியது.

"யாழினி, கணேஷ் பேரண்ட்ஸை உனக்கு நான் அறிமுகப்படுத்தல. இல்ல வா உள்ளதான் இருக்காங்க" - என்று அவளோடு கேன்டீனுக்குள் நுழையத் தயார் ஆனான்.

தினேஷுக்கு அவன் செயல் தூக்கிவாரிப் போட்டது. "ஏய்" என்று எகிறிய அவன் முன் யாழினி, "சீனுண்ணா, - எல்லாம் அப்புறம் பாத்துக்கலாம். இப்ப இங்க இருந்து முதல்ல கிளம்புவோம்" - என்றவளாக அங்கிருந்து விலகவும் தொடங்கிவிட்டாள். தினேஷுக்கு அப்பாடா என்றிருந்தது. நல்லவேளையாக எங்கே தங்கப்போகிறோம் என்றும் சொல்லவில்லை. இல்லாவிட்டால் திரும்ப வந்து நின்றாலும் நிற்பான் என்று தோன்றியது.

யாழினி விலகவும் அவளைப் பின்தொடர்ந்து வந்த சீனிவாசன் முகத்தில் கோபத்தின் ஜ்வாலைகள்.

"என்ன யாழினி, அவன் பேச்சைக் கேட்டு பயந்துட்டியா? அவன் ஒரு பொறம்போக்கு மாதிரி தெரியறான் யாழினி" என்றான் சீனு.

"அவன் யாராவேணா இருந்துட்டு போகட்டும். என் மனசே சரியில்லண்ணா. முதல்ல நாம நம்ம இல்லத்துக்குப் போவோம்."

"புரியுது, நீ கோயிலுக்கு போய்ட்டு வந்ததுல இருந்தே சரியில்ல. போதாதுக்கு இந்த பிரகஸ்பதி வேற, எனக்கென்னவோ இவன் கிட்ட

தான் நிறைய பிரச்னை இருக்கற மாதிரியே தோணுது."

"போறுண்ணா, அவன் பேச்சை விடுங்க. எனக்கு இப்பவே அப்பாவைப் பாக்கணும் போல இருக்கு..."

"எனக்கும் தான், வா முதல்ல ஆஸ்பத்திரிக்கு போவோம்."

- அவர்கள் இருவரும் ஆஸ்பத்திரிக்கு ஆட்டோ பிடித்தனர்.

கேன்டீனில் தினேஷ் மட்டும் திரும்பி வந்ததைப் பார்த்து சந்தானம் எங்கே அந்த சீனிவாசன் என்று கேட்கவும் தினேஷ் அவரை சமாளிக்கத் தொடங்கினான்.

"அங்கிள், அவன் இங்க எதுக்கு வெயிட் பண்ணி கிட்டிருந்தான்னு நினைக்கறீங்க?"

"நீ என்ன சொல்ல வர்றே தினேஷ்?"

"ஐய்யோ அங்கிள். இன்னிக்கெல்லாம் விதம் விதமா பணம் புடுங்க கத்துக்கிட்டிருக்காங்க. உங்க கிட்ட நல்ல பேர் எடுக்கற சாக்குல டொனேஷன் கலெக்ட் பண்றது தான் அவன் நோக்கம்."

"அப்படியா? அவனை பார்த்தா அப்படி தெரியலியேப்பா?"

"உங்களுக்கு வெளுத்ததெல்லாம் பால் அங்கிள். நான் அவன் இங்க காத்துக்கிட்டிருக்கும்போதே கணக்குப் பண்ணிட்டேன்."

"சரி இப்ப எங்க அந்த சீனிவாசன். போய்ட்டாரா?"

"போய்ட்டாரா.. எவ்வளவு சார் வேணும் அம்பதாயிரமா, ஒரு லட்சமான்னு கேட்ட உடனேயே அவன் முகம் அப்படியே வெளிறிடிச்சே."

"நல்ல விஷயத்துக்குன்னா கொடுத்துட்டுப் போறோம் இப்ப என்ன?"

"நானும் அதைத்தான் சொன்னேன். நீ இப்ப கிளம்பு. அப்புறமா நானே தேடி வந்து உங்க முதியோர் இல்லத்துக்கு எங்களால முடிஞ்சதை செய்யறோம்னு சொன்னேன். அப்புறம்தானே போனான்."

- தினேஷ் உரிய ஏற்ற இறக்கத்தோடு சந்தானத்திடம் பேசியது. அவர் முகத்தில் சலனத்தை உருவாக்கி விட்டிருந்தது. காரில் சந்திரசேகரும் வாசந்தியும் இது எதைப் பற்றிய பார்வையும் இன்றி கணேஷைப் பார்ப்பதிலேயே குறிப்பாக இருந்தனர். சந்திரசேகர் யார் யாருடனோ

போனில் பேசியதில் அவர்கள் பார்க்க அனுமதி ஒரு மாதிரியாக உருவாகியிருந்தது.

"சந்தானம் கிளம்புடா... அப்பல்லோல டாக்டர் மைத்ரேயனை பிடிச்சேன். அவர் இங்க இருக்கற சீஃப்கிட்ட பேசி ஸ்பெஷல் பர்மிஷன் கிடைச்சிருக்கு. ஆனா, நாம இப்படியே போக முடியாது. ஸ்கார்ஃப் கொடுப்பாங்க. கிளவுசும் கொடுப்பாங்க. அதை போட்டுக்கிட்டு அவங்க கொடுக்கற ஒரு கோட்டையும் போட்டுக்கிட்டுதான் கிட்ட போகலாம். அப்படி அங்க போய் நிற்கும்போது தும்மல் வந்தா தும்மிடக்கூடாது. அடக்கிக்கணும். இல்லேன்னா இன்ஃபெக்ஷனுக்கு இடம் கொடுத்த மாதிரி ஆயிடும். வெரி சென்சிட்டிவ் ப்ளேஸ் கமான்."

- சந்திரசேகர் மகனைப் பார்க்கும் துடிப்பில் பரபரத்தார்.

அடுத்த ஐந்தாவது நிமிடம் அவர்கள் ஸ்ரீகணேஷின் பெட் அருகே அழைத்துச் செல்லப்பட்டனர். ஸ்ரீகணேஷின் தலைல பெரிய கட்டு. காலிலும் கட்டு, கையிலும் கட்டு... இதில் தலைப்பாகத்தில் போடப்பட்டிருந்த கட்டில் ரத்தம் ஊறி கரும் சிவப்பாய் உறைந்து போயிருந்தது. வாசந்திக்கு அதைப் பார்க்கவும் மயக்கம் வரத் தொடங்கியது.

சீனிவாசனும் யாழினியும் போய்க் கொண்டிருந்த ஆட்டோ ஒரு இடத்தில் இருந்தது. ஆட்டோவில் இருந்து இறங்கிக் கொண்ட இருவரும் நடக்க ஆரம்பித்தனர். அதே வேளையில் எதிரில் யாழினி கோயிலில் பார்த்த அதே பெண்மணி.

# 22

'பெண்ணே புருஷனுக்கு ஏன் இப்படிப் பணிந்து
அடிமை போல இட்டதெல்லாம் செய்கிறாய்?
'பண்ணு' என்று சொல்லும் புருஷனுக்கு அஞ்சியா?
இல்லை... இல்லை!
அவன் சொன்னதைச் செய்வது உணர்ச்சியை
அடக்க!'

நன்றி: 'எதற்காக?' என்ற கவிதையில்
கு.ப.
ராஜகோபலன்.

ந்தப் பெண்மணியும் யாழினியைப் பார்த்தாள். யாழினிக்கு அவளைப்

அ பார்க்கவும் வயிற்றைக் கலக்க ஆரம்பித்தது. அவளின் வட்டமான பெரிய சைஸ் குங்குமம், அள்ளி முடிந்த கொண்டை, சிவந்த வெற்றிலை போட்ட பருத்த உதடுகள் என்று எல்லாமே யாழினியை மிரட்டின. அவளும் அவர்கள் அருகில் வந்தவளாக நின்றாள். யாழினியோ அவளைத் தவிர்த்து நடக்க முனைந்தாள்.

"நில்லு கண்ணு..." - என்றாள். அவள் 'கண்ணு' என்று அழைத்ததில் ஒரு வாஞ்சை, சீனுவுக்கும் அவள் அப்படிச் சொல்லவுமே யார் என்பது புரிந்துவிட்டது. தயங்கி நின்ற யாழினியை அர்த்தத்தோடு பார்த்தான்.

"இவங்க தான் நீ கோயில்ல பார்த்த ஜோசியக்காரியா?"

அவள் சிரம் ஆமோதித்தது.

"என்ன கண்ணு - நான் சொன்னதைக் கேட்டு மனசு உடைஞ்சு போயிட்டியா?" - அவள்தான் கேட்டாள்.

"எப்படி உடையாம இருக்க முடியும்? கோயிலுக்குப் போறதே நிம்மதிக்காக தான். அங்கேயும் உங்களப் போல யாராவது வந்து நிம்மதியை கெடுக்கற மாதிரி பேசினா என்ன அர்த்தம்?"- பதிலுக்கு சீனு பாய்ந்தான்.

"தப்புதான் தம்பி... கோயில்ல நான் எப்பவும் நல்ல வாக்கு மட்டுமே சொல்றவ... ஆனா, இன்னிக்கு என்னை மீறிக்கிட்டு ஜக்கம்மா வெளிய வந்துட்டா! சத்தியமா சொல்றேன். இதுகிட்ட நான் பேசின பிறகு யாருக்குமே ஜோசியம் பார்க்கல. பார்க்கவும் தோணல. அதான் கிளம்பிட்டேன். இப்படி நடுவழில சந்திப்போம்னும் எதிர்பார்க்கல..."

"என்னம்மா சொல்றீங்க. பழியை தூக்கி ஜக்கம்மா மேல போட்டுட்டு நீங்க தப்பிச்சிக்கலாம்னு நினைக்கறீங்களாக்கும்?"

"ஐய்யோ தம்பி... அப்படி எல்லாம் சொல்லாதீங்க. அவமேல பழிபோட்டுட்டு என்னால ஒரு மூச்சைக்கூட ஒழுங்கா விட முடியாது. அவ எங்க குலசாமி. அவதான் எங்களுக்கு எல்லாம்."

"இப்படி எல்லாம் சொல்றதால எங்கள சமாதானப் படுத்த முடியாது. உங்க ஜோசியம்லாம் யாழினி மாதிரி ஏமாந்த பொண்ணுங்க கிட்டத்தான்னு எனக்கு நல்லா தெரியும் ஒரு ஏரோப்ளேனே காணாமப்போயி உலகமே தேடிட்டு இருந்தது. அங்க போய் உங்க ஜோசியத்த சொல்ல வேண்டியதுதானே?"

"சம்பந்தப்பட்டவங்க ஜக்கம்மாவை மதிச்சும் மனசார நம்பியும் வந்து கேட்டா நிச்சயம் சொல்வேன் தம்பி. அதையும் நான் சொல்லப் போறதில்ல. அவ தானே சொல்றப் போகிறா?"

"பரவால்லம்மா - நல்லாவே சமாளிக்கிறீங்க. இதான் சாக்குன்னு இப்ப எதாவது சொல்லி இன்னும் பயமுறுத்திடாதீங்க. இடத்தை காலிபண்ணுங்க."

"ஜக்கம்மா வரைல ஒரு தடவை சொன்னா சொன்னது தான். அதுலயும் இந்த பொண்ணு வரைல அவ தானா முன்ன வந்து சொல்லியிருக்கா. அதுக்குப் பின்னால நிறைய காரணம் இருக்கு. இவளுக்கும் ஜக்கம்மாவுக்கும் ஏதோ சம்பந்தம் இருக்கணும். நான் இப்பக் கூட சொல்றேன். இவ பாதத்துல சூலரேகை நிச்சயம் இருக்கணும். அப்படி இருந்தா தெய்வாம்சம் உள்ள பொண்ணன்னு அர்த்தம். அப்படி தெய்வாம்சம் உள்ளவங்களுக்கு எதுவும் வராது. வந்தாலும் யாராலயாவது விலகிப் போயிடும். அதுமட்டுமில்ல... இந்த மாதிரி பொண்ணுங்க எப்பவும் ஊருக்குள்ளே வாழ்வாங்க இவங்க நினைக்கறது நடக்கும். சொன்னது பலிக்கும்."

அவள் விஸ்தாரமாக சொல்லிக்கொண்டே போனதைக் கேட்டு யாழினிக்கு படபடவென்று வர ஆரம்பித்துவிட்டது.

"சீனு அண்ணா போதும் இவங்க கூட பேசினது. விட்டா என்னை சாமியாக்கி எனக்கு ஒரு கிரீடமும் வெச்சிடப் போறாங்க. புறப்படுங்க" - என்று சீனிவாசனை இழுத்துக் கொண்டு அவளிடமிருந்து விலக ஆரம்பித்தாள். அந்தப் பெண்மணியோ நின்று மந்தகாசமாக சிரித்தாள். சிரித்த படியே "நான் சொன்ன அவ்வளவும் சத்தியம்மா... சத்தியம்!" - என்றாள்.

ரங்காச்சாரி அட்மிட் ஆகியிருக்கும் ஆஸ்பத்திரிக்கு வந்து அவரை நெருங்கியபோது அவர் ஆழ்ந்த மானிட்டர் ஸ்க்ரீனில் ஒளிப் புள்ளிகள் சீராக ஒரே நேர்க்கோட்டில் ஓடியபடி இருந்தன. திருமகள் நிலையத்து முதியோர்கள் வரிசையாக வந்து வெளியே ஒன்று கூடியிருந்தார்கள். யாழினி ரங்காச்சாரியை மலங்க மலங்கப் பார்த்தாள். கச்சிதமாக டாக்டர் வந்தார்.

"டாக்டர்..."

"நோ பிராப்ளம்... இனி சாருக்கு எந்த ஆபத்தும் கிடையாது. பர்ஃபெக்ட்லி ஆல்ரைட்."

"நிஜமாவா டாக்டர்...?"

"அம்மா நான் மட்டுமே ஆயிரத்துக்கும் மேல பைபாஸ் சர்ஜரி பண்ணிட்டேன். ஆஃப்டர் சர்ஜரிதான் நான் ஒரு முடிவுக்கு வருவேன். இப்ப இவர் சர்க்குலேஷன் எல்லா விதத்துலயும் வெரி நார்மல்னு சொல்லலாம். இன்னும் 25 வருஷத்துக்கு இவருக்கு இதயத்துல ஒரு பிரச்சனையும் வராதும்மா... ஒரு பத்திரம் கொண்டு வா. எழுதித் தரேன்."

டாக்டர் மிகவே நம்பிக்கையோடு பேசினார். யாழினி நிம்மதிப் பெருமூச்சு விட்டாள். அப்படியே வெளியே வந்தாள். - அவளை இல்லத்து முதியவர்கள் சூழ்ந்துகொண்டனர். குறிப்பாக தங்கள் மகளை இழுந்துவிட்ட நிலையில் திருமகள் இல்லத்தில் தஞ்சம் புகுந்திருந்த லட்சுமி நரசிம்மன் - அலமேலு தம்பதியினர் யாழினியிடம் வந்து "யாழினீ... நாலு நாளாச்சு உன்னைப் பார்த்து நீயும் ஆஸ்பத்திரியே கதியா கிடக்கறே... அலைஞ்சு திரியறதுல உனக்கு எதாவது ஆயிடப் போறதும்மா" என்றனர்.

யாழினிக்கு அவர்கள் பரிவான பேச்சு சற்று ஆறுதலாக இருந்தது.

"எப்படியோம்மா... அண்ணாவுக்கு இனி ஒரு ஆபத்துமில்லன்னு சொன்னதக் கேட்டு எங்களுக்கும் நிம்மதி" என்றார் கஸ்தூரிரங்கன். அதை எல்லாம் கேட்க சீனிவாசனுக்கும் மனதுக்கு இதமாக இருந்தது.

"யாழினி நீ இல்லத்துக்குப் போம்மா. போய் ரெஸ்ட் எடு" என்றான் சீனிவாசன்.

"நீயும் வாண்ணா..."

"சரி வா, போவோம். நீங்க எல்லாரும் புறப்படுங்க" - என்ற சீனிவாசன் இல்லத்தில் இருந்து வந்திருந்த அவ்வளவு பேரையும் தள்ளிக்கொண்டு புறப்பட்டான்!

யாழினிக்குள் அந்த நிலையிலும் அந்த ஜக்கம்மா ஜோசியக்காரி உறுதிபட இறுதியாக பேசியது மனதில் எதிரொலித்தது. இங்கே ரங்காச்சாரிக்கு ஆபத்தில்லை என்பது தெளிவாகி விட்டது என்றால் அங்கே கணேஷுக்கு தான் ஆபத்தோ என்கிற கேள்வியை யாழினியால் கேட்டுக் கொள்ளாமல் இருக்க முடியவில்லை.

நவீனமான அந்த ஹோட்டல் ஒரு மலைமேல் அமைந்திருந்தது. அங்கிருந்து மதுரை நகரம் துல்லியமாக தெரிந்தது. மென்மையான தென்றல் காற்றின் வருடலோடு அந்த உச்சியில் நின்றுகொண்டு

ஊரைப் பார்ப்பது ஆனந்தமாக தான் இருந்தது.

இந்த ஆனந்தமெல்லாம் தினேஷுக்குதான்.

வாசந்தியும் சந்திரசேகரும் கணேஷை எண்ணி கவலையிலேதான் இருந்தனர். சந்தானமும் மோகனாவும் பாத்ரூமில்! தினேஷ் மெல்ல ஒதுங்கியவனாக வெளியே ஸ்விம்மிங் பூல் பக்கம் வந்தான். செல்போனை எடுத்து ஆஸ்பத்திரியில் தற்காலிகமாக நட்பேற்படுத்திக் கொண்டிருந்த டாக்டர் ஒருவரைப் பிடித்தான்.

"டாக்டர் நான் தினேஷ் பேசறேன். நாங்க தாஜ்ல தங்கியிருக்கோம்."

"ஐ.சீ..."

"கணேஷ் நிலை இப்ப எப்படி இருக்கு டாக்டர்..."

"நான் அப்ப சொன்ன பதில்தான். என் வரைல ஃபிப்டி ஃபிப்டின்னு சொல்வேன்."

"இது வரைல கொஞ்சம் கூடவா இம்ப்ரூவ்மென்ட் தெரியல...?"

"அதான் உண்மை. மைனசாகத்தான் சான்ஸ் அதிகம். என்னக் கேட்டா இந்த பேஷண்ட் பிழைச்சு பிறர் தயவோட காலமெல்லாம் வாழறதுக்கு இப்பவே இப்படியே போயிட்றது நல்லது."

"ஐயோ டாக்டர்... இதை பேஷண்ட்டோட அப்பா - அம்மா கேட்டா உயிரையே விட்ருவாங்க."

"இந்த மாதிரி டயலாக்கை நாங்க நிறைய கேட்டுருக்கோம் மிஸ்டர் தினேஷ்."

"இப்படி சொன்னா எப்படி டாக்டர். அங்க பேஷண்ட்டா கிடக்கற ஸ்ரீகணேஷ் ஒரு விஞ்ஞானியும் கூட-பெரிய மூளைக்காரன்."

"அதான் மூளைல பலமான அடிபோல இருக்கு." - தினேஷ் உற்சாகமாக அவரிடம் போட்டு வாங்கியபடி இருந்தான்.

"பை த பை டாக்டர்... ஒரு வேளை பிழைச்சாலும் புண்ணியமில்லேங்கறதுதான் உங்க பதிலா?"

"ஆமாம்" - டாக்டர்... அதற்கு மேல் பேசவிரும்பாதபடி கட் செய்துகொல்ல, தினேஷ் அடுத்து அவன் தாய் பூரணியை போனில் பிடித்தவன்.

"தினேஷ்... கணேஷ், உடம்பு எப்படிப்பா இருக்கு?"

"மம்மி... என்னோட பிளான் பக்காவா ஒர்க் அவுட் ஆகிட்டு வருது. கணேஷ் கதை கிட்டத்தட்ட முடிஞ்சு மாதிரிதான்."

"ஐயோடா... அவன் பிழைக்க சான்ஸ் இல்லையா?"

"இருக்கு... ஆனா... பிழைச்சாலும் புண்ணியமில்லை. அவன் ஒரு வெஜிடபுள் மாதிரி தான். வெஜிடபுளை ஃப்ரிட்ஜ்ல வெச்சிருக்கறவரை அது நல்லா இருக்கும். டிரீட்மெண்ட்ல இருக்கறவரைதான் இனி கணேஷும்."

"இதெல்லாம் மோகனாவுக்கும் சந்தானத்துக்கும் தெரிஞ்சிடிச்சா?"

"போகப்போக தெரியும். பை த பை அந்த கணேஷ் ஒரு வகைல நல்ல டிடெக்டிவ் தான் மம்மி..."

"எதை வெச்சு சொல்றே தினேஷ்?"

"மம்மி. உனக்குள்ள வெச்சுக்கோ. உன் அத்தை பொண்ணு மோகனாவோட பொண்ணை கணேஷ் கிட்ட தட்ட நெருங்கிட்டான்."

"நிஜமாவா?"

"ஆமாம்...அவளை நானும் பார்த்தேன். சின்ன வயசு மோகனா ஆன்ட்டிய பாக்கற மாதிரியே இருந்தது."

"அப்படியா?"

"அப்படியே தான். ஜாடை, குரல்னு நிறைய ஒற்றுமை. ஜீ டெஸ்ட் வெச்சா சந்தேகத்துக்கு இடமில்லாம புரூவ் ஆயிடும்."

அந்தப் பொண்ணு இப்ப எங்க இருக்கா?

"அவ இப்ப ஒரு அனாதையாதான் இருக்கா. திருமகள் முதியோர் இல்லத்துல இருக்கா."

"உனக்குத் தெரிஞ்ச உண்மை மோகனாவுக்குத் தெரிஞ்சிடிச்சா?"

"ஒருவேளை இனி தெரிஞ்சிட்டா?"

"தெரியாது. தெரியவும் விடமாட்டேன்."

"பாத்துடா... எனக்கு உன்னை நினைச்சா தூக்கமே வரமாட்டேங்குது."

"டோண்ட் ஒர்ரி மம்மி... நான் சரியான நேரத்துல தான் மதுரை வந்துருக்கேன். என்னை மீறிக்கிட்டு இங்க எதுவும் நடந்துட முடியாது. நடக்கவும் விடமாட்டேன்."

"அடுத்து உன் திட்டம் என்னப்பா?"

"ஒரே திட்டம்தான்... மோகனா ஆன்ட்டியும் சந்தானம் அங்கிளும் இனிமே நான் சொல்றத மட்டும் தான் கேக்கணும்."

"கேப்பாங்களா?"

"அவங்க கேட்கும்போது நீயே பார்த்து ஆச்சரியப் படுவே பார்."

"பார்த்து தினேஷ்"

"பார்த்தா - ஒவ்வொரு இன்ச்சையும் அளந்து அளந்து பார்த்துப் பார்த்துதான் நடக்கறேன். தப்பு வரவே வராது. இங்க எனக்கு ஒரு பெரிய போட்டியும் உருவாயிடுச்சு..."

"போட்டியா - யாருப்பா..."

"வேற யார்... அந்த யாழினியும் அவ கூட இருக்கற சீனிவாசனும் தான்." - தினேஷ் சொன்னது அவன் தாய்க்கு புரியவில்லை.

# 23

"இதுவும் வேண்டும் அதுவும் வேண்டும்
என்றே மனது தினம் அலையும்
அதுவும் இதுவும் கிடைத்த பின்னும்
அடுத்து எதையோ மனம் நினைக்கும்!
இதுவோ அதுவோ எது வந்தாலும்
எதிலும் மனது நிறையாது!
விருந்தைத் தின்று மருந்தைத் தேடும்
இது தான் வாழ்க்கை வரலாறு"

நன்றி: 'சுமைகள்' எனும் கவிதையில் கவிஞர் தியாரூ

யாழினி, சீனிவாசன் என்று தினேஷ் குறிப்பிட்டுப் பேசியது பூரணிக்கு புரியவில்லை.

"யாருடா அது யாழினி, யார் அது சீனிவாசன்..." சந்தேகத்தோடு திருப்பிக் கேட்டாள்.

"யாருடா அது யாழினியா... அவதான்னா உன் அருமை அத்தை மகள் மோகனாவுக்கும் அவ புருஷன் சந்தானத்துக்கும் பிறந்தவ...!"

"ஓ.. அந்தப் பொண்ணு பேர் தான் யாழினியா?"

"ஆமாம்"

"அது யார் கூட சீனிவாசன்னு சொன்னியே.."

"அவன் தான் அந்த முதியோர் இல்லத்து பாடிகாட்..."

"பாடிகாடா... புரியலடா எனக்கு?"

"அங்க ஒர்க் பண்றவன். இந்த யாழினி அவனை அண்ணன்கறா. யார் கண்டது அவனும் ஒரு அனாதைப் பயலா இருக்கலாம்."

"சரி.. இவங்களோட உனக்கு பிரச்னைன்னா எந்த விதத்துல?"

"மோகனா ஆன்ட்டியும் சந்தானம் அங்கிளும் இன்னும் யாழினியை சரியா பாக்கல. நான் பாக்க விடலை. ஆனா, யாழினியும் சீனிவாசனும் பாக்க துடிச்சாங்க. நான் தடுத்து திருப்பி அனுப்பிட்டதால என் மேல கோபம்."

"நீ சொல்றத பார்த்தா யாழினிக்கு மோகனாவைப் பத்தி தெரிஞ்சிட்ட மாதிரி தெரியுதேடா..."

"அப்படி இல்லம்மா... இரண்டு பேரும் பார்த்துக்கிட்டா தான் தெரிஞ்சிடும். அதுதான் இப்ப என்னோட பயம். கூட இருக்கற அந்த சீனிவாசனும் கண்டுபிடிச்சிடுவான். அதனால தான் பாக்க விடலை."

"ஒருவேளை பாத்துட்டா?"

"பாத்துட்டாவா.. பாக்கவே கூடாது... நான் இருக்கற வரை அது நடக்காது."

-சொல்லும்பாதே தினேஷ் குரலில் ஆத்திரம் பீறிட்டது.

"பாத்து தினேஷ்.. நம்ம வாழ்க்கை அது பாட்டும் போயிட்டிருந்தது. இப்போ எல்லாமே தலைகீழா மாறிப் போயிடிச்சு"

"நானும் அப்படித்தான் நினைக்கறேன். எல்லாம் உன் அப்பனால வந்த வினை. சாகும்போது வாய்மூடிட்டு செத்துப் போயிருக்கலாம் அந்த கிழவன். சத்ய சந்தன் மாதிரி உண்மையை சொல்றேன்னு சொல்லிட்டு

போனதால இப்ப பார் எவ்வளவு சிரமம் எனக்கு...?

"உன் தாத்தாவையா கிழவன் அவன், இவன்கறே..."

"உன் கூட பேசறதால நாகரிகமா திட்டிக்கிட்டிருக்கேன். இதே வேற யார் கூடயாவது இருந்தா கெட்ட வார்த்தைல கழுவி ஊத்தியிருப்பேன்..."

"வேண்டாம் தினேஷ்... இவ்வளவு கோபமும் ஆக்ரோஷமும் வேண்டாண்டா..."

"சாரி மதர். என்னை ஒரு பணக்கார வீட்டுப் பிள்ளையாவே வளர்த்துட்டே... ஒரு ஆட்டோவுல கூட இதுவரை நான் ஏறினதில்ல. சாகறவரை நான் ஸ்டேட்டசை மெயின்டெயின் பண்ண இந்த கோபமும் ஆக்ரோஷமும் எனக்கு ரொம்பவே அவசியம். நீ நடுவுல நடுவுல ஆவரேஜ் மதரா அட்வைஸ் பண்ணாம இருந்தா அதுவே போதும் எனக்கு..."

- தினேஷ் அந்த மட்டோடு கைபேசியை அணைத்தான். அவன் நின்று கொண்டிருந்த இடத்தில் இருந்து அவன் பார்த்த இடத்தில் ரயில்வே தண்டவாளம் மேல் திருநெல்வேலி பாசஞ்சர் நீலவண்ண இரும்புப் பெட்டிகளோடு உருண்டு கொண்டிருந்தது. மனதுக்கு அந்தக் காட்சி சற்று ரிலாக்ஸாக இருந்தது.

அப்படியே அறைக்கு வந்தான். சந்திரசேகர் சோர்வோடு அமர்ந்திருந்தார். அவர் மனைவி வாசந்தி கண்ணீரோடு அமர்ந்திருந்தாள்.

"வாசந்தி, நீயோ நானோ எனக்கு தெரிஞ்சு ஒரு சின்ன தப்புகூட பண்ணதில்ல. நல்லது எவ்வளவு செய்திருக்கோம்னு தெரியாது. ஆனா, கொஞ்சம்கூட கெட்டது செய்ததில்லை. அப்படி இருக்க நமக்கு எப்படி ஒரு கெட்டது நடக்கும்?"- என்று கேட்டுக் கொண்டிருந்தார். அதைக் கேட்ட தினேஷுக்கு உள்ளுக்குள் சிரிப்புதான் வந்தது. கெட்டது வந்தது மட்டுமல்ல. இனி அது அவர்களை விட்டு போகவே போவதில்லை. ஆனால், சந்திரசேகர் அது புரியாமல் அறம் பேசியது அவனுக்குள் அறத்தின் மேலேயே ஒரு கோபத்தை வரவழைத்தது.

எந்த நல்லதற்கும் எந்த நல்லவனுக்கும் இது காலமில்லை. இந்த பூமி எப்போதும் துணிந்தவர்களுக்கான தளமாகத்தான் உள்ளது. அதனால்தான் துணிந்தவன் எல்லாம் அரசியல்வாதியாகி கோடிகளில்

கொள்ளையடித்து பங்களா, கார் என்று ஜமாய்த்துக் கொண்டிருக்கிறான்.

தர்மநியாயம் பேசும் மனிதர்கள் இந்த கொள்ளைக்காரர்களுக்கு எடுபிடியாக இருந்து கால் அமுக்கி விட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இந்த யதார்த்தம் எப்படி மனோதத்துவ டாக்டருக்குப் படித்த சந்திரசேகருக்குத் தெரியாமல் போனது? என்கிற கேள்வியோடு அவரைப் பார்த்தான்.

"என்ன தினேஷ் பாக்கறே?"

"உங்க நம்பிக்கையை நினைச்சேன் அங்க்கிள்."

சரியா சொன்னே... நம்பிக்கை...நம்பிக்கைதான் மனுஷனோட உண்மையான பலம்.

"உங்க அளவுக்கு நான் இல்லை"

"உனக்கு நம்பிக்கை மேல் நம்பிக்கை இல்லையா?"

"இல்லை அங்கிள்... நீங்க பேசினத கேட்டேன். நாம நல்லவங்களா இருக்கறதுக்கும் நமக்கு நல்லது நடக்கறதுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை அங்கிள். உங்க கருத்து தான் நிஜம்னா ஸ்ரீகணேஷுக்கு ஆக்சிடென்ட்டே நடந்துருக்கக் கூடாது. அதுவும் பிழைச்சாலும் பிரயோஜன மில்லைன்னு டாக்டர் சொல்ற அளவுக்கெல்லாம் நடந்துருக்கவே கூடாது"

- சந்திரசேகருக்கு பதில் சொல்லும் சாக்கில் டாக்டர் சொன்ன தகவல் அவனை மீறி வெளிப்படவும் சந்திரசேகர் விக்கித்துப் போனார். வாசந்தி தன்மேல் அமிலம்பட்ட மாதிரி விதிர்விதிர்த்தாள்.

குளித்து முடித்து சற்று ஃப்ரெஷ்ஷாக வந்த நிலையில் சந்தானமும் மோகனாவும் அதைக் கேட்டு தினேஷை மிக மோசமாய் வெறித்தனர்.

பிறகுதான் தினேஷுக்கே தன் நாக்கு தவறி விட்டது புரிந்தது.

"சாரி அங்கிள் சாரி ஆன்ட்டி. நான் ஏதோ அவசரத்துல பேசிட்டேன். நீங்க எதையும் மனசுல வெச்சுக்க வேண்டாம்"- என்று சமாளிக்கப் பார்த்தான். ஆனால் பயனில்லை வாசந்திக்கு நிஜமாலுமே மயக்கம் வந்துவிட்டது.

திருமகள் நிலையத்தில் பிரார்த்தனைக் கூடத்தில் வழக்கம்போல

எல்லோரும் கூடியிருந்தனர். தினமும் அங்கே ரங்காச்சாரி தலைமையில் பஜன் நடைபெறும் அதில் யாழினியின் பக்திப் பாடல்களுக்கும் ஒரு இடம் உண்டு. அன்று ரங்காச்சாரி இல்லாதது ஒரு பெரிய குறையாக எல்லோருக்கும் இருந்தது.

யாழினியே முன்னின்று விளக்கேற்றிக் கொண்டிருந்தாள். இல்லத்து முதியோர்கள் வரிசையாக வந்து அமர்ந்தபடி இருந்தனர். சீனிவாசனும் ஜமக்காளத்தை விரித்துப் போட்டு ஒத்தாசை செய்தபடி இருந்தான். ஊது பத்தி வாசம் நாற்புறமும் பரவிட இல்லத்து தோட்டத்தில் பிறந்திருந்த பூக்களே பலரால் மாலையாக கட்டப்பட்டு எடுத்து வரப்பட்டு பிரார்த்தனைக் கூடத்தின் நடுவில் உள்ள திருப்பதி பெருமாள் படத்துக்குப் போடப்பட்டது.

அங்கே காவி உடையில் புதிதாய் ஒருவரும் தென்பட்டார். அங்குள்ள ஒரு முதிர்ந்த தம்பதியருக்கு அவர்

குருவை போன்றவர். மதுரைக்கு ஒரு வேலை நிமித்தம் வந்திருந்தவர் திருமகள் இல்லத்துக்கும் அவர்களைப் பார்க்க வந்திருந்தார். அவர் ஆன்மிகச் சொற்பொழிவுகள் எல்லாம் ஆற்றுபவர். அவரை அன்று சொற்பொழிவாற்றச் சொல்லி ஒருவர் கேட்டுக் கொண்டிருக்க, அவரிடமும் அதற்கென்ன பேசிட்டா போச்சு' என்கிற பதில்.

யாழினிக்கும் ஆறுதலாக யாராவது பேசினால் கேட்க நன்றாக இருக்கும் என்றே தோன்றியது. அவளும் அவரை அழைத்து மைக் முன்னால் அமர வைத்து பேசச் சொன்னாள்.

எல்லோரும் எதிரில் அமர்ந்து விட்டனர்.

அவரிடம் பேச்சும் தொடங்கியது. யாழினிக்கு பக்கத்தில் சீனிவாசன் அமர்ந்து கொண்டான். அவனுக்கு அவளின் வலது காலின் உள் பாதம் நன்றாகத் தெரிந்தது. அதைப் பார்க்கவும் தெருவில் பார்த்த அந்த ஜோசியக்காரி சொன்னது நினைவுக்கு வந்தது. அவள் யாழினியின் கால்களில் சூலரேகை இருக்கும் என்று சொன்னதற்கு ஏற்ப அவள் கால்களில் சூல ரேகை! அதைப் பார்த்த நொடி சீனிவாசனிடம் சிலிர்ப்பு அவள் ஜோதிடத்தில் ஒரு அர்த்தம் இருப்பதுபோல் தோன்றியது. அவன் அந்த எண்ணங்களில் நெகிழ்ந்த அதே வேளை அவரும் பேச்சை தொடங்கி விட்டிருந்தார்.

"எல்லோருக்கும் என்னோட வணக்கம் அருமையான இந்த திருமகள் முதியோர் இல்லத்துல உங்க முன்னால நான் பேசப் போறத நினைச்சு

ரொம்ப சந்தோஷப்பட்றேன். உங்க இல்லத்து நிர்வாகி திருவாளர் ரங்காச்சாரி இப்ப ஆஸ்பத்திரில சிகிச்சைல இருக்கார். அவர் நல்லவிதமா குணமாகி திரும்பணும்னு இப்ப நான் பிரார்த்தனை செய்துக்கறேன்.

எப்பவும் பிரார்த்தனைக்கு மிகப்பெரிய சக்தி உண்டு, பிரார்த்தனை ஒரு பெரிய ஆயுதம். பெரிய மருந்து" அவர் சொல்லிக் கொண்டே போனார். சீனிவாசன் கவனமோ யாழினியின் கால்ரேகை மேலேயே இருந்தது. உற்றுப் பார்த்தவன் தன் பாதத்தைப் பார்த்தான். அப்படி எல்லாம் ரேகை இல்லை. அப்படியே பக்கத்தில் இருப்பவர் பாதங்களை எல்லாம் பார்க்க ஆரம்பித்தான்.

அவரோ பிரார்த்தனையின் சக்தி எப்படிப்பட்டது என்று விளக்குவதில் மும்முரமாய் இருந்தார்.

"பிரார்த்தனைக்கு தூய தமிழ்ல சக்தி வாய்ந்த எண்ணம்னு அர்த்தம். அதிலேயும் தன்னலமில்லாத பிறருக்கான பிரார்த்தனைக்கு பலமடங்கு சக்தி உண்டு. நாம ஒருத்தருக்காக மனமுருக பிரார்த்திக்கும்போது நம்ம உடம்பைச் சுற்றியுள்ள ஒளிவட்டம்கற 'ஆரா'வில் பொன்னொளி ஏற்படும்.

இந்த பொன்னொளிக்கு மின்காந்த ஆற்றல் உண்டு. நாம யாரை நினைச்சு பிரார்த்தனை செய்யறோமோ அந்த மனிதரோட ஆராவை நோக்கி இந்த ஆராவோட ஒளிக்கீற்று பயணிக்கும். எதை வெச்சு இதை நம்புவது, இதுக்கு என்ன ஆதாரம்'னு சிலர் கேட்கலாம். இதை ஒரு விஞ்ஞான கூடத் துல வெச்சு நிரூபிக்கறது கஷ்டம். ஆனா, எந்த விஞ்ஞான கூடமும் இல்லாம சுய அனுபவத்தால இதை நல்லபடி உணரலாம்."

- அவர் சொல்லிச் சென்றது சீனிவாசன் காதில் விழவில்லை. மாறாக அந்த சூல ரேகை பற்றி அவரிடம் கேட்டால் என்ன என்கிற ஒரு கேள்வி மட்டும் சீனிவாசனுக்குள் எழும்பியது. எழும்பிய வேகத்தில் அதைக் கேட்கவும் செய்தான்.

"மன்னிக்கணும் நான் குறுக்கிட்டுப் பேசறதுக்காக.. எனக்கு இப்ப சில சந்தேகங்கள். ஒரு ஆன்மீகவாதியான உங்ககிட்ட அதுக்கு நல்ல விடை கிடைக்கும்னு என் மனதுக்கு படுது, நான் கேட்கலாமா?"

சீனிவாசனின் இடையீடு எல்லோருக்குமே ஆச்சரியமாக இருந்தது. அந்த சன்யாசியோ சிரித்தபடி தாராளமா கேளப்பா" என்றார்.

சீனிவாசனும் கேட்கத் தொடங்கினான்.

"ஐயா... இந்த ஜோதிடம்கறது ஒரு உண்மையான கலையா... இல்லை அது ஒரு பொய்யா?" -அவன் கேள்வி எல்லோருக்கும் அடுத்த கட்ட ஆச்சரியத்தை தந்தது. யாழினியோ அவன் சரியான ஒரு கேள்வியைத் தான் கேட்டதாக நினைத்தாள். அவரும் பதில் சொல்லத் தயாரானார்.

"ஜோதிடம் ஒரு அற்புதமான கணக்கு. கணக்குனு வந்துட்டாலே அதை ஒழுங்கா கூட்டிப் பெருக்கணும், அப்படி செய்யத் தவறினா, தவறான விடைதான் வரும். அதே சரியா கணக்குப் போட்டா சரியான விடைதான் வரும்."

"அப்ப சரியா சொல்ல முடிஞ்சாதான் அது ஜோதிடமா?"

"நிச்சயமா... ஜோதிடம்கற வார்த்தையை பிரிச்சுப் பார்த்தா ஜோதி உள்ள இடம்'னு ஒரு அர்த்தம் வரும். 'சோதிக்குமிடம்'னும் ஒரு அர்த்தம் வரும். இரண்டுமே ஜோதிடம் வரைல சரி. ஆயிரம் தன்னம்பிக்கை நூல் படிச்சு வராத ஒரு நம்பிக்கையை ஒரு நல்ல ஜோதிடரால ஒரு நிமிஷத்துல உருவாக்கிட முடியும்."

"அப்ப இந்த கைரேகைங்கறது."

- சீனிவாசன் எங்கே செல்கிறான் என்பது யாழினிக்குப் புரிந்தது. அவள் சட்டென்று தன் கால் பாதத்தை பார்க்க அதில் அந்த சூல ரேகை."

"கைரேகைங்கறதும் ஜோதிடத்தோட ஒரு அங்கம் தான் 'கோட்டு மொழி'ன்னும் இதைச் சொல்லலாம். இது ரொம்ப கஷ்டமானது. இதை புரிஞ்சு சொல்ல அபார ஞானமும் அருளும் வேண்டும்..."

"அப்படின்னா ஒருத்தர் கால்ல சூலரேகை இருந்தா என்னய்யா அர்த்தம்?
- சீனிவாசன் பாய்ன்ட்டைப் பிடித்தான்.

"யார் கால்லப்பா அப்படி இருக்கு?".-அவரும் திருப்பிக் கேட்டார். சீனிவாசன் பார்வை யாழினி பக்கம் திரும்பியது. அவரும் உடனேயே யாழினியை பார்க்க ஆரம்பித்தார்!

# 24

'அடக்கம்
செய்யப்படுகிறோம்
இரண்டு

பெட்டிகளில்...
சவப்பெட்டியிலும்
தொலைக்காட்சிப்
பெட்டியிலும்...!

நன்றி: கவிஞர் காசி ஆனந்தன்.

யாழினியைப் பார்த்து சொற்பொழிவு செய்த அந்த மனிதர் வணங்கவும் யாழினிக்கு என்னவோ போல் ஆயிற்று மருண்டு போனாள். அவர் அடுத்து சீனிவாசனைப் பார்த்தார்,

"இந்தப் பொண்ணு கால்ல சூல ரேகை இருக்கா?"

"ஆமாம். அப்படி இருந்தா என்ன அர்த்தம்?"

"ரொம்ப தெய்வாம்சம் உள்ளவள்னு அர்த்தம்..."

"அதான் கும்பிட்டீங்களா?"

"ஆமாம் கலியுகத்துல கடவுள் நேர்ல வரமாட்டார். இப்படிப்பட்டவங்க மூலமாதான் வெளிப்படுவார்."

"சூலரேகை இருந்தா இவ்வளவு மகிமையா?"

"நிச்சயமா... அதுல என்ன சந்தேகம்?"

அவர்கள் இருவர் பேசிக் கொள்வதும் யாழினியை தர்ம கடப்படுத்தியது.

"சீனுண்ணா..." என்று இடையிடத் தொடங்கினாள். அவனும் அவளைப் பார்த்தான்.

"என்னண்ணா இது.. எதுக்கு இப்ப என்னைப் பற்றிய பேச்சு..? அவர் அருமையா பிரார்த்தனையை பத்தி பேசிகிட்டு இருத்தார். திசைமாத்தி விட்டுட்டியே..."

"இப்ப ஒண்ணும் கெட்டுப் போயிடல யாழினி... சாமி தொடர்ந்து பேசத்தான் போறார். நடுவுல எனக்குள்ள ஒரு ஆர்வம்"

"என்ன ஆர்வமோ.. என் கால்ல இருக்கற ரேகையை பத்தி எனக்கே எதுவும் தெரியலை. இதுல உனக்கு சூல ரேகை தெரிஞ்சிடுச்சாக்கும்? சூலம் மாதிரி மூணு கோடு இருந்தா உடனே சூலரேகைன்னு நினைச்சிட்றதா?

நான் இந்த சாமி சொன்னமாதிரி கடவுள் அம்சம்னா அம்மா அப்பா கூட

யார்னு தெரியாத ஒரு அனாதைப் பிறப்பாவா நான் பிறந்திருப்பேன்?

நானொரு பாவி... இருந்தாலும், அதுலயும் கொஞ்சம் புண்ணியம் செய்திருக்கறவ! அதனால் தான் இந்த முதியோர் இல்லத்துல ரங்காச்சாரி அப்பா கிட்ட இருக்கேன். ஆனாலும் அப்பா எங்க நம்மை எல்லாம் விட்டுப் போயிடுவாரோங்கற பயத்துல தான் இருக்கேன், இப்படிப்பட்ட என்னைப் போய் கடவுளோட சம்பந்தப்படுத்தறீங்களே சாமி.." என்ற யாழினி.

"யாழினி நீ சும்மா இரு... உன்கிட்ட ஒரு தெய்வாம்சத்தை நாங்க எல்லாரும் கூட பாக்கறோம். அவர் சொல்றது சரிதான்" -என்றாள் பஜனையில் பங்குகொள்ள வந்திருந்த ஒரு மாமி.

"சாமி... அப்ப யாழினிகிட்ட என்னென்ன சிறப்பு இருக்குன்னு சொல்லமுடியுமா?" ஒருவர் கேட்டார்.

- யாழினிக்கு தர்ம சங்கடமாகி விட்டது. ஒரு நல்ல விஷயம் பேசத் தொடங்கியவர் தன்னால் குறிப்பாக சீனுவால் திசைமாறிவிட்டது. அவள் வரையில் அதை எதிர் பார்க்கவில்லை. அதனால் அவள் எழுந்தாள். அனைவரையும் ஒரு பார்வை பார்த்தாள். பின் பேசத் தொடங்கினாள்.

"இது பிரார்த்தனைக் கூடம். இங்க தனிப்பட்ட ஒருவரைப் பற்றி பேசறது தப்பு, தயவுசெய்து இனியாவது அவரை நல்ல விஷயம் பேசவிடுங்க. நான் இங்க இருந்தா என்மேலதான் உங்க கவனம் இருக்கும், நான் என் ரூமுக்குப் போறேன்" என்று அங்கிருந்து கிளம்பிவிட்டாள்.

அதை அந்தச் சொற்பொழிவாளரும் ரசித்தார்.

பின் தன் சொற்பொழிவைத் தொடங்கினார்.

"நான் திருத்தலங்களுக்கு யாத்திரைகள் மேற்கொள்கிறவன். எனக்கு இப்ப எழுபது வயதாகுது! இத்தனை வருஷத்துல வைஷ்ணவ திவ்யதேசங்கள்ல 105ஐ முடிச்சிட்டேன். அதேபோல ஆயிரம் சிவாலயங்களுக்குப்

போய் வந்துட்டேன், அடுத்து 108 சக்தி ஸ்தலங்கள். அந்த யாத்திரைல 108-வதாதான் நான் மதுரை வந்தேன். மதுரை மீனாட்சி தான் நான் தரிசனம் பண்ணின 108-வது சக்தி அம்சம்! இதுக்கு நடுவுல 51 கணபதியையும், அறுபடை வீட்டையும், சூரியனார் கோயிலுக்குப்

போய் சூரியனையும் தரிசனம் பண்ணி முடிச்சிட்டேன்.

ஆதிசங்கரர் சொன்ன ஆறுவித வழிமுறைகள்ல உள்ள அவ்வளவு ஆலயங்களையும் தரிசிச்சதன் பலனால்தான் நான் இன்னிக்கு இங்க இந்தப் பெண்ணை பார்க்க நேர்ந்தது.

யாழினி ரொம்ப அபூர்வமான பொண்ணு. அவ இங்க இருந்து கோபமா போனதுல யாரும் வருத்தப்படவேண்டாம், இந்தக் கோபத்தை நான் நல்ல விதமா பாக்கறேன், அது தொட்டது துலங்கும். அவ கை பட்டா பட்ட மரம் கூட துளிர்க்கும். யாழினி போன்ற பிறப்புகள் நிச்சயம் மிக உயரமான இடத்துலதான் பிறந்திருக்கணும். தான் ஒரு அனாதைங்கற யாழினியோட வருத்தம் நியாயமானது. ஆனா, அப்படி இருப்பதன் பின்புலத்துல சூட்சுமமா மிகச் சரியான காரணம் இருந்திருக்கும்.

அதேசமயம் இதுபோன்ற உண்மைகள் வெளிய தெரிய வரவும் கால நேரமிருக்கு. ஒரு குழந்தை உருவாக எப்படி பத்துமாச காலம் தேவையோ அப்படித்தான் இந்த விஷயமும். உருவான குழந்தை குறிப்பிட்ட நேரத்துல வலிகண்டு தாயோட வயிற்றை விட்டு வெளி வந்துடற மாதிரிதான் யாழினி விஷயமும்.

யாழினியும் தன் சக்தியை போகப் போக உணரத் தொடங்குவா. அவளால பல அதிசயங்கள் நடக்கப்போகுது..."என்று ஒரு நெடிய சொற்பொழிவாற்றி நிறுத்தினார் அந்த மனிதர்.

சீனிவாசனோ அவரிடம் பேச நிறைய விஷயங்கள் இருப்பதுபோல உணர்ந்தான். அந்த நொடி கோயிலில் குறி சொன்ன பெண்மணியும் அவன் மனதுக்குள் வந்து விட்டு போனாள்.

அவரும் 'பிரார்த்தனை' குறித்த தனி சொற்பொழிவை தொடங்கினார்.

அந்தக் குன்றின்மேல் ஒரு மெடிக்கல் வேன் மிக வேகமாக ஏறி நின்றது. அதில் ஸ்ரீ கணேஷின் தாயாக வாசந்தியின் உடல் ஏறிக்கொள்ள அந்த மெடிகல் வேன் திரும்ப வேகமெடுக்கத் தொடங்கியது, உள்ளே வாசந்தி யின் அருகில் சந்திரசேகர் அமர்ந்திருந்தார். ஸ்ட்ரெச்சரில் துவண்டு கிடக்கும் வாசந்தியையே பார்த்தபடி அமர்திருந்தார். பின்னால் ஒரு காரில் மோகனாவும் சந்தானமும் வந்து கொண்டிருந்தனர். தினேஷ் தான் அந்த காரை ஓட்டிக்கொண்டிருந்தான், உள்ளே சந்தானம் முகத்தில் வருத்தத்தை விட கோபம் மிக அதிகமாக தெரிந்தது.

"பார்த்து காரை ஓட்டு. அப்புறம் இதுவும் விபத்து குள்ளாகி நாங்களும்

படுத்த படுக்கையாகப் போறோம்" என்று சற்று வேகமாக காரை ஓட்ட பார்த்த தினேஷை சந்தானம் எச்சரித்தார்.

தினேஷிற்கு அவர் பேச்சு கோபத்தை அளித்தது.

இருந்தும் அடக்கிக் கொண்டான் மனதுக்குள்.

"டேய் கிழவா.. இப்ப உன்னோட டைம் - அதான் பேசறே! என் டைம் வரும்போது உன்னை என்ன பண்றேன் பார்..." என்று மனதுக்குள் கூறிக் கொண்டான்.

"இருந்தாலும் தினேஷ் நீ ஸ்ரீ கணேஷ் பத்தி அப்படி சொல்லியிருக்க வேண்டாம்- என்றாள் மோகனா.

"எப்ப எதைப் பேசணும்கறதெல்லாம் ஒரு நாகரிகம். அது உன்கிட்ட இருக்கற மாதிரி எனக்குத் தெரியல"- என்றார் சந்தானம்.

"இப்பப்பார். வாசந்தியும் பேஷண்டாயிட்டா. இப்ப ஸ்ரீ கணேஷுக்காக கவலைப்படறதா, இல்லை வாசந்திக்காக கவலைப்படறதா?- மோகனா பொங்கினாள்.

"எல்லாம் உன் தாத்தா பண்ண தப்பால. அந்த ஆள் மட்டும் எங்க குழந்தையை எங்க கிட்ட இருந்து பிரிக்காமஇருந்திருந்தா இப்ப நடக்கற ஒரு விஷயம் கூட நடந்திருக்காது.

பாவம் ஸ்ரீ!

அமெரிக்காவுல ஒரு நல்ல விஞ்ஞானியா பேர் எடுத்தவனை நாங்கதான் துப்பு துலக்கற ஒரு போலீஸ்காரனா ஆக்கிட்டோம். அவனும் எங்களுக்காக களத்துல இறங்கி இப்ப ஒரு வெஜிடபுளா படுக்கைல கிடக்கிறான், அவன் ஆக்சிடென்ட்டுக்கு காரணமான அந்தப் புண்ணியவானும் யார்னே தெரியல. ஒண்ணு மட்டும் நிச்சயம் கணேஷ் ஆக்சிடென்ட்டுக்கு காரணமானவன் கொஞ்சம்கூட உருப்படமாட்டான், நிச்சயம் கால் கை போய் ஃபிளாட் ஃபாரத்துல பிச்சை எடுக்கக் கூட முடியாம திண்டாடுவான், நீ வேணா பார். இது நடந்தே தீரும்.

- சந்தானம் பேச்சோடு பேச்சாக சாபமிட்டார். அது தினேஷைக் கலவரப்படுத்தியது.

"அங்கிள்.. இந்த ஆக்சிடென்ட் கணேஷோட கவனக் குறைவால கூட நடந்திருக்கலாமில்லியா?" - என்று மிக வேகமாய் கேட்டான். அந்த வேகம் சந்தானத்தை என்னவோ செய்தது.

"ஏம்ப்பா...கணேஷின் கவனக் குறைவுன்னு உனக்கு யார் சொன்னது? -திருப்பிக் கேட்டார்.

"யாரும் சொல்லல. நான்தான் கேக்கறேன்... அப்படியும் இருக்க வாய்ப்பு இருக்குதானே?"

"ஏன்... கணேஷ் தப்பு பண்ணியிருக்கமாட்டான்னு பாசிடிவா உன்னால யோசிக்க முடியலையா?"

"அது... அது நான் என்ன சொல்ல வந்தேன்னா..?"

"நீ எதுவும் சொல்லாதே...  ஒழுங்க காரை ஓட்டு, நான் கணேஷோட வெளிய போனவன். உன்ன மாதிரி அவன் ஒண்ணும் ரேஷ் டிரைவ் கிடையாது. உனக்கே எதுவும் ஆகாத போது அவனுக்குத் தானா ஆகியிருக்கும்?"

-சந்தானம் கொஞ்சம் பாய்ன்ட்டாகவும் பேசினார். தினேஷுக்கு எங்கே தன்னைக் கண்டுபிடித்து விடுவாரோ என்று சற்று அச்சமாகக் கூட இருந்தது. அதற்குள் ஆஸ்பத்திரியும் வந்து வாசந்தி உடல் ஐ.சி.யு.வுக்குள் நுழைந்தது. வெளியே சந்திரசேகர் தேங்கி நின்றார். எவ்வளவு மோசமான சூழலிலும் தன்னை இழந்து விடாமல் உணர்ச்சிவசப்படாமல் செயல்பட முடிந்தவர், அன்று அந்த நொடிகளில் மிக மோசமான ஒரு மனநிலையில தான் இருந்தார். கண்ணீர் முட்டிக் கொண்டு வந்து, இமைகளின் வரம்பில் நின்று கொண்டிருந்தது.

வேனில் வரும்போதே வாசந்தியின் நாடியை ஒரு டாக்டராய் தெரிந்து கொண்டு விட்டவருக்கு அவள் மிக ஆபத்தான ஒரு கட்டத்தில் இருப்பதை நன்றாகவே யூகிக்க முடிந்தது.

ஒரு மாஸ் அட்டாக் ஏற்பட்டுவிட்டது.

பிள்ளைப் பாசத்துக்கு மனதுக்குள் இடியைப் பாய்ச்சும் ஆற்றல் உண்டு. அது நடந்து விட்டது. டாக்டர்கள் உள்ளே கருவிகள் வாயிலாக பரிசோதித்துச் சொல்ல வேண்டியது தான் பாக்கி.

சந்திரசேகர் ஐ.சி.யு.வுக்கு வெளியே காத்திருக்கத் தொடங்கிய அந்த நொடிகளில் காரைவிட்டு இறங்கி வந்தவர்களாக சந்தானமும் மோகனாவும் வந்து சேர்ந்திட, ஐ.சி.யு.வுக்குள் இருந்து ஒரு டாக்டர் சோகமாக சந்திரசேகரை நோக்கி வந்தார்". ஐ ஆம் எக்ஸ்ட்ரீம்லி வெரிசாரி மிஸ்டர் சந்திரசேகர். உங்க மனைவிக்கு மாஸ் அட்டாக். பிரெய்ன்ல ரத்தக்குழாய் உடைஞ்சு ஹெமரேஜ்! சுத்தமா ஆக்ஸிஜன்

இன்டேக்கும் இல்லாததால் அவங்க உயிர் பிரிஞ்சிடிச்சு..."

- டாக்டர் சொன்ன மறுநொடி 'ஓ'வென வாய்விட்டு அழத் தொடங்கி விட்டார் சந்திரசேகர். பின் தொடர்ந்து வந்து சேர்ந்திருந்த தினேஷும் செய்தியை கேள்விப்பட்டு அதிர்ந்தான்.

இது அவன் கூட எதிர்பார்க்காத ஒரு முடிவு.

உடனடியாக அவள் தாயான பூரணிக்குத் தான் போன் செய்தான்!

"என்னப்பா விஷயம்?"-என்று அவள் கேட்கவும் வாசந்தியின் மரணத்தைக் கூறவும் அவளும் வாயடைத்துப் போய் பிறகு மெல்ல ஈனசுரத்தில் பேசத் தொடங்கினாள்.

"தினேஷ்... இதை நான் கொஞ்சம்கூட எதிர்பாக்கலடா.."

"நானும்தான்... போகட்டும் விடு. இனி சந்திரசேகரும் துக்கத்தோட ஒதுங்கிடுவாரு. அந்த கணேஷுக்கும் காலம் பூரா படுக்கை தான். அங்கிள் ஆன்ட்டிக்கு இவங்க தூபம் போடறதெல்லாம் இனி நடக்காது. இது நமக்கு நல்லது தாம்மா..."

"என்ன நல்லதோ.... பாவம்டா வாசந்தி! அவ நிஜமாலுமே ரொம்ப நல்லவடா. அது தெரியுமா உனக்கு?"

"என்னம்மா சென்டிமென்ட் ஃபீலா... இந்த உலகத்துல நல்லவங்களுக்குதான் காலமில்லேங்கறது எல்லாருக்கும் தெரிஞ்ச ஒரு விஷயமாச்சே...?"

"தினேஷ்... உன்கிட்ட நான் இப்படி ஒரு மாற்றத்தைக் கொஞ்சம் கூட எதிர்பாக்கலடா..."

"எதிர்பாக்காதே! நீ எதிர்பாக்காத பல விஷயங்கள் இனிமேலும் நடக்கப்போகுது. யார் கண்டது..? வாசந்தி ஆன்ட்டி போன வழியில உன் அருமை அத்தை மகள் மோகனாவும் போகலாம்...! அவ்வளவு ஏன்.. இந்த கிழவன் சந்தானமும் கூட போகலாம்... யாருக்கு தெரியும்?"

-தினேஷின் பேச்சு பூரணிக்குள் பெரும் அச்சத்தை மூட்டத் தொடங்கியது.

# 25

'சிலம்பை உடைத்து

என்ன பயன்?
அரியணையிலும்
அந்தக் கொல்லன்!'
நன்றி: கவிஞர் தமிழன்பன்

பூரணி தனக்குள் ஏற்பட்ட அச்சம் விலகாமல் தினேஷிடம் பேச்சைத் தொடர்ந்தாள்.

"தினேஷ்... எனக்கு உன்னை நினைச்சா ரொம்பவே பயமா இருக்குடா... வேண்டாண்டா... இது விபரீதமா எதுலையாவது போய் முடிஞ்சிடப்போகுது..." என்றாள்.

"அம்மா...நான் துணிச்சலா புலிவாலை பிடிச்சிட்டேன். ஒண்ணு நான் இருக்கணும். இல்ல புலி இருக்கணும். இது அப்படியே ஒண்ணுமில்லாம போக நான் இவ்வளவு கஷ்டப்பட்டிருக்க தேவையே இல்லையே..?"

"கஷ்டப்பட்றது வேற... தப்பா செயல்பட்றது வேற தினேஷ்."

"என்னம்மா நீயே என்னை தப்பானவன்னு சொல்றே. நான் உனக்கும் சேர்த்துதான்மா கஷ்டப்பட்றேன்."

"வேண்டாம்ப்பா... போதும்... விட்று.."

"விட்டுட்டா நான் கணேஷை போட்டுத்தள்ள முயற்சி செய்தது ஒண்ணுமில்லாம போயிடும்மா? விட்டுட்டா உன் அருமை மாமன் மகளும் அவ புருஷனும் என்னை தங்களோட வாரிசா ஏத்துக்குவாங்களா?"

"ஐய்யோ நான் சொல்றத நீ சரியா புரிஞ்சிக்காம பேசறியே தினேஷ். சின்னச் சின்ன தப்பு பண்றதுக்கும் ஒரு கொலகாரனாவே மாறுறதுக்கும் நிறைய வித்தியாசம் இருக்குடா. நான் சின்னச் சின்ன தப்போட போயிடும்னு நினைச்சேன். ஆனா இப்ப அநியாயமா ஒரு உயிரே போயிடிச்சு. அதிலயும் வாசந்தி ரொம்ப நல்லவ...

"போதும்மா நான் போனை கட் பண்ணிக்கறேன். இனி நான் என் திட்டம் எதைப்பத்தியும் உன்கிட்ட பேசமாட்டேன். ஆனாலும் நீ ஓவர் சென்டிமென்ட் லேடியா இருக்கே வெச்சுட்றேன்."

-போனை கட் பண்ணிவிட்டு திரும்பி வந்தவனை சந்தானம் கடுமையாக ஏறிட்டார்.

"பாத்த இல்ல..? பேசத் தெரியாம நீ பேசினதுல ஒரு உயிர் போயிடிச்சு.

உன்னைப் போய் நான் இந்த விஷயத்துல இறங்கினேன் பார். அது என் தப்பு..." அவரது சீற்றம் மோகனா காதிலோ. சந்திரசேகர் காதிலோ விழவில்லை. இருவரும் விசும்பி விசும்பி அழுது கொண்டிருந்தனர்.

உள்ளே வாசந்தி உடலை பிரசர்வ் பண்ணுவதில் மும்முரமாக இருந்தனர். ஒரு நர்ஸ் ஃப்ரீசர் பாக்ஸுக்கு போன் செய்து கொண்டிருந்தாள்.

சந்தானமும் ஒரு முடிவுக்கு வந்தவராக "நீ இருந்து எங்களுக்கு எல்லா உதவிகளும் செய்தது போதும். இடத்தை காலிபண்ணு இனி எல்லாத்தையும் நான் பாத்துக்கறேன்" என்றார்.

தினேஷுக்கு சுரீர் என்றது.

"அங்கிள்... வெரிசாரி அங்கிள்! சத்தியமா இப்படி நடக்கும்னு நான் கனவுலகூட எதிர்பார்க்கல. அதுக்காக எனக்கு என்ன தண்டனை வேணும்னா தாங்க. ஆனா என்னை போன்னு மட்டும் சொல்லாதீங்க" - என்று கெஞ்சுவது போல நடிக்கத் தொடங்கினான். அது தற்காலிகமாக சந்தானம் வரையில் வேலையும் செய்தது. இதற்கிடையில் சந்தானத்தை நெருங்கிய டாக்டர் ஒருவர் "ஐ ஆம் எக்ஸ்ட்ரீம்லி வெரி சாரி சார்.... இப்பதான் நீங்க தெம்பாவும் கவனமாவும் தைரியமாவும் இருக்கணும். மேடம் இறந்த விஷயம் எக்காரணம் கொண்டும் உள்ளே இருக்கற பேஷண்டான கணேஷுக்குத் தெரிஞ்சுடக்கூடாது. இங்க நாங்க ரொம்ப கவனமா இருப்போம்! ஆமா பாடியை என்ன பண்ணப் போறீங்க?"

- அந்த டாக்டர் கேட்கவும் மார்பில் யாரோ குத்தியது போல் இருந்தது. சற்று முன் வரை நன்றாக இருந்த வாசந்தியை பாடி என்று அழைத்ததில் சந்தானத்துக்குள் ஒரு ஞானபாடமே படித்தது போல் ஒரு தெளிவும்கூட...

"டாக்டர்... எனக்கு என்ன செய்யறதுன்னு தெரியல... நான் சந்திரசேகர் கிட்ட கேட்டுச் சொல்றேன்..."

"சென்னை கொண்டு போய் காரியம் செய்யறதா இருந்தா சொல்லுங்க. அதுக்கு தகுந்த மாதிரி பாடி நீர் விடாத படி இஞ்ஜெக்ட் பண்ணி தருவோம். இங்க மதுரைலயே தகனம் பண்றதா இருந்தா எதுவும் தேவையில்லை..."

"கொஞ்சம் இருங்க நான் கேட்டுட்டு சொல்றேன்" என்ற சந்தானம் சந்திரசேகரை நெருங்கி வந்தார். அப்படியே மெல்ல அணைத்துக் கொண்டார்.

"சந்திரா... மனச விட்றாதே! நடக்கக்கூடாதது நடந்து போச்சு. உனக்கு ஆறுதல் சொல்ல என்கிட்ட வார்த்தைகளும் இல்லை. அதே சமயம் இப்ப நான் சில முடிவுகளை எடுத்தாகணும் வாசந்தி இறந்த விஷயம் கணேஷுக்கு தெரியாம பாத்துக்கணும். வாசந்தியோட ஈமக்ரியையும் செய்து முடிக்கணும். கொஞ்சம் நிமிர்ந்து யாருக்கு தகவல் தரணும்னு சொல். 'சென்னைல பண்ணப் போறீங்களா... இல்ல இங்க பண்ணப் போறீங்களா'ன்னு டாக்டர் கேட்டார்.

சென்னைல உன் வீட்டுக்கு போயிட்டு அங்க பண்றது தான் நமக்கு தோது. உறவினர்களும் நண்பர்களும் அப்பதான் இதுல கலந்துக்க முடியும். நீ என்ன சொல்றே?"

- சந்தானம் கேட்டதற்கு சந்திரசேகரால் பதில் கூற முடியவில்லை. கண்களை கண்ணீர் மறைத்தது. வார்த்தைகள் வர மறுத்தன.

"என்னங்க கேள்வி இது! வாசந்தி உடம்போட நாம நம்ம வீட்டுக்குப் போவோங்க. அண்ணனை தொந்தரவு செய்யாதீங்க. டேய் தடிமாடு... போயி உன் அம்மாகிட்ட ஆரம்பிச்சு எல்லார்க்கும் போன் பண்ணிச் சொல் 'எக்ஸ்பிரஸ்'னு எல்லா பத்திரிகைக்கும் தகவல் கொடு. அப்படியே நாம புறப்பட எல்லா ஏற்பாட்டையும் செய்"

-மோகனா இடையிட்டாள். தினேஷை அவள் சந்தடி சாக்கில் தடிமாடு என்றது அவனுக்கு நரம்பில் ஊசி ஏற்றியது போல் வலித்தது.

"என்ன கேள்வி இது. கணேஷுக்கோ இன்னும் சுய நினைவே திரும்பல. இந்த நிலைல நாம இங்க இருக்கறதும் ஒண்ணுதான். இல்லாததும் ஒண்ணுதான். இப்ப நம்ம ஒரே நோக்கம் வாசந்தியோட காரியம்தான் மிச்சமெல்லாம் அப்புறம் தான்.

வேணும்னா ஒண்ணு பண்ணலாம். நாம வரும் வரை அந்த முதியோர் இல்லத்துக்காரர். அவர் பேர்கூட என்ன சொன்னீங்க..? ஆங் சீனிவாசன்...! அவரை இங்க கொஞ்சம் பாத்துக்க சொல்லலாம். டேய்... அவர் போன் நம்பர் உன்கிட்ட இருக்கா?

- மோகனா படபடப்பாக பேசி நம்பரைக் கேட்கவும் தினேஷுக்கு பகீரென்றது.

"இல்ல. ஆன்ட்டி" என்றான்.

"என்ன புள்ளடா நீ... நம்பரை வாங்கிக்க மாட்டே சரி போகட்டும். அவங்க முதியோர் இல்லம் அட்ரஸை சேஸ் பண்ணி போன் நம்பரை

வாங்கப் பார். கமான் க்விக்..."

"ஆன்ட்டி..."

"நான் இங்க இருந்து பாத்துக்கறேன். அவங்கல்லாம் அவ்வளவு பொறுப்பா பாத்துக்க மாட்டாங்க."

"உன் பொறுப்பை நான் பாத்தேனே... நான் சொல்றத கேள். முதல்ல அந்த சீனிவாசன் நம்பரோட வா. திருமகள் நிலையம்'கற அந்த இல்லத்தோட பேர் எனக்கு நல்லா ஞாபகம் இருக்கு. டெலிபோன் டைரக்டரில தேடினாலே கூட கிடைச்சிடும்..."

- மோகனா தீர்மானமாக பேசினாள். தினேஷுக்குள் இந்த இக்கட்டை எப்படி சமாளிப்பது என்கிற சிந்தனை ஓடத் தொடங்கியது!

முதியோர் இல்லத்தில் எல்லோருக்கும் இரவுச் சாப்பாடு போடப்பட்டுக் கொண்டிருந்தது. தையல் இலையில் பூப்போல நான்கு இட்லி கொத்துமல்லி சட்னி துளி இஞ்சி ஊறுகாய். அது போக இதமான சூட்டில் மிளகும் சித்தரத்தையும் போட்டு காய்ச்சிய குடிநீர்.

வயதானவர்கள் பலருக்கு பற்களில்லை. எனவே இட்லியை தத்தக்கா பத்தக்கா என்று சாப்பிட்டபடி இருந்தனர். சட்னி ருசி சாப்பிடச் செய்தது. இஞ்சி ஊறுகாயும் மருந்தோட சேர்த்தி. அஜீரணமில்லாதபடி பார்த்துக் கொள்ளும்.

எல்லோரும் சாப்பிடுவதை யாழினி ஒரு பார்வை பார்த்து விட்டு தன் அறை நோக்கி செல்லத் தொடங்கினாள். வழியில் சீனிவாசன் அறை!

உள்ளே பேச்சு சப்தம் கேட்டது. மெல்ல எட்டிப்- பார்த்தாள். சொற்பொழிவாற்றிய அந்த மனிதருடன்தான் சீனிவாசன் பேசிக் கொண்டிருந்தான். அதுவும் யாழினி பற்றித்தான்....!

"சாமி... யாழினியை பத்தி முழுசா தெரிஞ்சுக்கத்தான் நான் உங்களை இங்க கூட்டி வந்தேன். நீங்க மீட்டிங் ஹால்ல சொன்ன மாதிரி யாழினி ஒரு தெய்வப் பெண்ணா? என்னால் நம்ப முடியல..."

"என் வரைல அவ தெய்வப் பெண்தாம்ப்பா. நீ நம்பலேன்னா அது உன் விருப்பம். இதுல யாருக்கும் எந்த நஷ்டமும் இல்லையே..."

"நீங்க தப்பா புரிஞ்சுக்கிட்டீங்க... நான் நம்பிக்கை இல்லாம கேக்கலே. ஒரு எக்ஸ்டைட்மெண்ட்ல தான் அப்படி கேட்டேன்..."

"எப்படி கேட்டாலும் சரி... நான் சொன்னது தான் உண்மை."

"சரி... இந்த தெய்வாம்சத்தால யாருக்கு என்ன புண்ணியம். அவ சொன்னமாதிரி அவளே இப்ப ரங்காச்சாரி சார் பத்தின கவலைல இருக்கா. அதோட அவ ஒரு அனாதை ஒரு தெய்வப்பிறவி இப்படியா இருக்கும்?"

"தம்பி சீனிவாசா... நம்ப மதத்துல உன்னோட எல்லா சந்தேகங்களுக்கும் சரியான பதில் இருக்கு அவதார புருஷனான கிருஷ்ணனே பிறந்தது ஒரு இடம் வளர்ந்தது ஒரு இடம் தானே! தெய்வப்பிறவிகள் நீ காலண்டர்ல பாக்கற நம்ம சாமிகள் மாதிரி நகையலங்காரத்தோட பட்டு உடுத்தி தாமரைப்பூமேல தான் உக்காந்துருக்கணும்கற அவசியமில்லை. சாதாரணமாவும் இருக்கலாம்"

"அதுக்கில்ல சாமி... யாழினி வாழ்க்கைல ஒரு பெரிய மாற்றம் ஏற்படப் போறதா என் மனசுக்கு தோணுது. அதனால அவ தொடர்பா எனக்கு பல சந்தேகங்கள்..."

"ஒவ்வொண்ணா கேள். தெரிஞ்ச பதிலை சொல்றேன்"

"யாழினி எதனால அனாதையானா? அவ அப்பா அம்மா குடும்பம் பத்தி உங்களால ஏதாவது சொல்ல முடியுமா?

"அவ அனாதையானது ஒரு சோதனை. பாரதத்துல கர்ணன் ஆத்துல தூக்கிப் போடப்பட்டவன் தானே? ஆனா, கர்ணன் ஒரு நாட்டுக்கே ராஜாவாகலையா?

"அப்ப இனி வரும் காலத்துல யாழினி ராஜா மாதிரி நல்லா இருப்பாளா?"

"அவ நல்லா இருக்கறது மட்டுமில்ல. நூறு பேரை நல்லா வெச்சுக்கறவ அவ. நான்தான் சொன்னேனே அவ தொட்டது துலங்கும். நினைச்சது நடக்கும்னு...

"தப்பா எடுத்துக்காதீங்க.. அவ நினைச்ச பல விஷயங்கள் நடந்ததில்லை. இப்ப இதுக்கு என்ன பதில்?

"சீனிவாசன் சில விஷயங்கள் உனக்குப் புரியல. என் பாக்கெட்ல பணம் இருக்குன்னு தெரிஞ்சாதான் நான் செலவு செய்யறதப்பத்தியே யோசிப்பேன். இல்லேன்னா யோசிப்பேனா?"

"மாட்டீங்க"

"இந்த விஷயமும் அப்படித்தான். அவ ஒரு சக்திக் களஞ்சியம்னு நான் சொல்லிட்டேன். யாழினியும் அதை நம்பி எதை நினைச்சாலும் அதனால வெற்றிதான் அவளுக்கு ஏற்படும்."

- இருவர் பேசுவதும் கதவுக்கு அப்பால் யாழினி காதில் விழுந்தபடியே இருக்க அவளுக்கு சிரிப்பு வந்தது. சிரிப்புடன் உள் நுழைந்தாள்.

அவள் வரவும் பேச்சு தடைபட்டது. சீனிவாசன் யாழினியை எதிர்பார்க்கவுமில்லை.

"என்னண்ணா என்னைப் பத்தின ஆராய்ச்சியை நீ விடவே மாட்டியா?"

"அது... அது... நீ எங்க வந்தே?"

"யதார்த்தமா வந்தேன். என்பேர் காதுல விழவும் நின்னு கவனிச்சேன்."

"எல்லாம் ஒரு க்யூரியாசிட்டிதான் யாழினி..."

"என்ன க்யூரியாசிட்டியோ? இதெல்லாம் ரொம்ப மிகையான பேச்சு! நான் உன்னைப்போல ஒரு மனித உயிர் அவ்வளவு தான் என்னை எதுக்கு கடவுளாக்கறீங்கன்னு தெரியல."

"நாங்க ஆக்கலம்மா... நீ ஆனவள்னு சொல்றோம்"

"ஒரு ரேகையை வெச்சு இப்படி சொன்னா அது உண்மையாயிடுமா? உண்மைல நான் எவ்வளவு பெரிய துரதிர்ஷ்டசாலி தெரியுமா...? கணேஷ்ங்கற ஒரு மனிதர் மட்டும் என் வாழ்வுல வராம போயிருந்தா இந்த நொடி நான் கற்பிழந்து தூக்குல தொங்கியிருப்பேன். இப்ப நினைச்சாலும் எனக்கு பகீர்னு இருக்கு. நான் தப்பிச்சது மட்டு மல்ல. எனக்கு உதவி செய்த அந்த கணேஷ் பிழைப்பாரா இல்ல மாட்டாரான்னே தெரியல. என்னை ஆளாக்கினவரும் ஆஸ்பத்திரில...

நான் ஒரு தெய்வப்பிறவின்னா என்னை சுத்தி எல்லாரும் சந்தோஷம்தான் படணும். சந்தோஷப்படாட்டியும் கஷ்டப்படாம இருந்தாலே போதும். ஆனா, இப்பநிலை அப்படியா இருக்கு?"

-யாழினி சற்று கோபத்தோடு கேட்டதற்கு சீனிவாசனால் பதில் கூற முடியவில்லை. ஆனால், அந்த மனிதர் கூற முற்பட்டார்.

"அம்மாடி... உனக்கு ஆபத்து வந்திருக்கலாம். ஆனா, நிச்சயம் அதுக்குப் பின்னால ஒரு காரணம் இருக்கும்.

அதனால ஒரு பெரிய நல்லது தான் நடக்கவும் செய்யும். இப்பவும்

சொல்றேன். உன்னை சுத்தி யாருக்கும் எதுவும் தப்பா நடந்துடாது. நீ என்ன நினைக்கறியோ அதுதான் நடக்கும். ஏன்னா உன் மனோசக்தி அப்படிப்பட்டது"

- அவர் தீர்க்கமாக பேசினார். "கிட்டத்தட்ட நீங்க சொல்றமாதிரிதான் ஒரு ஜோசியக்காரியும் சொன்னாங்க சாமி," - சீனிவாசன் எடுத்துக் கொடுத்தான்."

"ஆமா... அவ சொன்ன மாதிரி எல்லாம் நடந்துடிச்சா ஒரு உயிர் பிரியும்னா. அப்படி நடக்கணுமா?" - யாழினி திரும்பவும் கோபவயப்பட்டாள். அப்போது சீனிவாசன் டேபிளில் தொலைபேசி சிணுங்கியது. அவனும் காதைக் கொடுத்தான்.

"திருமகள் முதியோர் இல்லம்"

"மிஸ்டர் சீனிவாசன் இருக்காரா?"

"நான்தான் பேசறேன். நீங்க யார் பேசறது?"

"ஓ, நீங்களா... நான் மோகனா பேசறேன். அப்படி சொன்னா உங்களுக்குத் தெரியாது. ஆஸ்பத்திரில இருக்காரே மிஸ்டர் கணேஷ். அந்த கணேஷோட ஆன்ட்டி..."

"ஓ நீங்களா... சொல்லுங்க சொல்லுங்க"

"ஒரு பேட் நியூஸ் மிஸ்டர் சீனிவாசன்"- மோகனா வாசந்தியின் மரணத்தை அதைத் தொடர்ந்து சொல்லி முடித்திட சீனிவாசனிடம் ஸ்தம்பிப்பு. கூடவே ஒரு வகை பிரமிப்பு. அது கலையாமல் யாழினியைப் பார்த்தான்!

# 26

"தீதும் நன்றும் பிறர் தர வாரா/பதித்து விடு...
எல்லா நாளும் வெயில் அல்ல/சலிப்பு விடு...
கதை வசனம் இயக்கம் கடவுள்/நடித்து விடு...
இருள்கள் கிடக்கட்டும் வெளியே
ஒளியைக் கூட்டு உள்ளே!"

நன்றி: சிங்கைக் கவிஞர் யூசுப் ராவுத்தர் ரஜித்

சீனு தன்னை ஒரு வியப்போடு உற்றுப் பார்ப்பதை யாழினியும் உணர்ந்தாள். அப்படியே போனில் வந்த செய்தியை தெரிந்த

கொள்ள வேண்டும் என்கிற தவிப்பு அவளிடம் தெரிந்தது.

"சீனுண்ணா... யார் போன்ல, ஏன் அப்படி பாக்கறே?" என்று கேட்கவும் செய்தாள்.

"சொல்றேன் யாழினி... கட்டாயம் சொல்றேன். நடக்கற ஒவ்வொரு சம்பவமும் எனக்கு இப்ப ஆச்சரியமா, அதிசயமாதான் இருக்கு. நமக்கு மேல ஒரு சக்தி இருக்குன்னு தெரியும். ஆனா, அந்த சக்தியோட செயல்பாட்டை நமக்கான அன்றாட வாழ்க்கை அனுபவத்துல ஒரு அதிசயமா ஆச்சர்யமா யாரும் உணருவதில்லை. தினமும் பொழுது விடியறது. நாமளும் கண் விழிக்கிறோம். அப்புறம் அன்றாட வேலைகளை செய்யத் தொடங்கிடுறோம். திரும்ப ராத்திரி வரவும் தூங்கப் போயிடுறோம். நடுவுல ஒருநாள் ரொம்ப சந்தோஷமா இருக்கு. ஒருநாள் வலிகளோட இருக்கு. ஒருநாள் இரண்டும் கலந்த நாளா இருக்க, ஒருநாள் எதுவுமே இல்லாத சராசரி நாளா இருக்கு. இப்படித்தான

பெரும்பாலும் எல்லோருடைய வாழ்வும் இருக்கு. இப்படிப் பட்ட வாழ்க்கைல அதிசயம் ஆச்சரியங்களும் ஏற்படாமல் இல்லை. ஆனா, அதெல்லாம் மனுஷ சக்திக்கு உட்பட்டதாதான் இருக்கு. லண்டன்ல குப்பை கூட்ற ஒரு பொண்ணுக்கு 55 கோடி ரூபாய் லாட்டரி விழுந்திருக்கு. இது அதிர்ஷ்டம். கொஞ்சம் அதிசயமும் கூட. 365 பேரோட ஒரு விமானமே காணாம போயிருக்கு. இது அதிர்ச்சிக்குரிய ஆச்சரியம்."

இதெல்லாமே மனித வாழ்க்கைல நடக்க சாத்தியங்கள் நிறைய இருக்கு. இனிமே இப்படியெல்லாம் நடக்காதுன்னு சொல்ற மாதிரி இதுல எதுவுமில்லை. நம்மோட அறிவால இதை கொஞ்சம் புரிஞ்சுக்கவும் முடியுது. ஆனா, உன் விஷயம் இது எதுலயும் சேரலை யாழினி... நீ தனியா தெரியறே..."

- சீனுவின் நீண்ட விளக்கம் ஒரு சரியான இடத்தில் தான் முடிந்து நின்றது. யாழினியிடம் திகைப்பு. "போன்ல என்ன செய்தின்னு கேட்டதுக்கு இவ்வளவு பெரிய விளக்கமா? முடிவில நான் ஒரு அதிசயம்கற மாதிரியே வந்து முடிச்சிட்டே. நான் ஒரு அதிசயம்கற மாதிரி அப்படி என்ன நடந்துடிச்சின்னு இவ்வளவு பெரிய விளக்கம் சீனு அண்ணா..."

"எல்லாமே நடந்துடிச்சி யாழினி... மீனாட்சி அம்மன் கோயில்ல உன்னை சந்திச்ச ஜோசியக்காரி சொன்னதுல இருந்து இங்க நேத்து

சொற்பொழிவாற்றின அந்த சன்யாசி சொன்னது வரை எல்லாமே உண்மைதான். எதுவும் பொய் இல்லை."

"திரும்பத் திரும்ப அதையே சொன்னா எப்படிண்ணா. அப்படி என்னதான் நடந்தது?"

"அந்த ஜோசியக்காரி ஒரு உயிர் கட்டாயம் போயே தீரும்னு சொன்னா இல்லையா?"

"ஆமாம்"

"போயிடிச்சு..."

"ஐய்யோ யார்... கணேஷ் சார்க்கு எதுவும் நடக்க வாய்ப்பே இல்லை. அவருக்காக நான் பிரார்த்தனை பண்ணி கிட்டே இருக்கேன்..."

"பதட்டப்படாதே. இறந்தது அவர் இல்லை..."

"வேறயார். ஒரு வேளை நம்ம..."- யாழினியால் முடிக்க முடியவில்லை. ஆனால் அவள் மனதுக்குள் ரங்காச்சாரி தான் இருந்தார்.

"பயப்படாதே நம்ம ரங்காச்சாரி அப்பாவும் இல்லை."

"அப்ப வேற யார். சீக்கிரம் சொல்."

"சொல்றேன். கணேஷோட அம்மா தான் இறந்துட்டாங்க."

"யாரு. கணேஷ் சாரோட அம்மாவா - நாம கூட ஆஸ்பத்திரியில பார்த்தோமே...?"

"அவங்களே தான்..."

"என்னண்ணா இது அநியாயம்- நல்லாதானே இருந்தாங்க..."

"அவங்க தாய்ப்பாசம் மாரடைப்பா மாறிடுச்சு யாழினி. கணேஷ் சார் இனி எழுந்து நடமாடவே முடியாதுங்கற மாதிரி அவங்க காதுல விழுந்திருக்கு. எல்லாத்துக்கும் அந்த தினேஷ்தான் காரணம்."

"தினேஷ்னா..."

"அதுக்குள்ள மறந்துட்டியா?"

"ஓ... அவனா? நம்மை அவங்க கிட்ட நெருங்கவிடாம அவன் செயற்கையா நடந்துக்கும்போதே நான் அவன் ரொம்ப

மோசமானவன்னு தெரிஞ்கிட்டேன். அவனா கணேஷ் அம்மா சாகக் காரணம்?"

"ஆமாம்... அப்படித்தான் மோகனா மேடம் சொன்னாங்க"

"இந்த மோகனா யார்?"

"நாம பாக்க நாலுபேர் வந்தாங்க இல்லையா? அதுல ஒருத்தங்க. இன்னும் சொல்லப் போனா இந்த மோகனா அப்புறம் இவங்களோட கணவர் சந்தானம் இவங்களுக்காகத்தான் கணேஷ் கொடைக்கானலுக்கே வந்துருக்கார். வந்த இடத்துலதான் இப்படி எல்லாம் நடந்துடுச்சி"

"சரி நாம இப்ப என்ன செய்யப்போறோம்! கணேஷ் சாருக்கு அம்மா இறந்த விவரம் தெரியுமா?"

"இல்லை. தெரிஞ்சுக்கற நிலைல தான் கணேஷ் இல்லையே? அப்படி ஒரு நிலை வந்தாலும் இந்த விஷயம் கணேஷ் பரிபூரணமா குணமாகற வரை கொஞ்சமும் தெரியக் கூடாது யாழினி..."

"வாஸ்தவம் தான். அவரே உயிருக்குப், போராடிக் கிட்டு இருக்கார். இது தெரியக் கூடாது தான். சரி நீ இப்ப என்னண்ணா பண்ணப் போறே - கணேஷ் அம்மா உடம்பை நாம போய் பாக்க வேண்டாமா?"

"கணேஷுக்காக நிச்சயம் பாக்கணும் யாழினி. நம்ம இறுதி அஞ்சலியையும் செலுத்தணும். கூடவே நம்மகிட்ட அந்த மோகனா ஒரு உதவி கேட்டுருக்காங்க யாழினி..."

"என்ன உதவிண்ணா?"

"கணேஷ் அம்மாவான வாசந்தியோட உடம்பு இப்ப ஆஸ்பத்திரியில இருக்கு. அவங்க சென்னைல இருக்கற அவங்க வீட்டுக்குப் போய் ஈமக்ரியை செய்யப் போறாகங்களாம். அவங்க போய்ட்டு வர நாலைஞ்சு நாட்கள் நிச்சயம் தேவைப்படும். அதுவரை ஆஸ்பத்திரில அவங்க சார்பா கணேஷை நாமதான் பார்த்துக்கணும். "உங்களாக முடியுமா"ன்னு கேட்டாங்க. நானும் "ஒரு அரை மணி நேரத்துல அங்க இருப்பேன்"னு சொல்லிட்டேன்..."

"அரை மணி நேரத்துல இருக்கறதா சொல்லிட்டு இப்படியா என்கிட்ட பேசிக்கிட்டு இருப்பே...?"

பேசவேண்டிய விஷயத்தைப் பேசவேண்டிய தருணத்துல பேசிடணும்

யாழினி. நீ ஒரு அபூர்வப் பிறவிங்கறது என வரைல உறுதியாயிடிச்சு. எப்ப நீ அபூர்வமானவள்னு தெரிவந்ததோ அப்பவே எனக்கு பெரிய அளவுல நம்பிக்கையும் வர ஆரம்பிச்சாச்சு.

இனி நடக்கற எல்லாமே நிச்சயம் நல்லவிதமா தான் இருக்கும் பார். அது மட்டுமில்ல. உன்னைப் பத்தின பல ரகசியங்கள் தெளிவாகப் போகுது. என் யூகம் சரியா இருந்தா கணேஷ் தேடி வந்த பெண்ணே நீ தான்...."

- சீனுவிடம் உற்சாகம் கொப்பளித்தது.

"ஐய்யோ அண்ணா... இது துக்கமான நேரம்- இந்த நேரத்துலயா என்னப்பத்தி இப்படி எல்லாம் பேசுவே. முதல்ல புறப்படு..."

"இதோ ஒரு நிமிஷத்துல சட்டையை மட்டும் மாத்திகிட்டு வரேன். நீயும் தயாரா இரு..."

- சீனு சொல்லிவிட்டு ஓடினான்.

எதிரில் அந்த சன்யாசி!

தோளில் தொங்கிய வார்ப் பையுடன் அங்கிருந்து புறப்பட்டுவிட்டவர் போல காட்சி தந்தார்.

"சாமி... எங்க கிளம்பிட்டீங்க?"

"இங்க திருப்பரங்குன்றத்துல 'சூட்டுக்கோல் சித்தர்'ங்கற ஒரு சித்தரோட ஜீவ சமாதி இருக்காமே. போய் தியானத்துல உக்காரலாம்னு பாக்கறேன்."

"திரும்ப வந்துடவீங்க தானே?"

"அது தெரியாதப்பா. போற இடம் என்னை புடுச்சும் வெச்சுக்கலாம். தூக்கியும் போட்டுடலாம்."

"இப்படி ஒரு திட்டமில்லாம பேசினா எப்படி சாமி?"

திட்டமெல்லாம் எல்லாம் நாம செய்யறதுலதான் இருக்குன்'னு நினைக்கற உங்களுக்குதான்... நான்தான் எல்லாம் அவன் செயல்ங்கற கட்சியாச்சே? ஆகையால என் வரைல எல்லாமே நடக்க நடக்கத்தான் தெளிவாகும்."

"உங்க பதிலை எப்படி எடுத்துக்கறதுன்னு எனக்கு தெரியல. அதே சமயம் ஒரு விஷயத்தை நான் சொல்லியாகணும். யாழினி பத்தி நீங்க

சொன்னது நூறு சதவிகிதம் சரிங்க சாமி. அவ ஒரு அபூர்வமான பொண்ணுதான். அவளுக்கு ஒரு காவல் எப்பவும் இருக்கு. அப்படி ஒரு காவலா வந்த கணேஷ்ங்கறவர்தான் பாவம் ஆஸ்பத்திரில பரிதாபமா கிடக்கறார். அவர் எழுந்து நடப்பாரான்னே தெரியல."

"என்னப்பா நீ... யாழினீங்கற சஞ்சீவி மூலிகையை கைல வெச்சுகிட்டு அவர் நடப்பாரான்னு கேட்கறே. யாழினி மனசு வெச்சா ஒரு மலையைக்கூட நூறு அடி தள்ளி வைக்கலாம்ப்பா..."

- அவர் சொன்ன பதிலில் அப்படி ஒரு நம்பிக்கை.

"சாமி நிஜமாவா சொல்றீங்க...?"

"எதுக்கு சந்தேகம். இப்பவே அவளை ஆஸ்பத்திரிக்குக் கூட்டிப்போ. அவகையால மருந்து தரச் சொல். அவ கையால தலைல இருந்து கால் வரை வருடி விடச் சொல். அப்புறம் பார்..."

"அவ்வளவு சக்தியா அவளுக்கு...?"

"திரும்பத் திரும்ப இப்படிக் கேட்காம பரீட்சை பண்ணி பார்த்துத் தெரிஞ்சிக்கோ"

"நீங்க சொல்றத நான் சந்தேகப்பட்றதா நினைக்க வேண்டாம். யாழினி பிறந்த முதல் நாள்ல இருந்து இன்று வரை இங்கதான் இருக்கா. அவளால ஒரு சின்ன அதிசயம் கூட இதுவரை நடந்ததில்லை. ஆனா, இனி நடக்கும்னு நீங்க சொல்றதுதான் எப்படின்னு தெரியல"

"ஆஞ்சநேயர் யாருன்னு தெரியும் தானே உனக்கு?"

"அனுமானைத் தானே சொல்றீங்க?"

"அவரேதான். அவருக்கு யாராவது அவரோட சக்தி பத்தி எடுத்துச் சொன்னாதான் அவருக்கே தெரிய வருமாம். அந்த மாதிரிதான் யாழினி விஷயமும் யாழினி மனசார எது நினைச்சாலும் நடக்கும். எது கேட்டாலும் கிடைக்கும்."

"ஆனா, இதை யாழினி ஒத்துக்க மாட்டேங்கறாளே. நானே ஒரு அனாதை - என்னைப்போய் அதிசயம்னா எப்படின்னு கேக்கறாளே."

"சரியான கேள்விதான்... தேவகி கூட கடவுளையே தான் பிள்ளையா பெத்தா. ஆனா, வளர்க்கற பாக்கியம் யசோதைக்கு தானே இருந்தது...?"

"எல்லா கேள்விக்கும் ஒரு பதில் உங்க கிட்ட தயாரா இருக்கு. பேசப்பேச

புதுப்புது விஷயங்களையும் நீங்க சொல்லிக்கிட்டே வர்றீங்க. ஆனா, உங்ககூட நான் இப்ப நின்னு பேசற நிலைல இல்லை. ஒரு பக்கம் யாழினி பற்றி நல்ல விதமா கேள்விப்பட்ற எனக்கு இன்னொரு பக்கம் துக்கமான ஒரு சூழல் சாமி."

ஆஸ்பத்திரியில இருக்கற கணேஷோட அம்மா இறந்துட்டாங்க. அவங்கள வழியனுப்பத்தான் போய்க்கிட்டிருக்கேன். யாழினியும் கூட வரா..."

"அப்ப... இப்ப நீ ஒரு எழவு காரியமா போறியா?"

"ஆமாம் சாமி... போய் அவங்க கேட்கற உதவியையும் செய்யப் போறேன். நீங்க சொன்ன மாதிரி யாழினியை கணேஷ் அருகில் இருக்கச் செய்து அவ சக்தியையும் தெரிஞ்சுக்க ஒரு வாய்ப்பு வந்துருக்கு..."

"சந்தோஷம். ஆனா, இப்ப நீ மட்டும் போப்பா..."

"ஏன் சாமி?"

"யாழினி வேண்டாம். யாழினி கொஞ்ச காலம் பிணங்களை பாக்காம இருக்கறது அவளுக்கு ரொம்ப நல்லது."

"எதனால சாமி அப்படிச் சொல்றீங்க?"

"காரணம் இருக்குப்பா. நீ இப்ப புறப்படு. அந்த அம்மா உடம்பு போன பிறகு யாழினியை ஆஸ்பத்திரிக்குக் கூட்டிப்போ. அதுக்கு முந்தி ஒரு தடவை மீனாட்சி அம்மன் கோயிலுக்குக் கூட்டிப்போ. அங்க யாழினியே தான் ஒரு அபூர்வ பிறவிங்கறதை உணரும் ஒரு சம்பவம் நடக்கும்."

"நிஜமாவா சாமி சொல்றீங்க."

"ஒரு நல்ல யோகி வாய்ல மறந்தும் பொய் வராது. நான் சொன்னபடியே நடக்கும்பார். நானும் திருப்பரங்குன்றம் சூட்டுக்கோல் சித்தர் ஜீவ சமாதிக்குப் போயிட்டு திரும்பி வரேன். இங்க எனக்கு இன்னமும் கொஞ்சம் கடமைகள் பாக்கி இருக்கு..." .

- அவர் பேச்சோடு தன் இடுப்பில் இருந்து விபூதிப்பை ஒன்றை எடுத்தார். சீனு நெற்றியில் துளி விபூதி இட்டார். 'சிவாயவசி' என்றார். சீனு 'நமச்சிவாய' என்று சொல்லிக் கேட்டிருக்கிறான். இது அவனுக்கு புதிது.

அவர் அதன்பின் எதுவும் பேசாமல் புறப்பட்டார்.

சீனுவும் போய் சட்டை மாற்றிக் கொண்டு வந்தான் யாழினி காத்திருந்தாள்.

"யாழினி நீ இப்ப வரவேண்டாம். பதிலுக்கு நீ மீனாட்சி அம்மன் கோயிலுக்குப் போ. அங்க போய் கணேஷ் குணமாக பிரார்த்தனை செய்துக்கோ. நான் இப்ப போய்ட்டு உனக்கு போன் பண்றேன்"

-என்ற சீனுவை யாழினி சற்று கூர்மையாகப் பார்த்தாள்

"யாழினி... அப்படி பாக்காதே - நான் காரணத்தோட தான் சொல்றேன்."

"என்ன காரணம்"

"நீ... நீ..."

"எனக்கு என்ன?"

"நீ பிணங்களை பாக்கறது நல்லதில்லையாம்."

"இது என்ன புதுக்கதை. யார்... அந்த சாமியார் சொன்னாரா?"

"அ... ஆமா..."

"நினைச்சேன். அவர் ஏன் என்னைப் பத்தி இப்படி கண்டபடி சொல்றார்னு தெரியலியே..."

"அப்படி எல்லாம் அவசரப்பட்டு பேசாதே. அவர் ஒரு நல்ல விஞ்ஞானி. அவர் இப்ப இங்க வந்திருக்கறது ஒரு வகைல நாம செய்த பாக்யம்."

"மண்ணாங்கட்டி புறப்படுண்ணா. நானும் உன் கூட வந்தே தீருவேன். என் வரைல இறந்தவங்களுக்கு செய்யற அஞ்சலி கோயில்ல நூறு அர்ச்சனைக்கு சமம்"

"உண்மைதான். ஆனா, அவர் காரணமில்லாம சொல்லலை. அதே சமயம் நீ நினைக்கறதெல்லாம் நடக்கும். கேட்டதெல்லாமும் கிடைக்கும்னு சொன்னார். உன்கிட்ட ஒரு அருள் அம்சம் இருக்கு. அது சுடுகாட்டு விஷயங்களுக்கு ஏற்றது கிடையாது போல, அதான் அப்படி சொல்லியிருக்கார்."

"ஐய்யோ விட்டா என்னை சாமியாக்கி எனக்கு கோயிலே கட்டிடுவீங்க போல இருக்கே..."

"டென்ஷனாகாதே... நான் இப்ப போய்ட்டு வந்துடறேன். நேரமாயிடிச்சு... தயவுசெய்து என் பேச்சைக் கேள்.

-சொல்லிவிட்டு சீனு விறுவிறுவென்று புறப்பட்டு விட யாழினி சற்று ஸ்தம்பித்துத்தான் போனாள்!

ஆஸ்பத்திரி!

சந்திரசேகரோடு சென்னையில் இருந்து ஐயர் ஒருவர் போனில் பேசியபடி இருந்தார்.

"நடக்கக் கூடாதது நடந்துடுத்து. மனசை தேத்திண்டு அடுத்து நடக்கவேண்டியதைப் பார்ப்போம். உங்களுக்கு ஒரே பிள்ளைங்கறதால அவர் தான் காரியம் செய்யணும். ஆனா, அவரோ தன் நினைவே இல்லாம படுத்த படுக்கையா இருக்கார். இருந்தாலும் பாதகமில்லை. அவர் கையால தர்பைப்புல்லை தொட்டு வாங்கிக்கோங்கோ. அப்படியே அவர் கையால ஒரு மண்சட்டியையும் தொட்டு அதை பத்ரமா எடுத்துண்டு வாங்கோ. அவர் சார்பா நீங்க இங்க காரியம் செய்யலாம். மற்றதை நான் பாத்துக்கறேன்..." என்று சொல்லி முடிக்க அதற்கேற்ப அடுத்தடுத்த செயல்பாடுகள் நடக்க ஆரம்பித்தன.

கச்சிதமாக சீனு உள் நுழைந்தான். அவனிடம் "ஒரு மண் சட்டியும், தர்பைப்புல்லும் வேணும். கிடைக்குமா?" என்று கேட்டார் சந்திரசேகர்.

"அதிகபட்சம் ஒரு அரைமணி நேரத்துல வாங்கிட்டு வந்துட்றேன்..." என்று புறப்பட்டான் சீனு. எங்கே அவனோடு யாழினி வந்து விடுவாளோ என்று பயந்தபடி இருந்த தினேஷுக்கு அவள் வராதது பெரிய ஆச்சரியமாக, பெரிய ரிலீஃப் ஆக இருந்தது.

இழுத்து 'அப்பாடா...' என்று ஒரு பெருமூச்சு விட்டான். அதை சந்தானமும் கவனித்தார்.

# 27

'படுத்துக்கிடப்பவனுக்கு
பகல் கூட இரவுதான்!
ஆனால் எழுந்து நடப்பவனுக்கு
திரும்பும் திசையெல்லாம் உதயம்தான்'
நன்றி: கவிஞர் கவிதாசன்

ந்தானம் தினேஷை கூர்ந்து கவனிப்பதை தினேஷும் கவனித்தான்.

அவன் முகத்திலும் அதன் எதிரொலிகள்...

சயதார்த்தமாய் இருந்து விடுவது எப்போதுமே சுலபம். யாராவது கவனிக்கிறார்கள் என்னும்போது அந்த யதார்த்தம் எப்படியெல்லாமோ மாறி பாடாய்ப் பட வேண்டி இருக்கிறது.

தினேஷுக்கும் அப்படி ஒரு தருணம். இறுக்கமான அந்த சூழலில் மிக வேகமாக தன் தடுமாற்றத்தை சமாளிக்கத் தயாரானான். நேராக சந்தானத்தை நோக்கிச் சென்றவன் அவரிடம் "அங்கிள்... எதாவது சொல்ல விரும்பறீங்களா? என்று கேட்டான். அவன் அப்படி கேட்கவும் அவரிடம் தடுமாற்றம் தொற்றிக் கொண்டது.

"இல்லையே...இல்லையே..." என்றார் ஒருமுறைக்கு இருமுறை...

"இல்ல... நீங்க என்ன பாத்ததை நான்தான் தவறா புரிஞ்சிட்டேன் போல" என்று அழகாக சமாளித்தான். அப்படியே மனதுக்குள் "என்னைப் பற்றி தப்பாய் நினைக்க இடமே தரமாட்டேன்... அந்த தவறான கருத்தை எல்லாம் தூள் தூளாக்கிக் காட்டுகிறேன் பார்" என்றும் சொல்லிக் கொண்டான்.

அங்கங்கே எல்லோரும் உறைந்தது போல் நின்று கொண்டிருந்தனர். குறிப்பாக சந்திரசேகர் ஒரு ஓரமாக ஒரு மூச்சு விடும் சிலைபோல அமர்ந்திருந்தார்.

அவர் கற்பனைகூட செய்து பார்த்திராத ஒரு சம்பவம் நடந்து விட்டது. ஒருபுறம் உயிருக்குப் போராடும் ஒரே பிள்ளை. இன்னொரு புறம் உயிரை விட்டுவிட்ட மனைவி!

ஒரு பாலைவனத்தில் புழுதிக்காற்றுக்கு நடுவில் முகத்தை மூடிக் கொண்டு அப்படியே அமர்ந்துவிட அந்த புழுதிக் காற்று மணலை வாரி அவரையும் மூடுவது போல் அவருக்குள் ஒரு கற்பனை.

நல்லவேளை... அவரது கற்பனை தொடர இடமில்லாத படி சீனு ஐயர் கேட்டிருந்த மண்சட்டி மற்றும் தர்ப்பைப் புல்லுடன் வந்து நின்றான். ஒரு பதினைந்து நிமிடத்தில் இரண்டையும் வாங்கி வருவது சற்று அசாத்தியம்.

அது வரவும் ஐயர், மெல்ல சந்திரசேகர் அருகே சென்று தோளைத் தொட்டார். சந்திரசேகரும் நிமிர்ந்தார். "வாங்கோ" என்று அழைத்தார். சந்திரசேகரும் தள்ளாடியபடி பின் தொடர சந்தானம் உடன் நடந்தார். ஐ.சி.யூ. வாசலில் ஐயருக்கும் சந்திரசேகருக்கும் மட்டும் அனுமதி

தரப்பட்டது. முன்னதாக இருவர் வாயையும் துணியால் கட்டினர்.

சந்தானம் கதவுக்கு அருகில் நின்றபடி வட்டக் கண்ணாடி வழியாக உள்ளே நடப்பதை பார்க்கத் தொடங்கினார் ஐயர். ஸ்ரீகணேஷ் அருகே சென்று மெல்ல வலக்கையை தூக்கி விரல்களைப் பிரித்து தர்ப்பையை வைத்து பின் மூடியவராக அப்படியே அந்த கையை கணேஷின் மார்பு மேல் வைத்தார். புல்லை அவன் பிடித்துக் கொண்டிருப்பது போல் இருந்தது.

சந்திரசேகர் வெறித்து பார்த்துக் கொண்டிருந்தார். ஐயர் தனக்குள் ஏதோ மந்திரங்களைச் சொன்னபடி சந்திரசேகரைப் பார்த்து அந்த தர்ப்பைப்புல்லை அவர் கையால் எடுத்துக் கொள்ளச் சொன்னார். சந்திரசேகரும் எடுத்துக் கொள்ள மண் சட்டியையும் கணேஷ் தொட்டுத் தருவதுபோல கையை பிடித்துத்தர அதையும் வாங்கிக் கொண்டார்.

அந்த நொடி சந்திரசேகரால் அழுகையைக் கட்டுப் படுத்த முடியவில்லை. வாய் விட்டு வெடித்து அழத் தொடங்கி விட்டார்.

தன்னை அறியாமலே ஒருவன் தாய்க்கு கர்மம் செய்வது எத்தனை கொடிய விதி? சீனுவுக்கும் அந்த அழுகுரல் கலக்கத்தை ஏற்படுத்தியது. இப்படி எல்லாம் எதிரிக்குக்கூட நடக்கக் கூடாது என்று நினைத்துக் கொண்டான். தொடர்ந்து மளமளவென்று மற்ற விஷயங்கள் அரங்கேற ஆரம்பித்தன. சந்தானம் சந்திரசேகரை கைத் தாங்கலாய் அழைத்துக் கொண்டு வெளியே காத்திருக்கும் காரை நோக்கிச் சென்றார். தினேஷும் திரும்பித் திரும்பிப் பார்த்த படியே நடந்தான். மோகனா சீனிவாசன் அருகில் வந்து ஏறிட்டான்.

"நீங்க தைரியமா போய்ட்டு வாங்க. நான் பாத்துக்கறேன் மேடம்" என்றான் சீனிவாசன். அவளும் கண்கலங்க அவனை கையெடுத்துக் கும்பிட்டாள். அப்படியே டாக்டர் ஒருவரிடமும் சென்று ஏறிட.. அவரும் "தைரியமா போய்ட்டு வாங்க கணேஷுக்கு எதுவும் ஆகாம பாத்துக்க வேண்டியது எங்க பொறுப்பு" என்றார்.

வெளியே காரில் பின் பக்கமாய் சந்தானமும் சந்திரசேகரும் ஏறிக்கொள்ள டிரைவிங் சீட்டில் தினேஷ்... மோகனா வந்து முன் பக்கம் ஏறிக் கொள்ளவும் காரைக் கிளப்பத் தயாரானான்.

"பாத்து கவனமா போ. ஆம்புலன்சை ஃபாலோ பண்ணிக்கிட்டே போ..." என்று சோர்ந்த குரலில் சொன்னார் சந்தானம்.

ஆஸ்பத்திரி வாசலுக்கு வந்து ஆம்புலன்சும் காரும் மறையும் வரை பார்த்த சீனிவாசனுக்கு வாழ்க்கை மேல் அந்த நொடியில் ஒரு வெறுப்பே ஏற்பட்டது.

எது எப்போது எப்படி நடக்கும் என்பது தெரியாத புதிராகவே வாழ்க்கை எப்போதும் இருந்து வருகிறது. அதை புரிந்துகொண்டு வாழ்க்கையை தங்கள் கையில் எடுத்து கொண்டவர்கள் ஒருவராவது இந்த உலகில் உண்டா என்று தனக்குள் கேட்டுக் கொண்டான்.

இல்லை என்பதே விடை..!

கனத்த அந்த விடையை எண்ணியபடியே வார்டு பக்கம் வந்தவன் ஐசியூவில் கணேஷைப் பார்க்க விரும்பினான். கதவருகே செல்லவும் டாக்டர் ஒருவர் திறந்து கொண்டு வெளியே வந்தார். சீனிவாசனை என்ன என்பது போல பார்த்தார். அவனிடமும் பல கேள்விகள்.

"டாக்டர்... கொஞ்சம் உங்க கூட பேசணும்" என்று ஆரம்பித்தான்.

"என்ன கேட்கப் போறீங்கன்னு தெரியும். இங்க நடந்ததைத்தான் நானும் பாத்துகிட்டே இருந்தேனே...! பேஷண்ட் எப்ப கண் திறப்பார்... எப்ப பூரணமா குணமாவார் அவர் ஃப்யூச்சர் எப்படி இருக்கும்...? இதெல்லாம்தானே உங்க கேள்விகள்...?"

"ஆமாம் டாக்டர்... கணேஷ் ஒரு எக்சலண்ட் பர்சனாலிடி அவருக்கு தப்பா எதுவும் ஆயிடக்கூடாது டாக்டர்..."

"உங்க தவிப்பு எனக்குப் புரியுது. ஆனா, இப்ப அவர் இருக்கற நிலைல உயிருக்கு ஆபத்தில்லேங்கறத கடந்து எதையும் என்னால சொல்ல முடியாது."

"எனக்கும் உங்க பதில் புரியுது டாக்டர். உங்க அனுபவத்தை வெச்சு இவர் பூரணமா குணமடைவாரா இல்லயான்னு சொல்ல முடியாதா?"

"முடியாது மிஸ்டர்... என் அனுபவத்தை வெச்சு ஒரு கருத்தைத்தான் சொல்ல முடியும். ஆனா, அது உங்களுக்கு ஆறுதலா இருக்காது."

"பரவாயில்ல... எதுவா இருந்தாலும் சொல்லுங்க..."

"எப்ப இப்படி ஒரு விபத்து ஏற்படணும்னு விதி இருந்ததோ அதைவிட ஒரு மோசமான விஷயம் இனி இவர் வாழ்க்கைல ஏற்பட முடியாது. இவர் உயிர் பிழைச்சாலும் புண்ணியமில்லைன்னே நான் சொல்வேன். அவ்வளவு ஏன்? ஒரு நாள் இவரே கூட அப்பவே என்னை

கொன்னுருக்கலாம் வீல் சேர்ல எப்பவும் அடுத்தவங்க தயவோட வாழற இந்த வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையான்னு நிச்சயமா கேட்பார். இதுவே இவருக்கு வயசு அறுபதுக்கு மேல இருந்திருந்தா நாங்க சின்சியரா டிரீட்மெண்ட் தரமாட்டோம்.

சில மருந்துகளை தராம விட்டாலே போதும்... மெல்ல உயிர் பிரிஞ்சிடும். அதைவிட ஒரு பெரிய நன்மையை நாம அவங்களுக்கு செய்யவும் முடியாது. ஆனா, இவர் கல்யாணம்கூட ஆகியிராத வாலிபரா போயிட்டதால அப்படி நடந்துக்க எனக்கு மனம் வரலை."

"அப்படின்னா பிழைச்சாலும் பிரயோஜனமில்லைன்னு சொல்றீங்களா டாக்டர்?"

"அதை எல்லாம் நாங்க எங்க வாயால சொல்லவே கூடாது. பார்ப்போம். உங்களுக்கு அதிசயங்கள் மேல நம்பிக்கை இருக்கா?"

"அப்படின்னா?"

"இந்த ஷீரடி சாய்பாபா... அப்புறம் சில சித்தர்கள் மாயாஜாலமா பல சாகசங்கள் செய்ததா படிச்சிருக்கேன் அந்த மாதிரி..."

"நிறைய இருக்கு டாக்டர்..."

"அப்ப அவங்கள பிடிங்க. எனக்கும் ஒரு அதிசயத்தை என் வாழ்க்கைல பாக்கற சந்தர்ப்பம் ஏற்படட்டும்."

- பேச்சோடு டாக்டர் விலகிக் கொள்ள கச்சிதமாக செல்போனில் யாழினியிடம் இருந்து அழைப்பு.

"அண்ணா"

"சொல்லு யாழினி"

"அவங்க எல்லாம் புறப்பட்டு போயிட்டாங்களா?"

"உம்"

"அப்ப நீ மட்டும் தான் இருக்கியா அண்ணா"

"ஆமாம்மா..."

"இப்பவாவது நான் வரலாமாண்ணா..."

"தாராளமா வரலாம் யாழினி. அதுக்கு முந்தி நீ மீனாட்சி அம்மன்

கோயிலுக்குப் போய் கணேஷ் சார் பேர்ல ஒரு அர்ச்சனை பண்ணி... வேண்டாம், வேண்டாம் அவர் பேர்ல இப்ப அர்ச்சனை எல்லாம் கூடாது."

"ஏண்ணா?"

"அம்மா பினமா இருக்க, பிள்ளையும் உயிர்ப் பிணமா இருக்கற கொடிய நிலை. அங்க காரியங்கள் நடந்து முடியட்டும்."

"அர்ச்சனை பண்ணாட்டியும் மனசார பிரார்த்தனை பண்ணிக்கலாம்தானே?"

-அதுக்கு எப்பவும் எங்கேயும் தடை கிடையாத யாழினி. கணேஷ் சார் வரைல மருந்து மாத்திரை எல்லாம் இனி இரண்டாம் பட்சம்தான். டாக்டரே இப்ப என்ன சொன்னார் தெரியுமா?"

"என்னண்ணா?"

"உங்களுக்கு அதிசயங்கள் மீது நம்பிக்கை இருந்தா அப்படி ஏதாவது நடக்க என்ன வேணுமானாலும் செய்யுங்க. மற்றபடி கணேஷ் சார் உயிருக்கு ஆபத்துதான் இல்லையே தவிர அவர் பிழைக்கறது சாகறதைவிட கொடுமையானதுன்னுட்டார்."

- சீனுவின் அந்த பதில் யாழினியை அதற்கு மேல் கேள்வி கேட்க விடவேயில்லை. மனதை ஒரு இறுக்கமான துக்கம் வந்து அடைத்தது. அப்படியே மௌனமாகிவிட்டாள். சீனுவும் யாழினியின் மன நிலையை இருந்த இடத்தில் இருந்தே புரிந்து கொண்டான். அவளுக்கு மிகவே மென்மையான மனது. இதுபோல் கேள்விப்படும்போது அந்த மென்மை அப்படியே தோய்ந்த பால் தயிராவது போல திரிந்துவிடுகிறது. சீனு பொறுப்பாக அதை எண்ணியபடியே அங்கே இருந்த ஒரு நாற்காலியில் போய் அமர்ந்து கொண்டான்!

கொடைக்கானலின் வெள்ளி அருவிப் பக்கமாய் வழக்கம் போல சுற்றுலாப் பயணிகள். கேரட் கட்டுக்களோடு ஜான்சி தன் பாணியில் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தாள். முன்பு கணேஷ் வந்தபோது ஜான்சியைப் பற்றி அவனிடம் சொல்லியிருந்த டீக்கடைக்காரரும் டீ போட்டுக் கொண்டிருந்தார்.

கடைக்கு முன்னால் பெஞ்சில் அன்றைய தினசரி பேப்பர்கள் வாசிப்பதற்காக கிடந்தன. அதன் அருகே வந்து அமர்ந்தாள் ஜான்சி! கடைக்காரரும் அவளை சற்று முறைப்புடன் ஏறிட்டார்.

"என்னய்யா ஒரு மாதிரி பாத்து முறைக்கறே.. உன் கடை பெஞ்சுல உக்காறது பிடிக்காட்டி சொல்லு எழுந்திரிச்சி போயிடறேன்.

"நான் அதுக்கு முறைக்கலே. உன் ராசியை நினைச்சேன். கோபம் வந்து முறைக்க வேண்டியதாப் போச்சு"

"என் ராசிக்கு என்னய்யா?"

"நீ ஏன் கேக்க மாட்டே. உன்னை ஒருத்தர் தேடி வந்தாரே ஞாபகம் இருக்கா... அதுவும் இதே இடத்துல...?"

"யார்... அந்தப் பட்டணத்து மைனர்தானே?"

"மைனர்னு வாய்க்கு வந்தபடி பேசாதே. அவர் இப்ப இருக்கற நிலை தெரியுமா உனக்கு?"

"அந்த ஆள் எப்படி இருந்தா எனக்கென்ன? அந்த ஆளால நான் கனா கண்டதுதான் மிச்சம். விட்டடிச்சுட்டு போயே போயிட்டான்ல..."

"விட்டடிச்சுட்டு போகல..." ஆக்சிடெண்டாகி ஆஸ்பத்திரியில உசுருக்குப் போராடிகிட்டிருக்காரு. அந்த பேப்பர்ல நாலாம் பக்கத்தைப் பிரிச்சுப் பாரு போட்டோவோட செய்தி இருக்கு..."

- டீக்கடைகாரர் சொல்லி முடிக்க பாய்ந்து வந்து பேப்பரை பிரித்துப் பார்த்தாள் ஜான்சி. ஸ்ரீகணேஷ் படம் போட்டு விபத்தில் வாலிபர் உயிர் ஊசல் என்கிற தலைப்பில் செய்தி எழுத்துக் கூட்டி ஓரளவு படித்தவள் முழுவதுமாய் படிக்காமல்...

"ஏசுவே... எப்படிய்யா இப்படி ஆச்சு?" என்று டீக் கடைக்காரனிடமே கேட்டாள்.

"அதான் கார் விபத்துன்னு போட்டுருக்கான்ல... அப்புறம் என்ன கேட்டா என்ன அர்த்தம்"

"சரி என்னோட ராசின்னு அப்ப ஏன் சொன்னே?"

"உன் ராசிதான். உன்னை பாத்துட்டு மதுரைக்குப் போய் தானே இப்படி ஆகியிருக்கு. இதுல நீ பெரிய பணக்காரனோட பொண்ணுங்கற பகுமானம் வேற..." - டீக் டைக்காரனின் கிண்டல் ஜான்சியின் காதில் விழவில்லை. அவளுக்குள் வேறுவிதமான எண்ணங்கள்!

மீனாட்சி அம்மன் கோயில்!

அம்மன் சன்னதி கோபுர வாசல் வழியாக கோயிலுக்குள் கால் வைத்திருந்த யாழினிக்குள் கணேஷ் பற்றியே நினைப்பு கூடவே அந்த குச்சி ஜோசியக்காரி நினைப்பும் நடுநடுவே வந்து போனது. சற்றுமுன் வரை அவளை நினைக்கப் பிடிக்காதவள் இப்போது அவள் கண்ணில் பட மாட்டாளா ன்ைறு தேட ஆரம்பித்தாள்.

பொதுவாக அவளைப் போன்றவர்கள் வெளியே ஆடி வீதியில்தான் திரிவார்கள். அதிலும் மேற்கு கோபுர வாசல் நோக்கிச் செல்லும் வழியில் பசுக்களுக்கான கோசாலை ஒன்று உள்ளது. அந்த கோசாலைக்கு வெளியே கைப் பிடிச்சுவர் ஒன்று நீண்டிருக்க அதன்மேல் அமர்ந்து கொண்டு பார் ஜோதிடம் பார்க்க வருவார்கள் என்று பார்ப்பதுதான் அவர்கள் வழக்கம். அவர்களை லேசாக பார்த்தாலே போதும் கப்பென்று பிடித்துக் கொண்டு விடுவார்கள். இதெல்லாம் பலமுறை கோயிலுக்கு வந்திருக்கும் யாழினிக்கும் தெரிந்திருந்ததால் ஆடி வீதிப் பக்கமாய் செல்லத் தொடங்கினாள். ஆனால், அவள்தான் கண்ணில் படவே இல்லை. யாழினியிடம் பலத்த ஏமாற்றம்!

# 28

'சுடுகாட்டில் பிணம்
எரிவதைப் பார்க்க...
நடு இரவில் நட்சத்திரங்களை
நண்பர்களுடன் எண்ண....
பாலத்தின்மேல் இருந்து
ஆற்றில் தலைகுப்புற
குதிக்க...
மரத்தின் மேலேறி
புளியம்பழம் உலுப்ப...
பொறுமையாய் தூண்டில்
போட்டு
குளத்தில் மீன் பிடிக்க...
ஒற்றையடிப் பாதையில்
விசிலடித்தபடி நடந்து போக...
கடற்கரை மனலில் மல்லாந்தபடி கிடக்க...
இரவுக் காட்சி சினிமா
பார்த்து
விடிய விடிய விமர்சிக்க...
மாநகரப் பேருந்தின்

படிக்கட்டில் பயணம்
செய்ய...
தாமதமாய் வீடு
சென்றாலும்
சாப்பிட்டு படுக்கச்
சொல்லும் அம்மா...
இவை எதையும் விட்டுக்
கொடுக்கவில்லை வாழ்க்கை
என் வயதையொத்த பெண்களுக்கு.....!'

நன்றி: 'கண்ணாடி வீடுகள்' தொகுப்பில்
தஞ்சை மருதீன்.

மிகவே ஏமாற்றமாக இருந்தது யாழினிக்கு... எப்போதுமே நாமாக விரும்பித் தேடும்போது சாதாரண பொருள் கூட அவ்வளவு சுலபத்தில் கிடைத்து விடாது. வேண்டாம் என்று வெறுத்து ஓடும் போதோ மேலேயே வந்து விழும்.

அதுதான் அவளுக்கு ஞாபகம் வந்தது.

கூடவே கொஞ்சம் கோபம். கொஞ்சம் சிரிப்பும் வந்தது. இப்படிப்பட்ட தன்னைப் போய் தெய்வப்பிறவி என்று ஒருவருக்கு இருவர் சொல்ல அதை இந்த சீனுவும் ஆமோதித்தது அந்த வேளையில் நினைவுக்கு வந்து பெருமூச்சு விட்டாள்.

வந்ததுக்கு மீனாட்சியையாவது நல்லபடியாக தரிசிப்போம் என்று தெற்கு கோபுரவாசல் நோக்கித் திரும்பினாள். விஸ்தாரமான ஆடி வீதியில் அங்கும் இங்குமாய் சிலர் அமர்ந்திருக்க ஒரு வயதான பெண் தன்னோடு ஒரு இளம் பிள்ளையை கூட்டிக் கொண்டு நடந்து கொண்டிருந்தாள். அவளின் அந்தப் பிள்ளைக்கு இருபது வயதிருக்கலாம். ஆனால் நடக்க மறுத்தவனாய் ஒரு ஓரமாக போய் உட்கார்ந்து கொண்டான். அவள் அவனிடம் கெஞ்சினாள்.

"டேய் வாடா... அடம் பிடிக்காதடா! அம்பாள் தரிசனம் முடியட்டும். நீ கேட்டதை எல்லாம் உனக்கு நான் வாங்கித் தரேன்... என்னைப்படுத்தாதடா..." என்று அவள் கெஞ்சுவது யாழினி காதிலும் விழுந்தது.

ஆனால் அவன் அதைக் கேட்பதாக தெரியவில்லை.

ஆடி வீதி மூலையில் போய் உட்கார்ந்தவன் அப்படியே சுருண்டு

படுக்கத் தொடங்கினான்.

"டேய்ய்... இங்கல்லாம் படுக்கக் கூடாதுடா!

எழுந்திருடா... சொன்னா கேளுடா... என்ன கத்த விடாதடா..." என்று அந்தப் பெண் சற்று கோபம் கொள்ளத் தொடங்கினாள். அவன் காதிலேயே வாங்கிக் கொள்ளவில்லை.

"டேய் சரவணா... நான் உனக்காகத்தான்டா இந்தக் கோயிலுக்கு வந்துருக்கேன். இங்க போனாலே குணமாயிடும்னு அந்த நாடி ஜோசியர் சொன்னதை நம்பி நாகப் பட்டணத்துல இருந்து இந்த மதுரைக்கு வந்துருக்கேன். அம்மாவை கஷ்டப்படுத்தாதேடா..."

அவள் கோபத்தோடு பேசியதில் பல விஷயங்கள் தெரியவந்தது. குறிப்பாக ஊர் பேர் காரணம் என்று சகலமும் அவன் தன் இரு கைகளால் காதுகளை மூடிக் கொண்டு அவள் பேசுவதைக் கேட்கவிருப்பமில்லாதவன்போல நடந்து கொள்ளத் தொடங்கினான்.

அது அவளுக்குள் கோபத்தை மேலும் விசிறிவிட்டது. அதன் எதிரொலியாக தன் காலாலேயே அவனை உதைக்கத் தொடங்கினாள்.

"எழுந்திரிடா...எழுந்திரிடா நாயே. உன்னோட எனக்கு பெரிய ரோதனையாப் போச்சு. எழுந்திரிக்கிறியா, இல்லை இப்படியே உன் கழுத்தை மிதிச்சே கொல்லவா...?" - என்று கேட்டு கழுத்தில் கால் வைத்து மிதிக்க முற்பட்டபோது யாழினிக்கு பகீர் என்றது. வேகமாக முன்னால் சென்று அவளை இழுத்தாள். அதே வேளையில் அவனிடம் கைகாலை வெட்டி வெட்டி இழுத்துக் கொள்ளும் ஒரு வலிப்பு நிலை உருவாகி விட்டது. அந்தப் பெண் அதைப் பார்த்து பதைத்துப் போனாள். "ஐய்யய்யோ..." கோபத்துல தப்பு பண்ணிட்டேனே பாழாப் போன காக்கா வலிப்பு திரும்ப வந்துடிச்சே." -என்றவள் இரும்பைத் தேடத் தொடங்கினாள். யாழினியோ அவனருகே அமர்ந்து அவன் கைககளை பிடித்து அவனை தடுக்கப் பார்த்தாள். ஒரு ஆச்சரியம் போல அவனும் அவள் கை படவும் இரும்புத் துண்டைப் பிடித்தது போல சீராகத் தொடங்கினான். வலிப்பு மெல்லக் குறைந்து முழுவதுமாய் சீரானான். யாழினி அவன் நெஞ்சுப் பகுதியை தேய்த்த விட ஆரம்பித்தாள். அவனோ அவளையே வெறித்துப் பார்த்தான்.

இரும்பைத் தேடிச் சென்ற அவன் தாய் இரும்பு கிடைக்காமல் திரும்பி வந்து அவன் சாதாரணமாகப் படுத்திருப்பதை ஆச்சரியத்தோடு பார்த்தாள். அப்படியே யாழினியை ஒரு அதிசயம் போல பார்த்தாள். பின்

"அம்மாடி நீதான் அந்தப் பொண்ணுன்னு எனக்குத் தெரிஞ்சு போச்சு... அவன் தலைல இருந்து கால்வரை உன் கையால வருடிக் கொடு. என் மகன் குணமாகப் போறான். சத்தியமா சொல்றேன் - இது கலிகால அதிசயம் உன்னைக் கும்பிட்டுக் கேட்டுக்கறேன். நான் சொன்ன மாதிரி செய்... செய்யும்மா... செய்..."

- அவள் கைகளைக் கூப்பியபடி பரவசப்பட்டாள். அவள் பேச்சு யாழினியை என்னவோ செய்தது. இருந்தும் அவள் சொன்னது போலவே செய்தாள். இதற்குள் ஒரு நான்கைந்து பேர் அங்கே கூடிவிட்டனர். யாழினி மூன்றாவது முறை அவனை வருடிமுடிக்கவும் அவன் சாதாரணமாக எழுந்து நின்றாள். "அம்மா..." என்றான். அவன் தாயைப் பார்த்து...!

"சரவணா..." என்று சிலிர்த்தாள். அவளும் அவள் திரும்பவும் "அம்மா... என்னால இப்ப பேச முடிதும்மா..." என்றான்.

"ஆமாம் சரவணா... நீ பேசிட்டே... நான் பார்த்த நாடி ஜோசியம் பலிச்சிடிச்சு. என் பரிகாரமெல்லாம் பலன் தர ஆரம்பிச்சிடுச்சு. அம்மாடி உன் பேர் என்ன? இரு இரு சொல்லிடாதே. உன் பேர் நிச்சயமா ஒரு இசைக்கருவியோட பேராத்தான் இருக்கணும். சரியா?"

- அந்த தாய்க்காரி கேட்க, யாழினியிடம் லேசான பிரமிப்பு. மௌனமாக தலையை அசைத்தாள்.

"என்னம்மா உன் பேர்... சொல்லு. ஒண்ணு மட்டும் நிச்சயம். நீ உருவத்துலதான் மனிதப் பிறப்பு. மத்தபடி உன் ஜாதகம் தெய்வ ஜாதகம். அதுலேயும் ஆண்டாள் ஜாதகம்."

- அந்தப் பெண் அடுத்தடுத்து பேசப் பேச யாழினிக்குள் பிரமிப்பு கூடிக் கொண்டே போனது.

"என்னம்மா எதுவும் பேசாம நிக்கறே. நான் பேசறதெல்லாம் உனக்கு ஆச்சரியமா இருக்கா... நான் விவரமாவே சொல்றேன். நாலு வருஷம் முந்தி இவனுக்கு எலெக்ட்ரிக் ஷாக் அடிச்சது. அதுல இரண்டு நாள் மயக்கமாவே இருந்தான். மூணாம் நாள் கண் முழிச்சதுல இருந்து பேச முடியல டாக்டர்கள் கிட்ட காட்டுனதுல அதிர்ச்சியில தொண்டை நரம்புல முடிச்சு விழுந்துடிச்சு. போகப்போக சரியாகிடும்"னு சொன்னாங்க. ஆபரேஷன் பண்ணாலும் உறுதியா சொல்ல முடியாதுன்னாங்க. அதுமட்டுமில்ல. கண்ணு முழிச்சவனுக்கு வலிப்பும் வர ஆரம்பிச்சிடிச்சு. காலேஜ்ல முதல் வருஷம் சேர இருந்த பிள்ளைக்கு

இப்படியானா எந்தத் தாயால தாங்க முடியும்? அதுக்குப்பிறகு நான் போகாத கோயிலில்லை. பாக்காத சாமியில்ல. ஒரு புண்ணியமுமில்ல. கடைசியா நாகப்பட்டணம் பக்கத்துல இருக்கற திருச்செங்காட்டங்குடி கிராமத்துல ஒரு சித்தர் இருக்கார். அவர்கிட்ட சிவ நாடி பாத்தா ஒரு வழி பிறக்கும்னு சொன்னதைக் கேள்விப்பட்டு நானும் போனேன். நான் போன சமயம் அவர் ஊர்ல இல்லை. இமயமலை பக்கம் யாத்திரை கிளம்பிப் போயிட்டார்.

என் வரைல நான் இடிஞ்சு போயிட்டேன். இவன் பிறந்த வருஷம்தான் என் புருஷன் மிலிட்டரியில இருந்த நிலைல எல்லைப்புற சண்டைல குண்டடிப்பட்டு இறந்து வானார். அதன் பிறகு எனக்கு வர்ற பென்ஷனை வெச்சுத் தான் இவனை வளர்த்து வந்தேன். இந்த நிலைல என் ஒரே நம்பிக்கையான இவனுக்கும் இப்படி ஆனா நான் என்னம்மா பண்ணுவேன்? நீயே யோசிச்சு பார்..."

- அந்தப் பெண்மணி கேட்டு விட்டு சற்று பெருமூச்சு விட்டாள்.

"அம்மா கவலைப்படாதே.... நான்...நான்...நான்" - என்று அவன் சற்று திக்கி விட்டு "இனிமே நான் உன்னை பாத்துக்கறேன்" என்று முடித்தான்.

"ஐயோ... நீ பேசிட்டடா... என் கெட்ட நேரம் ஒரு முடிவுக்கு வந்துடுச்சி"- அந்தப் பெண்ணிடம் ஒரே உணர்ச்சிப் பெருக்கு...

யாழினிக்கு முதல் தடவையாக தன்மேல் ஒரு பார்வை ஏற்பட ஆரம்பித்தது.

"அம்மா... ஏதோ என்னால ஆன உதவியை நான் செய்தேன். ஆனா நீங்க சொல்றத கேட்கும் போது எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு. என் பேரைக் கேட்டீங்களே எதுக்கும்மா?" என்றாள்.

"தெரிஞ்சுக்க தாம்மா... இசைக் கருவியுடைய பெயர் கொண்ட தெய்வப்பெண்ணால் நெருப்பில் இருந்து பிறந்த தெய்வம் உள்ள கோயிலில் உன் பிள்ளைக்கு விமோசனம் ஏற்படும்னு நாடில வந்தது. நெருப்புல இருந்து பிறந்த தெய்வம் இருக்கிற கோயில் எதுன்னு முதல்ல தெரியல. பிறகுதான் மதுரைன்னு தெரிஞ்சுது. இங்க நான் வரதுக்கு முந்தி நூற்றி எட்டு கன்னிப் பெண்களுக்கும் நூற்றி எட்டு சுமங்கலிகளுக்கும் நூற்றி எட்டு பிச்சைக்காரர்களுக்கும் நூற்றி எட்டு வேதம் ஓதற பிராமணர்களுக்கும்னு மொத்தமன 432 பேரைப் பார்த்து அவங்க கால்ல எல்லாம் விழுந்து எழுந்து அவங்க கையால என் மகன்

நெத்தியில விபூதி வெச்சு விடணும்கறத எனக்கு சொல்லப்பட்ட பரிகாரம். இதை நான் செய்து முடிக்க எவ்வளவு சிரமப்பட்டேன் தெரியுமா?"

"நல்லதும்மா... இவ்வளவு தூரம் நம்பிக்கையா நீங்க செய்த பரிகாரம் உங்களுக்கு நல்லது செய்துருக்கு. ஆன என்னைப்போய் சொல்றீங்களேம்மா..."

"என்னம்மா அப்படிச்சொல்லிட்டே... இந்த பரிகாரம் தான் உன்னை இங்க வரவழைச்சது. நீ யாரோ இல்ல. திரும்பவும் சொல்றேன்- நீ அந்த அம்பாளோட அம்சம் முதல்ல உன் பேரைச் சொல். அடுத்து நீ ஆண்டாளோட எப்படி சம்பந்தப்பட்றேன்னு தெரியணும்..."

"என்னம்மா சொல்றீங்க.."என் பேர் யாழினி. இது ஒரு இசைக்கருவி பேர்தான். ஆனா ஆண்டாள்னு சொல்றதுதான் புரியல..."

"ஆண்டாளோட அப்பா அம்மா யாருன்னு தெரியாது. அவ நந்தவனத்துல துளசி மாடம்கிட்ட கண்டெடுத்து பெரியாழ்வாரால வளர்க்கப் பட்டவ. இந்த மாதிரி ஏதாவது உனக்கு உண்டா?"

-அந்தப் பெண் கேட்ட கேள்வி யாழினியை விக்கித்துப் போக வைத்தது. "ஆமாம்மா. சில சம்பந்தங்கள் இருக்கு. எனக்கும் என் தாய் தகப்பன் யார்னு தெரியாது. நான் பிறந்த உடனேயே தூக்கி வீசப்பட்டவ. என்னை வளர்த்தவர் பேர் ரங்காச்சாரி"

"ஐயோடா... எவ்வளவு சரியா அந்த நாடியோட வரிகள் பொருந்தியிருக்கு! தாயே... நீ தெய்வப் பிறவியே தான். உன் கைபட்டதாலதான் என் மகன் பூரண குணமடைஞ்சான். டேய் சரவணா... இவங்க கால்ல விழுடா..."- பரவசமும் படபடப்புமாக மகனுக்கு கட்டளையிட அவனும் பொதேல் என்று அவள் காலில் விழுந்தான். யாழினிக்கு உடம்பெல்லாம் கூசியது. வேகமாக விலகிச் சென்று நின்றாள். அந்தப் பெண்ணோ மிக வேகமாக அவள் அருகில் சென்று, " தாயே உன் கையால என் தலையையும் கையை வெச்சு வாழ்த்து. நான் நோய் நொடியில்லாம இருந்தா போதும். அதுக்கு ஆசீர்வாதம் பண்ணு..." என்றாள்.

மௌனமாக அவள் விருப்பப்படி அவள் தலைமேல் கை வைக்க ஜோசியம் பாக்கலையோ ஜோசியம்' என்கிற குரலும் கேட்டிட திரும்பினாள். அவள் சற்று முன் தேடிய அதே ஜோசியக்காரி!

அவளருகில் வந்து கும்பிட்டபடியே "என்னைத் தேடினியா?" என்று கேட்டாள். மௌனமாய் தலையை மேலும் கீழும் ஆட்டினாள் யாழினி.

"நான் சொன்னேன்ல... நீ என்னத் தேடி வருவேன்னு.."

எனக்கு எதுவும் புரியல. ரொம்ப குழப்பமாயிருக்கு. பயமாவுமிருக்கு. ஆமா... நான் கை வெச்சா எதுவா இருந்தாலும் சரியாகிடுமா?"

"என்ன அப்படி கேட்டுட்டே உன்னோடது ஆட்சிக் கை! ஆனா எல்லார் கையும் பூச்சிக் கை தான் என் கையையும் சேர்த்துதான் சொல்றேன். நீ பிறந்த நேரம் அப்படி இனிதான் உன் உண்மையான வாழ்க்கை தொடங்குது..."

"உண்மையான வாழ்க்கைன்னா?"

"போகப்போக பாக்கத்தானே போறே..."

"போகட்டும். நான் ஒருத்தரைக் காப்பாற்ற நினைக்கறேன். என்னால முடியுமா?"

"எப்ப நினைச்சிட்டியோ அப்பவே முடிஞ்சமாதிரிதான் தாயி அதுல என்ன சந்தேகம்"

"சரி... இப்பவே போறேன். அவரைக் காப்பாற்ற முடியதான்னு பாக்கறேன். அப்புறமா உன்னையும் வந்து பாக்கறேன். நான் புரிஞ்சிக்கவேண்டிய விஷயங்கள் நிறைய இருக்கறதா நினைக்கறேன்."

"சரியா சொன்னே.. தெரிஞ்சிக்க வேண்டிய விஷயங்களும் நிறைய இருக்கு. அவ்வளவும் ரகசியங்கள்..."என்றாள் ஜோசியக்காரி.

யாழினியும் ஆஸ்பத்திரி நோக்கி புறப்பட்டாள்!

# 29

'நொடி ஒன்றுபோதும்
பொறி ஒன்றைப் பற்றவைக்க...
வாழ்க்கையை மாற்றிப் போட...
வெற்றி மனிதன் ஆவதும்
வெற்று மனிதன் ஆவதும்
ஒரு நொடி முடிவில் தான்...!'

னாட்சி அம்மன் கோயிலின் தெற்கு கோபுரத்தை தொட்டு வெளியேறப்

மீ பார்த்தவள், அப்படியே திரும்பினாள். இவ்வளவு தூரம் வந்து விட்டு மீனாட்சியை தரிசனம் செய்யாமல் போவதா என்று ஒரு கேள்வி எழும்பியது. தரிசனம் செய்து அவள் குங்குமத்தோடு போய் கணேஷைப் பார்ப்பதே இன்னமும் சிறந்தது என்று அவளுக்குள் ஒரு குரல் சொன்னது. அப்படியே திரும்பி உள் நுழையத் தொடங்கினாள். தெற்கு வழியாய் வருகின்றவர்களுக்கு பொற்றாமரைக் குளமும் அதன் தென்மேற்குப் பகுதியான கன்னி மூலையில் வீற்றிருக்கும் விபூதிப் பிள்ளையாரும் கண்ணில் படுவார்கள்.

இந்த பிள்ளையாருக்கு 'கன்னிமூல கணபதி' என்றும் பெயர். இவரை இங்கே பீடத்தில் வைத்திருக்காமல் தொட்டிக்குள் உட்கார வைத்திருப்பார்கள். தொட்டி முழுக்க விபூதி நிரம்பி இருக்கும். அந்த நாளில் பொற்றாமரைக் குளத்தில் குளிக்க முடிந்தது. குளித்த உடன் கன்னி மூல கணபதியை வலம் வந்து அந்த விபூதியை எடுத்து நெற்றியில் பூசிக் கொண்டு அம்பாளை தரிசிக்கச் செல்வதுதான் வழக்கம்.

விபூதி என்பது சாம்பல்தானே? சாம்பல்தான் உலகப் பொருட்களின் இறுதி வடிவம். அதாவது அது முடிவைச் சொல்வது. அந்த முடிவு எனக்குத் தெரியும். நான் முடிவானவன் ஆகவும் இருக்கிறேன் என்பதே சாம்பல் சொல்லும் செய்தி. இதனால் தினமும் விபூதி பூசிக் கொள்பவர்கள் தங்கள் முடிவையும் ஒருமுறை எண்ணிப் பார்த்து விடுகிறார்கள்.

முடிந்து போவதோடு ஒரு தொடர்பு இருக்கும்போது வாழும் நாளில் ஆட்டம் போடத் தோன்றாது மிக மிக நிரந்தரமில்லாத ஒரு வாழ்வை வாழ்ந்து கொண்டிருப்பதாகத் தோன்றும்.

யாழினியும் விறுவிறுவென்று குளத்தில் இறங்கி கால்களை நனைத்துக் கொண்டவளாக விபூதிப் பிள்ளையாரிடம் வந்தாள். விபூதிக்காக கை நீண்டு அவர் சிரம்மேல் கை பட்டபோது லேசாக ஒரு மின்னல் தாக்கியது போல ஒரு உணர்வு அந்த ஆலயத்திற்கு இதற்கு முன் பல ஆயிரம் தடவை வந்தது போலவும், இதே போல விபூதியை எடுத்துப் பூசிக் கொண்டது போலவும் ஒரு நினைவு மின் வெட்டு போல வந்து கலைந்தும் போனது.

அப்படியே நடந்தாள்.

முதல் முறையாக தன்னை அவள் வித்தியாசமாகவும் உணர்ந்தாள்.

நடக்கும் போது கூட பலமுறை அதே பாகத்தில் தான் கால் சலங்கை குலுங்க ஓடியது போலவும் ஒரு பல்லக்கில் வந்து இறங்குவது போலவும் அவளுக்குள் புதிதாய் சில எண்ணங்கள்.

இந்த எண்ணங்களை கற்பனை என்பதா... இல்லை ஒளிந்து கிடந்தது வெளிப்படுகிறதா என்று அவளால் பிரித்துப் பார்க்க முடியவில்லை.

சன்னதி முன் நீண்ட வரிசை தென்பட்டது. அதன் முடிவில்போய் நின்றாள். அப்போது அவள் எதிர்பாராத ஒரு சம்பவம் நடக்க ஆரம்பித்தது. தொடக்கத்தில் தங்கள் திருமகள் இல்லத்துக்கு வந்து நோட்டம் போட்டு யாழினியை எப்படி இந்த இல்லத்தில் வைத்து வளர்க்கலாம்? என்று கேட்டு பிரச்னை ஏற்படுத்திய அந்த போலீஸ்காரர் யூனிஃபார்ம் உடுப்புடன் அவள் எதிரில் வந்து கொண்டிருந்தார். அவரோடு கோயில் ஊழியர் ஒருவர் இருந்தார். இருவரும் யாழினியை கடந்த நொடி., அந்த போலீஸ் ஆஃபீஸர் யாழினியைப் பார்த்துவிட்டு நின்றார்.

யாழினிக்கு சுருக்கென்றது. குப்பென்று வியர்க்கவும் செய்தது. ஆனால், அவரிடம் இதமான பார்வை.

"நீ அந்த திருமகள் முதியோர் இல்லத்துப் பெண் தானே?" - என்றும் கேள்வி.

"அ... ஆமாம் சார்..."

"உன்னை நான் பாக்க வரணும்னு நினைச்சிகிட்டு இருந்தேன்மா. நேரமே கிடைக்கல. நல்லவேளை இங்க பாத்துட்டேன்.

ஆமாம் உங்க நிர்வாகி ரங்காச்சாரிக்கு ஹார்ட் அட்டாக் காமே?"

"ஆமாம் சார்... ஆனா, இப்ப அவர் ஆபரேஷன் நடந்து குணமாகிட்டு வரார்..."

"அதையும் கேள்விப்பட்டேன். வாஸ்தவத்துல நான் கொஞ்சம் உன் விஷயத்துல தப்பா நடந்துகிட்டேன். அதை நினைச்சு நான் அப்புறமா ரொம்ப ஃபீல் பண்ணேன். இந்த போலீஸ் உத்யோகத்துல அரசியல்வாதிகளை அனுசரிச்சுப் போகவேண்டிய நெருக்கடி பல சமயம் ஏற்படுது. அப்ப நாங்களும் சுயநலமா தப்பா நடந்துக்கும்படி ஆயிடுது."

அவர் வருந்திப் பேசியது யாழினிக்குக் கொஞ்சம் ஆறுதலாக இருந்தது. அப்படியே இப்படி ஒருவர் எப்படி இவ்வளவு சீக்கிரம் மனம் மாற

முடியும் என்கிற கேள்வியும் எழுப்பியது. அவர் அவளை தன்னோடு உள்ளே அழைத்தார்.

"நீ என்கூட வாம்மா. சிறப்பு வழில போய் அம்மனை தரிசனம் செய்யலாம்" என்றார்.

"இல்ல சார்... நான் வரிசைலயே வரேன்"

"ரொம்ப நேரமாகும்மா. சும்மா வா! உன்னை கஷ்டப் படுத்தின தப்புக்கு ஒரு சின்ன பரிகாரமா உனக்கு சீக்கிரம் தரிசனம் கிடைக்க நான் செயல்பட்டதா இருக்கட்டும். நான் இப்ப கோயில் பாதுகாப்புக்குழுவோட ஹெட்டா இருக்கேன். இப்பக் கூட அதுக்காகத்தான் வந்தேன் கமான்."

- அவர் பேச்சு யாழினியை ஒப்புக் கொள்ளும்படி செய்தது. ஆச்சரியமும் அதிகமாகிக் கொண்டே போனது. அதோடு அப்படியே அவருடன் நடந்தாள். சன்னதி முன்னால் அவளைக் கொண்டு சென்று நிறுத்தினார் மீனாட்சி உள்ளே தன் கிளிக்கரத்தோடு எழில் கொஞ்ச நின்று கொண்டிருந்தாள். யாழினிக்கு அந்தக் காட்சி சிலிர்ப்பைத் தந்தது. கண்களில் அதன் எதிரொலியும் தெரிந்தது. முகத்தில் பரவச உணர்வுகளின் வியாபிப்பு.

யாழினிக்கு நேர் எதிரில் ஒரு காவி உடை தரித்திருந்த பெரியவர் ஒருவர் நின்றபடி இருந்தார். அவரது நீண்ட தாடியும் சிரசில் உள்ள அடர்வான வெண்முடியும் அவரை ஒரு யோகியைப் போல காட்டிற்று. அவர் யாழினியையே உற்றுப் பார்த்தபடி இருந்தார். யாழினியும் அவர் தன்னைப் பார்ப்பதை உணர்ந்து கொண்டாள். கொஞ்சம் குறுகுறுப்பாக இருந்தது.

பட்டர் கற்பூர ஆரத்தி காட்டி முடிக்கவும் கவனம் அவர் பக்கமாய்ச் சென்றது. அவர் குங்குமம் தந்தபோது குங்குமத்தோடு ஒரு மனோரஞ்சிதப் பூவும் யாழினி கையில் விழுந்தது.

'நிமித்தம்' என்று ஒரு சொல் உண்டு. யானை வரப் போவதை அதன் கழுத்து மணி சப்தம் எப்படி முன்னாலேயே சொல்லிவிடுமோ அப்படி மனித வாழ்வில் ஒருவர் தொடர்பாய் நடப்பதை முன்னதாய் ஏதோ ஒரு விதத்தில் தெரிவிப்பதே நிமித்தம். இப்படி மனோரஞ்சிதம் தானாக வந்தால் இனி மனம் விரும்பும்படியாகவே எல்லாம் நடக்கும் - நடக்கப் போகிறது என்று பொருள்.

கூடவே பட்டர் ஒரு ரோஜாமாலையை யாழினி கழுத்தில் போட்டார். எப்போதும் அதிகாரிகளோடு வருபவர்களுக்கு இப்படி மரியாதை செய்வது வழக்கம்தான்!

யாழினிக்கு அது மேலும் பரவசமாக இருந்தது.

பக்கத்தில் அந்த போலீஸ் அதிகாரியோ கைகளைக் கூப்பிக் கொண்டு தன்னை மறந்திருந்தார். கண்களில் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

அதற்குள் ஒருவர் அவர் தோளைத் தொட்டு சற்று தொலைவில் அழைத்துச் சென்று பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக அவரிடம் பேசத் தொடங்கினார். அவரோடு வந்திருந்த கோயில் ஊழியர் யாழினியை மரியாதையோடு பார்த்து "சுவாமி தரிசனம் செய்யணுமா?" என்று கேட்க யாழினி "அடுத்த முறை பார்த்துக்கறேன் எனக்கு இப்போது அவசரமாக ஆஸ்பத்திரிக்கு செல்ல வேண்டும்" என்றாள்.

"சரி நீங்க புறப்படுங்க... சார் வர நேரமாகும்."

"நல்லது அவருக்கு என் நன்றியை சொல்லிடுங்க.."

"கட்டாயமா... சார் இந்தக் கோயில் பாதுகாப்புப் பணியை கேட்டு வாங்கிட்டு வந்துருக்கார்.... அம்மனை தினசரி தரிசனமும் பண்ணிடுவார்."-நடந்தபடியே பேசினார்.

"கொடுத்து வெச்சவர்" என்றாள் யாழினி.

"ஆனா, அவர் நிலை இப்ப ரொம்ப பாவம் மேடம் சாருக்கு ஒரே ஒரு பொண்ணு. ஆறாம் வகுப்பு படிச்சிகிட்டிருந்தா, திடீர்னு ஒரு விபத்துல பஸ்ல அடிபட்டு இறந்துட்டா!"

கோயில் ஊழியர் சொன்ன விஷயம் யாழினியை ஒரு உலுக்கு உலுக்கி விட்டது. திகைப்பை முகத்தில் காட்டினாள்.

"அதுல இருந்து சார் நிறையவே மாறிட்டார். பொதுவா இந்த மாதிரி நடந்தா, 'கடவுளுக்கு கண் இல்லை'ன்னு பக்தியா இருக்கறவங்க கூட நாத்திகனா தான் மாறுவாங்க. ஆனா இங்க எல்லாமே தலைகீழ்... 'நான் செய்த பாவம் என் மகளை பழிவாங்கிடிச்சு- இனி ஒரு சிறு தப்பும் செய்ய மாட்டேன்'னு அந்த ஸ்டேஷனை விட்டு இந்தப் பக்கம் வந்துட்டார்.

- ஊழியர் சொல்லச் சொல்ல யாழினிக்கு அவருடைய மாற்றத்துக்கான காரணம் புரியத் தொடங்கியது. வாழ்க்கை மறைமுகமாக பலருக்கு இப்படி எல்லாம் பாடம் நடத்துகிறது. என்று தோன்றியது.

வெளியே வந்தவள் மனோரஞ்சிதப்பூவை பின்பக்கமா தலையில் வைத்துக் கொண்டு கோபுரவாசல் படிகளில் ஏறியபோது 'அம்மா...' என்ற ஒரு குரல்!

திரும்பினாள்!

சன்னதியில் அவள் எதிரில் நின்றபடி இருந்த காவி உடை மனிதர்தான் கூப்பிட்டிருந்தார். யாழினி நிற்கவும் அவரும் நெருங்கினார். சிரித்தார்.

"நீங்க?"

"நான் ஒரு நாடி ஜோசியம் பாக்கறவன்மா. சிவநாடிகள் என்கிட்ட இருக்கு..."

"சரி என்னை எதுக்குக் கூப்ட்டீங்க?"

"காரணமா தாம்மா... உன் முகத்துல உதட்டுக்கு மேல இருக்குற ஒரு மச்சம் நீ யார்ங்கற உண்மையை எனக்குச் சொல்லிடிச்சும்மா..."

"எனக்கு நீங்க சொல்றது ஒண்ணும் புரியல..."

"அம்மாடி... நீ தெய்வாம்சமுள்ள ஒரு பொண்ணுன்னு நான் பரிபூரணமா நம்பறேன். ஜோதிடத்தை பரம்பரைத் தொழிலா வெச்சிருந்ததால எனக்கு சாமுத்ரிகா லட்சணமும் தெரியும். அதை வெச்சே உன்னை கணிச்சேன். அதோட நான் உன்னை பார்த்தப்போ அபிஜித் முகூர்த்தம்கற விசேஷ முகூர்த்த காலம் அமைஞ்சிருந்தது. நீ சாதாரண பெண் இல்லேன்னு என் மனமும் சொன்னது"

"சரி. அதுக்கென்ன இப்ப?"

"நான் என் முகவரி தரேன். நீ என் இருப்பிடத்துக்கு வந்து என்கிட்ட ஜோசியம் பாக்கறியா?"

"பாத்து...?"

"பார்த்துன்னா என்னம்மா சொல்றது? பாரும்மா.. பல அதிசய தகவல்கள் தெரிய வரலாம். குறிப்பா உன்னால் எனக்கு சில விஷயங்கள்ல விமோசனம் கிடைக்கலாம்."

"ஐயா... நான் இப்ப இனம் புரியாத ஒரு குழப்பத்துல இருக்கேன். உங்களுக்கு எந்த பதிலையும் சொல்ற நிலைல இல்லை. வாழ்க்கைங்கறது திசைமாறக்கூடியதுன்னு கேள்விப்பட்டுருக்கேன். ஆனா, நான் இப்ப அதை உணர்ந்துக்கிட்டே வரேன். ஆகையால உங்க

விருப்பப்படி நான் நடந்துக்க முடியாத நிலைல இருக்கேன். என்ன மன்னிச்சிடுங்க.." என்றாள் யாழினி.

"சரிம்மா உன் போன் நம்பராவது தந்துட்டுப் போ. போன் பண்ணிட்டு நான் வந்து அப்புறமா பாக்கறேன்"

"இல்ல... நான் யாருக்கும் என் நம்பர் தந்ததில்ல திருமகள் காப்பகத்துக்கு வாங்க. எனக்கு விருப்பமும் நேரமும் இருந்தா பேசறேன்..."

"இப்ப இப்படி சொல்ற நீ அப்ப கட்டாயம் பேசுவேம்மா. காரணமில்லாம காத்துல ஒரு காஞ்ச சருகு கூட பறக்கறது கிடையாது. அதுக்குப் பின்னால ஒரு பெரிய கணக்கு இருக்கு. நான் இன்னிக்கு உன்னைப் பார்த்ததும் அப்படி ஒரு கணக்கு தான்... - என்ற அவர் அருகே, அந்த ஜோசியக்காரியும் திரும்ப வந்தாள்.

அவளைப் பார்க்கவும் அவரும், "என்ன சந்தானம் நல்ல இருக்கியா?"- என்று கேட்டார். அந்தப் பெண் பெயர் சந்தானம் என்பது யாழினிக்குத் தெரிய வந்தது.

"என்ன சாமி... கன்னி தெய்வத்துக்கிட்ட என்ன கேட்டுக்கிட்டு இருக்கீங்க?"

"பரவால்லியே... நீ முந்திக்கிட்ட போல இருக்கே?"

"நானும் முந்தல. நீங்களும் பிந்தலை. இது இது இப்படி இப்படித்தான் நடக்கணும்னு விதி இருக்கும்போது அதை மாத்த முடியுமா?"

"சரியா சொன்னே... ரொம்ப சரியாச் சொன்னே?"

- அவர்கள் இருவரும் பேசிக் கொண்டது யாழினிக்கும் புரிந்தது. நேற்றுவரை இப்படி பூடகமாக யாராவது பேசினால் கோபம் வரும். இன்று அப்படி இல்லை.

கோயிலுக்கு வந்த இடத்தில் தன்னைப் பற்றிய ஒரு சிறிய தெளிவு மட்டுமல்ல. போலீஸ் அதிகாரியின் மாற்றமும் அவளை நெகிழ்த்தியிருந்தது.

ஒரு ரயில் அதற்கான தண்டவாளத்தில் விலகாமல் பயணிப்பது போல வாழ்க்கையும் நடப்பது போல தோன்றியது. அந்த எண்ணங்களோடு ஆட்டோ ஒன்றைப் பிடித்தாள்.

ஃ ஃ ஃ

மதுரை ஆரப்பாளையம் பஸ் ஸ்டாண்டில் கொடைக்கானல் பஸ்ஸில் இருந்து இறங்கிக் கொண்டிருந்தாள் ஜான்சி. கூடவே ராயப்பனும், அந்த அன்னமேரியும் ராயப்பன் கையில் அன்றைய தினசரி பேப்பர் இருந்தது. பேப்பரில் ஆஸ்பத்திரி பெயர் இருந்தது வசதியாக இருந்தது. ஆட்டோகாரர் ஒருவரிடம் கேட்டனர்.

"ஏறி உட்காருங்க. கொண்டு போய் விட்றேன்".-என்றார் ஆட்டோக்காரர்.

"அதுக்கு எவ்வளவு கேட்பே?"

நூத்தி இருவது கொடு...போதும்.

"நூத்தி இருவதா..? நான் கொடைக்கானல்ல இருந்து இங்க வரவே இதுல பாதியத் தான் கொடுத்தேன். நீ நூத்தி இருவதுங்கறே. என்ன சம்பல் பள்ளத்தாக்கு பக்கம் வழிப்பறி கொள்ளைக்காரனா இருந்து இப்ப ஆட்டோக்காரனா மாறியிருக்கியா?"

"நீ ஏன் பேசமாட்டே... பெட்ரோல் விக்கற விலை தெரியுமா?"

"அந்த பெட்ரோல்லதானே பஸ்சும் காரும் ஓடுது."

"இதோ பார்... இஷ்டம்னா வா - இல்லாட்டி உடு"

"இஷ்டமா... உனக்கு 120 தர்றதுக்கு நாங்க நடக்கறோம். உடம்புக்கும் அது நல்லது வேற" என்ற ராயப்பன் நடக்க ஆரம்பித்தான். ஜான்சியும் அன்னமேரியும்"உன் ஈத்தர புத்திய காட்டிட்டே பத்தியா?" ஒரு கோடீஸ்வரன் பொண்ணு நடந்தா நல்லா இருக்குமாய்யா? - அன்னமேரி கேட்க ராயப்பனும் "அப்ப நீ உறுதியா ஜான்சிதான்னு நம்பறியா?" என்று கேட்டான்.

# 30

'மீனாட்சியைத் தேடுகிறது கிளி
மீனாட்சியின் தோளிலேயே அமர்ந்தபடி...!'
நன்றி: பழநிபாரதி

ராயப்பன் அப்படி ஒரு கேள்வியை கேட்டான் என்று அன்னமேரி எதிர்பார்க்கவில்லை.

"ஏய்... ஜான்சி அவங்க மகளா இருக்க முடியாதுன்னுதான் நீ

நினைக்கறியா? எனக்கு அதுக்கு முதல்ல பதில் சொல்லு..." - என்றாள் கோபமாக...

"இதோபார்... வந்துருக்கறது ஒரு கோடீஸ்வர குடும்பம், அப்படி ஒரு குடும்பத்துல பொறக்கற குழந்தைங்க கிட்ட கொஞ்சமாவது அந்தப் பணக்கார புத்தி இருக்கும். வெள்ளத்தோலு, வெடாசா பேசறதுன்னு இந்தக் கோடீஸ்வரன் ஊட்டு பொண்ணுங்க ரேஸ்குதிரை கணக்கா இருப்பாங்க... இவளப்பாரு... இவ குதிரை மாதிரியா இருக்கா...?"

- ராயப்பன் ஜான்சியைக் காட்டி கேட்டான்.

"ஏய்யா எனக்கென் குறை...?" - ஜான்சிக்கும் கோபம் வந்தது.

"என்ன குறையா... நீ கண்ணாடி பார்ப்பியா மாட்டியா?"

"இதோ பாரு... நீ இப்படி என்னைக் காலை வாருனே மவனே, நாளைக்கு நான் அந்தக் கோடீஸ்வரன் பொண்ணா" மட்டும் ஆயிட்டேன்னுவை. உன்னை உண்டு இல்லைன்னு பண்ணிடுவேன்."

"இப்ப மட்டும் என்ன பண்ணிகிட்டு வரே... கொடைக்கானல் ஊரையே உண்டு இல்லைனு தானே பண்ணிகிட்டே இருக்கே"

"போதும் நிறுத்துய்யா... நாம ஒத்துமையா இருந்து சாதிக்கத்தான் வந்துருக்கோம்... இதோ பாருடி... நீதான் அன்னிக்கு தேதிக்கு சர்ச்சுக்குச் சொந்தமான இல்லத்து தொட்டில்ல விடப்பட்டவ. நாங்கதான் உன்னை வளத்தோம். ஞாபகம் வெச்சுக்கோ..."

"முதல்ல ஆக்சிடெண்ட்டாகி படுத்த படுக்கைல கிடக்கற அந்த கணேஷ் சாரை போய் பாப்போம். அப்புறம் ஒவ்வொண்ணா யோசிச்சு செய்வோம். நாம இப்ப போய் பாக்கறத சொந்தம் கொண்டாட இல்ல மனுஷத்தன்மையைக் காட்ட மத்ததெல்லாம் அப்புறம்..."

- ராயப்பன் ஒரு இலக்கை தெளிவாக உருவாக்கி கொண்டான். நாலாபுறமும் பார்த்தபடியே நடந்தான்.

"யோவ்...நடக்க முடியலைய்யா. ஆட்டோ புடிய்யா," - என்று அன்னமேரி கெஞ்சவும் ஆட்டோ பிடித்து பேப்பரில் இருந்த ஆஸ்பத்திரி விவரத்தைக் கூறவும் ஆட்டோக்காரரும் "பக்கத்துல தான்" என்று அழைத்துச் செல்லத் தொடங்கினார்!

உள்ளங்கை நிறைய குங்குமமுடன் ஆஸ்பத்திரிக்குள் நுழைந்த யாழினியை சீனிவாசன் சற்று ஆச்சரியமாக பார்த்தான். அவள் முகத்தில்

பெரிய அளவில் குங்குமப்பொட்டு... கண்களிலும் எப்போதும் இல்லாத அளவு ஒரு ஒளி.

"என்ன சீனுண்ணா... அப்படி பாக்கறே?"

"என்னன்னு தெரியல யாழினி. நீ இன்னிக்கு என் கண்ணுக்கு ரொம்ப வித்தியாசமா தெரியறே.."

"அண்ணா...நானே என்னை இன்னிக்கு வித்தியாசமாதான் உணர்றேன். கோயில்ல அடுக்கடுக்கா எவ்வளவு சம்பவங்கள் தெரியுமா?"

"எல்லாம் நல்லவிதமான அனுபவம்தானே?"

"நிச்சயமா... நான் ஒரு வலிப்பு வந்தவனைத் தொடவும் அவனுக்கு சரியா போச்சு. அவன் பேசவும் அது ஒரு அதிசயமாவே ஆயிடிச்சு. சம்பந்தப்பட்ட நபரோட அம்மா என்னையே அந்த மீனாட்சியா நினைச்சு கும்பிட ஆரம்பிச்சுடாங்க"

"ஓ... அப்புறம்?"

"அண்ணா நாம சாவகாசமா அப்புறமா பேசிக்குவோம். இதோ மீனாட்சி பிரசாதம் கணேஷ் சார் இப்படி எப்படி இருக்கார். அவருக்கு நான் இட்டு விட விரும்பறேன்."

"வா யாழினி... நேரில போய் பார்ப்போம்."

- சீனிவாசன் அவளோடு I.C.U. விற்குள் மெல்ல நுழைந்தான். இதமான ஏ.சி. குளிர் உடம்பில் பரவியது.

அசாத்தியமான ஒரு நிசப்தம் அங்கே நிலவிக் கொண்டிருந்தது. அமைதியான சூழலை அனேகமாக நம்மில் யாருமே உணர்ந்திருக்க வாய்ப்பில்லை. துளியாவது சப்தமுடன் தான் நம் சூழல் அமைந்துள்ளது.

ஊசி விழுந்தால் அது காதில் கேட்கும்படியான ஒரு அமைதியை ரேடியோ ஸ்டேஷனின் ரெக்கார்டிங் செக்ஷனில் தான் உணர முடியும். இந்த I.C.U.வும் கண்ணாடித் தடுப்புகளால் அமைதியை அப்பிக் கொண்டிருந்தது. யாழினிக்கு அவள் விடும் மூச்சு சப்தம் தெளிவாக கேட்டது.

கணேஷ் அசைவின்றி படுக்கையில் கிடந்தான். தலையில் பெரிய கட்டு. மூக்குக்குள் ஆக்ஸிஜன் டியூப்! அருகே சிறிய டி.வி. போன்ற மானிடர் ஸ்க்ரீன் அதில் ஒளிக்கோடுகள் வளைந்தும் நெளிந்தும் ஓடிக்

கொண்டிருந்தன.

யாழினி அந்த சூழலை எதிர்கொண்டு அவனை சமீபித்து நெற்றியில் குங்குமம் வைத்து விட்டாள். நெற்றிப்பொட்டை அவள் தொட்ட நொடி அவன் உடலில் வெடுக்கென்று ஒரு அசைவு.

யாழினி அப்படியே கண்களை மூடிக்கொண்டு மீனாட்சியை வேண்டிக்கொள்ளத் தொடங்கினாள். அப்போது ஒரு மருத்துவ உதவியாளர் மிகவேகமாய் அவர்களை நோக்கி வந்தார். கோபமாக பார்த்தார். பின் ஜாடையில் வெளியே போகச் சொன்னார்."

"ஒரு நிமிஷம் சார்" - என்று சீனிவாசன் ஏதோ சொல்ல வாயெடுத்தான். அந்த உதவியாளர் பதிலுக்கு உதட்டின் மேல் கை வைத்து அமைதி காக்கும்படி சொன்னவராய் வெளியேறி அவர்களையும் அழைத்திட இருவரும் I.C.U.வுக்கு வெளியே வந்தனர்.

"அறிவிருக்கா உங்களுக்கு... யாரைக் கேட்டு உள்ள போனீங்க."

"சார் பாத்துப் பேசுங்க... குங்குமம் வைக்கத் தான் போனோம். இது மீனாட்சி அம்மன் அர்ச்சனைக் குங்குமம்."

"உங்களுக்கு அர்ச்சனைக் குங்குமம் எங்களுக்கு இது தூசிக்கு சமம். ஏன் கிருமின்னு கூட சொல்வோம்"

"பிரசாதம் உங்களுக்கு கிருமியா?"

"புரியாம பேசாதீங்க. உங்க பக்தி பரவசம் எல்லாம் I.C.U. வுக்கு வெளியதான். டாக்டர்களே வாயை மூடி துணியால கட்டிகிட்டு தான் போவாங்க...பாருங்க..." – காண்பித்தார். ஒரு டாக்டர் வாயை மூடி துணியால் பின்பக்கம் முடிச்சு போட்டு கட்டியிருந்தார்.

"நம்ம மூச்சுக் காத்துகூட I.C.U.பேஷண்ட்களுக்கு ஆபத்தை உண்டாக்கலாம். அதுலயும் இந்த பேஷண்ட் வரைல இருபது பர்சன்ட் தான் குணமாகற வாய்ப்பு. எண்பது பர்சன்ட் இவர் பூட்டகேஸ்."- மருத்துவ உதவியாளர் சொன்னது யாழினிக்கு நெஞ்சில் அறைந்தார் போல் இருந்தது.

"சார், நீங்க ரொம்ப வார்த்தையை விட்றீங்க." - சீனுவுக்கும் கோபம் வந்தது.

"நான் விடலை. நீங்க விட வைக்கறீங்க."

"வெறும் இருபது பர்சன்ட் வாய்ப்பிருந்தாலும் ட்ரீட்மென்ட் தரணும்?"

"அதுசரி. நாங்க ஒரு பர்சன்ட் வாய்ப்பிருந்தாலும் ட்ரீட்மென்ட் தரத்தான் பார்ப்போம். நீங்கதான் காசு செலவாகறதப் பத்தி கவலைப்படணும், நாங்க எதுக்கு படணும்?"

- அவர் பதில் ஊசியாகக் குத்தியது. அதற்குள் அவருக்கு அழைப்பு வரவும் விலகிப்போனார்.

யாழினி முகம் வாடி விட்டிருந்தது.

"என்ன யாழினி. இந்தாள் பேசின பேச்சு வருத்தத்த தருதா?"

"பின்ன இல்லையாண்ணா... அதுலயும் எண்பது சத விகிதம் வாய்ப்பு இல்லேங்கற உண்மையை என்னால ஜீரணிக்க முடியலண்ணா."

"விடு... இவன் கம்பவுண்டர் மாதிரி. டாக்டர் சொல்றததான் நாம எடுத்துக்கணும்."

"எனக்கு பயமா இருக்கு சீனு அண்ணா."

"பைத்தியம்... நீ நெத்தியில பொட்டு வெச்சப்ப கணேஷ் சார் மொத்த உடம்பும் துடிச்சது. நீ கவனிக்கலையா?"

"என் கவனம் நெத்திமேல தான் இருந்தது"

"நான் உடம்பைப் பாத்தேன். நீ தொடவும் ஒரு துடிப்பு வந்தது. ஆனா, தொடர்ந்து தொட இடமில்லாதபடி வந்து கெடுத்துட்டான் இவன்..."

"இப்ப என்ன பண்ன?"

"வா, நாம உள்ள போவோம். இவன விட்டுத் தள்ளு ஸ்ரீகணேஷைத் தொடு. நான் அதைப் பார்க்கணும்."

"அண்ணா. ஒருபக்கம் எனக்கும் ஆசையாதான் இருக்கு. இன்னொருபக்கம் நான் யார்னு எனக்கு பயமா இருக்குண்ணா."

"இது கண்டத நினைச்சு குழப்பிக்கற நேரமில்ல யாழினி வா. நாம உள்ள போவோம்"

"அந்த ஆள் திரும்ப வந்தா?"

- யாழினி தயங்க நிஜமாலுமே அவன் வந்தான். வந்தவன் I.C.U. வுக்குள் தான் நுழைந்தான். அவர்கள் இருவருக்கும் எரிச்சலாக வந்தது.

அப்போது ஒரு கைக் குழந்தையுடன் ஒரு பெண் வந்திருந்தாள். குழந்தையிடம் அடங்காத அழுகை. அவள் கையில் ஒரு தாள் இருந்தது.

அவள் நேராக யாழினியிடம் தான் வந்தாள்.

"அம்மாடி எனக்கு ஒரு உதவி பண்ணுவியா?"

"சொல்லுங்கம்மா."

"இந்த பாரத்தை நிரப்பித்தரச் சொல்லி உள்ள தந்தாங்க. எனக்கு இங்கிலீஷ்லாம் தெரியாதும்மா."

"நீங்க தாங்க. நான் ஃபில்அப் பண்ணித் தரேன்." யாழினி வேகமானாள். அருகில் ஒரு மேஜை இருந்தது.

அதில் வைத்து விவரங்களை கேட்டுக்கேட்டு பூர்த்தி செய்தாள். இறுதியாக அதில் கையெழுத்தை அந்த தாய்த்தான் போடவேண்டும். குழந்தையை யாழினி வாங்கிக் கொள்ளவும் அவள் கையெழுத்துப் போட்டாள். அதுவரை அழுது கொண்டிருந்த குழந்தை சில நொடிகளிலேயே அழுகையை நிறுத்தி விட்டது.

"அட அழுகையை நிறுத்திட்டானே... இவனுக்கு உன்னைப் பிடிச்சிடுச்சி போல... அம்மாடி நான் இதை ஆஃபீஸ்ல கொடுத்துட்டு வந்து குழந்தையை வாங்கிக்கறேன். கொஞ்சம் வெச்சிருக்கியா?" - என்று கேட்கவும் சம்மதித்தாள் யாழினி. அவள் விலகவும் குழந்தையை நேருக்கு நேர் பார்த்தாள். அதுவும் பார்த்தது. அனலாய் கொதித்த உடம்புச்சூட்டை மீறி சிரித்தது. சூடும் குறையத் தொடங்கியது.

யாழினி தலைமுடியை விரல்களால் கோதி ரப்பர் பேண்டால் கட்டி விட்டாள். மூக்குச்சளியை வழித்து பக்கமாய் உள்ள வாஷ் பேசினில் கை கழுவி அப்படியே அந்த குழந்தை முகத்தையும் துடைத்து விட்டாள். சீனிவாசன் மௌனமாக பார்த்தபடியே இருந்தான். மிகச் சரியாக பத்தாவது நிமிடம் அந்தப் பெண் வந்தாள். குழந்தையை வாங்கிக் கொண்டாள். குழந்தை தெளிவாக முகம் பார்த்து சிரித்ததோடு திரும்ப யாழினியிடம் செல்ல கை நீட்டியது.

அந்த தாயிடம் ஒரே ஆச்சரியம்.

"என்ன ஆச்சரியம். நெருப்பா கொதிச்ச உடம்புல இப்ப அவ்வளவு கொதிப்பு இல்லை. முகமும் பளிச்சினு இருக்கே..."

"நான்தாம்மா தண்ணியால துடைச்சு விட்டேன்."

"என்ன அதிசயம். குழந்தையை பெட்ல சேக்கணும் 'நிம்மோனியா'வா இருக்கலாம்னு சந்தேகப்பட்டாங்க அதுக்குதான் அந்த தாளை கொடுத்தாங்க. இப்ப குழந்தையை பாத்தா நம்பவே முடியலியே."

"நம்புங்கம்மா... எங்க யாழினிக்கு ராசியான கை அதான் உங்க குழந்தையைத் தொடவும் சரியாப் போச்சு" என்றான் சீனிவாசன்.

"அம்மாடி... இந்தாபிடி... இன்னும் கொஞ்ச நேரம் வெச்சிரு. இதை நான் எங்க போய் சொல்வேன். என்னால நம்ப முடியலியே. ஆமா நீ கால் முதல்ல வெளிய வரப் பிறந்தவளா?"

அவள் அப்படி ஒரு கேள்வி கேட்பாள் என்று சீனிவாசன் எதிர்பார்க்கவில்லை. அப்போது டாக்டர்களும் I.C.U. வுக்குள் கணேஷ் பெட் நோக்கி வேகமாக செல்வது தெரிந்தது.

உள்ளேயும் ஏதோ நடந்திருக்கவேண்டும். சீனிவாசன் வேகமாக பின் தொடர்ந்து சென்று டாக்டர்கள் அருகில் நின்றிட. டாக்டர் மானிடரைப் பார்த்து வாய்ப்பிறந்தவராக "ஃபன்டாஸ்ட்டிக் ரெக்கவரி... யார் குங்குமம் வெச்சது...?" என்று கேட்க, மருத்துவ உதவியாளரும் சீனிவாசனைப் பார்த்திட, சீனிவாசனிடம் ஒரு புதிய முடிவு!

# 31

தொட்டிக்குள்
வாழ்ந்தாலும்...
நீந்தும் மீன்..!

நன்றி: கவிஞர்.அமுதபாரதி

சீனிவாசன் ஒரு முடிவோடு யோசிப்பதைப் பார்த்த டாக்டர் "என்ன சார்... என் கேள்விக்கு பதில் சொல்லாம யோசிக்கறீங்களே..." என்று திரும்பவும் அவனைத் தூண்டிநார்.

"ஒண்ணும் இல்ல சார்..." எங்களச் சுத்தி சில நம்ப முடியாத விஷயங்கள் நடந்துகிட்டே இருக்கு... அதை எப்படி புரிஞ்சிக்கறதுன்னே தெரியல எனக்கு. அதான் நான் யோசிக்க ஆரம்பிச்சிட்டேன்."

"நம்ப முடியாத விஷயங்கள்னா...நீங்க எதைச் சொல்றீங்க"

"இப்ப இதோ இவருக்கு குங்குமம் வெச்சது யாருன்னு கேட்டீங்களே... இதுகூடதான்"

"இது புரியாதவரைதான் நம்ப முடியாத விஷயம். புரிஞ்சிட்டா இது ஒரு விஞ்ஞானபூர்வமான விஷயம்தான்... என் கேள்விக்கு நீங்க பதில் சொல்லுங்க... இங்க இவருக்கு குங்குமம் வெச்சது யார்?"

"அதோ அந்தப் பொண்ணு தான்... பேர் யாழினி!"

"அவங்க இவருக்கு என்ன வேணும்?"

"எந்த உறவுமில்லை... இது நட்பு! அவ்வளவுதான்!"

- சீனிவாசன் சொல்லிய படி இருக்க டாக்டர் யாழினியை பார்க்க, அவளும் பார்த்திட அருகில் வரும்படி அழைத்தார். அவளும் வேகமாய் முன் வந்தாள். அவளைத் தொடர்ந்து அந்தக் குழந்தையின் தாயும் வந்தவளாக "அம்மாடி...நான் போய்ட்டு வரேன். உன் கையால என் குழந்தை தலைல கை வெச்சு ஆசீர்வாதம் பண்ணும்மா. என்று தன் குழந்தையையும் அவள் பக்கம் கொண்டு செல்ல டாக்டர் எதிரில் யாழினி சற்று நெளிந்தாள்.

"என்னம்மா யோசிக்கறே... ஆசீர்வாதம் பண்ணும்மா" - அவள் தூண்டிவிட அவளும் அப்படியே நடந்து கொள்ள அந்தப் பெண் விலகிப் போனாள்.

டாக்டர் முகத்தில் ஒரு குறுஞ்சிரிப்பு. அதைத் தொடர்ந்து "என்னம்மா பண்றே நீ?" - என்கிற கேள்வி.

"நான் திருமகள் முதியோர் இல்லத்தோட சூப்ரவைசர் சார்" - என்றாள் யாழினி.

"படிச்சிருக்கியா?"

"எம்.எஸ்ஸி முடிச்சு பி.ஹெச்.டி. பண்ணிகிட்டிருக்கேன் சார்..."

"வெரிகுட்... உன் அப்பா அம்மா யார்?"

- டாக்டரின் கேள்வி முன் மௌனமாய் தேங்கினாள் யாழினி. ஆனால் அதற்கு பதிலை சீனிவாசன் சொல்ல ஆரம்பித்தான்.

"டாக்டர்... யாழினி அந்த விஷயத்துல தெய்வத்தோட குழந்தை அதே சமயம் இவ எங்க திருமகள் நிலையத்தோட பெரிய சொத்து..." என்றான்.

"நீங்க?"

"நானும் அங்கதான் வேலை பாக்கறேன். நான் திருமகள் நிலையத்தோட

மேனேஜராக இருக்கேன்."

"இவர் உங்களுக்கு எந்த வகைல பழக்கம்?"

"எல்லாத்தையும் விவரமா சொல்றேன். முதல்ல யாழினியை மிஸ்டர் கணேஷைத் தொட்டு சர்வீஸ் பிரார்த்தனை பண்ணச் சொல்லுங்க"

"ஒரு எம்.பி.பி.எஸ். படிச்ச டாக்டரா என்னால சொல்ல முடியாது. சொல்லவும் கூடாது. ஆனா, ஆன்மிகத்துல ஆழ்ந்த நம்பிக்கையும், அமானுஷ்யங்கள்ல ஒரு ஆராய்ச்சியும் உள்ள ஒரு வெல்விஷரா நான் இவங்கள பிரார்த்தனை பண்ணச் சொல்லலாம்.

இன்ஃபாக்ட் அக்கல்ட் சைன்ஸ்' ங்கிற மறை விஞ்ஞானத்தோட ஒரு ரெபரசென்டேடிவ் தான் இவங்க இவங்களே ஒரு ஆய்வுக்கு உரியவங்கதான். அதை எல்லாம் நாம் பிறகு பேசுவோம். இப்ப நீங்க சொன்னமாதிரி இவங்க இந்த பேஷண்டை தொட்டுப் பிரார்த்தனை பண்ணட்டும். எனக்கு ஆட்சேபணை இல்லை" - என்றார் டாக்டர். சீனிவாசன் பேசியது போதும் உன் பலத்தைக் காட்டு என்பது போல யாழினியைப் பார்த்தாள்.

யாழினி சற்று தயங்கினாள். தான் இப்படி வேறு மாதிரி பார்க்கப்படுவது அவளுடைய உணர்வுகளுக்கும் சரி. அறிவுக்கும் சரி ஏற்புடையதாக இல்லை. ஆனால் தன்னிடம் புதிதாய் ஏதோ ஒன்று செயல்படுகிறது என்பதை மறுக்கவும் அவளால் முடியவில்லை.

"என்ன யாழினி... கமான். கணேஷ் சார் கையைப் பிடிச்சு உன் இஷ்ட தெய்வமான மீனாட்சி அம்மனை நினைச்சுக்கோ. 'தாயே இவர் நல்லபடியா குணமாகி எழுந்திருக்கணும்'னும் வேண்டிக்கோ.

ஒரு பக்கம் சிகிச்சை மறுபக்கம் பிரார்த்தனைன்னு கணேஷ் சாரை எப்படியாவது உயிர்ப்பிப்போம்..." என்று சீனிவாசன் தெளிவுபடுத்தினான்.

யாழினியும் கணேஷின் கையைத் தேடிப் பிடித்தாள். இடது கை மேல் அவனது வலது கையை வைத்து, அதன் மேல் தன் வலது கையை வைத்து மூடிக் கொண்டவள் கண்களையும் மூடிக் கொண்டாள். மனதுக்குள் பிரார்த்தித்துக் கொள்ளத் தொடங்கினாள்.

"அம்மா...மீனாட்சி! என்னைப் பெற்றவள் யார் என்றே தெரியாது.

அம்மா என்றால் என் வரையில் நீ மட்டும் தான்!

உன்னிடம் கூட நான் இது நாள் வரையில் எதையும் கேட்டதேயில்லை. இப்போது இவருக்காக ஆரோக்கியத்தைக் கேட்கிறேன். என்னை இந்த உலகம் ஒரு அதிசய சக்தியாக பார்க்கத் தொடங்கியுள்ளது. எனக்கு இது பிடிக்கவில்லை. நான் ஒரு சாமான்யப்பட்ட மனுஷியாகவே இருக்க விரும்புகிறேன். இப்போது இவருக்கு நீ தரப்போகும் குணப்பாடு உன் அருளால்தான் நிகழ வேண்டும். நான் இங்கே ஒரு கருவி மட்டுமே... இவர் மிக நல்லவர். என் கற்பைக் காப்பாற்றியவர். இவர் கட்டாயம் பிழைக்க வேண்டும். இவர் தாயைத்தான் நீ உன்னோடு அழைத்துக் கொண்டு விட்டாய். இவர் அப்பா, மனைவியை இழந்த மாதிரி மகனையும் இழந்து விடக் கூடாது. எனக்காக இவரைக் காப்பாற்று. எந்த ஊனமும் இல்லாமல் இவரை நடமாட விடு இதுவே என் பிரார்த்தனை..."

-யாழினிக்குள் பிரார்த்தனை ஒரு நேரடிப் பேச்சு போல உள்ளோடியபடி இருந்தது. டாக்டரும் சீனிவாசனும் 'இந்த கேஸ் தேறவே தேறாது என்று சப்தம் போட்ட அந்த வார்டு உதவியாளரும், சில நர்ஸ் பெண்மணிகளும் அவள் கண்களை மூடி பிரார்த்தனை செய்வதையே மௌனமாக கவனித்தபடி இருந்தனர்.

அப்போது அந்த I.C.U. வுக்கு வெளியே ராயப்பன், அன்னமேரி, ஜான்சி ஆகிய மூவரும் வந்து சேர்ந்திருந்தனர். உள்ளே கணேஷ் கிடப்பதை அவர்கள் ஒருவர் மாற்றி ஒருவர் கண்ணாடி வழியாக பார்ப்பதற்கு போட்டி போடுவதும் தெரிந்தது.

-அநியாயத்த பாரு அன்னமேரி... ராசா மாதிரி கார்ல வந்த மனுஷன் கட்டில் மேல எப்படி கெடக்கறார் பாரு..." என்றான் ராயப்பன்.

"என்னய்யா இது... வைத்தியம் பார்க்காம கையைப் புடிச்சிகிட்டு கண்ண மூடிகிட்டு நிக்குது ஒரு பொண்ணு... இது புதுமாதிரி இல்ல..."

"மூசே... அந்தப் பொண்ணு ஜெபிக்கு தாட்டம் இருக்கு. நம்ம பாதிரியார் பிரார்த்தனை பண்ணு வார்ல?"

"அய்ய... இவங்க கோயில்ல அபிஷேகம் ஆராதனைன்னுல்ல சாமி கும்புடுவாங்க?"

"வாய மூடிகிட்டு கவனி... தொணதொணங்காதே."

- ராயப்பன் அன்னமேரியை அதட்டலோடு கட்டுப்படுத்திய அந்த நொடியில் தினேஷும் அங்கு வந்து நின்றான். அவன் தோளில் ஒரு

லேப்டாப் பேக்!

அதை அருகாமை நாற்காலியில் இறக்கி வைத்தவன் அன்னமேரி, ராயப்பன், ஜான்சி என்று மூவரும் I.C.U. கண்ணாடி கதவின் முன் முட்டிமோதிக் கொண்டிருப்பதைப் பார்த்தபடியே வந்து அனுமதி பெற்றவன் போல் கண்ணாடி கதவைத் திறந்தான். உள்ளேயும் நுழைந்தான்.

அவன் செய்கை அன்ன மேரியைத் தூண்டியது.

"யோவ்... இந்தாள் பாட்டும் போறான். நாமும் கிட்டப் போய் பாப்போம்யா..." - என்று உள்ளே செல்ல முயற்சித்தாள்.

"அடச்சீ... அவர் டாக்டரா இருக்கலாம். நாம போகக் கூடாது. போனா கழுத்தப் பிடிச்சு தள்ளி விட்றுவாங்க..."

- அவன் அவளை சமாளித்தபடி இருக்க உள்ளே நுழைந்த தினேஷுக்கு டாக்டரோடு சீனிவாசனையும் யாழினியையும் பார்க்கவும் பகீரென்றது.

அதிலும் யாழினி கையைப் பிடித்துக் கொண்டு பிரார்த்தித்தபடி இருப்பது அவனுக்குள் ஒரு புயலை கிளப்பியது.

"டாக்டர் என்ன இது. என்ன நடக்குது இங்கே?"- என்று பலமான குரலில் கேட்டான். டாக்டரும் அதைக் கேட்டு அதிர்ந்தவராக நீங்க யார் என்பதைப் போல பார்த்தார். சீனிவாசனுக்கு அவனைப் பார்க்கவும் சற்று நெருடியது. ஆனால், யாழினி துளி கூட தன் பிரார்த்தனையில் இருந்து கலையவில்லை. அருகாமையில் மானிட்டரில் அதன் எதிரொலியாய் ஒளிக் கோடுகள் குதிக்காமல் கொள்ளாமல் சீராக ஒரு நேர்க்கோட்டில் ஓடியபடி இருந்தது.

டாக்டர் தினேஷை சற்று தள்ளி அழைத்துச் சென்றவராக பேசத் தொடங்கினார்.

"இது I.C.U. வார்டு... நீங்க யாரைக் கேட்டு உள்ள வந்தீங்க... முதல்ல அதுக்கு பதில் சொல்லுங்க"

"என்ன டாக்டர் நீங்க. பேஷண்ட்டோட ரிலேடிவ் நான்... சம்பந்தமே இல்லாதவங்க சுத்தி நின்னுகிட்டிருக்காங்க அவங்கள எதுவும் சொல்லாம என்னைக் கேள்வி கேட்கறீங்க."

"இப்ப இங்க ஒரு நல்ல காரியம் நடந்துகிட்டு இருக்கு. யாழினீங்கற அந்தப் பெண் ஒரு டிவைன் பர்சனாலிடி. அவங்க பேஷண்ட் ரெகவர்

ஆக பிரார்த்தனை பண்ணிகிட்டு இருக்காங்க.."

"அவ ஒரு டிவைன் பர்சனாலிடியா? என்ன டாக்டர் உளர்றீங்க. அவ ஒரு அனாதை!"

"ப்ளீஸ் மைண்ட் யுவர் வேர்ட்ஸ் அவங்களப் பத்தி எனக்கும் தெரியும்."

"என்ன தெரியும்? நீங்க ஒரு எம்.பி.பி.எஸ். டாக்டர் தானான்னு எனக்கு டவுட்டா இருக்கு. பிரார்த்தனையை கோயில்ல போய்ப் பண்ணச் சொல்லுங்க. "I.C.U. விலயா பண்ணுவாங்க?"

"மிஸ்டர்... திரும்பவும் சொல்றேன்- மைண்ட் யுவர் வேர்ட்ஸ். நான் எம்.பி.பி.எஸ்.ஸா இல்லையான்னு கவலைப் படவேண்டியது இந்த ஹாஸ்பிடல் மேனேஜ்மெண்ட். உங்களுக்கு அந்த கவலை வேண்டாம்."

"சாரி டாக்டர்... நீங்க இப்படியெல்லாம் நடந்துகிட்டா நான் வேற ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டியிருக்கும்"

- தினேஷ் அவரை மிரட்டுவதுபோல பேசத் தொடங்க, ஒரு நர்ஸ் வந்து "டாக்டர் பேஷண்ட் கண் திறந்து பார்க்கறார்..." என்றாள். டாக்டரும் ஓடினார். தினேஷ் பின் தொடரப் பார்த்தான்.

"நோ... நீங்க வரக்கூடாது. இங்க இருந்து முதல்ல வெளிய போங்க..." என்றார். அது தினேஷ் வரையில் அவன் கன்னத்தில் அறைந்த மாதிரி இருந்தது. தேங்கி நின்றான். டாக்டர் விரைந்தார்.

யாழினி பிரார்த்தனையை தொடர்ந்து கொண்டிருக்க, கணேஷ் கண் விழித்து மூடி மூடித் திறந்தபடி இருந்தான். சீனிவாசன் முகத்தில் மட்டுமல்ல. அந்த வார்டு உதவியாளனும் அதிசயமாக பார்த்தபடி இருக்க, டாக்டர் அருகில் வந்து மானிட்டர் ஸ்கிரீனைப் பார்த்தார். பின் "ட்ரமெண்டஸ்... வாட் எ பவர்... வாட் எ பவர்?" என்று முகம் மலர்ந்தார்.

"டாக்டர் நிஜமா இது நம்ப முடியாத அதிசயம். என் சர்வீஸ்ல நான் இப்படி ஒரு அதிசயத்த பார்த்ததே இல்லை.." - என்றான் உதவியாளன்.

"டாக்டர், யாழினி ஒரு தெய்வப் பிறவின்னு இப்ப தான் தெரியவந்தது. அது புரூவ் ஆயிடிச்சி."- என்று சீனிவாசனும் முகம் மலர, தினேஷ் மட்டும் முகம் கசந்தவனாக I.C.U. வுக்கு வெளியே வந்தான். அவ்வளவையும் பார்த்தபடி இருந்தான் ராயப்பன். மெல்ல தினேஷிடம் "சார், பேஷண்ட்டுக்கு நீங்க என்ன வேணும்?" என்று கேட்டான். அவனை வெறித்தபடி தன் லேப்டாப் பேக்கை எடுத்துக் கொள்ள

திரும்பிய தினேஷுக்கு தூக்கி வாரிப் போட்டது. அந்த நாற்காலியில் பேக்கை காணவில்லை!

# 32

'ஒவ்வொரு நாளும் புதிதாய் பிறப்போம்
ஓய்ந்திடல் நமக்கு இல்லை
எவ்வெவர் ஆயினும் எம்மவர் என்போம்
இதுவே நம் கொள்கை...
இருப்பது சிலநாள் இதனை நீ எண்ணு,
இறுகிய முகம் வேண்டாம்
சிரித்த நல் முகமும் சிந்தையில் தெளிவும்
காண்டிரு, துயர் வேண்டாம்!'
நன்றி: எஸ். டேவிட் பிரதாப் சிங்

லேப்டாப் பேக்கை காணாத நிலையில் தினேஷ் பதறத் தொடங்கினான். அதில்தான் அவனது அவ்வளவு விஷயங்களும் ரெக்கார்டாக உள்ளது. ஒரு விதத்தில் அவன் உயிரே அதில் இருக்கிறது என்றால் அது மிகையில்லை.

"இங்க வெச்சிருந்த என் லேப்டாப் பேக் எங்க.. பாராச்சும் பாத்தீங்களா?" - என்று சுற்றி இருப்பவர்களிடம் கேட்கத் தொடங்கினான். ராயப்பனும் அன்னமேரியும் ஒரு முடிவுக்கு வந்து விட்டனர். ஜான்சியின் கண்களில் ஒரு விரிவு.

"சார்... இங்க ஒரு புளூ சட்டை போட்ட ஒருத்தன் உட்கார்ந்திருந்தான். அவனாதான் சார் இருக்கணும்" என்றாள் பளிச்சென்று...

"எப்ப... எந்த பக்கம் போனான்?"

"அது எனக்கு ஞாபகமில்லை... வா சார் தேடுவோம். இங்க நின்னு பேசிகிட்டிருந்தா வேலைக்காகாது..."- என்று ராயப்பன் தேடத் தொடங்கி விட்டான்.

ஜான்சியும் அன்னமேரியும் ஒன்றாகி ஆஸ்பத்திரியில் அவனை தேட ஆரம்பித்தனர். மருந்துவாடை பல இடங்களில் மூச்சின் வழியாக மூளை வரை ஏறிற்று.

டாக்டர்கள் குறுக்கும் நெடுக்கும் நடந்தபடி இருக்க அந்த நிலையிலும் ராயப்பன் மனதுக்குள் உடம்பின் ஆரோக்யம் எவ்வளவு பெரிய விஷயம்

என்கிற சிந்தனை தான் எழும்பியது.

தினேஷின் கிரிமினல் புத்தியோ லேப்பை திருடியவன் நிச்சயம் ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறியிருப்பான் என்று கணக்கு போட்டது. திரும்பின பக்கமெல்லாம் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கேமராக்கள் அவனுக்கு நம்பிக்கை தந்தது.

நேராக ஆஸ்பத்திரியின் ஆபீஸ் நோக்கி ஓடினான்.

அங்கிருந்த மேலாளரிடம் "சார் என் லேப்டாப் பேக் காணாம போயிடிச்சு... யார் எடுத்ததுங்கறத உங்க கேமரா நிச்சயம் ஷூட் பண்ணியிருக்கும். தயவுசெய்து எனக்கு ரிவைஸ் பண்ணி போட்டு காட்டுங்க... ப்ளீஸ்!" என்று பதட்டம் குறையாமல் நின்றான்.

அவரும் தயாரானார்!

ஆஸ்பத்திரி மாடியில் மருந்துகளுக்கான ஸ்டாக் ரூமில் காமிரா தொடர்பான கருவிகள் வைக்கப்பட்டிருந்தன. அதைக் கொண்டு ஒரு டிவியில் அரை மணி நேர அளவுக்கு பின்னோக்கி சென்று ஓட விட்டபோது ஒரு நீலச்சட்டை அணிந்தவன் வருவதும் லேப் டாப் உள்ள பேக் அருகே நிற்பதும் தெரிந்தது. அவன் மிக விபரமாக முதுகைக் காட்டியபடியேதான் இருந்தான். கேமரா இருப்பது தெரிந்து அதில்தான் தெரிந்து விடக்கூடாது என்று திட்டமிட்டு வந்தவன் போலவே இருந்தது அவன் நடவடிக்கை.

ஒரு கட்டத்தில் பேக்கை எடுத்து தோளில் மாட்டிக் கொண்டவன் விறுவிறுவென்று வெளியேறுவதும் தெரிந்தது. வாசற்புரம் உள்ள கேமரா அவன் ஆட்டோவில் ஏறுவதைக் காட்டியது. அதற்குமேல் தெளிவில்லை. ஆட்டோ நம்பரும் தெரியவில்லை.

அவ்வளவையும் காட்டிய மேனேஜர் "என்ன சார் இது. இப்படியா பேக்கை வெச்சுட்டு போவீங்க...? பாருங்க, ஒருத்தன் எடுத்துகிட்டு போயிட்டான். முகத்தை காட்டாம எவ்வளவு ஜாக்ரதையா திருடியிருக்கான் பாருங்க..."

"இப்ப என்ன சார் பண்றது?"

"நீங்க தான் முடிவெடுக்கணும். போங்க போய் போலீஸ் கம்ப்ளெண்ட் கொடுங்க. அப்புறம் மற்ற விஷயங்கள பத்தி பேசலாம். போலீசுக்கும் இந்த கேமரா ரெக்கார்டை காட்டலாம். அவங்க நடை உடை பாவனையை வெச்சு நிச்சயம் கண்டு பிடிச்சிடுவாங்க. தைரியமா

இருங்க.." - மேனேஜர் நம்பிக்கை தருவது போல பேசினார். ஆனால் தினேஷுக்கு போலீசுக்கு போக தயக்கமாக இருந்தது. ஒருவேளை அவர்கள் அதனுள் என்ன இருக்கிறது என்பதை பார்க்க நேர்ந்தால் தன் குட்டு உடைந்துவிடுமோ என்று ஒரு எச்சரிக்கை எழும்பியது.

குறிப்பாக கணேஷை விபத்துக்கு ஆளாக்கிய அந்த கூலிப்படைக்காரன் ஆக்சிடென்ட் ஸ்பாட்டில் தன் கேமராவில் எடுத்த வீடியோ பதிவும், அதைத் தொடர்ந்து பேசிதெல்லாமும் அதில்தான் ஒரு தனி ஃபைலில் அடங்கியிருந்தது.

"என்ன சார்... என்ன யோசனை? முதல்ல போலீஸ் ஸ்டேஷனுக்கு போங்க. லேப் டாப்ங்கறது. நம்ப பர்சனல் டைரி மாதிரி. எந்த பதிவுகளும் இல்லாத ஒரு லேப்டாப் திருட்டு போனா ஒழிஞ்சு போகுதுன்னு விட்டுடலாம். ஆனா யூஸ் பண்ண ஒண்ணு காணாம போனா அது பேராபத்து. அதிலயும் நாட்டுல டெரரிஸம் தலை விரிச்சாடிகிட்டு இருக்கு. தப்பித் தவறி அவங்க கைல கிடைச்சா அவங்க உங்களை மாட்டிக் கூட விடலாம்."

- மேனேஜர் பயமுறுத்துவது போலவும் பேசினார். அந்த உண்மைகள் வேறு தினேஷை ஒரு உலுக்கு உலுக்கின.

"சரி சார். நான் இப்பவே போறேன்."- என்று அவரை விட்டு விலகிய நொடி சென்னையில் இருந்து மோகனா போனில் அழைத்தாள்.

"தினேஷ்..."

"சொல்லுங்க ஆண்ட்டி..."

"ஆஸ்பத்திரில தானே இருக்கு?"

"அ... ஆமாம்..."

"கணேஷை பாத்துட்டியா... எனி இம்ப்ரூவ்மென்ட்?"

"அது...அது... எதுவுமில்ல ஆண்ட்டி.ஐ.சி.யூவுல தான் இருக்கு பாடி..."

"பாடியா... என்ன பேசறே நீ?"

"சாரி... சாரி... I.C.U. விலதான் உடம்பு இருக்குன்னேன்..."

"இப்ப எனக்கு அங்க இருக்கற ஒரு நர்ஸ்கிட்ட இருந்து போன் வந்தது. கணேஷ் பேசறானாமே...?"

"பேசறானா... ரியலி?"

"மண்ணாங்கட்டி... நீ ஆஸ்பத்திரியில அவனைப் பாத்த லட்சணம் இதுல இருந்தே தெரியுது. அங்க தான் இருக்கியா இல்ல ஏதாவது பார்ல இருக்கியா?"

"பார்லயா... நோ... நோ... நான் ஆஸ்பத்திரியில தான் இருக்கேன். இங்க என் லேப்டாப் பேக் திருடு போயிடிச்சு. அதை யார் எடுத்தாங்கன்னு தேடிகிட்டு இருக்கேன்."

"லேப் டாப் பேக் திருடு போற அளவுக்காக நீ கேர்லெஸ்ஸா இருந்தே"

"ஐயோ ஆண்ட்டி... கணேஷ் பெட்டை சுத்தி அந்த யாழினி, சீனிவாசன்னு அந்த அனாதை ஆஸ்ரமக்கூட்டம் இருந்தாங்க. அதுவும் I.C.U. வுக்குள்ள... எனக்கு ஒரே சர்ப்ரைஸ்... என்ன பண்றாங்கன்னு பாக்கப் போனேன், அந்த பதட்டத்துலதான் வெளிய டேபிள்ள பேக்கை வெச்சுட்டு போனேன். இதான் சாக்குன்னு எவனோ சுட்டுட்டான்."

"நீ மாத்தி மாத்தி பேசறே... சம்திங் ராங்! நாங்க கிளம்பிட்டோம். எங்க ஃப்ளைட் இன்னும் ஒரு ஒரு மணி நேரத்துல மதுரை வந்துடும். அங்க இருந்து ஹாஸ்பிடல் வந்து சேர ஒரு ஒருமணிநேரம். நான் உன்னை அப்ப நேர்ல பாக்கறேன்"

- மோகனா கட் செய்தாள். ஒரு வாங்கு வாங்கி விட்டாள். தினேஷுக்கு தன் எதிரில் ஒரு முதலை பிளந்த வாயோடு தன்னை விழுங்குவதற்காக வருவது போல தோன்றியது.

ஒருபுறம் ரகசிய லேப் டாப்பின் கனவு மறுபுறம் கணேஷ் பேசுகிறான் என்கிற செய்தி இன்னொரு புறம் மோகனா சந்தானம் சந்திரசேகருடன் திரும்பி வரும் வேகம்.

தினேஷ் முதல் முறையாக ஆடிப் போனான்!

வேகமாக ஐ.சி.யூ. நோக்கித்தான் சென்றான்.

உள்ளே கணேஷ் பேசிக் கொண்டிருந்தான். யாழினி அவன் கைகள் இரண்டையுமே பற்றியவளாக வருடிக் கொண்டே இருந்தாள்.

தினேஷ் வரையில் ஆச்சரியம் அப்பி எடுத்தது.

பல டாக்டர்கள் அங்கு வந்து நின்றபடி கணேஷைப் பார்த்து வியந்து கொண்டிருந்தனர். ஒரு டாக்டர் யாழினியை பக்கமாய் இருக்கும்

இன்னொரு பேஷண்ட்டை நோக்கி அழைத்துச் செல்ல முயல்வதும் யாழினி தயங்குவதும் தெரிந்தது. பின் அவரோடு சென்றாள்.

தயங்கித் தயங்கி நின்ற தினேஷோ நேராக உள்ளே நுழைந்தான். கணேஷ் அருகே போய் நின்றான். கணேஷும் பார்த்தான். கலக்கமான பார்வை.

"கணேஷ்...!"

"யெஸ் தினேஷ்..."

"உனக்கு என்னை தெரியுதா?"

"என்ன... என்ன கேள்வி இது தினேஷ். நீதானே தினேஷ்?"

"இதை என்னால நம்ப முடியல"

"தினேஷ் அம்மா அப்பா எங்க? அவங்களுக்கு நான் ஆக்சிடென்டாகி இங்க கிடக்கற விஷயம் தெரியுமா," - கணேஷ் தினேஷிடம் சகஜமாக ஆனால் வலிமையில்லாத குரலில் பேசவும் டாக்டர் ஒருவர் கவனித்துவிட்டு ஓடி வந்து "ஸ்ட்ரெய்ன் பண்ணாதீங்க சார்... மிஸ்டர் பேச்சு கொடுக்காதீங்க. போங்க அந்த பக்கம்"- என்று அலறினார்.

அப்போது யாழினி ஒரு பேஷண்ட் நெற்றியில் கை வைத்தபடி நின்றிருந்தாள். திரும்பி பார்த்தாள். அருகிலேயே இருந்த சீனிவாசனும்...தினேஷ் வெறித்தான்.

அதிசயங்கள் பற்றி கேள்விப்பட்டவன் அதை கண் எதிரிலேயே பார்த்துக் கொண்டுமிருக்கவும் அவனுக்குள் தடுமாற்றமே ஏற்பட்டது. அப்போது அந்த பக்கம் வந்த மேனேஜர் அவன் I.C.U. உள்ளே நிற்பதை பார்த்து அதிர்வை முகத்தில் காட்டினார். தினேஷும் பார்த்து விட்டு வெளியே அவரை நோக்கி சென்றான்.

"நீங்க இன்னுமா போலீஸ் ஸ்டேஷனுக்கு போகலை?"

"போகணும் சார். அதுக்குள்ள எங்க பேஷண்ட் பேசறார்னு தெரியவரவும் போய் பார்த்தேன்."

"நானும் அதை பார்க்கத்தான் வந்துருக்கேன். ரொம்ப நாளைக்கு பிறகு இல்லயில்ல பலப்பல வருஷங்களுக்கு பிறகு எங்க ஹாஸ்பிடல்ல திரும்பவும் மிராகிள்."

"மிராகிளா?"

"ஆமாம் சார்... இதுக்கு முந்தி அன்னை தெரசா மாதிரி ஒரு பெண் சாமியார் வந்திருந்தாங்க. அவங்க பேர்கூட ஏதோ யோசினின்னு வரும் சரியா ஞாபகமில்லை. அப்படி அவங்க வந்த அன்னிக்கு பிழைக்கவே மாட்டார்னு இருந்த பல பேஷண்டுகள் பிழைச்சாங்க. இப்ப அதே மாதிரி ஒரு அதிசயம் திரும்ப நடந்துருக்கு, நான் வரேன். நீங்க ஸ்டேஷனுக்கு போங்க. நான் நீங்க வருவீங்கன்னு போன் பண்ணி வேற சொல்லியிருக்கேன்..."- போகிற போக்கில் அந்த மேனேஜர் பல விஷயங்களைச் சொல்லிவிட்டு இல்லையில்லை, கொட்டிவிட்டு போனார்.

தினேஷுக்கு தலையை சுற்றத் தொடங்கிவிட்டது. கணேஷ் பேசிய அதிசயம் நெஞ்சைக் குடைந்தது.

எல்லாமே கைவிட்டுப் போய் அவன் நடு மலை உச்சியில் இருந்து விழுகிற மாதிரி எல்லாம் எண்ணம் தோன்ற ஆரம்பித்துவிட்டது.

அப்போது யாழினியை I.C.U. வுக்கு வெளியே அழைத்துக் கொண்டு எங்கோ போவது தெரிந்தது. நர்ஸை அழைத்து கேட்டான்.

"அவங்க இன்னொரு ஆஸ்பத்திரிக்கு போறாங்க. அங்க ஒரு முக்கியமான பேஷண்ட்டை அவங்க பாக்கணுமாம்....

"பார்த்து..?"

"என்ன சார் அப்படி கேட்டுட்டீங்க. அவங்க ஒரு தெய்வப் பிறவி சார். அவங்ககிட்ட பாசிடிவ் எனர்ஜி நிறைய உருவாகறதா டாக்டர்கள் நினைக்கறாங்க..."

- அந்த நர்ஸ் தன் காதில் விழுந்ததைச் சொல்லி விட்டு நடந்தாள். தினேஷுக்கு சிரிப்பதா இல்லை அழுவதா என்றே தெரியவில்லை.

இன்னும் இரண்டு மணி நேரத்தில் சென்னைக்கு போன அவ்வளவு பேரும் வேறு வந்து விடுவார்கள். வந்தால் நிச்சயம் யாழினியை சந்தானமும், மோகனாவும் சந்திக்கும் சூழ்நிலை வரும். அப்போது எது வேண்டுமானால் நடக்கலாம்

என்று தோன்றியது. கூடவே யாழினிக்கு இப்படி ஒரு சக்தி எப்படி சாத்யம் என்கிற கேள்வியும் எழும்பியது.

காதோரம் ஒழுக ஆரம்பித்த வியர்வையை வழித்தபடி அவன் அங்கிருந்து வெளியேற முற்பட்டபோது ஒரு டாக்டர் போனில்

யாருடனோ பேசிக் கொண்டு வந்தார். அதுவும் யாழினி பற்றி தான்....

"டாக்டர் இங்க ஒரு மிராகிள்!"

ஒரு சூப்பர் எனர்ஜி கொண்ட பொண்ணு ஒருத்தி இங்க வந்துருக்கா. கிட்டதட்ட இதேமாதிரி ஒரு கேரக்டர் தான் யு.எஸ்'ல கொலராடோவுல இருந்து அவங்கள பத்தின இன்டர்வியூவெல்லாம் கூட வந்தது. அந்த பொண்ணை சயின்ட்டிஸ்டுங்க ரிசர்ச் பண்ண விரும்பினாங்க. ஆனா அந்த பொண்ணோட பேரண்ட்ஸ் சம்மதிக்கலை. அந்த பெண்ணோட ஸ்பெஷல் பவரும் இப்ப செயல்பட்றதில்லன்னு கேள்வி. அந்த கொலநாடோ பொண்ணு மாதிரியே இங்க ஒரு கேரக்டர். நீங்க புறப்பட்டு வாங்க. நாம நேர்ல பேசுவோம். உங்களுக்கு தெரிஞ்ச ஹிப்னாடிச நிபுணர் டாக்டர் ஜெரோமையும் மறக்காம கூட்டிகிட்டு வாங்க..."

- அவர் பேசியதில் யாழினி எங்கோ போய்விட்டதும் புரிந்தது. அப்போது ஒரு அதிசயம்போல திருடனைத் தேடிச் சென்ற ராயப்பன் திருடுபோன லேப்டாப் பேக்குடன் எதிரில் வந்தபடி இருந்தான்!

# 33

நம்பிக்கை கொள்
இன்னும்
இருக்கிறது வாழ்க்கை!
இல்லை
இனிமேல்தான் இருக்கிறது
வாழ்க்கை!

நன்றி: அய்யாறு ச. புகழேந்தி

ராயப்பன் லேப்டாப்புடன் தினேஷ் எதிரில் வந்து நிற்க, அவன் தோளில் தொங்கிய பையைப் பார்க்கவும் தினேஷுக்கு போன உயிர் வந்ததுபோல் இருந்தது.

"இதான் என் பேக், இதேதான். எப்படிக் கிடைச்சது?" - என்று ராயப்பனிடம் இருந்து பையை வாங்க முயன்றான்.

"இரு சார், இதான் உன் பேக்னு எனக்கும் தெரியும். வெளிய பார்ட்டியைத் தேடி ஓட்னவன நான். அவனைக் கண்டுபிடிச்சி இதைக் கொண்டு வர நான் என் உசுரையே பணயம் வைக்க வேண்டியதா போச்சு. அது தெரியுமா உனக்கு?" - என்று நிதானமாய் பேசினான்.

"ரொம்ப தேங்க்ஸ்ப்பா. ரொம்ப ரொம்ப தேங்க்ஸ். இப்பதான் எனக்கு உயிரே வந்தது"

"அப்ப, இதுக்குள்ள பயங்கரமான விசயமெல்லாம் இருக்குதுன்னு சொல்லு."

"அதெல்லாம் உனக்கெதுக்கு. கொண்டா இப்படி?"

"என்னப்பா நீ. தேங்க்ஸ்னு ஒரு வார்த்தைல முடிச்சுக்கப் பாக்கறியே"

"ராயப்பன் எங்கு வருகிறான் என்பது தினேஷுக்குப் புரிந்து விட்டது. சரியாக "யோவ் எங்கய்யா போயிட்டே?" என்ற படியே அன்னமேரியும் ஜான்சியும் வந்தனர்.

"தா... சாரோட பேக்கை ஒரு களவாணிப்பய தூக்கிட்டுப் போய்ட்டான். அதான் தேடிப் போய் மீட்டுகிட்டு வந்தேன்"

- பேக்கை தராமல் அவன் அவர்களிடம் விளக்கமளிக்க தினேஷ் பர்சில் இருந்து ஒரு ஐநூறு ரூபாயை எடுத்தான். ராயப்பனும் புரிந்து கொண்டான்.

"என்ன சார், நான் பணத்துக்காக இதை செஞ்சுதா நினைச்சிட்டியா? நீ நம்ம ஆள் சார். அதுக்காக நான் செஞ்சா, பணம்லாம் தந்து என்னை கூலிக்கு மாரடிக்கறவனா ஆக்கப் பாக்கறியே."

"என்ன சொன்னே நீ. நான் உன் ஆளா?"

"பின்ன... ஆக்சிடென்ட் ஆகி உள்ள பெட்ல படுத்துக் கிடக்குறாரே கணேஷ் சார். அவர் ரிலேசன்தானே நீ?"

"கணேஷ்... கணேஷ்...உங்களுக்கு எப்படி கணேஷைத் தெரியும்?"

" அப்படிக் கேளுங்க. நாங்க இருக்கறது கொடைக்கானல்ல. தா இவதான் ஜான்சி. கணேஷ் சார் தேடிவந்த பொண்ணு இவதான்."

"என்னது இவ. கணேஷ் தேடி வந்த பொண்ணா?" - அதிர்ந்தான் தினேஷ்.

"என்ன சார் வாயைப் பொளந்துட்டீங்க? இருபது வருஷம் கிட்ட இருக்கும். இவளை ஒருத்தர் எங்க சர்ச் வாசல்ல இருக்கற தொட்டில்ல போட்டுட்டுப் போயிட்டாங்க. கடைசில பாதிரியார்தான் எடுத்து வளர்த்தார். கணேஷ் தம்பியும் இப்படியொரு பொண்ணைத்தான் தேடி வந்தார். அவர் சொன்ன பல விசயங்கள் ஜான்சியோட ஒத்துப் பேச்சு

இருந்தாலும் ஏதோ மரபணு சோதனையாமே, ஜீன்சோ பீன்சோ சொன்னார். அதை செய்து அது ஒத்து வந்தாதான் அடுத்த பேச்சேன்னு சொன்னார். சொல்லிட்டு மதுரைக்கு போனவர் இப்படி ஆக்சிடென்ட்டாகி ஆட்டுக்கு வெட்டிப் போட்ட கத்திரிக்கா மாதிரி கிடக்கறார். ஆமா... பொழச்சிடு வாருங்களா...?"

- ராயப்பன் லேப்டாப்பை தராமலே பேசிக் கொண்டு போனான்.

"முதல்ல நீ பேக்கை கொடு. நீங்க மூணுபேரும் அப்படி கொஞ்சம் வெயிட் பண்ணுங்க. நான் உங்ககிட்ட நிறைய பேச வேண்டியிருக்கு" என்றவன் உரிமையோடு பேக்கை பிடுங்கிக் கொண்டான். வேகமாக விலகிச் சென்று அதைத் திறந்து அதை இயக்கிப் பார்த்தான். எல்லாம் சரியாக இருந்தது. ஒதுங்கி நிற்பதுபோல் ராயப்பன் அதை பார்த்துக் கொண்டேதான் நின்றான்.

லேப்டாப்பை மூடி பேக்கில் போட்ட தினேஷ் ஐ.சி.யூ.வுக்குள் திரும்ப நுழைந்தான். கணேஷ் சகஜமாகத் தெரிந்தான். பளிச்சென்று பார்த்தான். முதல் தடவையாக அதிசய சக்தி என்கிற வார்த்தை எல்லாம் பொய் இல்லை என்பதுபோல் ஒரு எண்ணம் அவனுக்குள் ஏற்பட்டது.

கணேஷை நெருங்கிப் பேச முற்பட்டவனை ஒரு மருத்துவ உதவியாளர் தடுத்தார்.

"அவர் கிட்டயே யாரும் போகக் கூடாது சார். தயவு செய்து வெளிய போங்க" என்றார்.

"நான் கொஞ்சம் பேசணும் - ரொம்ப முக்கியமான விஷயம்."

"நோ... அவர் அபாயகட்டத்தைத் தாண்டிட்டாலும் டோட்டலா அவர் நினைவிழக்க வாய்ப்பு இன்னும் இருக்கு. பேஷண்ட்டை செக் பண்ண சென்னைல இருந்துல்லாம் டாக்டர்ஸ் புறப்பட்டு வந்துகிட்டிருக்காங்க. திருவனந்தபுரத்துல இருந்தும் ஒரு ஸ்பெஷலிஸ்ட் வரார்." - பேசியபடியே தினேஷை வெளியே கொண்டு வந்து விட்டார் அந்த மருத்துவ உதவியாளர்!

தினேஷும் ராயப்பனை நோக்கி நடந்தவைகளை முழுமையாக தெரிந்து கொள்ள நடந்தான்!

ரங்காச்சாரி தன் படுக்கையில் அப்போது தான் கண் விழித்திருந்தார். மார்புப் புறமாக பெரிய கட்டு போடப்பட்டிருந்தது. கையில் நரம்பு வழியாக சலைன் ஏறிக் கொண்டிருந்தது. ஆக்ஸிஜன் மாஸ்க்

தற்காலிகமாக நீக்கப்பட்டு வெளிக்காற்றை சுவாசிக்க மடிந்தவராக இருந்தார். அப்போது சீனிவாசனுடன் யாழினி அங்கு வந்தாள். அவளைப் பார்க்கவும் ரங்காச்சாரியிடம் ஒரு தனி உற்சாகம்.

''யாழினி'' - என்றார் தன்னை மறந்து.

''அப்பா'' - யாழினியும் அருகில் அமர்ந்து கொண்டு அவர் கைகளைப் பற்றினாள். யாழினியின் கண்களில் ஒரு படபடப்பு.

''எனக்கு ஒண்ணுமில்லை. நான் சீக்கிரமா பூரண குணமாயிடுவேன். ஆபரேஷன் பண்ண வலி லேசா இருக்கு. குறிப்பா இருமல் வரும்போது தையல் போட்ட இடத்துல வலிக்குது. அவ்வளவுதான்.''

''அதுவும் சீக்கிரமா குணமாயிடும்ப்பா. நீங்க சீக்கிரம் டிஸ்சார்ஜ் ஆகி நம்ம முதியோர் இல்லத்துக்கும் திரும்பிடுவீங்க''

''திரும்பித்தானே தீரணும்.... யாருக்காக இல்லேன்னாலும் அப்பா அப்பாங்கற உனக்காக நான் திரும்பிடே தீரணுமேம்மா...''

ரங்காச்சாரி உணர்ச்சிவயப்பட சீனிவாசன் இடையிட்டு ஏதோ பேச முயல அவன் பின்னால் ஒரு டாக்டர் வந்து தோளைத் தொட்டு, 'எதுவும் பேசாதீர்கள்' என்பது போல தடுத்தார்.

அவனும் அமைதியானான்.

அந்த டாக்டர், ரங்காச்சாரி வரையில் ஏதாவது அதிசயம் நடக்கிறதா என்பதை கவனித்தபடியே இருந்தார். அவர்கள் பேசியபடி இருக்க கேஸ் ஷீட்டை எடுத்துப் பார்த்தார். அதை ஒரு பார்வையும் ரங்காச்சாரியை ஒரு பார்வையும் என்று மாறி மாறிப் பார்த்தார். ரங்காச்சாரியோ யாழினியின் மந்திர விரல்களை வருடிக் கொண்டே ''நம்ம இல்லத்துல எல்லாம் சரியா நடக்குதுதானே?'' என்று கேட்க,

''ஒரு குறையும் இல்ல... சிஸ்டப்படி எல்லாம் கரெக்டா நடக்குதுங்க சார் '' என்றான் சீனிவாசன்.

''இன்னிக்கு என்ன கிழமை?''

''சனிக்கிழமை''

''யார் இன்னிக்கு சுப்ரபாதம் சொன்னது?''

''வழக்கம் போல விஜயராகவனும் பத்மநாபனும் தான்.''

"யாருக்கும் எந்த குறைவுமில்லியே?"

"எதுவுமில்லை நீங்க கவலையேப் படாதீங்க"

"அந்த உப்புத்தண்ணி மோட்டார் ரிப்பேராகி இருந்ததே எலெக்ட்ரீஷியன் வந்து பார்த்தானா?"

"சார். எல்லாம் பாத்தாச்சு. நீங்க ஒரு சிஸ்டத்தை ஃபார்ம் பண்ணி கொடுத்திருக்கீங்க. நாங்க அதுல போறோம். அப்புறம் எப்படி தப்பு வரும்?"- சீனிவாசன் சரியாகத்தான் கேட்டான்.

"எனக்கு இப்பவே உங்க கூட வந்துடலாம் போல இருக்கு. யாழினி உன் கை படவும் ஒரு தனி தெம்பு வந்த மாதிரி இருக்கும்மா"- ரங்காச்சாரி சொன்னதை அந்த டாக்டர் புன்னகையோடு கேட்டுக் கொண்டார்.

ரங்காச்சாரியிடம் யாழினியை விட்டு விட்டு சீனிவாசனை தனியே வெளிப்பக்கமாக அழைத்தார்.

"என்ன டாக்டர்?"

"இவங்க ஒரு சூப்பர் பாசிடிவ் பெரிய ஆராய்ச்சிக்கு உரியவங்கன்னு கன்ஃபர்ம் ஆகிட்டேபோகுது. நீங்களும் இவங்களும் எங்களுக்கு நல்லவிதமா கோ ஆப்ரேட் பண்ணணும்.

"யாழினியை நீங்க என்ன செய்யப் போறீங்க டாக்டர்?"

"அவங்க ஆராவை முதல்ல படம் பிடிக்கப் போறோம். அப்புறம் அவங்க பாடியோட எலக்ட்ரோ சிஸ்டம்"

"அப்படின்னா?"

"உங்களுக்குப் புரியாது. எல்லாம் மெடிகல் டேர்ம்ஸ். பொதுவா மனிதர்கள்ல நார்மல் பவருக்கு மேல உள்ளவங்கள அப் நார்மல் லிஸ்ட்ல வெச்சு அதுக்கு என்ன காரணம்னு கண்டுபிடிப்போம்.

உதாரணமா கேரளாவுல ஒரு பெண்ணை எலெக்ட்ரிசிட்டி எதுவுமே பண்ண மாட்டேங்குது. அவங்க 220 வோல்டேஜை சாதாரணமா கையால தொட்றாங்க. இன்ஃபாக்ட் அவங்க உள்ளங்கைல பல்ப் வெச்சா அது எரியுது. அவங்களுக்கு மட்டும் எப்படி அப்படியொரு ரெசிஸ்டண்ட் பவர்னு ஆராய்ச்சி நடந்துகிட்டிருக்கு.

அதே மாதிரி நூறு மீட்டர் தூரத்துல தரைல கிடக்கற ஒரு கரப்பான் பூச்சியை ஒருத்தரால துல்லியமா பார்க்க முடியுது. அவங்க ஆப்டிகல்

சிஸ்டம் ஒரு பெரிய ஆராய்ச்சிக்குரிய விஷயம். இப்படி அபூர்வமா இருக்கறவகள்ல யாழினியையும் சேர்க்கலாம்''.

''யாழினி அபூர்வமானவதான் டாக்டர். அது ஏன் கடவுளோட அருளம்சமா இருக்கக் கூடாது?'' - சீனிவாசன் கேட்கவும் சிரித்தார் டாக்டர்.

''டாக்டர் நான் புரிஞ்சிக்கத்தான் கேட்டேன்''

''நீங்க கேட்கலேன்னாதான் நான் ஆச்சரியப்படுவேன். நாங்க விஞ்ஞானபூர்வமா சொல்லப் போற ஒரு எனர்ஜியைத்தான் நீங்க அருள்னு சொல்லப் போறீங்க. ஒரு படி மேலே போய் அவளை பெண் தெய்வமாக்கி கும்பிடவும் ஆரம்பிச்சிடுவீங்க காலாகாலமா இப்படித்தானே நடந்துகிட்டு வருது.''

''அப்ப அருள்ங்கறது பொய்யா?''

''அது எப்படி பொய்யாகும். அருள்ங்கற உங்க அபிப்பிராயம்தான் தப்பு எனர்ஜின்னு சொல்லுங்க''

''அருளும் ஒரு எனர்ஜிதானே?''

''முதல்ல அருள்னா என்னன்னு தெளிவா தெரிஞ்சுக்கணும். அது ஒரு நல்ல எண்ணம். நீங்க நல்லா இருக்கணும்னு நான் மனப்பூர்வமா நினைச்சு அதை வாழ்த்த நான் வெளிப்படுத்தும்போது அதை நல்வாழ்த்தா மட்டுமே எடுத்துக்கற நீங்க, அதையே ஒரு கடவுள் சார்போட சாமியாரோ இல்ல பூசாரியோ சொல்லும்போது அருளாசின்னு மெருகேத்தி சொல்றீங்க. அவ்வளவுதான் வித்தியாசம். மனித மனதோட எண்ணங்களுக்கு சக்தி உண்டுங்கறத விஞ்ஞானம் மறுக்கலை. அதே சமயம் ஆணித்தரமா அதை ஏத்துக்கலை. அது இன்னமும் கொஞ்சம் பரிசீலனையில தான் இருக்கு. அதாவது அதை ஆணித்தரமா நிரூபிக்க முடியலை. விஞ்ஞானத்துக்கு நிரூபணம் ரொம்ப முக்கியம்.

மூலிகையில இருந்து பெட்ரோல் எடுத்து லிட்டர் பத்து ரூபாய்க்குத் தரலாம்னார் ஒருத்தர். கடைசி வரை அவரால கன்சிஸ்ட்டண்ட்டா நிரூபிக்க முடியலை. நிரூபணம் ரொம்ப முக்கியம்.''

''டாக்டர் யாழினியைக் கொண்டு யாருக்கும் எதையும் நிரூபிக்க வேண்டிய அவசியங்கள் எங்களுக்கு இல்லை. அவ ரொம்ப நல்ல பொண்ணு. உங்ககிட்ட நான் இப்ப ஒரு உண்மையைச் சொல்றேன்.

இதுநாள் வரை அவ ஒரு அனாதையாதான் இருந்தா, அவ அப்பா அம்மா யாருன் னுல்லாம் தெரியாது.

ஆனா ஒரு பதினைந்து நாளா அவள் வாழ்க்கைல நடக்கற சம்பவங்கள் எனக்கே பெரிய பிரமிப்பு. ஒரு பக்கம் அவளே ஒரு அதிசய பெண்ணா காட்சி தரா. மறுபக்கம் அவ அப்பா அம்மா யார்னும் தெரியக் கூடிய ஒரு நிலை. சுருக்கமா சொல்லப் போனா அவ வரைல ஒரு வசந்த காலம் பிறக்கப்போகுது டாக்டர். நீங்க இப்பப் போய் உங்க ஆராய்ச்சி அது இதுங்கற விஷயங்களால அதைக் கெடுத்துடாதீங்க.

அப்புறம் இன்னொரு விஷயமும் சொல்றேன் அவ கிட்ட இருக்கறது தெய்வீமான சக்திதான். அதை 'சூப்பர் எனர்ஜி' 'எலெக்ட்ரோ எனர்ஜி' அப்படி இப்படின்னு நீங்க வேணா சொல்லிக்குங்க, அவளை வணங்கறவங்க தப்பிப் பாங்க. அதுக்கு எதிரா யார் நடந்து கிட்டாலும் அவங்க நிலை ரொம்ப பாவம்கறதுதான் என்னோட தாழ்மையான கருத்து."

"சரி, அங்க கணேஷோட அப்பாவும் மற்றவங்களும் வந்திருப்பாங்க. நாம அங்க போகலாமா?"

"நீங்க போங்க. நான் யாழினியை கூட்டிகிட்டு கொஞ்ச நேரம் கழிச்சு வரேன்"

- சீனிவாசன் அப்படிச் சொன்னதை டாக்டர் ஏற்க சற்று தயங்குகிற மாதிரி தெரிந்தது.

"என்ன யோசிக்கறீங்க?"

"கட்டாயம் ஆஸ்பத்திரிக்கு கூட்டிகிட்டு வாங்க அவங்களப் பார்க்க ஒரு டாக்டர் கூட்டமே வந்துகிட்டு இருக்காங்க."

"நிச்சயமா கூட்டிகிட்டு வரேன் டாக்டர். கணேஷ் சார் பூரண குணமாகி வீடு திரும்பற வரை நான் விட மாட்டேன். அதே சமயம் யாழினியை மீடியாவுல இழுத்துவிட்டுடாதீங்க உங்கள கெஞ்சிக் கேட்டுக்கறேன்."

"அத நான் பாத்துக்கறேன். - டாக்டர் புறப்பட்டார். சீனிவாசனும் ரங்காச்சாரியின் பெட்டை நோக்கி நடந்தான்!"

ராயப்பன் நடந்த அவ்வளவையும் முழுமையாக சொல்லி முடித்த நிலையில் தினேஷ் சிகரெட் பிடித்தபடியே ராயப்பனைப் பார்த்து சொன்னான்.

"ராயப்பா... இந்தப் பொண்ணு கணேஷ் தேடி வந்த போண்ணு இல்ல. உண்மையான பொண்ணு கிடைச்சிட்டா. ஆனா, அந்த உண்மை இந்த நிமிஷம் என்னைத் தவிர யாருக்கும் தெரியாது" - தினேஷ் சொன்னதைக் கேட்ட ராயப்பன் முகத்தில் பலத்த ஏமாற்றம்!

# 34

வாழ்க்கை...
நாடகமா?
அனுபவமா?
இரண்டுமா?
வாழ்க்கை...
கற்பனையா?
உண்மையா?
இரண்டுமா?
நன்றி: கவிஞர் ஐ.எஸ்.ஆர்.

'கணேஷ் தேடிவந்த பெண் ஜான்சி இல்லை' என்று தினேஷ் சொன்னது ராயப்பனை மிகவே பாதித்து விட்டது. அவன் முகம் போன போக்கில் நன்றாக தெரிந்தது.

"சார்... எதை வெச்சு சார் எங்க ஜான்சி இல்லைன்னு சொல்றீங்க? - என்று அன்னமேரியும் கேள்வியோடு முன் வந்தாள்."

"அதான் உண்மையானவ இருக்கறது தெரிஞ்சி போச்சின்னு சொன்னேனே..."

"அது எப்படி சார்?"

"பொண்ண காமிச்சா நான் வார்த்தைல சொன்னது எவ்வளவு சரின்னு நீயும் சொல்வே... எங்க மோகனா ஆன்ட்டியை அப்படியே உறிச்சிகிட்டு வந்து நிக்கற அந்தத் தோற்ற ஒற்றுமை ஒண்ணு போதும்"

"உருவ ஒத்துமை இருந்தா போதுமா.. இந்த ஜீன் டெஸ்ட்டோ மீன் டெஸ்ட்டோ சொல்வாங்களே... அது?"

"அதெல்லாம் சந்தேகம் வந்தா தான்..."

"அப்ப ஜான்சி யாரோ தானா... கோடீசுவரி இல்லையா?" - அன்னமேரி குரலில் சுரத்தே இல்லை.

"என் பேச்ச கேட்டா அதுமட்டுமில்லை நீங்களும் சந்தோஷமா வாழலாம். கேப்பீங்களா?"

- தினேஷ் வலை விரிக்க ஆரம்பித்தான்.

"என்னய்யா சொல்றீங்க?"

"என் பேச்சை கேப்பீங்களா?"

"முதல்ல நீங்க யார்னு சொல்லுங்க. அந்த தினேஷ் தம்பி தேடி வந்த பொண்ணோட அப்பா அம்மாவுக்கும் உங்களுக்கும் என்ன சம்பந்தம்?"

"நான் தான் உறவுக்காரன். அந்த கணேஷ் வெறும் நட்புதான்."

"உறவுன்னா என்ன உறவு?"

"அத்தை மகன்னு வெச்சுக்கோயேன்..."

"வெச்சுக்கறதா... அப்ப நிஜமா இல்லையா?"

"சரி விலாவாரியாவே சொல்றேன். என் பேச்சை நீங்க கேப்பீங்களா அதுக்கு முதல்ல பதில் சொல்லுங்க..."

"சாமி... நான் சர்ச்சுல மணியடிக்கறவன். இவ கூட்டி பெருக்கறவ... ஜான்சி டூரிஸ்ட்டுங்களாண்ட கேரட்.. சுண்டல்னு விக்கறவ. முழுசா ஒரு பத்தாயிரம் ரூவாயை நாங்க இத்தனை வருசத்துல பார்த்ததில்ல. ஏதோ ஜான்சியால கொஞ்சம் மேல வந்துடலாம்னு கனவு கண்டோம். அது கடைசில கனவாவே போயிடும் போல இருக்கு. நீங்க பேச்சைக் கேப்பீங்களான்னு கேட்டா நாங்க என்ன சொல்வோம்?"

"அப்ப கேப்பீங்க... அப்படித் தானே?"

"கேக்கறோம் சாமி.. என்ன செய்யணும் அதை சொல்லுங்க."

"கொஞ்சம் சிரமமான காரியம்தான். ஆனா அப்படி செஞ்சாதான் நீங்களும் வாழ முடியும். நானும் வாழ முடியும்..."

"என்ன சாமி அது?" - ராயப்பன் கேட்க அவன் காதோரமாக கிசுகிசுத்தான் தினேஷ். அதைக் கேட்ட ராயப்பன் முகமோ பேயைக் கண்டது போல வெளிறிடத் தொடங்கியது!

"என்னய்யா... பயமா இருக்கா?"

"பின்ன... நீங்க செய்யச் சொல்றது கொலைக்கு சமமான காரியங்க

பயப்படாம இருக்க முடியுமா?"

"இதைத் தவிர வேற வழியில்லை. இதை செஞ்சாதான் இந்த ஜான்சி எங்க ஆன்ட்டியோட பொண்ணா ஆகமுடியும்."

"அது எப்படிங்க. அப்ப இந்த ஜீன் டெஸ்ட் பண்ண மாட்டாங்களா? அதுல உண்மை தெரிஞ்சிடாதா?"

"அதெல்லாம் பண்ண நான் விடமாட்டேன். இந்த ஜான்சிதான் நீங்க இழந்த பொண்ணுன்னு நான் சாதிப்பேன். ஒரு வேளை ஜீன் டெஸ்ட் பண்ணியாகணும்கற நெருக்கடி ஏற்பட்டாலும் அதை சமாளிக்க எனக்குத் தெரியும். எந்த லேப்ல அந்த டெஸ்ட் நடந்ததோ அங்க போய் ரிப்போர்ட்டை நமக்கு சாதகமா வாங்க பணத்தாலயே அடிப்பேன்."

"நான் தெரியாமதான் கேக்கறேன். உங்களுக்கு ஏங்க எங்க மேல இவ்வளவு அக்கறை?"

"இதோ பார்... நான் சுத்தி வளைச்சு பேச விரும்பலை. எங்க அங்கிள் ஆன்ட்டி வரையில நான்தான் அவங்க வாரிசுங்கற மாதிரிதான் இவ்வளவு நாள் சூழ்நிலை இருந்தது. அதை என் தாத்தா சாகும்போது கெடுத்தான். கணேஷ் அதை முழுசா கெடுக்கற மாதிரி வாரிசை தேடத் தொடங் கிட்டான். வாரிசும் கிடைச்சிட்டா அந்த வாரிசு வந்தட்டா நான் டம்மி. இப்பவே அங்கிளும் ஆன்ட்டியும் என்மேல வெறுப்பாத்தான் இருக்காங்க. இதையே என்னால தாங்கிக்க முடியல. உண்மையான வாரிசு வருவதை எப்படித் தாங்கிக்க முடியும்?"

"அப்ப எங்க ஜான்சியை மட்டும் எப்படி ஒத்துக்க முடியும் உங்களால?"

"சரியான கேள்வியே இப்பத்தான் கேட்டுருக்கே. வாரிசா வர்ற இவளை நான் கல்யாணம் பண்ணிகிட்டா. இவ புருஷனா உரிமையோட நான் அனுபவிக்கமில்லையா?"

"அப்ப எங்க ஜான்சியை கல்யாணமும் நீங்க செய்துக்குவீங்களா?"

"ஏன், அதுல உங்களுக்கு இஷ்டமில்லையா?"

"சாமி, ஒரு விஷயம் கூட நீங்க சாதாரணமானதையே சொல்லல. எனக்கு நெஞ்சை அடைக்குது. நாங்க யோசிக்க கொஞ்சம் டயம் கொடுங்க.."

"கொஞ்சம்னா எவ்வளவு நேரம்?"

"ஒரு இரண்டு நாள்..."

"இரண்டு மணி நேரம் கூட என்னால இப்ப தர முடியாது. அங்கிள் ஆன்ட்டி இந்த நிமிஷம் ஏர்போர்ட் வந்துருப்பாங்க. இங்க வர அரைமணி நேரம் ஆகும். இங்க கணேஷ் பேசற அளவு குணமாகியிருக்கான். அதைப் பார்த்தாலே போதும் அவங்களுக்கு பாதி பலம் வந்த மாதிரி தான்! இதுல அவன் அந்த யாழினிதான் எல்லாத்துக்கும் காரணம்னு சொல்லி அவளையும் அவங்க பார்த்துட்டா அப்புறம் எல்லாமே முடிஞ்சிடும்.

நீங்க கொடைக்கானல் போய் உங்க பிச்சைக்கார வாழ்க்கையை வாழ வேண்டியதுதான். நானும் உங்ககூட சேர்ந்துக்க வேண்டியது தான்..."

- தினேஷ் பட்டுக் கத்திரித்த மாதிரி பேசியது அவர்கள் மூவரையும் மிரள மிரள பார்க்க வைத்தது.

"சட்டுன்னு முடிவுக்கு வாங்க... எப்பவும் துணிஞ்சா தான் சாதிக்கலாம். யோசிக்காதீங்க. நான் சொன்னபடி மட்டும் நீங்க கேட்டு நடந்தா போதும். அப்புறம் ஒரு பிரச்னையும் இல்லை."

"என்னய்யா பிரச்னை இல்லைன்னு சாதாரணமா சொல்லிட்டீங்க. யாழினிங்கற அந்த பொண்ணு மேல ஆசிட் அடிக்கறது என்ன சாதாரண விஷயமா? நாலுபேர் இருக்கும் போது அதை எப்படிங்க பண்ண முடியும்? அது தனியா இருக்கற நேரத்துல கவனிச்சு புள்ளி வெச்சு கோலம் போடற மாதிரி அதைச் செய்யணுங்க"

- பேச்சுப் போக்கில் ராயப்பன் ஆசிட் அடிப்பதை பற்றி சொல்லவும் அன்னமேரி வெலவெலத்து விட்டாள் "ஐய்யோ ராயப்பா. என்ன இது ஆசிட் கிசீட்டுன்னுக்கிட்டு... அதெல்லாம் வேணாம். வா நாம போகலாம்" - என்று அவன் தோளைப் பற்றி இழுத்தாள்.

"இதோ பார். அவளை நான் தனியா வரவைக்கறேன். அது என் பொறுப்பு. அப்ப நீ செய்வியா?"

"அது வந்து... அது வந்து..."

"வந்து போயின்னு யோசிக்க நேரமில்ல. அவ முகம் சிதைஞ்சா போதும். அவ நடமாட முடியாது. ஆறுமாசமோ ஒரு வருஷமோ அவ படுத்த படுக்கையாயிடுவா. என்னதான் அவகிட்ட தெய்வீக சக்தி இருந்து அது செயல்பட்டாலும் குறைஞ்சது ஒரு மாசம். அவ ரெகவர் ஆக தேவைப்படும். அதுக்குள்ள இங்க கணேஷ் கதையை நான் எப்படியாவது முடிச்சிடுவேன். கணேஷ் செத்தாதான் என்னால எல்லா

விதத்துலயும் செயல்படவே முடியும்."

"இதோ பாரு சாமி. நாங்க மலைல இருந்து கணேஷ் தம்பியை பாக்க புறப்பட்டப்போ இருந்த நிலைவேற. இப்ப இருக்கற நிலை வேற. இங்க உங்க குடும்பத்துல இவ்வளவு கசமுசா இருக்கும்னு கொஞ்சமும் நினைக்கலை. திரும்பவும் சொல்றேன். நீங்க சொல்றதை செய்யற துணிச்சல் எனக்கு இல்லை. ஆளவிடுங்க. நாங்க வரோம்"- ராயப்பன் நழுவப் பார்த்தான்.

"இரு, அப்படி எல்லாம் அவசரப்பட்டு முடிவெடுக்காதே. திரும்பவும் சொல்றேன். தைரியம் ரொம்ப முக்கியம். துணிச்சலா செயல்பட்டாதான் சாதிக்க முடியும். திருடுபோன லேப்டாப்பை துணிச்சலா மீட்டு வந்து கொடுத்தவன் நீ மனசு வெச்சா இதையும் உன்னால செய்ய முடியும். என் பேச்சக் கேட்டா எந்த கொடைக்கானல்ல நீ மணியடிச்சி பொழச்சியோ அங்க ஒரு எஸ்டேட் வாங்கி அதுக்கு உன்னை முதலாளி யாக்குவேன். இது சத்தியம் என்ன நம்பு"

- தினேஷின் ஆசை வார்த்தை ராயப்பனை யோசிக்க வைத்தது. அன்னமேரிதான் அதிகம் பயப்பட்டாள். ஜான்சி. தினேஷை கூர்மையாகப் பார்க்கத் தொடங்கியிருந்தாள்.

"என்ன அப்படிப் பாக்கறே?"

"இல்ல...நிஜமா நீங்க என்னைக் கல்யாணம் செய்துக்குவீங்களா?"

"சத்யமா செய்துக்குவேன். அப்படி செய்து கிட்டாதான் உன் சொத்தை நான் அனுபவிக்கவும் முடியும்..."

- அவன் சொன்ன பதில் அவளுக்குள் ஒரு புது உற்சாகத்தை அளித்தது. எப்போதும் தன் அளவில் பல்லைக் காட்டும் ஆண்களையே பார்த்திருக்கிறாள். பலர் அவளை அனுபவிக்கவும் பார்த்துள்ளனர். மலைக் குளிரில் கிழிந்த ஸ்வெட்டர் போட்டுக் கொண்டு கேரட் கேரட் என்று கூவி விற்றுத் திரிவதற்கு, தேடி வரும் வாழ்வை ஒப்புக் கொள்வது எந்த வகையில் தவறாகும்?

பெற்று விட்ட நிலையில் பிஞ்சுக் குழந்தை என்று கூட பார்க்காமல் சர்ச் வாசலில் போட்டு விட்டு போன கருணையே இல்லாத தாய்க்குப் பிறந்த தனக்கு மட்டும் எதற்கு கருணையும் மற்ற நல்ல குணங்களும்?

இத்தனை வருடத்தில் எத்தனை நல்லவர்கள் தனக்காக மனம் கசிந்திருப்பார்கள்?

தன் முரட்டுக் குணம்தானே தன்னோடு தன் பெண்மையையும் காப்பாற்றி வந்துள்ளது?

- ஜான்சி தனக்குள் ஒரு பட்டிமன்றமே நடத்தியவளாக, "அந்த ஆசிட் பாட்டிலை என்கிட்ட தாய்யா. நானே அவமேல வீசறேன். அதே சமயம் ஒரு பொதுவான இடத்துக்கு அவ தனியா வரணும் வரவைப்பியா?" என்று கேட்டாள்.

"இதோ இப்பவே" என்று உற்சாகமான தினேஷ், தன் செல்போனில் சீனிவாசனை தொடர்பு கொள்ள முயன்றவன் சட்டென்று கட் செய்து கொண்டு வேகமாக அந்த ஹாஸ்பிடலின் ஒரு பக்கமாய் இருக்கும். டெலிபோன் பூத்தை நோக்கி நடந்தான். அந்த நொடி அதுவரை அவர்கள் பேசிய இடத்துக்கு பக்கமாய் உள்ள ஒரு மறைவில் இருந்து ஒருவர் வெளிப்பட்டார். அவர் முகத்தில் பலமான சலனங்கள்!

திருமகள் இல்லம்!

யாழினி ஒவ்வொரு அறையாகப் போய் அங்கு தங்கியிருக்கும் முதிய தம்பதிகளை நெருங்கி நலம் விசாரித்தவளாக இருந்தாள்.

"யாழினி வந்துட்டியா?"

"வந்துட்டியாவா. என்னம்மா நீங்க? நான் எப்ப போனேன். திரும்பி வரதுக்கு?"

"என்னமோம்மா ஒரு பத்து நாளாவே நம்ம ஆஸ்ரமம் ஆஸ்ரமமாவே இல்லை. அண்ணா ஒரு பக்கம் ஆஸ்பத்திரில. நீயும் ஆஸ்பத்திரி ஆஸ்பத்திரின்னுதானே கெடந்தே?"

"வாஸ்தவம்தான். இனிமே இங்கேயேதான் இருப்பேன். வாக்கும் இந்த இடத்தை விட்டா போக்கிடம் ஏது?"

"அப்படிச் சொல்லாதே. உன்னை இப்ப அந்த அம்பாளாத்தான் நாங்க நினைக்கறோம். உன் பொறப்புலையே நிச்சயம் விசேஷம் எதாவது இருக்கணும். நீ விசேஷமானவ"

"போறும். இப்படி எல்லாம்பேசி என்னை அந்நியப் படுத்திடாதீங்க. நீங்க இப்படி எல்லாம் பேசறதை கேட்டா தான் எனக்கு வருத்தமாயிருக்கு. என்கிட்ட எந்த விசேஷமும் இல்லம்மா. நான் ஒரு சாதாரண பொண்ணுதான்."

"இது உன் தன்னடக்கத்த காட்றது யாழினி. நீ அந்த பாண்டிச்சேரி மதர்

மாதிரி ஒரு டிவைன் பர்சனாலிடி அவ்வளவு ஏன். அந்த மதர்தான் ரீபர்த் எடுத்து உன் முகமா உந்துருக்கா"

அவர்கள் பேசப் பேச யாழினிக்கு ஒரு பயம் ஏற்படத் தொடங்கியது. அவர்களிடம் தொடர்ந்து பேசவும் அவளால் முடியவில்லை. அப்போது தான் ஆஃபீஸில் இருந்து உதவியாளன் கோபு என்கிறவன்,

"யாழினி உனக்கு ஒரு போன்...! நீ உடனே கிளம்பி மதுரை ராஜாஜி பார்க்குக்கு வருவியாம். அங்க டாக்டர்கள் சிலர் உன் கூட பேசறதுக்கு காத்திருக்காங்களாம். ஆஸ்பத்திரில சந்திக்கறத விட இப்படி ஒரு பொது இடத்துல மீட் பண்ணா நல்லா இருக்கும்கறதால தான் ராஜாஜி பார்க்குக்கு உன்னை வரச் சொல்றாங்கன்னும் சொன்னாங்க" என்றான்.

"போன் பண்ணது யார்?" - என்று கேட்டபடியே வந்தான் சீனு.

"ஆஸ்பத்திரில இருந்த பேசறதாதான் சொன்னாங்க."

"இப்படி மொட்டையா சொன்னா எப்படி? யார் பேசறதுன்னு நீ பேரைக் கேட்கறதுக்கு என்ன?"

சீனு கோபப்பட, கோபு தலையை சொரிய, "சீனுண்ணா நான் எந்த டாக்டரையும் பார்க்க விரும்பல இப்பவே என்னை எல்லாரும் சாமியாக்கிட்டாங்க. வேண்டாம்ணா. நீங்கபோய் பக்குவமா அவங்ககிட்ட சொல்லிடுங்க ப்ளீஸ்."

யாழினி கெஞ்சினாள். சீனு சிரித்தான். அப்படியே, "டாக்டர்கள் உன்னை சந்திக்க இங்க வந்தா என்ன செய்வே? தெரிய ஆரம்பிச்சிட்டே யாழினி. சில விஷயங்களுக்கு நீ கோ-ஆபரேட் பண்ணித்தான் தீரணும் இன்ஃபாக்ட் ரங்காச்சாரி அப்பாவுக்கும் இப்ப உன் ஸ்பெஷல் பவர் பத்தி தெரிஞ்சு போச்சு. அவர் இப்ப வெரி வெளி நார்மல். 'என்னை டிஸ்சார்ஜ் பண்ணுங்க, நான் போறேன்'னு டாக்டர்கள் கிட்ட அவர் சொல்லியிருக்கார். உன்னை நினைச்சு நினைச்சு சந்தோஷப்படறார்."

சீனிவாசன் அவளை வழிப்படுத்த முயன்றான்.

"அய்யோ அண்ணா... நீங்களும் என்ன புரிஞ்சிக்காம பேசிகிட்டே போகாதீங்க. இப்ப போய் அவங்க கிட்ட எனக்கு வர இஷ்டமில்லேன்னு சொல்லுங்க. அவங்க இங்கையே என்னையே தேடி வந்தா அப்ப நான் பேசிக்கறேன்."

யாழினி முத்தாய்ப்பாக பேசி முடிக்க, சீனிவாசனும் புறப்பட்டுப்

போனான்.

அவன் வெளியேறவும் திரும்பவும் போன்.

கோபுதான் பேசினான்.

"யாழினி கிளம்பிட்டாங்களா?"

"நீங்க யாருங்க. பேரைச் சொல்லுங்க"

"நான் சீஃப் டாக்டர் வின்சென்ட் பேசறேன். எங்க டாக்டர் குழு ராஜாஜி பார்க்ல வெயிட் பண்ணி கிட்டு இருக்காங்க"

"எங்க யாழினிக்கு அங்க வர இஷ்டம் இல்லைங்க. விட்றுங்க டாக்டர்."

"அப்படிச் சொல்லாதப்பா. யாழினி ஒரு அபூர்வப் பிறவி. அவங்களால நிறைய நல்லது நடக்கணும்"

"அதெல்லாம் சொல்லிட்டோம். வேணும்னா நீங்க எங்க திருமகள் இல்லத்துக்கு வாங்க"

கோபு போனை கட் செய்தான். யாழினியைத் தேடி திரும்பவும் போன் வந்து தானே பதில் சொல்லி விட்டதையும் சொன்னான். யாழினியும் கோபுவுக்கு நன்றி கூறினாள்.

ஃ ஃ ஃ

டெலிபோன் பூத்துக்குள் இருந்து எரிச்சலாய் வெளிப் பட்டதினேஷ், ஜான்சியை வெறித்தான். அருகில் ராயப்பன். அன்னமேரி அவர்களுக்கே ஜான்சியின் தைரியம் ஒரு ஆச்சரியம் தான்!.

"என்னங்க, அந்த பொண்ணு பார்க்குக்கு புறப்பட்டுட்டாளா?"

"இல்லை. நான் சந்தேகப்பட்டு இரண்டாவது தடவை போன் பண்ணது சரியா போச்சு. அவ எங்கேயும் வர மாட்டாளாம்."

"இப்ப என்ன பண்ண?"

"ஒரே வழிதான். அந்த திருமகள் இல்லத்துக்குள்ளவே போய் அங்கையே காரியத்தை முடிக்க வேண்டியதுதான்."

"அது எப்படி முடியும். அங்க எல்லாரும் இருப்பாங்களே?"

"அந்த இல்லத்துக்கு வெளிய இருந்து அவளை கூப்பிடணும். வயசான

முதியவங்க வந்துருக்கோம். வந்து கூட்டிகிட்டு போன்னா நிச்சயம் அவ வெளிய வருவா. கார் கிட்ட அவ வரும்போது ஜான்சி நீ ஆசிட்டை வீசிடு. நான் அடுத்த செகண்ட் காரைகிளப்பிடுவேன்''

''இதுவும் நல்லாத்தான் இருக்கு. ஆசிட்டுக்கு எங்க போக?''

''அது எப்பவும் என் கிட்ட இருக்கும்'' - என்ற படியே லேப்டாப் பேக்கின் ஒரு பகுதியில் இருந்து ஒரு சிறு பாட்டிலை வெளியே எடுத்தான் தினேஷ்!

# 35

'இரும்பை துரும்பாக்கு
துரும்பை இரும்பாக்கு
இமயம் உனக்கு இடுப்பளவே!
உன்னை புதிதாக்கு
எண்ணம் பெரிதாக்கு
வானம் உந்தன் வசப்படுமே!'

நன்றி: ஒரு கூடை ஒரு கோடிப் பூக்களில்
கவிஞர் தியாரூ.

தினேஷ் ஆசிட்டை எடுத்துக் காட்டி விட்டு காட்டிய வேகத்தில் திரும்ப உள்ளே வைத்துக் கொண்டான். ஜான்சியும் ராயப்பனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். அன்னமேரி பயத்தாலும் தினேஷின் அதிரடி பேச்சாலும் குழம்பிப் போயிருந்தாள்.

''நேரமில்ல... இப்படி ஒருத்தரை ஒருத்தர் பார்த்து கிட்டு நின்னா எப்படி?'' - என்று அவர்களை துரிதப் படுத்தினாள் தினேஷ்.

''இல்ல. எல்லாம் நாம நினைச்சபடியே நல்லபடியா நடக்குமான்னு தான் யோசனையா இருக்கு'' என்று சற்று இழுத்தான் ராயப்பன்.

''இதோ பாருங்க. இப்ப இதைவிட வேறவழியே எனக்குத் தெரிஞ்சு இல்லை. அந்த யாழினியை என் மாமாவும் அத்தையும் பார்த்தா அப்பவே எல்லாம் கெட்டுடும். அதை எப்படியாவது தடுக்கத்தான் இந்த ஆசிட் வீசற முடிவுக்கு வந்தேன்''

''என்ன சார் நீங்க. இதனால பிரச்னை பெருசாதான் ஆகும். போலீஸ் வரும் - விசாரணை அது இதுன்னு நீளும். தப்பித் தவறி போலீஸ் நம்மை மோப்பம் பிடிச்சிட்டா அப்பால எங்க கதி?'' - ராயப்பன் இழுத்தான்

தினேஷ் கை கடிகாரத்தை ஒரு பார்வை பார்த்துவிட்டு நெற்றியில் வேகமாக அடித்துக் கொண்டான்.

"கோபப்படாத சார். நான் சொல்றதயும் கொஞ்சம் யோசி. ஆசிட் வீசி அதோட முகத்தை கோரமாக்கறதுக்கு அதை கொலை செய்துடலாம். அது எவ்வளவோ மேல். நீ என்ன சொல்றே அன்னம்?"

"மண்ணாங்கட்டி... எனக்கு அவ முகம்தான் இப்ப எமனே என் அத்தை முகமும் அவ முகமும் கிட்டத்தட்ட ஒரே ஜாடை. இந்த கணேஷ் அதை வெச்சுதான் இவளை கரெக்டா நெருங்கியிருக்கான். அந்த முகம் மாறினா தான் மேற்கொண்டு எதையும் செய்ய முடியும். புரிஞ்சிக்குங்க..."

"என்னத்த புரிஞ்சிக்குங்க. அதான் கணேஷ் சார் பாத்துட்டாரே. அப்புறம் எப்படி?"

"கணேஷை நான் சொல்ல விட்டா தானே..?" ஒரு வேளை யாழினி என் அத்தையான மோகனா ஜாடைன்னு கணேஷ் சொன்னாலும் அதை நாங்களும் பாக்கறோம்னு தான் சொல்வாங்க. அப்படி அவங்க பாக்கும்போது யாழினி யாழினியா இருக்கவே கூடாது. அவளை தெய்வப் பிறவி மாதிரி நினைச்சுக்கிட்டிருக்கறதெல்லாம் முட்டாள்தனம்கிற மாதிரி யாழினியே ஒரு பேஷண்டா இருக்கணும். அந்த யாழினி என்னோட பல கனவுகளை கலைச்சுட்டா. இந்த கணேஷ் குணமாவான்னு நான் கொஞ்சம்கூட எதிர் பார்க்கலை" - தினேஷ் எரிச்சலில் கசந்து வழிந்தான். தினேஷின் எரிச்சல் ஜான்சியை வேகப்படுத்தியது.

"சார், அந்த ஆசிட் பாட்டிலை தா. நான் புறப்பட்றேன். நாம இனி எல்லாரும் ஒண்ணு. குறிப்பா நான் வேற நீ வேற இல்லை. என்னை நிச்சயம் ஏமாத்தாம உன் பொண்டாட்டி ஆக்கிக்குவே தானே? - ஜான்சி பின் பாயின்ட்டாக கேட்டாள்.

"ஆக்கிகிட்டாதான் சொத்தையே அனுபவிக்க முடியும். அதை முதல்ல நீ புரிஞ்சுக்க"- என்றபடியே ஆசிட் பாட்டிலை ஒரு கர்ச்சீப்பில் சுற்றி அவள் வசம் தந்தான்.

ஜான்சி அதை மெலிதான புன்னகையோடு வாங்கிக் கொண்டாள்.

"பத்திரம்" என்று அவன் சொல்ல, தன் இடுப்பு மடிப்பில் செருகிக் கொண்டாள். அதே வேகத்தில் "வாங்க போகலாம்" என்று

ராயப்பனையும் அன்னமேரியையும் அழைத்தபடியே வெளியே காரை நோக்கி நடந்தாள். தினேஷ் அவர்களை முந்திக் கொண்டு நடந்தான்.

காரில் ஏறிக்கொண்டு அவர்களுக்கு கதவையும் திறந்து விட்டான். அவர்களும் ஏறிக்கொள்ள கார் வேகம் எடுத்தது.

பின் சீட்டில் கதவோரமாக ஜான்சி அமர்ந்திருக்க பக்கத்தில் அன்னமேரி அமர்ந்திருந்தாள்.

"பயமா இருக்கு ஜான்சி" - என்று ஜான்சி காதில் விழுகிற மாதிரி மெல்லிய குரலில் சொன்னாள் அன்னமேரி.

"நமக்கெல்லாம் துணிஞ்சாதான்கா வாழ்க்கை. இல்லே நீ காலமெல்லாம் விளக்குமாறும் கையுமா கிடக்கணும். நான் கேரட் விக்கணும். நடுநடுவுல என்னையும் விக்கணும். இதை தவிர்க்க இதான் வழி. பேசாம வா" என்றாள் ஜான்சி.

இடையில் காரை ஒரு இடத்தில் ஒரம் கட்டிய தினேஷ் காரை விட்டு வேகமாக இறங்கி பின்புறம் டிக்கியை திறந்தான். ஆள் நடமாட்டமில்லாத அந்த இடத்தில் திறந்த டிக்கியில் இருந்து இரண்டு புதிய மேக்னடிக் நம்பர் பிளேட்டுகளை எடுத்தான். அதை முன்னும் பின்னுமாக உள்ள தன் கார் நம்பர் பிளேட் மேல் வைத்த மாத்திரத்தில் கிச் சென்று ஒட்டிக் கொண்டது அது. கவனித்த ராயப்பனுக்கு அவன் எச்சரிக்கை புரிந்தது.

"சார் நீங்க பெரிய கிரிமினல் சார்" என்று சொல்லிக் கொண்டே அவனோடு சேர்ந்து காரில் ஏறிக்கொள்ள கார் மீண்டும் புறப்பட்டது!

ஹாஸ்பிடல் முகப்பில் சந்தானமும் மோகனாவும் வந்த கார் தேங்கி நின்றிட அதிலிருந்து இருவரும் இறங்கினர். பின்னாலேயே இன்னொரு கார். அதிலிருந்து சந்திரசேகர் இறங்கினார்! ஈமக்ரியை நிமித்தம் ஷேவ் செய்து மீசையை எடுத்திருந்தார். ஒரு வார கால அளவுக்குள்ளேயே அவர் உடல் எடையில் பத்துகிலோ வரை குறைந்துபோயிருந்தது.

ஆசையும் பாசமுமான மனைவி, சிங்கம் போன்ற மகன் என்று இருவரையும் இழந்து விடுவோமோ என்கிற தவிப்பும் துடிப்பும் அவரை புரட்டிப் போட்டு விட்டிருந்தது. இதில் மனைவியை இழந்தாகி விட்டது. அடுத்தது மகனோ என்கிற பதைப்பு!

சந்தானமும் மோகனாவும் வேகமாக நெருங்கி வந்து சந்திரசேகருக்கு இருபுறத்தில் நின்று மெல்ல உள்ளே அழைத்துச் செல்ல தொடங்கினர்.

அவர்கள் வருவதைப் பார்த்த டாக்டர்கள் சிலர் வேகமாக முன் வந்தனர். மீசையில்லாத சந்திரசேகரை சோகமாக பார்த்தனர். இருந்தும் அதில் ஒரு டாக்டர் சந்திரசேகரிடம் "சார் ஒரு சந்தோஷமான விஷயம். உங்க சன் எழுபத்தஞ்சு பர்சன்ட் குணமாயிட்டார். இப்ப எந்த ஆபத்துமில்லை. ஒரு பெரிய மிராகிளே இங்க நடந்து முடிஞ்சிருக்கு" - என்று சந்திரசேகரிடம் தெம்பாக பேசினார்.

"கேள்விப்பட்டேன் டாக்டர். ரொம்ப சந்தோஷம்" என்று அதற்கொரு பதிலைச் சொன்னார் சந்திரசேகர். அதற்குள் ஐ.சி.யு.வின் வாசல் கண்ணாடி கதவு வந்து விட்டது.

அதை திறந்து கொண்டு உள்ளே நுழையும் முன் முன்பு பேசிய அதே டாக்டர், "சார், உங்க சன்னுக்கு உங்க வைஃப் பாஸ் ஆன விஷயம் தெரியாது. இப்ப தெரியவும் வேண்டாம். நூறு பர்சன்ட் அவர் ரெகவர் ஆகிட்டதா நாங்க சொல்றவரை அந்த உண்மையை ஒரு ரகசியமா பாதுகாக்கறது தான் நல்லது" என்றார்.

"ஓகே டாக்டர்..." என்று சந்திரசேகர் சொன்ன பிறகே அவர்கள் உள்ளே நுழைந்தனர்.

பெட்டில் ஸ்ரீகணேஷ் கண்களை மூடிப்படுத்திருந்தான். அவன் மூக்கில் இருந்து ஆக்சிஜன் டியூப் எடுக்கப் பட்டிருந்தது. சலைன் வாட்டர் மட்டும் இணைப்பில் இருந்தது. கணேஷை அப்படிப் பார்ப்போம் என்று மோகனாவும் சந்தானமும் கூட எதிர்பார்க்கவில்லை. ஸ்ரீ கணேஷ் நெற்றியில் குங்குமம் வேறு பளிச்சென்று.

"இங்கு குங்குமம், விபூதிக்கெல்லாம் இடமே கிடையாது. இது ஐ.சி.யூ யாரா இருந்தாலும் முகத்தை மூடிக் கிட்டுதான் வரணும். செருப்புக் காலோட கூட வரக்கூடாது. எந்த வகையிலயும் கிருமிகள் வந்துடக் கூடாதுங்கற அவேர்நெஸ்தான் காரணம். இருந்தும் அந்த யாழினி குங்குமம் வைக்க அனுமதிச்சோம். ரியலி ஒண்டர்! டாக்டர்களில் சீனியர் டாக்டர் ஒருவர் அவர்களுக்கு மென்மையான குரலில் விளக்கமளித்தார். அதற்கே கணேஷ் கண்விழித்துக் கொண்டான்.

எதிரில் தெரிந்த சந்திரசேகரைப் பார்த்து முதலில் திகைத்தான். மீசையில்லாத அவரது முகம் அவனுக்குப் புதிது.

"அப்படியா...!" என்றழைத்தான்.

"ஸ்ரீ"- அவரும் நெருங்கினார்.

"ஐ ஆம் ஆல்ரைட்பா. வேர் ஈஸ்மதர்..."- வாசந்தியை ஞாபகமாக கேட்டான்.

"மதர். மதர்..." - சந்திரசேகர் சமாளிக்கத் தெரியாமல் இழுத்திட"வாசந்தி கோயிலுக்கு போயிருக்கா கணேஷ்" என்று வேகமாய் முன்வந்தாள் மோகனா.

"ஆன்ட்டி"

"ஆன்ட்டியே தான் கணேஷ், நீ இப்ப தயவு செய்து எதுக்காகவும் வருத்தப்படாதே... நாங்கதான் உள்ளபடியே வருத்தப்படணும். நீ ஒரு சைன்ட்டிஸ்ட் உன்னை எங்க சுயநலத்துக்காக சி.ஐ.டி. வேலை பார்க்கச் சொல்லிட்டோம். அது உன்னை இந்த அளவு படுக்க வைக்கும்னு நாங்க எதிர்பார்க்கல" என்றாள் மோகனா.

"நான் யு.எஸ்.ல. இருந்தவரை விதியை எல்லாம் நம்பினதில்லை. ஆன்ட்டி எல்லாம் நம்ம கைல இருக்கற ஒரு விஷயமாகத்தான் நினைச்சுக்கிட்டிருந்தேன். ஆனா, இந்த விபத்து எனக்கு பல உண்மைகளை புரிய வெச்சிடிச்சு. இன்ஃபாக்ட் கடவுள் என் பக்கம் இருக்கிறது உண்மைன்னா நான் உங்க அசன்மென்ட்டை முடிச்சுட்டேன்னு கூட சொல்வேன்" - கணேஷ் மெல்ல யாழினி பற்றிய உண்மையை நோக்கி வர ஆரம்பித்தான்.

டாக்டர்கள் சற்று நெர்வசாக பக்கத்து மானிடர் ஸ்கிரீனையும் அவனையும் மாறி மாறிப் பார்த்தனர். அவன் மூச்சு விட சற்று சிரமப்படவும் வேகமாக ஆக்சிஜன் மாஸ்கை எடுத்து மாட்டிவிட்டனர். அப்படியே, "கணேஷ், எல்லாத்தையும் பிறகு பேசலாம். அமைதியா இருங்க"- என்றார் ஒரு டாக்டர்.

"இல்ல டாக்டர், இது குட் நியூஸ். இதை மட்டும் நான் சொல்லிடறேன்" என்றவனை, "சரி சொல்லுங்க" என்றார்.

அவனும் மோகனா, சந்தானம் என்று இருவரையும் தீர்க்கமாக பார்த்தவனாக, "அங்கிள், ஆன்ட்டி. நான் ரெகவர் ஆக காரணம் மாத்திரை மருந்து மட்டுமில்ல. 'யாழினிங்கற பொண்ணும் தான்! அவ நிச்சயம் உங்க மகளாதான் இருக்கணும். நீங்க அவளைப் பார்த்தாலே போதும். நான் எதுவும் பெருசா சொல்லத் தேவையில்லை. அவ உங்களோட ஜெராக்ஸ்" - கணேஷ் சற்று திணறலோடு சொன்னதைக் கேட்ட டாக்டர் ஒருவரும், "ஆமாம் மேடம். மாழினியை பார்த்தப்ப எங்களுக்கு உங்க ஞாபகமும் வந்தது" என்றார்.

மோகனா முகம் அதைக் கேட்டு மலர்ந்தது.

"போதும். இதுக்கு மேல விரிவா பேச வேண்டாம். அது ஆபத்தா கூட முடியலாம். கணேஷ் நீங்க அமைதியா ரெஸ்ட் எடுங்க. நாங்க கிளம்பறோம்..."- என்ற டாக்டர் ஜாடையாலேயே அவர்களை அங்கிருந்து அழைத்தார்.

ஐ.சி.யு.வுக்கு வெளியே வந்த நொடி சந்தானம் எதிரில் போலீஸ்காரர்போல கிராப்பு தலையும் காக்கி பேன்ட்டும் வெள்ளைச் சட்டையும் போட்ட ஒரு மனிதர் வேகமாக சந்தானம் எதிரில் வந்து நின்றார். சந்தானமும், "என்ன மூர்த்தி... எல்லாம் நல்லபடியா தானே போய்க்கிட்டிருக்கு?" என்று கேட்க, மூர்த்தி என்கிற அந்த மனிதர் சந்தானத்தோடு தனியே ஒதுங்கி அவர் காதோரமாக எதையோ கூறிட சந்தானத்தின் முகத்தில் பலத்த அதிர்ச்சி!

திருமகள் இல்லத்துக்கு வெளியே தினேஷ் காரை தேக்கி நிறுத்தி விட்டு உள்ளே யாழினிக்கு போன் செய்யத் தயாரானான். ஜான்சியும் ஆசிட் பாட்டில் மூடியை திறக்கத் தொடங்கினாள்.

# 36

'ஓநாய்கள் உலவும் சமூகத்தில்
விழிப்பாய் இரு தோழி!
அங்கும் இங்கும் இல்லை
எங்கும் கொடுஞ்செய்தி கேட்டும்
நரியின் குகைக்குள் செல்வாயோ தோழி?
ஆய்ந்து செயல்படு தோழி
வலை விரிப்பார் வஞ்சகர் என தெரிந்தும்
கலைமானாய் சென்று மாட்டுவது ஏன் தோழி?
அஞ்சி ஒளியச் சொல்லவில்லை
வஞ்சம் இருப்பதறிந்து விழிப்பாய் இரு தோழி!
சாதனை பல நீ சாதிக்க இருக்க
பாதகம் செய்வார் பற்றி விழிப்பாய் இரு தோழி!'

நன்றி: 'துளிர்விடும் விதைகள்' தொகுப்பில்
வி. கிரேஸ் பிரதிபா.

தினேஷ் தன் கைப்பேசியை எடுத்து உள்ளே இருக்கும் ஆஃபீஸ் தொலைபேசி எண்ணிலிருந்து அழைப்பு விடுக்க முயன்று, பின் வேகமாக கைபேசியை அணைத்து கையை உதறிக் கொண்டான்.

அதைக் கவனித்த ஜான்சி பேசினாள்.

"ஏன் போன் பண்ணல?"

"இல்ல. பண்ணக்கூடாது! நல்லவேளை தப்பு பண்ண இருந்தேன்."

"நீங்க பேசறதே புரியல"

"என்ன புரியல?" இன்னிக்கு பெரிய பெரிய கிரிமினல் எல்லாம் இந்த செல்போனாலதான் மாட்றாங்க. இது ஒரு பெரிய தடயம்! எந்த தப்பையும் இதை மட்டும் வெச்சுக்கிட்டு செய்யக் கூடாது. இப்ப நான் உள்ள போன் போட்டு கூப்பிட்டிருந்தா என் நம்பர் பதிவாகி நான்தான்னு தெரிஞ்சிடும்."

"சரி, இப்ப என்ன பண்ணப் போறோம்?" - ஜான்சி கேட்க, தினேஷ் ராயப்பனை பார்த்தான்.

"என்ன சாமி என்ன பார்க்கிறீங்க?"

"உள்ளே போய் வயசானவங்க கார்ல இருக்காங்க. வந்து கூட்டிக்கிட்டு போங்கன்னு சொல்றியா?"

"நானா?"

"நீயே தான். நேரம் போய்கிட்டே இருக்கு. யாழினி மட்டும் இப்ப வந்திருந்தா எல்லாம் முடிஞ்சிருக்கும். போ, போய் அவளை எப்படியாவது வெளிய வர வை."- தினேஷ் பரபரப்பாக படபடத்தான்.

ராயப்பனோ முகம் வெளிறிப் போய் "ஐய்யோ, என்னைப் போயி போகச் சொல்றீங்களே. என்னை அப்புறம் அடையாளம் தெரிஞ்சிக்க மாட்டாங்களா?" - என்று தன் பயத்தைக் காட்டினான்.

"யோவ், இப்படி பயந்தா பெரிய இடத்துக்குப் போக முடியாதுய்யா. துணிஞ்சாதான்யா சொர்க்கம்"

"அந்த சொர்க்கத்துக்கு முதல்ல நீங்க போங்க. அப்புறம் நான் வர்றேன்."

ராயப்பனும் தினேஷும் வார்த்தைக்கு வார்த்தை மோதிக்கொள்ள ஜான்சி ஒரு முடிவுக்கு வந்தவள்போல கார் கதவை திறந்து கொண்டு கீழிறங்கினாள். அது தினேஷுக்கு ஆச்சர்யமளித்தது. ஜான்சியோ அந்த முதியோர் இல்லத்துக்குள் நுழைய ஆரம்பித்தாள்.

"ஜான்சி, எங்கப் போற?" அலறினாள் அன்னமேரி.

"ரொம்பவே பேசிட்டோம். இனி பேச்சே கூடாது. உள்ளபோய் அந்தப் பொண்ண பார்த்து இந்த ஆசிட்டை வீசிட்டு மின்னல் மாதிரி திரும்பி வருவேன். காரை ஸ்டார்ட் பண்ணி தயாரா இருங்க பறந்துடலாம்!" -ஜான்சி தகுந்த முக பாவனைகளுடன் பேசியவளாக திரும்ப வேகமெடுத்தாள்.

"சபாஷ். இப்படித்தான் இருக்கணும். போ. இதே வேகத்துல எல்லாத்தையும் முடிச்சுட்டு வா. கமான், குவிக்" -தினேஷும் காரியம் நடந்தால் போதும் என்பதுபோல உணர்ச்சவசப்பட்டான். அப்போது ஜான்சி உள்ளே செல்ல வேண்டிய அவசியமின்றி யாழினியே வெளியே வந்து கொண்டிருந்தாள். இதை தினேஷ் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

"ஜான்சி, வந்து கார்ல ஏறு" என்று உள்ளிருந்தபடியே கத்தினான். ஜான்சியும் திரும்பி வந்து வேகமாய் காரில் ஏறிட, யாழினி அவர்களுக்கு எதிர்திசையில் செல்லத் தொடங்கினாள்.

"அதோ அவ தான் யாழினி. பழம் நழுவி பால்ல விழுந்த மாதிரி அவ  நாம கூப்பிடாம வெளில வந்துட்டா. நான் அவளை ஒட்டி காரை ஓட்டிக்கிட்டு போறேன். நீ கச்சிதமா காரியத்த முடிச்சிடு" - என்றவன் சொன்ன வேகத்தில் காரை எடுத்தான்.

ஒன்று...

இரண்டு...

மூன்று...

நான்கு..."

ஐந்தாவது நொடியில் கார் யாழினியை உரசுவது போல செல்ல, ஜான்சியும் திறந்திருக்கும் கார் கதவின் கண்ணாடித்திறப்பு வழியாக விசையோடு பாட்டிலில் உள்ள ஆசிட்டை வீசினாள். அந்த நெருப்புத் திரவமும் அந்தரத்தில் மழைத்துளிகளைப் போல அடுக்கடுக்காகப் பரவி யாழினியின் முகத்தை பிரதானமாக குறி வைத்துச் சென்றது!

ஹாஸ்பிடலின் கெஸ்ட் ரூமில் சந்திரசேகரும் மோகனாவும் காத்திருந்த நிலையில் சந்தானம் உள்ளே நுழைந்தார். சந்தானம் முகம் இருளடைந்து கலங்கிப் போயிருந்தது. மோகனாவும் சந்திரசேகரும் ஏதோ விபரீதம் என் பதைப்புரிந்துகொண்டு பதிலுக்கு வெறித்தனர். சந்தானம் சந்திரசேகரை நெருங்கி அவரின் கைகளைத் தேடிப் பிடித்தார். அவர்

எதையோ சொல்லத் துடிப்பது அந்த பாடி லேங்வேஜில் சந்திரசேகருக்குத் தெரிந்தது.

"சந்தானம் என்னாச்சு? எனிதிங் ராங்?" என்று அழுத்தமாக கேட்டார்.

"ராங்... ராங்... யெஸ், லாட் திங் இஸ் வென்ட் ராங் , பட்...பட்." - சந்தானத்தின் குரல் நடுங்கத் தொடங்கியது.

"என்ன சந்தானம் சொல்றே. நீ இப்ப ரொம்ப டென்ஷனா இருக்கே. என்ன நடந்தது?" "அதை. அதை. நான் எப்படிச் சொல்வேன் சந்திரா?"

"என்ன சந்தானம். கணேஷுக்கு திரும்பவும் ஏதாவது ஆபத்தா?"

"இல்ல... இல்ல... இனி கணேஷுக்கு ஒரு ஆபத்தும் இல்லை. கணேஷ் இனிமே ரொம்ப நல்லா இருப்பான். அதுல எனக்கு சந்தேகமே இல்லை"

"அப்புறம் நீ ஏன் நெர்வஸா இருக்கே. என்ன நடந்தது?"

"சொல்றேன். சொல்லித்தானே தீரணும். ஆனா, நீ என்னை மன்னிக்கணும் சந்திரா."

"ஏன் இப்படி புரியாமலே பேசறே? தயவுசெய்து புரியற மாதிரி பேசு சந்தானம்"

"ஆமாங்க, எங்க போய்ட்டு வர்றீங்க? யார் அந்த ஆள்? பார்க்க போலீஸ்காரர் மாதிரியே இருக்காரு."

"மாதிரியே இல்ல மோகனா, அவர் போலீஸ்தான்! அதுலயும் கிரைம் பிராஞ்ச் சி.ஐ.டி... போலீஸ்."

"அவர் இங்க எங்க வந்தார். புதுசா எதாவது சிக்கலா?"

"புதுசா இல்ல. எல்லாமே பழைய சிக்கல்தான்... கணேஷோட ஆக்சிடெண்ட்ல இருந்து, வாசந்தி சாவுவரை ஒண்ணைத் தொட்டு ஒண்ணுன்னு அவ்வளவும் திட்டமிட்ட சதி வேலை"

"சதியா, யார் செய்தது? எதனால செஞ்சாங்க?"

"சொல்றேன் விரிவா சொல்றேன். நீ உன் மனசை கொஞ்சம் திடப்படுத்திக்கோ. நம்ம வாழ்க்கைல நாம காதலிச்சப்ப தான் பெரிய பிரச்னைகளை சந்தித்தோம். அதுகூட பரவாயில்லை. காதல்னாலே சிக்கல்தான்னு எடுத்துக்கலாம். அப்ப நான் உன் அப்பாவால ஜெயிலுக் கெல்லாம்கூட போனேன். ஆனா, அப்பகூட இப்ப நான் கலங்கின

மாதிரி கலங்கலை மோகனா."

"போதுங்க, பீடிகை போடாம நேரா விஷயத்துக்கு வாங்க கணேஷுக்கு நடந்தது ஆக்சிடெண்ட் இல்லையா, அது சதி வேலையா?"

"ஆமாம்."

கணேஷ் நமக்கு பிறந்த வாரிசைக் கண்டுபிடிக்க ரொம்ப சிரமப்படலை. கண்டுபிடிச்சட்டான்னுகூட சொல்லலாம். அது அவனை இப்படி படுத்த படுக்கையாக்கும்னு அவன் நினைச்சுக்கூட பாத்துருக்க மாட்டான்."

"சந்தானம், நீ இப்ப நேரா விஷயத்துக்கு வருவியா, மாட்டியா?" - சந்திரசேகர் வெடித்தே விட்டார்.

"கூல் சந்திரா. கூல். பாவம் நீ! என் நண்பனா இருந்த ஒரே பாவம்தான் நீ இப்ப மனைவியை இழந்து நிற்க காரணம்."

"என் வாரிசு என்கிட்ட வந்துட்டா தான் வாரிசாக முடியாதுங்கற பயத்துலேயும் கெட்ட எண்ணத்துலேயும் தினேஷ்தான் எல்லா பாவங்களையும் செய்தவன். அந்த ஸ்கௌடண்ட்ரல்தான் நாம இப்ப இந்த மதுரைல இந்த ஆஸ்பத்திரி கெஸ்ட் ஹவுஸ்ல இருக்கவே காரணம்" - சந்தானம் சொல்லி முடிக்க, மோகனா இடிந்தது போல் நாற்காலியில் அமர்ந்தாள். சந்திரசேகரும் இடிந்தவராகி, பின் மெல்ல சுதாரித்து "இது எல்லாம் எப்படி தெரிய வந்தது?" என்று கேட்டார்.

"வாசந்தி உயிர் பிரிஞ்ச நிலைல பாடியோட நாம சென்னை புறப்பட்டப்போ இங்க கணேஷை பார்த்துக்க நான் அந்த திருமகள் முதியோர் இல்லத்தைச் சேர்ந்த சீனிவாசன்கிட்ட மட்டும் சொல்லலை. என் நண்பரான போலீஸ் கமிஷனர் சத்யஜித்கிட்டேயும் சொன்னேன். அதுக்கு முந்தியே கணேஷோட ஆக்சிடெண்ட் ரிப் போர்ட்டை வெச்சு அது சதியாகூட இருக்கலாம்கிற சந்தேகம் போலீஸுக்கு வந்திருந்தது. அதனால ஹாஸ்பிடல்ல யாருக்கும் தெரியாம ஒரு கண்காணிப்புக்கு சத்யஜித் ஏற்பாடு செய்திருந்தார். அப்படி அவர் செய்த ஏற்பாட்டால்தான் இப்ப தினேஷ்தான் எல்லா தப்புக்கும் காரணம்னு தெரிய வந்துருக்கு. ஒரு சராசரி எச்சரிக்கை உணர்வோட நான் செய்த ஒரு ஏற்பாடு இவ்வளவு தூரம் குற்றவாளியை கண்டுபிடிச்சுத் தரும்னு நான்கூட எதிர்பார்க்கலை."

"அப்படின்னா தினேஷ் எந்த பாயிண்ட்ல சிக்கினான்?"

"இங்க அவன் கணேஷ் பிழைக்கமாட்டான்கிற நம்பிக்கைல தான்

இருந்துருக்கான். ஆனா, யாழினியால கணேஷ் பிழைச்சிட்டான். இதை அவன் கொஞ்சம்கூட எதிர்பார்க்கலை. கணேஷ் பிழைச்சா நம்ம வாரிசு யார்னு சொல்லிடுவான்னு பயந்துருக்கான். அதனால தவிச்சுக் கிட்டே இருந்திருக்கான். இந்த தவிப்புதான் இங்க நோட்டம் போட்டுக்கிட்டிருந்த போலீஸை ஆழமா கவனிக்க வெச்சிருக்கு."

"அது சரி. நம்ம வாரிசு நம்ம வாரிசுன்னு நீங்க குறிப்பிடற அந்த வாரிசு யாருங்க?"

"என்ன மோகனா, இன்னுமா அது யார்னு உனக்கு தெரியல?"

"யாருங்க, யாழினியா?"

"யாழினியான்னு ஏன் சந்தேகத்தோட கேட்கறே. யாழினியே தான்"

"நிஜமாவா?" - மோகனா அந்த நொடியே மத்தாப்பானாள். "அவள நீ நேர்ல பார்த்தாலே போதும். எந்த டெஸ்ட்டும் பண்ணத் தேவையில்லை. அவ அப்படியே உன் ஜெராக்ஸ்."

"நீங்க... நீங்க.. யாழினிய பார்த்து பேசினீங்களா?"

இல்ல நம்ம பொண்ணுகிட்ட பேச துடிச்சுக்கிட்டு இருக்கு என் மனசு, நம்ம பொண்ணு சாதாரண சராசரி பொண்ணு இல்ல மோகனா. அவ தெய்வப்பிறவி."

"யாழினி தெய்வப்பிறவியா இருக்கவும்தானே ஸ்பரிசத்தாலேயே கணேஷை குணப்படுத்த முடிஞ்சிருக்கு. போகட்டும். தினேஷ் இப்ப எங்க இருக்கான். அவன் தப்பையெல்லாம் ஒத்துக்கிட்டானா?"

"தினேஷ் இப்ப போலீஸ் கஸ்டடில இருக்கான். அவன் தப்பை அவனால இனி மறுக்கவோ மறைக்கவோ முடியாது. அசைக்க முடியாத ஆதாரங்களோட அவன் போலீஸ் கிட்ட சிக்கிட்டான். விஷயம் சென்னையில பூரணியோட காதுக்கு போய் அவளும் புறப்பட்டு வந்துகிட்டிருக்கா..."

"பாவி...பாவி... இவனுக்கு நாம என்னங்க குறை வெச்சோம்? இப்படி பண்ணிட்டானே...?

"அவன் இறந்து போன உன் மாமாவோட ஜெராக்ஸ் அந்த ஆள் நம்ம காதல் வாழ்க்கைல அப்ப விளையாடினான். அவரோட பேரன் இப்ப நம்ம பொண்ணு வாழ்க்கைல விளையாடிட்டான். எல்லாம் பணம்படுத்தற பாடு" - சந்தானம் குமுறிட சந்திரசேகர் பாயின்ட்டாக

பேச ஆரம்பித்தார்.

"சந்தானம்... தினேஷ் எப்படி கணேஷுக்கு ஆக்சிடெண்ட்டை கிரியேட் பண்ணான். அது தெரிஞ்சிடிச்சா?"

"அது வீடியோ ஆதாரமா அவன் லேப்டாப்லயே இருக்கு சந்திரசேகர். தப்புத்தப்பா ஒவ்வொண்ணையும் பண்ணி கிட்டே வந்த அவன், வசமா மாட்டினது யாழினிமேல ஆசிட்டை வீசினப்ப தான்." - யாழினி மேல் ஆசிட் வீசுற விஷயத்தை சந்தானம் தொட்ட நொடி மோகனா அதிர்வின் உச்சிக்கே போனாள்.

# 37

'ஒவ்வொரு நாளும் அன்னையர் நாள் தான்
ஒரு நாள் திருநாள் எதற்காக? அதை
ஓராண்டு மறந்தார் அவர்க்காக!
ஒவ்வொரு நாளும் இடர்வரும் நேரம்
இதயத்தின் தேடல் அம்மா தான்!
உன் இதழின் மந்திரம் அம்மா தான்!'

நன்றி: "தேன் கூடு கவிதைத் தொகுப்பில்
செ. சீனிநைனாமுகம்மது.

யாழினிமேல் ஆசிட் வீச நடந்த முயற்சி பற்றி சந்தானம் சொன்னதும், மறு வினாடி மோகனாவுக்கு உடம்பு நடுங்க ஆரம்பித்து விட்டது. சந்திரசேகரும் பதைப்பின் உச்சிக்குப் போனார்.

"பதட்டப்படாதீங்க... தினேஷ் மேல ஒரு கண் வெச்சிருந்த போலீஸ் யாழினியை பயன்படுத்தியே தினேஷை, அவனுக்கு உதவி செய்த ஜான்சிங்கற பெண்ணை கையும் களவுமா பிடிச்சிட்டாங்க!"

ஜான்சிங்கற பொண்ணுதான் ஆசிட்டை வீசினவ! யாழினிகிட்ட முன் கூட்டியே போன்ல பேசிட்டதால யாழினியும் சாமர்த்தியமா குனிஞ்சு ஆசிட் தன் மேல விழாம தன்னைக் காப்பாத்திக்கிட்டா. அதை மறைஞ்சிருந்து பார்த்தபடி இருந்த போலீஸும் தினேஷ் பயன்படுத்தின காரை வழிமறிச்சு அவனை கையும் களவுமா பிடிச்சிட்டாங்க!

ஆனாலும், இது அக்னிப் பிரவேசம் மாதிரி ஒரு விஷயம் தான்" - என்ற சந்தானத்திடம், "யாழினி இப்ப எங்க இருக்கா?" என்று கேட்டாள் மோகனா.

"அவ 'திருமகள் முதியோர் இல்லம்'கிற முதியோர் காப்பகத்துல தான் இப்ப இருக்கா. என்ன மோகனா மகள்னு தெரிஞ்ச நொடி பாக்கணும்னு துடிப்பா இருக்கா?"

"உங்களுக்கு இல்லையா?"

"நான் அடக்கிட்டுதான் பேசறேன். யாழினிக்கும் இப்ப எல்லாம் தெரிஞ்சிப் போச்சு. அவளும் நம்மை பார்க்க துடிச்சிக்கிட்டு இருப்பா" - என்றார் சந்தானம்.

"சந்தானம், பேசினது போதும் - நாம முதல்ல போய் யாழினியைப் பார்ப்போம். புறப்படு! - சந்திரசேகர் சொன்னதைக் கேட்ட சந்தானத்துக்கு மளுக்கென்று கண்களில் கண்ணீர் பீறிட்டது."

"என்ன சந்தானம், எதுக்கு அழறே... நான் எதாவது தப்பா சொல்லிட்டேனா?"

"இப்ப சந்திரா, நீ உன் துக்கத்தை பெருசா நினைக்காம எங்க சந்தோஷத்தை பெருசா நினைச்சுப் பேசினது என்னை சிலிர்க்க வெச்சிடிச்சு. அதான்!"

"இதோ பார். நான் பெருசா வருத்தப்பட்றதால வாசந்தி திரும்ப வந்துடப்போறாளா? அவ விதி இப்படி முடியணும்னு இருந்து முடிஞ்சும் போயிடிச்சு. இனி அதை மறக்கறதும் அடுத்தடுத்து நடக்கப்போற நல்லதை எல்லாம் நினைக்கறதும்தான் புத்திசாலித்தனம்.

கடவுள் புண்ணியத்துல கணேஷ் பிழைச்சிட்டான்.

இனி என் நோக்கமெல்லாம் ஒண்ணே ஒண்ணு தான். கணேஷ் பூரணமா குணமான உடனே ஒரு நல்ல பொண்ணைப் பார்த்து கல்யாணம் பண்ணி வெச்சுடனும் வரப்போற மருமக, அவ தரப்போற பேரன், பேத்திகள்னு நான் கனவு காண நிறைய விஷயங்கள் இப்ப என் முன்னால இருக்கு சந்தானம்.

உனக்கும் உன் மக திரும்ப கிடைக்கப் போறா! உங்க மாமா பத்மநாபன் உங்க வாழ்க்கைல தொடக்கத்துல சதி வேலைகள் செய்திருந்தாலும் சாகும்போது உங்களுக்கு நல்லது பண்ணிட்டு தான் போயிருக்கார். அதோட கடவுள் உன் பக்கத்துலதான் இருக்கார் சந்தானம். இல்லேன்னா யாழினியை கண்டுபிடிச்சிருக்க முடியுமா? அதுலயும் யாழினி ஒரு தெய்வப் பிறவி வேற..!"

மூச்சு விடாமல் பேசினார் சந்திரசேகர். சந்தானம் அவரை இழுத்து மார்போடு அணைத்துக் கொண்டார். அப்படியே, "சந்திரா, கணேஷ் இனி உன் பிள்ளை மட்டு மல்ல... எங்க மாப்பிளையும்கூட நீ எதுக்கு எங்க பொண்ணு இருக்கும் போது வெளிய பொண்ணு தேடணும்? நீ இனி என் நண்பன் மட்டுமில்ல - சம்பந்தியும் கூட" என்றார்.

"சந்தானம்... முதல்ல பிரிஞ்சுபோன பொண்ணோட சேர்ந்து வாழற வழியை பார்ப்போம். கணேஷ் குணமாகி வரட்டும். அப்புறமா இந்த கல்யாண விஷயத்தைப் பேசலாம்" என்ற சந்திரசேகர் அப்போதே அவர்களோடு யாழினியைப் பார்க்க புறப்பட்டார்.

புறப்படும் முன் திரும்பவும் ஒருமுறை கணேஷைப் பார்க்கத் தோன்றியது.

"சந்தானம், கணேஷை ஒரு பார்வை பார்த்துட்டு யாழினியை பார்க்கப் போறதா சொல்லிட்டுப் போலாமா?"

"தாராளமா, கணேஷும் சந்தோஷப்படுவான். அடுத்து நாம கணேஷை யாழினியோடதான் வந்து பார்க்கணும்" - சந்தானத்திடம் உற்சாகம் கொப்பளித்தது.

நேராக டாக்டர் ஒருவர் துணையோடு கணேஷ் முன் போய் நின்றபோது கணேஷ் அயர்ந்த உறக்கத்தில் இருந்தான். நெற்றியில் குங்குமத்தோடு அவன் தூங்குவதைப் பார்த்தபோது சந்திரசேகருக்கு என்னவோ போல் இருந்தது.

கம்பீரமாகவே அவனைப் பார்த்து பழக்கப்பட்டவருக்கு இப்படிப் பார்க்கவும் இதயத்தின் அடித்தளத்தில் ஒரு வலி! அது கண்களில் எதிரொலித்தது. அதை சந்தானமும் மோகனாவும் கூட புரிந்து கொண்டனர். சந்தானம் தன் வலக்கரத்தால் சந்திரசேகரின் தோளை இழுத்து அணைத்துப் பிடித்தவராக அங்கிருந்து அகலத் தொடங்கினார்!

திருமகள் முதியோர் இல்லத்தில் அங்கங்கே நான்கு பேர் கூடிக்கூடி யாழினி பற்றித்தான் பேசிக் கொண்டிருந்தனர். லக்ஷ்மிநரசிம்மன்-அலமு தம்பதியர் மட்டும் நேராக யாழினியின் அறைக்கே சென்றுவிட்டனர்.

உள்ளே யாழினி கட்டில் மேல் குத்துக்காலிட்டு கைகட்டி மௌனமாக அமர்ந்திருந்தாள்.

அவளுக்குள் இனம்புரியாத எண்ணங்களின் ஓட்டம்!

"அம்மாடி" - என்ற அலமுவின் குரல் கேட்டு மெல்ல நிமிர்ந்தாள்.

"ஏம்மா ஒரு மாதிரி இருக்கே. நீ சந்தோஷப்பட வேண்டிய நேரமாச்சே இது" என்றார் லக்ஷ்மிநரசிம்மன்.

"நீங்க முதல்ல உக்காருங்கப்பா. நீங்களும் உக்காருங்கம்மா" - என்று கட்டிலில் இருந்து எழுந்து நின்றாள் யாழினி.

"நீ இப்படி எங்களை 'அப்பா, அம்மா'ன்னு கூப்பிட்றது எவ்வளவு ஆறுதலா இருக்கு தெரியுமா?"

"எப்பவும் நீங்க என் அப்பா-அம்மாதான். இனிமே கூப்பிட இங்க இல்லாம போயிடுவேன்னு நினைச்சுட்டீங்களா?" - பளிச்சென்று கேட்டாள் யாழினி.

"ஐய்யோ அப்படி எல்லாம் இல்லம்மா. உனக்கு ஒரு விமோசனம் கிடைச்சதுல எங்களுக்கு எவ்வளவு சந்தோஷம் தெரியுமா?"

"விமோசனமா, என்ன சொல்றீங்க நீங்க?"

"என்ன யாழினி இப்படிக் கேட்கறே? உன் அப்பா அம்மா யார்னு தான் தெரிஞ்சு போச்சே. அது உனக்கு விமோசனமில்லையா?"

"அப்ப நீங்க யார்?" - பளாரென்று அறைவது போல கேட்டாள் யாழினி.

"நாங்க...நாங்க..." - அவர்கள் இருவரும் திணறும் போதே பின்னால் சீனிவாசன் வருவது தெரிந்தது.

"யாழினி, நாங்கள்லாமும் உன் வரைல அப்பா-அம்மா மாதிரிதான். ஆனா உன்னை பெத்தவங்களே இருக்கும்போது எங்க உறவெல்லாம் சும்மா தானேம்மா?"

- லக்ஷ்மிநரசிம்மன் பேசத்தெரிந்து பேசினாரா இல்லை தெரியாமல் பேசினாரா என்று தெரியவில்லை. யாழினி அவரை பதிலுக்கு கண்கலங்கப் பார்த்தாள்.

"ஏம்மா கண்கலங்கறே...நான் தப்பா எதுவும் சொல்லிடலையே...?"

"தப்பா சொல்லலையா? உங்க பேச்சு அவ்வளவுமே தப்புப்பா.. நான் சும்மா ஒப்புக்கு உங்கள அப்பா-அம்மான்னு கூப்பிடலை. ஆனா நீங்க அப்படி என்னை நினைச்சுட்டீங்களே."

"ஐயோடி கண்ணு...! இந்த மனுஷன் பேசத் தெரியாமப் பேசறார்.

சத்யமா நாங்க எங்க பொண்ணு மீனாட்சியாதான் உன்னை பார்க்கறோம். நான் பாவியானாலும் பரவாயில்ல. தைரியமா சொல்றேன் - நீ எங்கள விட்டு போகப் போறியேன்னுதான் இருக்கு. அதை நினைக்கவே பிடிக்கல. மேலுக்குதான் நாங்க அப்படி பேசினோம்" - என்றாள் அலமு மாமி.

"இதான், இதான் சரியான பேச்சு. போங்கே, போய் ஆக வேண்டியத பாருங்கோ. நான்லாம் எங்கேயும் போக மாட்டேன்" யாழினி தீர்க்கமாக கூறவும், அவர்கள் அதிர்வோடு பார்த்தனர்.

சீனிவாசன் இடையிடத் தொடங்கினான்.

"யாழினி, தகவல் தெரிஞ்சு ரங்காச்சாரி சார் டிஸ்சார்ஜ் ஆகி ஆஸ்பத்திரியை விட்டு புறப்பட்டாச்சு. உன் அப்பா, அம்மா, அப்புறம் கணேஷ் சார், அவரோட அப்பா சந்திரசேகர் உன்னை பார்க்க வந்துகிட்டு இருக்காங்க..."

"என்ன சீனுண்ணா சொல்றீங்க. அது யார் புதுசா என் அப்பா-அம்மா?"

"யாழினி, உன்னால எங்களப்பிரிய முடியாதுன்னு எனக்குத் தெரியும்மா. அதனால அவங்க உன் அப்பா-அம்மா இல்லைன்னு ஆயிடாது."

"என்னண்ணா நீ என்னென்னமோ பேசறே? பச்சைக் குழந்தையா ஒரு வாய் பால் கூட குடிக்காத என்னைத் தூக்கி எறியும்போது இல்லாத பாசம் இப்ப மட்டும் எப்படிண்ணா வந்தது? அவங்கதான் வெட்கமில்லாம வராங்கன்னா அதை ஒரு பெரிய விஷயமா என்கிட்ட சொல்றே நீ?"

"யாழினி, நீ இப்படி எல்லாம் பேசக்கூடாது. உண்மைல நான் இப்ப எவ்வளவு சந்தோஷப்பட்றேன் தெரியுமா?"

"சாரிண்ணா, எனக்கு சந்தோஷமே கிடையாது. சொல்லப்போனா இது எனக்கு சோதனை. இதுல இருந்து அந்த மீனாட்சி தான் என்னைக் காப்பாத்தணும்."

"யாழினி ஏன் இப்படி எல்லாம் பேசறே? பாவம் சந்தானம் சாரும் மோகனாவும். அவங்க மேல எந்தத் தப்பும் இல்லை. என்ன நடந்ததுன்னு தெரிஞ்சா நீ இப்படி கோபப்பட மாட்டே..."

"வேண்டாண்ணா... எனக்கு எதுவும் தெரிய வேண்டாம். நான் தெரிஞ்சிக்கவும் விரும்பலை. முதல்ல என்னை தெய்வப்

பெண்ணாக்கினீங்க. இப்ப கோடீஸ்வரி யாக்கப் பாக்கறீங்களா?"

"நாங்க ஆக்கறதா? நீ பிறப்பாலயே கோடீஸ்வரி யாழினி. இவ்வளவு நாள் நீ இங்க இருந்ததுதான் உன்னோட பாவம்"

"அண்ணா இங்க நான் வாழ்ந்தது பாவமா? நீயா இப்படிச் சொல்றே? இது என் புண்ணிய பூமிண்ணா? ரங்காச்சாரி அப்பா எனக்கு தாயுமானவ சுவாமிண்ணா! நீ எனக்கு கூடப் பிறந்த சகோதரன். எல்லாருக்கும் இந்த உலகத்துல ஒரு அப்பா ஒரு அம்மாதான் இருப்பாங்க. ஆனா, எனக்கு எத்தனை அப்பா. எத்தன அம்மா? யாருக்குக் கிடைக்கும் இப்படி ஒரு வாய்ப்பு?" - யாழினி நெகிழ்வின் உச்சத்தைத் தொட்டு பேசியதைக் கேட்டு சீனிவாசன் விக்கித்துப் போனான். லக்ஷ்மிநரசிம்மனும் அலமு மாமியும் அழவே தொடங்கி விட்டனர்.

சட்டென்று யாழினி வேகமானாள்.

"அண்ணா நான் கொஞ்சம் மீனாட்சியம்மன் கோயில் வரை போய்ட்டுவரேண்ணா" என்று வெளியே புறப்பட்டாள்.

"கோயிலுக்கா... இப்பாவா?"

"அப்புறமா போகலாம் யாழினி. அவங்கள்லாம் வந்து கிட்டு இருக்காங்க..."

"அதனாலதாண்ணா போறேன். நான் யாரையும் பார்க்க விரும்பலை."

"யாழினி"

"ஆமாண்ணா. நான் யாரையும் பார்க்க விரும்பலை. அவங்க வந்தா நான் அவங்க பொண்ணு இல்லைன்னு சொல்லி திருப்பி அனுப்பிடு."

"யாழினி, அப்படியெல்லாம் சொல்ற கட்டத்தை எல்லாம் கடந்தாச்சு. அந்த தினேஷ் பண்ண வேலை பாழப் போனதா இருக்கலாம். ஆனா, அது உன்னை உன் உண்மையான பெற்றோர்கிட்ட ரொம்ப வேகமா கொண்டு போய்ச் சேர்த்துடுச்சி யாழினி."

"நீ திரும்பத் திரும்ப பேசினதையே பேசாதே. நான் யாரையும் பார்க்க விரும்பலை. வழிய விடு. - யாழினி மிக வேகமாக புறப்பட்டு விட்டாள். சீனிவாசன் பின்னாலேயே சென்றான். அவள் ஒரு இடத்தில் நின்று திரும்பிப் பார்த்தாள். அதில் ஆயிரம் அர்த்தங்கள்! அதற்குப் பின் சீனு அவளைத் தொடரவில்லை.

அவளும் திருமகள் நிலையத்துக்கு வெளியே ஆட்டோ பிடித்து அதில் ஏறிக் கொள்ள, அதுவும் விரைந்து மறைந்தது. சீனிவாசன் பார்த்தபடியே இருக்க, அங்கே ரங்காச்சாரியின் கார் வந்து நின்றது!

அதைப் பார்த்து விட்டு எல்லோரும் காரை நோக்கிச் சென்றனர். ரங்காச்சாரியும் உற்சாகமாக காரில் இருந்து இறங்கினார். அவர் பார்வை முதலில் யாழினியைத்தான் தேடியது. அது எல்லோருக்கும் புரிந்தது.

"சார், யாழினி கோயிலுக்கு இப்பதான் கிளம்பிப் போறா" என்றான் சீனிவாசன். அதைக் கேட்ட ரங்காச்சாரியும், "இதை நான் எதிர்பார்த்தேன்" என்பது போல திரும்ப காரில் ஏறியவராக காரை கோயில் நோக்கி விடச் சொன்னார்.

# 38

'திரைப்படம் தெரிந்த அளவு
திருவள்ளுவர் அறிவாயா?
அரைமணி நேரமேனும்
உரையாடியதுண்டா
ஆங்கிலக் கலப்பில்லா
அழகுத் தமிழில்?
அறிவாயா நீ
உன் பிறந்த நாளின் தமிழ்த் தேதி?
ஆணின் பங்கின்றி
பெண்ணுக்கேது இழிநிலை?'
நன்றி: சிங்கைக்கவிஞர் யூசுப்ராவுத்தர் ரஜித்.

மீனாட்சியம்மன் கோயில்!

நெடிய காலத்தின் நிரந்தர சாட்சியாக நாற்புறமும் விண்ணை முட்டும் கோபுரங்களோடு, அவற்றை தங்கள் வாசஸ்தலமாக கொண்ட புறாக்களோடு கம்பீரமாக காட்சி தந்து கொண்டிருந்தது.

ஆட்டோவில் இருந்து இறங்கிய யாழினி தனக்கு நேர் எதிராக தெரிந்த மேற்கு கோபுரத்தை பார்த்தபடியே நடந்தாள். முன்பெல்லாம் கோபுர வாசலிலேயே இறங்கி நடக்கலாம். இப்போது கோபுரத்துக்கு நாற்புறமும் உள்ள தெருக்களில் தான் இறங்கி நடந்தாக வேண்டும்.

அயோத்தியில் ஒரு மசூதியை சிலர் இடித்ததன் விளைவுக்கு ஒவ்வொரு

நாளும் ஆயிரக்கணக்கில் மக்கள் அலைக்கழிக்கப்பட்டபடி உள்ளனர். யாரும் அது குறித்து பெரிதாக வருத்தப்படுவதாகவும் தெரியவில்லை. எது நடந்தாலும் அது வாழ்வின் ஒரு பகுதி என்கிற மிகப்பெரிய பக்குவத்துக்கு இந்தியர்கள் வந்துவிட்டனர். அரசியல்வாதிகளும் அவர்களை வரவழைத்து விட்டனர்.

நல்லவேளையாக 'மீனாட்சி' என்றொரு தெய்வம் காப்பதற்காக உள்ளது என்பதை யாரும் மறந்து விடவில்லை. கோபுரம் கடந்து யாழினி உள் நுழைந்தாள். அவள் பார்வை நாலாபுறமும் யாரையோ தேடியது. பட்டியக்கற்கள் கொண்டு வேயப்பட்ட அகண்ட ஆடி வீதியில் பக்தர்கள் கூட்டம் அலைமோதிக் கொண்டிருந்தது. அந்தக் கூட்டத்துக்குள் தான் தங்களுக்கும் வாழ்க்கை இருப்பதாக கருதி சுண்டல் விற்றபடி சிலரும், ஜோசியம் பார்த்தபடி சிலரும் திரிந்து கொண்டிருந்தனர். அவர்களில் யாழினிக்கு முன்பு ஜோசியம் பார்த்த அந்தப் பெண்ணும் இருந்தாள்.

அவளைப் பார்க்கவும் யாழினியின் கண்களில் ஒரு அகட்சி. அவளும் யாழினியைப் பார்த்தாள் சிரித்தாள். யாழினி அவளை நெருங்கி நின்றாள். சட்டென்று பேச்சு வரவில்லை. ஆனால், நிறைய பேசவேண்டிய ஒரு அவஸ்தை அவளை ஆட்கொண்டிருந்தது.

"வா தாயி, 'நீ வருவே'ன்னு நான் சொன்னபடியே வந்துட்டியே" - என்று ஆரம்பித்தாள் அவள்.

"நான் கோயிலுக்கு வந்தேன்"- என்று பட்டென்று ஒரு பதில் சொன்னாள் யாழினி.

"அப்ப போ, என் முன்னால ஏன் நிக்கறே?"

"இல்ல. அது வந்து..."

"எது வந்து?"

"சரி. உன்ன பாக்க வந்தேன்னும் வெச்சிக்கையேன்."

"விடு. நீ கோயிலுக்கு வந்த இடத்துல என்னை பாத்த தாகவே இருக்கட்டும்! நீ சலனப்படக் கூடாது. அது உன் குடும்பத்துக்கு நல்லதில்ல."

"என்னால இப்ப சலனப்படாம இருக்க முடியலை. நீரோடை மாதிரி போய்க்கிட்டிருந்த என் வாழ்க்கைல இப்ப புயல் வீசற மாதிரி எனக்குள்ள ஒரு உணர்ச்சி."

"அப்படியா?"

"என்ன அப்படியான்னு கதை கேக்கற மாதிரி கேட்கறே. என்னை சாமி, பூதம்னு இஷ்டத்துக்கும் கொழப்பி விட்டுட்டு இப்ப அப்படியாங்கறியா?"

"நான் கொழப்பிவிட்டேனா? அட் மீனாட்சியே, நான் உன்ன உனக்கு காட்டுனேன் தாயி..."

"என்ன காட்னே? நான் இப்பதவிச்சுகிட்டு இருக்கேன். கடவுளா இருந்தா தவிப்பேனா?"

"நல்ல கேள்விதான் கேட்டுருக்கே. நீ கடவுளோட அம்சம்னு சொன்னேன். இருந்தாலும் நீ என்ன அந்த மீனாட்சி மாதிரி. திரௌபதி மாதிரி அக்னி குண்டத்துல இருந்து வந்தவளா என்ன?"

"நீ என்ன சொல்றே. புரியறமாதிரி சொல்லு"

"புரியற மாதிரின்னா எப்படி சொல்றது? அப்பா. அம்மான்னு ரெண்டு பேர் ஒண்ணா சேர்ந்து நம்மை எல்லாம் பெத்துப் போடறாங்க. இப்படிப் பொறக்கற பொழப்புக்கு யோனி வழி பொறப்பு'ன்னு பேர், நாம ஆகாயத்துல இருந்து அப்படியே இறங்கி வரலை. அப்பா, அம்மா மூலமா தான் வந்தோம். அவங்க அவங்க அப்பா, அம்மா மூலமா வந்தவங்க. இப்படியே ஏழு தலைமுறை சம்பந்தம் இந்த உடம்புல மனசாலயும் நல்லதும் பண்ணியிருப்போம். கெட்டதும் பண்ணியிருப்போம். அதை அனுபவிச்சாகணுமே?"

"புரியற மாதிரி சொல்லுன்னா ஏழு தலைமுறைக்கே போய் இன்னும் கொழப்பிட்டியே..."

"நான் தெளிவாதான் சொல்லிக்கிட்டிருக்கேன். நீ தான் கவனமா கேட்காம பதட்டத்துலயே இருக்கே. நீ தெய்வ அம்சமா இருந்தாலும் உடம்பால படவேண்டிய பாட்டை பட்டுதான் தீரணும். அதனாலதான் உனக்கு இவ்வளவு பதட்டமும் மனவருத்தமும்..."

"திரும்பத் திரும்ப தெய்வ அம்சம்னே சொல்லாதே. நான் சாதாரண மனுஷி. இப்படி இருக்கத்தான் எனக்கும் பிடிச்சிருக்கு."

"இப்ப நீ இப்படி சொன்னாலும் உன் எதிர்ல யாராவது கஷ்டப்பட்டா பாத்துகிட்டு சும்மாவா இருப்பே?"

"அதுக்கு பேர் மனிதாபிமானம், உடனே அதை தெய்வச்

செயல்பாடுன்னு சொல்லிட்றதா?"

"என்கிட்ட கூட தான் மனிதாபிமானமிருக்கு. ஆனா, நான் தொட்டா சாகக் கிடக்கறவன் பிழைப்பானா, நீ தொட்டா தானே பிழைப்பான்?"

"அதான் எனக்கும் ஆச்சரியமா இருக்கு. எனக்கு மட்டும் எதனால இப்படி?"

"எல்லாம் உன் பூர்வ ஜென்ம புண்ணியம்."

"மண்ணாங்கட்டி புண்ணியம் பண்ணியிருந்தா அப்பா, அம்மா யாருன்னே தெரியாம வளர்ந்திருப்பேனா?"

"என்ன செய்யறது. உன் தாய், தகப்பனுக்கு உன்னை பிரிஞ்சிருக்கணும்கறது விதி. அதனால நீ பிரிஞ்சே."

"இது சாமர்த்தியமான பதில். மனசு இதனால சமாதானமடைய மாட்டேங்குது."

"நான் சொன்னது சத்தியமான உண்மை. அப்பா, அம்மாவைப் பிரிஞ்சு வளர்ந்தாலும் அந்த ஏக்கமோ துக்கமோ உனக்கு துளிகூட கிடையாது. ஆனா, உன் அப்பாவும் அம்மாவும் எவ்வளவு கஷ்டப்பபட்டுட்டாங்க தெரியுமா இந்த இடைப்பட்ட வருஷத்துல..."

"இப்ப மட்டும் எதனால தெரிய வந்தது?"

"பாவக்கணக்கு தீரும் போது எல்லாம் நேராகித்தானே தீரணும்?"

"இல்ல, இப்பகூட நான் அவங்க கூட போய் வாழ விரும்பலை. எனக்கு நான் இப்ப வாழற வாழ்க்கையே போதும்."

"அது சரி, இந்த வாழ்க்கைக்கு இப்ப என்ன ஆபத்து வந்துடிச்சின்னு நீ இவ்வளவு தூரம் பயப்பட்றே?"

"என்ன பேசறே நீ என்ன கோடீஸ்வரிங்கறாங்க. என்னை கூட்டிக்கிட்டு போயிடுவாங்களாம். என்னால எங்க முதியோர் இல்லத்தை பிரிய முடியாது."

"பிரியாதே. உன்னை யார் பிரியச் சொன்னா?"

"நீ என்ன இப்படியும் பேசறே. அப்படியும் பேசறே?"

"சின்ன வயசு இல்லையா? அதான் அனுபவமில்லாத தால

வெடவெடன்னு உன் மனசு துடிக்குது. ஒரு விஷயத்த நல்லா புரிஞ்சுக்கோ. மாறிகிட்டே இருக்கறதுக்குப் பேர் தான் வாழ்க்கை. அந்த மாற்றம் நாம விரும்பற மாதிரியும் இருக்கும். விரும்பாத மாதிரியும் இருக்கும். இது இந்த நாட்டு சனாதிபதில இருந்து குறி சொல்ற என் வரைக்கும் பொதுவான விசயம். இந்த மாற்றத்தை நம்மால எதுவுமே பண்ண முடியாது. நம்ம உடம்பும் ஒவ்வொரு நொடியும் மாறிக்கிட்டேதான் இருக்குது. இது மாறிக்கிட்டிருக்கிறத நாமளும் நாசூக்கா 'வளர்ச்சி'ன்னு சொல்றோம்."

"ஐய்யோ, நீ பளிச்சின்னு வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டுங்கற மாதிரியே பேசமாட்டியா,"

"விவரமா சொன்னாதானே கண்ணு புரியும்."

"பரவால்ல, நீ சுருக்கமாவே சொல்லு..."

"சரி, உனக்கு இன்னும் என்ன சந்தேகம்?"

"எனக்கு என்கிட்ட இருக்கற சக்தியை நினைச்சாலே பயமா இருக்கு. எப்படி இது சாத்தியம்?"

"கோடிகோடிப்பேர் பொறக்கறாங்க. ஆனா, எல்லாரும் ஒண்ணு போலவா இருக்காங்க? அப்படித்தான் இதுவும். உன்கிட்ட இருக்கற சக்தியும் மனுஷி சக்திதான். உன் அளவு மத்தவங்ககிட்ட இல்லை. அவ்வளவுதான் வித்தியாசம்."

"அப்ப, ஏன் என்னை தெய்வப்பிறவிங்கறே?"

"இந்த அளவு சக்தி தெய்வத்துகிட்டதான் இருக்கும் அதனால..."

"இது இப்படியே இருக்குமா - இல்ல போயிருமா?"

"உன் வரைல போகாது. உன் கையால நிறைய நல்லது நடக்கணும்னு இருக்கும்போது எப்படிபோகும்?"

"ஐய்யோ, அப்ப நான் ஒரு சாதாரண பெண்ணா வாழ முடியாதா?"

"நீ உன்னை சாதாரண பொண்ணுன்னு நினைச்சிக்கிட்டா உன் வரைல நீ சாதாரண பொண்ணுதானே?

"திரும்பவும் ஜிலேபி சுத்தறே, சரி, என் லைஃப்ல இன்னும் என்னவெல்லாம் நடக்க இருக்கு?"

"நிறைய இருக்கு. நீ மனசு வெச்சா, ஆயிரக்கணக்கான முதியோர்களை உன் கட்டுப்பாட்டுல சந்தோஷமா வாழ வைக்கலாம். புட்டபர்த்தியில சத்யசாய்பாபா அப்படித்தானே நடந்துகிட்டார்."

"அப்ப அவர் மாதிரியா நான்?"

"ஆமாம். நீ ஒரு பொம்பள சாய்பாபா..."

"ஊஹும் நான் இனி உன்கூட பேசமாட்டேன். என் வழியை நான் பாத்துக்கறேன். இந்த ஊரை விட்டே போறேன். பத்ரிநாத், கேதார்நாத்னு கண்காணாத இடத்துக்குப் போயிட்றேன்..."

முயற்சி செய். என்னாகுதுன்னு நானும் பாக்கறேன்."

"என்னாகும். நான் இந்த ஊரை விட்டே போயிடப் போறேன். இது தான் என் முடிவு?"

"அப்ப இங்க இருக்கற பெரியவங்க கதி?"

"எல்லாம் என் அப்பா பாத்துப்பார். என்னை நம்பி ஒண்ணும் எங்க முதியோர் இல்லம் இல்லை."

"ஏன் ஒட நினைக்கறே. இருந்து நல்லது பண்ண நினைக்காம ஏன் இப்படி பதட்டப்பட்றே?"

"நான் இங்க இருந்தா அவங்க வந்து என்னை எப்படி யாவது கூட்டிகிட்டு போயிடுவாங்க."

"கூப்ட்டா போகாதே... எனக்கு இங்க இருக்கத்தான் விருப்பம்னு சொல்லு."

"அதை எப்படி அவங்க கேட்பாங்க..."

"கேட்க வை. நீ எது நினைக்கறியோ அதான் இனி நடக்கும். அவங்க உன் பேச்சை கேட்கணும்னுதான் விதி இருக்கு. நீ அவங்க பேச்சை கேட்கணும்னு எதுலயும் சொல்லலை."

- அந்த ஜோசியக்காரியின் விளக்கத்தின் இடையே 'யாழினி' என்கிற அழைப்பொலி. திரும்பினாள். ரங்காச்சாரி வந்தபடி இருந்தார்!

"அப்பா நீங்களா?"

"நானேதான் இங்க என்ன பண்ணிகிட்டிருக்கே?"

"அது வந்துப்பா... இவங்களோட... இவங்களோட..." - யாழினி தந்தியடித்தாள். ஜோசியக்காரியோ சிரித்தாள்.

"ஐயா நான் குறி சொல்றவளுங்க. இதுக்கும் குறி சொன்னேன். இது தெய்வப் பிறப்புங்க. ஆனா, இப்ப கொஞ்சம் பதட்டத்துல இருக்கு. இந்தக் கட்டத்தை நல்லவிதமா கடந்துட்டா போதுங்க. அப்புறம் இந்த மதுரைக்கே நல்ல காலங்க."

"என்னம்மா, இதெல்லாம் உன் ஜோசியமா?"

"ஆமாங்க. ஜக்கம்மா வாக்கை என் வாக்கால சொல்றேன். இதை சமாதானப்படுத்தி கூட்டிகிட்டு போங்க. ஒருத்தர் போனா ஒருத்தர் வந்தாகணும்கறது விதி. பல சாமிமாருங்க உடம்பை விட்டுட்டு சமாதியாகிட்டாங்க. அவங்க இடத்துக்கு யாராவது வந்தாகனுமே..."

"ஓ அப்ப யாழினியை நீ அந்த சாமிமார் லிஸ்ட்டுல வெச்சிருக்கியா?"

"அதுல என்னங்க சந்தேகம். நீங்க கூட்டிகிட்டு போங்க. இது விருப்பப்படியே எல்லாம் செய்ங்க. அதான் நல்லது."

"நிச்சயமாம்மா... உனக்கும் ரொம்ப நன்றி," - ரங்காச்சாரி யாழினியின் கைகளைப் பற்றியபடி நடக்கத் தொடங்கினார். அவளும் எதுவும் பேசாமல் அவரோடு நடந்தாள்.

# 39

'பெண்மை வாழ்கென்று கூத்திடுவோமடா!
வலிமை சேர்ப்பது தாய் முலைப் பாலடா!
மானசேர்க்கு மனைவியின் வார்த்தைகள்
கலியழிப்பது பெண்களறமடா;
கைகள் கோர்த்து களித்து நின்றாடுவோம்
பெண்ணறத்தினை ஆண்மக்கள் வீரத்தாற்
பேணு மாயிற் பிறகொரு தாழ்வில்லை'
மகாகவி பாரதியார்.

திருமகள் முதியோர் இல்லம்!

உள்ளே யாழினி இல்லாத நிலையில் தவிப்போடு காத்துக் கொண்டிருந்தாள் மோகனா. கூடவே அலைபாய்ந்து கொண்டிருந்தார் சந்தானம். சந்திரசேகர் இல்லத்தின் வாசலில் நின்றுகொண்டு தெருவையே பார்த்துக் கொண்டிருந்தார்.

சிலர் மோகனாவிடம் வந்து பேச்சுக் கொடுக்க ஆரம்பித்தனர்.

"உங்கள பார்த்தா யாழினி ஜாடை அப்படியே இருக்கு. ஆமா அவளை நீங்க உங்க கூட கூட்டிகிட்டு போய்டுவீங்களா?" - என்று ஆரம்பித்தாள் அலமு மாமி.

மோகனா பதிலுக்கு மாமியை சற்று வெறித்தாள். "இல்ல, சும்மா கேட்டேன். உங்க பொண்ணா இருந்தா கூட்டிகிட்டுதானே போயாகணும்?" - மாமியே கேள்வியை கேட்டு பதிலையும் சொன்னாள்.

"அலமு நீ கொஞ்சம் பேசாம இரு அவங்களே வந்த இடத்துல யாழினியை பார்க்க முடியலியேன்னு தவிப்புல இருக்காங்க. நீ வேற தொணதொணன்னு கேள்வியை கேட்டுண்டு..." - என்று தன் மனைவியான அலமுவை அதட்டினார் கணவர் லட்சுமி நரசிம்மன். அப்படியே மோகனா பக்கம் திரும்பி, "அம்மா பதட்டப்படாதீங்க, யாழினி வந்துடுவா! கோயிலுக்கு தான் போயிருக்கா" - என்று மோகனாவுக்கும் ஆறுதல் கூறினார்.

மோகனாவும் சற்று இறுக்கம் தளர்ந்து சிரித்தாள்.

அவர்களோடு பேசவும் தொடங்கினாள்.

"ஆமா, நீங்க இங்கதான் இருக்கீங்களா?"

"ஆமாம்மா."

"இந்த இல்லத்துக்கு வந்து எத்தனை வருஷம் ஆச்சு?"

"வருஷமெல்லாம் ஆகலை. இப்பதான் சில மாசங்கள் ஆறது."

"உங்க சொந்த ஊர்?"

"எனக்கு சென்னைம்மா. பிறந்து வளர்ந்தது, படிச்சதெல்லாம் திருவாரூர்ல. சென்னைல வேலை கிடைச்சது. கடைசில அங்கையே போய் செட்டில் ஆனேன்."

"உங்களுக்கு பிள்ளைகள்?"

"ஒரே ஒரு பொண்ணும்மா. மீனாட்சின்னு பேர்! இந்த மதுரை மீனாட்சி மாதிரியே அப்படி ஒரு அழகு" - நரசிம்மன் சொல்லும்போதே குரல் உடைந்து போனது. நாக்கு தழுதழுக்கத் தொடங்கிவிட்டது. மோகனாவுக்கும் திகைப்பாகி விட்டது.

"ஏன் - என்னாச்சு?" - சந்தானம் கேட்டார்.

"அவளை மஞ்சக்காமாலையால இழந்துட்டோம். சென்னையோட சுத்தம் என் மகளை பலிவாங்கிடித்து" - என்று வேகமாக சொல்லிவிட்டு விசும்பி விசும்பி அழ ஆரம்பித்தார். அலமுவும் வந்து கட்டிக்கொண்டாள்.

அவர்களுக்குள் இப்படி ஒரு சோகம் புதைந்து கிடப்பதை மோகனாவும் சந்தானமும் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. அப்போது கஸ்தூரிரங்கன் என்பவர் அவர்கள் அருகில் வந்தவராக.

"அம்மா, இங்க இருக்கற எங்க ஒவ்வொருத்தர் பின்னாலயும் இப்படி ஒரு சோகம் இருக்கு. என் கதையை கேட்டா ஆடிப் போயிடுவீங்க" என்றார்.

சந்தானமும் மோகனாவும் அவரிடம் ஊன்றினர்.

"எனக்கு நாலு பசங்க சிங்கக் குட்டிங்க" - என்றார் அவர் ஆரம்பமே அதகளம்.

"அப்புறம் அவர்கள் எப்படி முதியோர் இல்லத்தில்?" கேள்விக்கான பதில் அவரிடமிருந்தே வர ஆரம்பித்தது.

"என் பசங்க நாலு பேருமே தங்கமானவங்கம்மா. படிப்புலேயும் நம்பர் ஒன்! நல்லா படிச்சதால நானும் கடன்லாம் வாங்கி படிக்க வெச்சேன். நாலு பேருக்குமே காலேஜ்ல படிக்கும்போதே பிளேஸ்மெண்டாயிடிச்சு. அப்புறம் நாலு பேருக்கும் மேல் நாட்டுல வேலை கிடைச்சது. மாசமானா லட்சக்கணக்குல சம்பளம்!"

அப்புறமா மேல்நாட்டுக்குப் போனவங்க போனவங்க தான்! வருஷம் ஒரு தடவை பத்து பதினைஞ்சு நாள் லீவுல எங்கள வந்து பார்த்துட்டுப் போவாங்க. அவ்வளவுதான்!" - கஸ்தூரிரங்கன் 'அவ்வளவுதான்' என்று சொல்லி முடித்ததிலேயே தன் சோகம் அவ்வளவையும் சொல்லிவிட்டது போல ஒரு தொனிப்பு தெரிந்தது.

"ஏன் நீங்க போய் அவங்க கூட இருக்கலாமே?" - என்று கேட்டாள் மோகனா.

"இருக்கலாமா...? இருந்தோம். அது எப்படி இல்லாம இருப்போம்? ஆனா..." - என்று அவர் இழுத்தார்.

"என்ன ஆனா?"

"அந்த ஊர் எங்களுக்கு ஒத்து வரலைம்மா. ரொம்ப சுத்தமான ஊர்தான் அது. எலெக்ட்ரிசிட்டி, தண்ணின்னு ஒரு பிரச்சனையும் கிடையாது. ஆனா, எங்களுக்கு ரொம்பவே அமைதியா ஒரு சுடுகாட்ல குடி இருந்தா மாதிரி தான் மனசுக்கு பட்டது."

அவ்வளவு தூரம் அங்க அமைதியும் தனிமையும் எங்களுக்கு ஏற்பட்டது! நம்ம ஊர் மாதிரி தெருவுல இறங்கி நடக்கறதோ, அக்கம் பக்கம் ஒண்ணா சேர்ந்து பேசிக்கறதோ எல்லாம் அங்க ஏது?

ஒரு கப் தயிர் வேணும்னாலும் இருபது முப்பது மைல் தூரத்துல இருக்கற கடைக்கு கார்லதான் போய் வரணும். வீக் டேஸ்ல எல்லாரும் கடமை கடமைன்னு வேலைக்கு போயிடுவாங்க. இந்த நாட்கள்ல புருஷன் பெண்டாட்டியே ஒருத்தருக்கொருத்தர் பேசிக்க மாட்டாங்க. அவ்வளவு பிசியா இருப்பாங்க.

நானும் என் மனைவியும் வீட்டுக்குள்ள மேஜை நாற்காலிகளோட உட்கார்ந்துருப்போம். என்ன, அந்த ஃபர்னிச்சர்லாம் நகராது. நாங்க நகருவோம். அதுதான் வித்தியாசம்."

சொல்லிவிட்டு சிரித்தார். அந்த சிரிப்பு மேல்நாட்டு மோகம் கொண்டவர்களை கிழிப்பதுபோலவும் இருந்தது.

"ஓ... அதான் திரும்பி வந்துட்டீங்களா?"

"ஆமாம்மா - எங்க வீட்டை வித்துட்டு இங்க வந்து செட்டிலாயிட்டோம். நாங்க பேயிங் கெஸ்ட்ஸ். மாசம் பதினஞ்சாயிரத்தை எனக்கும் என் மனைவிக்கும் நான் தந்துட்றேன். எங்கள யாழினி சொந்த அப்பா, அம்மா மாதிரியே பாத்துக்கறா!"

இங்க நாங்க ரொம்பவே ஹேப்பியா இருக்கோம்.

எங்கள போலவே பொருளாதாரத்துல ஜெயிச்சதாலேயே வாழ்க்கைல பிள்ளைகள் கிட்ட தோத்தவங்க தான் இங்க இருக்கோம், நாங்கள்லாம் ஒருத்தருக்கொருத்தர் ஆறுதல் சொல்லிப்போம்" - கஸ்தூரிரங்கன் பேசியதில் மோகனாவுக்கு பலவிதத்தில் அதிர்வு.

"அதிர்வு இவங்கள போல காசு பணத்துக்கு குறை வில்லாதவங்க மட்டுமில்ல. எங்களப்போல ஏழை பாழைகளும் இங்க இருக்கோம். நாங்க காலணா கொடுக்கற தில்லை. ஆனா, உயிரைக் கொடுத்து இந்த இல்லத்துல எல்லா வேலைகளையும் பாக்கறோம். நான் இல்லம் பூரா கூட்டுவேன். என் புருஷன் தோட்டத்தை பாத்துக்குவார். அதோ அவங்க

ரெண்டு பேரும் பத்து பாத்திரம் தேய்ப்பாங்க..." என்று ஒரு பெண்மணி தானாக முன் வந்து பேசினாள். அப்படியே "நாங்கள்லாம் கூட எங்களுக்குன்னு ஒதுக்கப்பட்ட வேலையை மட்டும் தான் செய்வோம். ஆனா, யாழினி எல்லா வேலையையும் இழுத்துப் போட்டுகிட்டு செய்வா. அவளை குணத்துலதான் கோடீஸ்வரியா இவ்வளவு நாளும் நினைச்சிகிட்டிருந்தோம். ஆனா அவ பணத்துலயும் கோடீஸ்வரின்னு இன்னிக்குதான் தெரிஞ்சது. அவ மனசுக்கு அவ நல்லா இருக்கணும்" - என்றும் நெகிழ்ந்தாள்.

மோகனாவுக்கு ஒரே பூரிப்பாக இருந்தது. தான் தொலைத்த ஒரு பெண் எங்கே பிச்சை எடுத்துக் கொண்டிருப்பாளோ என்று கலங்கிய கலக்கத்துக்கு இடமே இல்லாமல் போய்விட்டது. அவள் இளம் வயதிலே எல்லோரும் போற்றும் ஒரு பொது வாழ்வு வாழ்பவளாக இருப்பதை என்னென்று சொல்வது?

கண்களில் ஆனந்தக்கண்ணீர் மளுக்கென்று திரண்டு வந்துவழிய ஆரம்பித்தது. சந்தானமும் சிலிர்ப்பின் உச்சத்தில் தான் இருந்தார்.

"மோகனா, இவங்க பேசறத எல்லாம் கேட்டா யாழினி நம்பகிட்ட வளர்ந்திருந்தா கூட அவ வாழ்க்கைல இவ்வளவு அர்த்தம் இருந்திருக்காது. அவ நம்மை விட்டு பிரிஞ்சதுதான் சரிங்கற மாதிரி தோணல?" - என்று கேட்கவும் ஆமோதித்தாள் மோகனா.

"ஆமாங்க, எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியல. மாமா நமக்கு கெடுதல் பண்ணாரா இல்லை நல்லது பண்ணாரான்னே என்னால புரிஞ்சுக்க முடியலை."

"அவர் கெடுதல் பண்றதா நினைச்சு நல்லதுதான் பண்ணியிருக்கார். இவ்வளவு சின்ன வயசுல ஒரு பெண் இவ்வளவு பேர்கிட்ட வாழ்த்துக்களை வாங்கறது சாதாரண விஷயமே இல்லை."

"எப்படியோ நமக்கு இப்பவாவது விடிஞ்சதே."

"அதைச் சொல்லு. அதுதான் சரியான வார்த்தை."

சந்தானமும் மோகனாவும் தங்களுக்குள் பேசிக் கொள்வதைக் கேட்ட அவர்களில் சிலர் மோகனாவை நெருங்கி "இன்னிக்கே எங்க யாழினியை கூட்டிகிட்டு போயிடுவீங்களா?" என்றும் கேட்டனர்.

"அய்ய... இது என்னா கேள்வி? அவங்க பொண்ணுன்னு நல்லா தெரிஞ்சதுக்குப் பின்னால இங்கேயே விட்டுட்டுப் போக எந்த தாய்,

தகப்பனுக்கு மனசு வரும்?"

"யாழினியும் போய் ராணி மாதிரி இனியாச்சும் நல்லா இருக்கட்டும்" என்று அவர்களில் ஒருத்தியே பதிலும் சொன்னாள்."

அப்போது டாக்ஸி ஒன்று வந்து நிற்க அதிலிருந்து முதுலில் ரங்காச்சாரியும் அவரை ஒட்டி யாழினியும் இறங்கினாள். காரை விட்டு இறங்கிய யாழினி சந்தானம், மோகனாவை பார்க்க விரும்பாமல் ரங்காச்சாரியின் முதுகுப் பின்னால் மறைந்து நின்றாள்.

சந்தானமும் மோகனாவும் அம்பு போல் வேகமாக முன் வந்து நின்றனர். ரங்காச்சாரியை பார்த்து கைகூப்பி வணங்கினர்.

"நமஸ்காரம் சார்."

"நமஸ்காரம். நீங்க தான் மிஸ்டர் சந்தானமா?"

"ஆமாம் சார்..."

"யாழினி, ஏன் என் முதுகு பின்னால நிக்கறே? முன்னால வா. இதோ பார் உன் உண்மையான பெற்றோர்" ரங்காச்சாரி திரும்பி யாழினியை முன் வரச் செய்தார். அவர்களைப் பார்க்க அவளோ மளுக்கென்று தலையை தாழ்த்திக்கொண்டாள். அவர்களுக்கு அது அதிர்ச்சியாக இருந்தது.

"யாழினி... யாழினி. என்னப் பாரும்மா... நான் உன் அம்மாம்மா... இதோ உன் அப்பா..." - மோகனா துடித்தாள்.

யாழினியோ குனிந்த தலையை நிமிர்த்துவதாக இல்லை.

"யாழினி ஏன் எங்கள பாக்க மாட்டேங்கறே. நாங்க என்ன தப்பு செய்தோம்? உன்னை இங்க கொண்டு வந்து விட்டதே எங்களுக்குத் தெரியாது. நீ பிறக்கும்போதே செத்து போயிட்டதா தான் எனக்குச் சொன்னாங்க.

அப்படி இல்லைன்னு இப்பதான் தெரிஞ்சது. தெரிஞ்ச நொடில இருந்து நீ எங்க இருக்கியோ, எப்படி இருக்கி யோன்னு நாங்க பட்றபாடு எங்களுக்குதாம்மா தெரியும்..." - என்று வெடித்தாள் மோகனா.

"ஆமாம்மா, எங்கள தப்பா நினைக்காதே. இனி நீ அனாதை கிடையாது. உனக்கு நாங்க இருக்கோம்.." என்றார் சந்தானம். அவர் அப்படிச் சொன்ன நொடி தலையை நிமிர்த்தினாள் யாழினி. அவள் கண்களில்

சரக்கென்று ஒரு ஆவேசம். அதோடு "நான் அனாதைன்னு யார் சொன்னா உங்களுக்கு?" - என்று கேட்டாள்.

"யாழினி...?" - அதிர்ந்தாள் மோகனா.

"என்ன யாழினி? நான் அனாதை இல்லை! எனக்கு இங்க எவ்வளவு அப்பா, அம்மாக்கள் தெரியுமா? ரங்காச்சாரி அப்பாவோ என் வரைல எல்லாரும் ஒண்ணா சேர்ந்த ஒரு உருவம் தெரிஞ்சுக்குங்க.

இங்க எனக்கு ஒரு குறையும் இல்லை. எனக்கு ஒரு குறைன்னா அது நீங்க என்னை கண்டுபிடிச்சதுதான். உங்களை நான் கெஞ்சிக் கேட்டுக்கறேன். என்னை தயவு செய்து உங்களோடு மட்டும் கூட்டிகிட்டு போக நினைக்காதீங்க. உங்கமக கிடைக்கவேயில்லைன்னு நினைச்சுகிட்டு தயவு செய்து புறப்படுங்க" - என்று படபடவென பொரிந்தவள், அங்கிருந்து மிகவேகமாக விலகிச் சென்றாள். மோகனாவும் சந்திரசேகரும் அதிர்ச்சியில் உறைந்துபோய் விட்டிருந்தனர். ஆனால் ரங்காச்சாரி மென்மையாக சிரித்தார்.

"மிஸ்டர் சந்தானம், நீங்க அதிர்ச்சியடைய வேண்டாம். யாழினி இங்க எங்களோட ஒண்ணா கலந்துட்டா. அதான் அப்படி பேசிட்டுப் போறா.

அவ வழக்கமான பொண்ணு இல்ல. அவ பிறப்புலயே விசேஷம் இருக்கறதாலதான் அவ கைபட்டா நோயாளிகூட குணமாகறான். அவனால எங்கள பிரியமுடியாதுன்னு எனக்கும் தெரியும் அதுக்காக அவ உங்க மகள் இல்லேன்னு ஆயிடாது. நான் அவளுக்கு எப்படி சொல்லனுமோ அப்படி சொல்லி மெள்ள அவ மனசை மாத்தி உங்ககிட்ட அவளை கொண்டு வந்து சேர்க்க என்னால முடிஞ்ச அவ்வளவையும் செய்யறேன். நீங்க இப்ப புறப்படுங்கோ. மிஸ்டர் கணேஷை பூரணமா குணப்படுத்தி அவரோட வாங்கோ.

யாழினிக்கு கணேஷ் மேல ஒரு பெரிய மரியாதையும் மதிப்பும் இருக்கு" என்கிற ரங்காச்சாரியின் விளக்கம் சந்தானம் - மோகனா கண்களில் கண்ணீரைத்தான் வர வழைத்தது. மௌனமாய் அங்கிருந்து விலக ஆரம்பித்தனர்.

திருமகள் இல்லமே அதை ஒரு அதிசயம் போல வெறித்துப் பார்த்தது. அங்கிருந்த ஒவ்வொரு முதியவர் கண்களிலும் கண்ணீர் பீறிட்டது.

இப்படியும் ஒரு பெண்ணா? என்கிற வியப்பினால் மட்டுமல்ல. தங்களுக்கென்று ஒரு உயிரா என்கிற நெகிழ்வும்தான் அதற்கு முதல்

காரணம்.

தளர்ச்சியான நடையோடு காரை நோக்கி நடந்த மோகனாவை அது வரை மௌனமாக கவனித்தபடி இருந்த அலமு மாமி ஓடிச் சென்று அவள் கையைப் பற்றிக்கொண்டாள்.

"அம்மா, நீங்க கவலைப்படாதீங்க. உங்க பாசத்துடிப்பு எனக்கு புரியறது. நாங்கள்லாம் சொன்னா நிச்சயம் யாழினி கேட்பா. நாங்க அவளை உங்ககிட்ட கொண்டு வந்து சேர்க்கறோம். தைரியமா போங்கோ..." - என்றாள். மாமியை அடுத்த நொடியே மோகனா கட்டிக்கொண்டு அழ ஆரம்பித்துவிட்டாள்!

ஃ ஃ ஃ

லாக்அப்புக்குள் உறைந்துபோய் அமர்ந்திருந்தான் தினேஷ். பூரணி வரவும் லேசாக கலங்கின விழிகளோடு பார்த்தான்.

"பேராசை பெரு நஷ்டம்கறதுக்கு பெரிய உதாரண மாயிட்டியேடா" - என்றாள் பூரணி. அவனிடம் பதிலில்லை.

"இழந்த பிள்ளையை மோகனா கண்டுபிடிச்சிட்டா. ஆனா இருந்த உன்னை இழக்கப்போறேன். எண்ணம்போலத் தான் வாழ்ககைங்கறது ஒரு பெரிய உண்மைங்கறத நான் இப்ப நடந்த விஷயங்கள வெச்சு தெரிஞ்சுகிட்டேன். நான் இனி மோகனாவோட இருக்கப் போறதில்ல. அதுக்கான யோக்கியதையும் எனக்கு இல்லை. அந்த யாழினி பத்தி கேள்விப்பட்டேன். மோகனாவும் சந்தானமும் போய் கூப் பிட்டும், வர மறந்துட்டாளாம்."

அவதாண்டா பொண்ணு!

நானும் அவ இருக்கற முதியோர் இல்லத்துக்கே போயிடப் போறேன். நீ அவ முகத்துல ஆசிட் வீசி நாசம் பண்ண நினைச்ச பாவத்துக்கு நான் அவளுக்கு ஒத்தாசை பண்ணி பரிகாரம் தேடப் போகிறேன்.

இந்த உடம்பை விட்டு உயிர் பிரியற வரை நானும் வாழ்ந்தாகணுமே. வேற வழி?"

கேட்டு விட்டு புறப்பட்டாள். தினேஷ் கலங்கின விழிகளோடு அவள் போவதையே பார்த்தபடி நின்றான்.

மூன்று மாதங்கள் சென்ற நிலையில் கணேஷும் பூரணமாக குணமாகிவிட்ட நிலையில் ஒரு நாள் எல்லோரும் ஒன்றாக யாழினியை

பார்க்க திருமகள் இல்லத்துக்கு வந்தனர்.

ரங்காச்சாரியும் உற்சாகமாக வரவேற்றார். கூடவே அவரிடம் ஒரு தயக்கம்.

"என்ன சார். என்ன சொல்றா எங்க பொண்ணு? எங்க கூட வருவாளா மாட்டாளா?" - மென்மையாகக் கேட்டார் சந்தானம்.

"வெரி சாரி மிஸ்டர் சந்தானம். நான் எவ்வளவோ சொல்லிப்பார்த்துட்டேன். இங்க இருக்கறவங்களும் உண்ணாவிரதம்லாம் கூட இருந்து பார்த்துட்டாங்க. யாழினி இங்க இருந்து எங்கேயும் போகவிரும்பலை. சொல்லப்போனா முன்பை விட மிக அதிகமா இந்த இல்லத்து வேலைகளை செய்யறா! எனக்கு என்ன செய்யறதுன்னே தெரியல..." என்றார் ரங்காச்சாரி.

"சரி, நான் இப்ப ஒரு மாற்றுக் கருத்து சொன்னா கேட்பீங்களா?" - சநதானம் பீடிகை போடுவது போல கேட்டார்.

"என்ன சார் அது?"

"யாழினி எங்க கூட வர விரும்பலை. பரவாயில்லை. அவ தனியா வரத்தானே பிரியப்படலை. இந்த இல்லமே வரதா இருந்தா அவளுக்கு ஆட்சேபணையில்லைதானே?"

"நீங்க என்ன சொல்றீங்க... எனக்குப் புரியல..."

"இந்த திருமகள் இல்லத்தை இனி என் அறக்கட்டளை சார்பா நானே நடத்தறேன். நீங்க நிதி வசதிக்காக கஷ்டப் படவேண்டாம். பத்துகோடி ரூபாயை இன்னிக்கே டெப்பாசிட் பண்ணிட்றேன். மாசம் பத்து லட்சம் வட்டி மட்டுமே வரும். நானும் என் மனைவியும் அப்படியே எங்க தொழிலையும் பாத்துக்கறோம். இதுக்கு நீங்க அனுமதி தருவீங்களா?"

சந்தானம் உருக்கமாக கேட்டார். அது உள்ளே மறைவாக இருந்தபடி கேட்டுக் கொண்டிருந்த யாழினியின் காதுகளிலும் விழுந்திருக்க வேண்டும். முதல் முறையாக கலங்கிய விழிகளோடு மெல்ல உள்ளிருந்து அவர்கள் எதிரில் நடந்து வந்தாள்.

ரங்காச்சாரியோ பிரமிப்பின் உச்சத்துக்கே போயிருந்தார்.

"மிஸ்டர் சந்தானம்! உங்களுக்கு ரொம்பவே பெரிய மனசு. இப்படி ஒரு முடிவை நீங்க எடுப்பீங்கன்னு நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கல. இது பழம் நழுவி பால்ல விழுந்த மாதிரி ஒருவிஷயம். எனக்கு இதுல பூரண

சம்மதம்" என்றார் ரங்காச்சாரி.

சுற்றி வளைத்து நின்றிருந்த இல்லத்து முதியோர்கள் எல்லாமும் ஆனந்தக் கண்ணீர் விட, யாழினி மோகனாவை நெருங்க... முதல் தடவையாக தான் பத்து மாதம் சுமந்து பெற்ற தன் மகளை வாரி அணைத்துக்கொண்டு அழ ஆரம்பித்தாள் மோகனா. சந்தானமும் சேர்ந்துகொண்டார்.

கணேஷும் சந்திரசேகரும் ஒருவருக்கொருவர் கை குலுக்கிக் கொண்டனர். அந்த முதியவர்களில் ஒருத்தியாக தூரத்தில் இருந்த பூரணியும் மெல்ல அவளையும் சேர்த்து அணைத்துக் கொண்டாள்.

"கணேஷ் உனக்கும் யாழினிக்கும் தான் கல்யாணம்! அது நடக்கணும்னா நீ உன் அமெரிக்க வாழ்க்கையை தியாகம் பண்ணணும் பண்ணுவியா?" - என்று அந்த உணர்வு பூர்வமான வேளையில் சந்திரசேகர் கணேஷிடம் கேட்க, அவளோ "அப்பா நான் எப்பவோ என் ரெசிக்னேஷனை மெயில் பண்ணிட்டேன்ப்பா..." - என்றான்.

"சபாஷ்" - என்றவர், "யாழினி" - என்றார் உடனேயே அவளும் திரும்பினாள்.

"கொஞ்சம் வாயேன்" - அழைத்தார். அவளும் நெருங்கினாள்.

"உன் அப்பா அம்மா உன்கிட்டயே வந்து உனக்கு உதவியா இருக்க விரும்பற மாதிரி கணேஷும் உன் கூட வாழ விரும்பறான். அவன் உயிர், நீ போட்ட பிச்சை. நீ என்ன சொல்றே?" - என்று பளிச்சென்று கேட்டார்.

யாழினியிடம் 'குபீர்' என்று வெட்கம் பூக்கத் தொடங்கியது. பேச்சு வரவில்லை. இருந்தும் சிரமப்பட்டு பேசினாள்.

"அங்கிள்... இவ்வளவு சந்தோஷமும் ஒரே நாள்ல இப்படி என்னை மூழ்கடிக்கப் பார்த்தா நான் என்ன செய்வேன்?" என்றாள்.

அந்த பதிலே அவளது சம்மதத்தை தெரிவித்து விட்டது.

"மாப்ள சார், எங்க பொண்ணுக்கு நீங்க ஏத்த நபர் தான்" - என்று அலமுமாமி வந்து ஸ்ரீகணேஷுக்கு திருஷ்டி கழித்தாள். அதைப் பார்த்து எல்லோரும் சிரித்தார்கள்.

ஒரு சுயநலம் பொது நலமாகும்போது அங்கே மகிழ்ச்சிக்கு கேட்கவா வேண்டும்?

முற்றும்